

மக்கள்
ஆளும் ஆட்சி

T01692
B001D05
1692

அமெரிக்க ஐக்கிய நாடுகள்

மக்கள் நடத்தும் அரசாங்கம்

(A GOVERNMENT BY THE PEOPLE)

G-1 அரசாங்க இலாகா வெளியீடு

Published by Higginbothams Ltd. and Printed by A. Sendall at
The Associated Printers (Madras) Ltd., Madras.

அமெரிக்க ஐக்கிய நாடுகள்

மக்கள் நடத்தும் அரசாங்கம்

எல்லா மக்களும் சமமாகவே சிருஷ்டிக்கப்பட்டனர்; அவர்களைப் படைத்த ஆண்டவன் அவர்களுக்கு பராதீனம் செய்ய முடியாத சில உரிமைகளை அளித்திருக்கிறான்; அப்பேர்ப்பட்ட உரிமைகளில் வாழ்வு, சுதந்திரம், சுகவாழ்வைத் தேடுவது முதலியன முக்கியமானவை—இந்த உண்மைகள் யாவரும் அறிந்தவை என்று நாங்கள் கருதுகிறோம். இந்த உரிமைகளைப் பெறுவதற்காகவே ஆளப்பட்டவர்களின் அனுமதியின் மூலம் அதிகாரம் பெற்ற அரசாங்கங்கள் மக்களிடையே ஏற்பட்டன—இந்த நோக்கங்கள் பாழாகும் வகையில் ஆட்சிமுறை நடந்தால் அந்த ஆட்சியை மாற்றவும் அல்லது அகற்றவும், தங்களுடைய சந்தோஷத்தையும், பத்திரத்தையும் வளர்க்கும் வகையில் புது அரசாங்கம் அமைக்கவும் மக்களுக்கு உரிமை உண்டு.

அமெரிக்க சுதந்திர பிரகடனம்,

ஜுலை 4, 1776.

வாஷிங்டன் D. C. யிலுள்ள அமெரிக்க சர்வகலாசாலை யைச் சேர்ந்த காத்ரின் ஸெக்ளர் ஹட்ஸனுல் எழுதப்பட்ட "நமது அரசியலமைப்பும் அரசாங்கமும்" என்ற புத்தகத்தை ஆதாரமாகக்கொண்டு தயாரிக்கப் பட்டது இச்சிறு நூல்.

பொருளடக்கம்

அத்தியாயம்		பக்கம்
1.	அமெரிக்கக் குடியரசின் அடிப்படை	7
2.	ஒரு அரசியலமைப்பு தயாராகி அங்கீகரிக்கப்படுகிறது	16
3.	அரசியலமைப்பு : அதிகாரத்தின் மூலஸ்தானம்	23
4.	பிரஜா உரிமையின் பொறுப்புகள்	33
5.	சமஷ்டி அரசாங்கம்	45
6.	சட்டமியற்றும் பகுதியின் அமைப்பு	52
7.	சட்டமியற்றும் பகுதியின் அதிகாரங்கள்	61
8.	ஜனாதிபதி பதவி	71
9.	அரசாங்கத்தின் நிர்வாக இலாகாக்கள்	79
10.	தனிப்பட்ட ஏஜன்ஸிகள்	95
11.	சமஷ்டி நீதி இலாகா	100
12.	ராஜ்ய அரசாங்கம்	105
13.	ராஜ்ய அரசாங்கங்களின் அமைப்பு	114
14.	நகர ஆட்சி	126
15.	நகர ஆட்சியின் அமைப்பு	134
16.	மற்ற ஸ்தல அரசாங்கங்கள்	139
17.	அரசாங்கத்தின் சேவை தேவையானால் வரி செலுத்த வேண்டும்	146
18.	ஜனநாயக ஆட்சியின் கொள்கைகள்	154

அனுபந்தம்　　　　　　　　　　　　　　　　　　　　　　பக்கம்

(1) சுதந்திர பிரகடனத்தின் பூர்வ பீடிகை .. 161

(2) யுனைடெட் ஸ்டேட்ஸின் அரசியலமைப்பு .. 163

(3) திருத்தங்கள் 185

(1)

அமெரிக்கக் குடியரசின் அடிப்படை

சென்ற 160 வருஷங்களுக்கு மேலாக அமெரிக்காவின் நலனையும், விஸ்தரிப்பையும் பாதுகாத்து வளர்த்த அமெரிக்க ஜனநாயகத்தின் அடித்தளம் 1787-ம் ஆண்டில் பெனிஸில்வேனியாவிலுள்ள பிலடல்பியாவில் 55 தலைவர்கள் கொண்ட ஒரு கோஷ்டியினால் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த வருஷம் வசந்த காலத்தில்—இன்று பூரண ஆதிபத்ய உரிமையுள்ள—அக்காலத்தில் பிரிட்டன் குடியேற்ற நாடுகளாயிருந்த 13-ல் 12 நாடுகள், புதிதாகத் தோன்றிய தங்கள் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்க்க பன்முறை கூடிப் பேசினார்கள். ஆறு ஆண்டுகளுக்கு முன் நடந்த புரட்சி யுத்தத்தின் மூலம் சுதந்திரம் பெற்று விட்டனர். தங்களுடைய பொது நலனைக் காப்பதற்காக அந்த 13 ராஜ்யங்களும் 1781-ல் "கூட்டு அரசாட்சியின் ஷரத்துகள்" எனும் உடன்பாட்டை அங்கீகரித்திருந்தன. ஆனால் அந்த ஆறு ஆண்டு அனுபவத்தில் அந்த உடன்பாட்டில் பல குறைகள் இருப்பதை உணர்ந்தார்கள்.

இந்த உணர்வின் விளைவாக 1787-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மேற்படி ஷரத்துக்களைப் பற்றிப் புனராலோசனை செய்வதற்காக, **கான்டினன்டல் காங்கிரஸ்** பிலடல்பியாவுக்கு தத்தம் பிரதிநிதிகளை அனுப்பும்படி 13 ராஜ்யங்களுக்கும் அழைப்பு அனுப்பிற்று. இந்தக் கூட்டம் அல்லது **அரசியலமைப்பு** மகாசபை 1787 மே 27-ம் தேதி **சுதந்திர மண்டபத்தில்** கூடியது. சரித்திரப் பிரசித்திபெற்ற இந்த மண்டபத்தில்தான் 1776-ல் **அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்** கையெழுத்திடப்பட்டது; இதே மண்டபத்தில்தான் சுதந்திரம் பெற்ற நற்செய்தியை சுதந்திர மணி ஒலிபரப்பியது. 55 பிரதிநிதி

களின் வாதப் பிரதிவாதங்கள் செப்டம்பர் 17-ம் தேதி முடிவடைந்தன. அவர்கள் முடிவாகத் தயாரித்ததுதான் இன்று அமெரிக்க ஜனநாயகத்தின் அஸ்திவாரமாகத் திகழும் அமெரிக்க அரசியலமைப்பு.

பிலடல்பியாவில் கூடிய 55 பிரதிநிதிகள் பல்வேறு உரிமைகளின் பிரதிநிதிகள்; பலதரப்பட்ட சூழ்நிலையில் தோன்றி வளர்ந்தவர்கள்; பல்வேறு தொழில் புரிபவர்கள்; பல்வேறு அந்தஸ்துடையவர்கள்; எனினும் லட்சியத்தில் ஒன்றுபட்டவர்கள். அவர்களுடைய லட்சியம் சுருக்கமாகவும் எளிய முறையிலும் அரசியலமைப்பின் பூர்வபீடிகையில் கூறப்பட்டிருக்கிறது.

பூர்வ பீடிகை கூறுவதாவது :

“அமெரிக்காவின் மக்களாகிய நாங்கள், குற்றம் குறைகள் அதிகமில்லாத சமஷ்டியை அமைப்பதற்காகவும், நீதியை நிலை நாட்டவும், உள்நாட்டு அமைதியை உத்திரவாதம் செய்யவும், பொதுப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யவும், சுதந்திரத்தினுல் ஏற்படும் பாக்கியத்தை நாங்களும் எங்கள் சந்ததிகளும் அடைந்து அநுபவிக்கவும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு இந்த அரசியலமைப்பை ஸ்தாபிக்கிறேம்.”

இந்தப் பல்வேறு நோக்கங்கள் நிறைவேறுவதற்கு வழி ஜனங்களுக்காக நடத்தப்படும் ஜனங்களின் ஆட்சி, அதாவது ஆளப்படுபவர்கள் நன்மைக்காக அவர்கள் அனுமதி பெற்று நடைபெறும் அரசாங்கம். அரசாங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் பொதுஜன ஓட்டினுல் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்; அவர்கள் பொது மக்களில் பெரும்பான்மையோருக்கும் பொறுப்பாளிகளாயிருக்க வேண்டும். அச் சமயத்தில் இங்கிலாந்தில் ஓரளவு சுயஆட்சி நடந்த போதிலும் இங்கே நிறுவப்பட்ட பொதுஜன ஆட்சியின் தத்துவத்தை உலகெங்கும் பல்வேறு நாடுகளில் நடைபெறும் ஆட்சிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மிகவும் புரட்சிகரமானது என்றுதான் கருதவேண்டும்.

எனினும் வட அமெரிக்காவெனும் புது உலகுக்குக் குடியேறியவர்களில் பலர் இங்கு நிகழ்ந்த கொடுமைகளிலிருந்து விடுதலை பெறுவதற்காகவோ அல்லது தங்களுடைய சொந்த நிலையை உயர்த்திக் கொள்ள முடியாமல் தடுத்த பொருளாதார முறையின் பிடிப்பிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவோ சென்றார்கள். தங்கள் நலன்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள முடியும் என உறுதியாக நம்பியதாலும், அந்த முயற்சிக்குத் தடை ஏற்படுவதை அவர்கள் விரும்பாததாலும்தான் அவர்கள் வடக்கே சென்று குடியேறினார்கள். இந்த ஆழ்ந்த நம்பிக்கையினால் ரோட் தீவு ராஜ்யத்தினர் பிலடல்பியா அரசியல் நிர்ணய மகாநாட்டிற்குப் பிரதிநிதிகள் அனுப்பவில்லை. பலம்பொருந்திய மத்திய அரசாங்கம் தங்களுடைய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் என்று அந்த ராஜ்ய வாசிகள் அஞ்சினார்கள்.

அரசாட்சியில் பங்கு கொள்பவர்கள் : குடியானவர்கள்.

அரசியலமைப்பின் மூலம் அமைக்கப்பட்ட அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்து நிர்வகிக்கக்கூடிய ஜனங்கள் பல்வேறு ஜாதியினர், பல்வேறு கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள், பல்வேறு அக்கரை கொண்டவர்கள். இந்த மக்களில் பெரும்பாலோர் இங்கிலாந்திலிருந்து வந்தவர்களானாலும் மற்றும் சிலர் ஸ்வீடன், நார்வே, பிரான்ஸ், ஹாலண்டு, போலண்டு, ரஷ்யா முதலிய நாடுகளிலிருந்து குடியேறியவர்கள். இவர்கள் யாவரும் இந்த புது உலகம் அமைப்பதில் பங்கு கொண்டவர்கள். அவர்களுடைய மத சம்பந்தமான அபிப்பிராயங்கள் மாறுபட்டவை. அவ்வபிப்பிராயங்களைப் பிடிவாதமாகப் பின்பற்றுபவர்கள் ; அவர்களில் ரோமன் கத்தோலிக்கர்கள், ஆங்கிலிகர்கள், கால்வினிஸ்டுகள், பிராடெஸ்டெண்டுகள், ஹ்யூஜ்னட்டுகள், லூதர் மார்க்கத்தினர், குவேகர்கள், யூதர்கள், மதப்பற்றற்ற சிலர் இருந்தனர். தனமும் அதிகாரமும் படைத்த பிரபுக்கள் இருந்தனர் ; பட்ட கடனை அடைக்க முடியாமல் சிறைப்பட்டு, கடனைத் தீர்ப்பதற்காக சிறையிலிருந்து விடு

பட்ட ஒப்பந்தக் கூலிகளாக அனுப்பப்பட்ட ஏழைகளும் இருந் தனர். குடியானவர்கள், வர்த்தகர்கள், யந்திர வேலை செய்ப வர்கள், வியாபாரிகள், கடல் படையின் படைவீரர்கள், பிழைப் புத்தேடி பிரயாணம் செய்தவர்கள், இரும்பு வேலைக்காரர்கள், கப்பல் வேலை செய்பவர்கள், நெசவாளர்கள், தச்சர்கள், முதலிய பல்வேறு மக்கள் இருந்தனர். சிந்தனை சுதந்திரமும், சுதந் திரச் செயல் திறனும் தங்களுக்கிருக்கிறது எனும் பெருமை பாராட்டும் இந்த ஜனக்கூட்டத்திடம் இயற்கையாக பலவிதமான அபிப்பிராய பேதங்கள் கடுமையாக இருப்பதை எதிர்ப்பார்க்க லாம். குடியேறியவர்களில் சிறுபான்மையினர் பிரிட்டிஷாரிட மிருந்து சுதந்திரம் பெற்ற புரட்சியை எதிர்த்தனர். புரட்சி யுத்தத்தை எதிர்த்தவர்கள் தங்கள் எதிர்ப்பிற்கு பலவிதமான மாறுபட்ட காரணங்கள் கூறினர். அதே மாதிரி யுத்தமின்றி வேறு எவ்விதத்தில் சுதந்திரம் பெறலாம் என்பது பற்றியும் முரணான அபிப்பிராயம் கொண்டிருந்தனர். அக்காலத்தி லிருந்ததைவிட அமெரிக்கர்களிடையே மாறுபட்ட கருத்துக்க ளுள்ளவர்கள் எண்ணிக்கை வளர்ந்துகொண்டேதான் வந்தி ருக்கிறது. ஆதியிலிருந்த 13 ராஜ்ய மக்கள் நாளடைவில் கண்டத்தின் மேற்கு பகுதியில் பரவலானார்கள். கடல் கடந்து புதிதாக மக்கள் குடியேறினார்கள். முதலில் குடியேறியவர்கள் வசித்த பகுதிக்கு 3,000 மைல் மேற்கே பல கோஷ்டியினர் கடுமையான மலைத்தொடர்களைத் தாண்டி பஸிபிக் மகா சமுத் திரக் கரையை அடைந்தனர். முதலில் வந்தவர்களும் அவர்களைப் பின்பற்றியவர்களும் இயற்கை வளம் நிறைந்த நிலப் பரப்பில் வசித்தனர். அங்கே நல்ல வயல்களும், பசும் புல் நிறைந்த மேய்ச்சல் படுகைகளும் ஏராளமாயிருந்தன. ஏராளமான தேக்கு, நிலக்கரி, தாமரம், இரும்பு, எண்ணெய் நிறைந்த பகுதிகள் இருந்தன. தாராளமாய்த் தண்ணீர் வசதியுமிருந்தது.

பல நாடுகளிலிருந்து குடியேறிய மக்கள் தங்களுடைய திற மையினாலும், பல்வேறு விதமான வழக்கங்களினாலும், புது உல

கத்தின் இயற்கை வளத்தைப் பெருக்கினார்கள். இயற்கை வளம் பெருகியதன் விளைவாக, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டவர்களிடையே ஒவ்வொரு தொழில் வளர்ச்சி சம்பந்தமான உரிமை உணர்ச்சியும் வியாபாரச் சூழ்நிலையும் தோன்றியது. பாஸ்டனிலுள்ள கப்பல் முதலாளி வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்ததால் வியாபார சுதந்திரம் வேண்டுமென வாதாடினான். மத்திய மேற்கு பகுதி ராஜ்யமாகிய இல்லினாயிஸ் மண் பாண்ட வியாபாரி அயல்நாட்டு சரக்குகளுடன் போட்டியிட வேண்டியிருந்ததால் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்காக அயல் நாட்டுச் சரக்குகளுக்கு வரி விதிக்க வேண்டுமென வற்புறுத்தினான். நெப்ராஸ்காவிலுள்ள தானிய வியாபாரி, ஏற்றுமதிக் கட்டணம் இன்னும் குறைவாயிருக்க வேண்டுமென்றும் தனது தானியத்திற்கு விலை கூடுதலாகக் கிடைக்க வேண்டுமென்றும் விரும்பினான். தானியங்களிலிருந்து சத்துப் பொருள்கள் ஆக்க விரும்பியவர்கள் தங்களுக்குத் தானியம் குறைந்த விலைக்குக் கிடைக்க வேண்டுமெனக் கோரினார்கள்; ரயில்வே நிர்வாகிகள் அவர்கள் ஏற்றிச் செல்லும் சரக்குகளுக்கு உயர்ந்த பட்ச பார்சல் கட்டணம் வேண்டுமென ஆசைப்பட்டனர்.

தச்சர்கள்.

நாளடைவில் பிராந்திய வித்தியாசங்களும் தோன்றலாயின. நியூ யார்க் பாங்கரின் அபிப்பிராயம், தென்பகுதியிலுள்ள பருத்தி, சாகுபடிக்காரன், டெக்ஸாஸ் மாட்டு வியாபாரி, ஆரிகானிலுள்ள கழிவுப்பொருள் வியாபாரி கருத்துகளுக்கு, மாறுபட்டதாயிருந்தது. பின்னால் கூறப்பட்ட மூன்று வகை வியாபாரிகளுக்குள்ளும் கருத்து வேற்றுமை இருந்து வந்தது.

அரசியலமைப்பின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட குடியரசு இவ்வளவு மாறுபட்ட கருத்துள்ளவர்களையும் தன் பிரஜைகளாகக் கொண்டு அவர்களுடைய ஜீவாதார உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். தங்களுடைய ராஜ்யங்களின் ஆதிபத்திய உரிமையைக் காப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்த 4,000,000

மக்கள் கொண்ட 13 தனி ராஜ்யங்களை ஒன்றுபடுத்த வேண்டியது புதிய குடியரசின் பொறுப்பாயிருந்தது. அரசியலமைப்பைத் தயாரித்தவர்களுக்கு அச்சமயம் இருந்த சுயாட்சி அனுபவம் உதவியாயிருந்தபோதிலும், வழிகாட்டியாயிருக்கும் அளவுக்கு போதியதாயில்லை. ஆதியில் தயாரிக்கப்பட்ட கான்பெடரேஷன் ஷரத்துக்கள் மூலம் ஏற்பட்ட அரசியல் நிர்ணய சபைக்கு சமஷ்டி அரசாங்கம் எனப் பெயர் சூட்டப்பட்டது. ஆனால் அதற்கு மிகவும் குறைவான அதிகாரமே அளிக்கப்பட்டிருந்த தால் தேசீய முக்யத்வம் வாய்ந்த சந்தர்ப்பங்களில் தனி ராஜ்யங்களுக்கு ஆலோசனை கூறத்தான் இடமிருந்தது. ராஜ்யங்கள் வியக்தமாகவும் தனித்தனியாகவும் ஒப்புக்கொண்டா லொழிய அவைகளைக் கட்டுப்படுத்தி வரிவிதிக்கவோ, படை திரட்டவோ, அல்லது எவ்வித சட்டம் இயற்றவோ முடியாது. ராஜ்யங்களுக்கும், ஸ்தல ஆட்சியாளருக்கும் இடையே வகுக்கப் பட்ட வரையறை கட்டுதிட்டமாக இல்லை. இந்த கான்பெட ரேஷன் மூலம் ஏற்பட்ட அனுபவத்தின் லாபம் என்னவெனில் அது திருப்திகரமாக வேலை செய்யாத சமஷ்டி முறை என்பது இறுதியாகத் தெரிந்ததுதான்.

ஆனால் நகரங்கள், பெருநகரங்கள், சமஷ்டயில் உருப்பின ரான ராஜ்யங்கள் முதலியவைகளுக்கு சிறந்த சுயஆட்சி அனு பவம் ஏற்பட்டது. **மெயினி** லிருந்து **ஜார்ஜியா** வரையில் நகர, பெருநகர நிர்வாகம் சிறப்பான, உறுதியான வகையில் நடந்தது என்ற பெருமை ஏற்பட்டது. வடகிழக்கேயுள்ள சிறு நகரங் களில் ஓட்டுரிமையுள்ள நகர மக்கள் கூடி, விரும்பினுல் ஒவ் வொருவரும் தத்தம் அபிப்பிராயங்களைத் தெரிவித்து அதன் படி ஓட்டுச் செய்யலாம். ஒவ்வொரு ராஜ்யத்திலும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கவர்னரும், சட்டசபையும் இருந்தன.

அமெரிக்காவில் புரட்சிக்குப் பின் ஏற்பட்ட நிர்வாக பிரச்னை களை தற்சமயத்திலுள்ளதுடன் ஒப்பிட்டால் அவ்வளவு கஷ்ட

மானதாகத் தெரியவில்லை. ஆனாலும் 13 ராஜ்யங்களிலுள்ள மக்களும் ஏற்று ஆதரிக்கக்கூடிய கொள்கைகளை உருவாக்கி நிர்ணயம் செய்து அந்த அடிப்படையில் புதிய குடியரசை அமைப்பது சாமான்யமானதல்ல. அந்த சந்தர்ப்பத்தில் முக்கியமாகக் கருதப்பட்ட இந்த பிரச்னையைத் தவிர எதிர் காலத்தைப் பற்றியும் ஆலோசிக்க வேண்டியிருந்தது.

அரசியலமைப்பின் கர்த்தாக்கள் அடுத்த இரண்டு நூற்றுண்டுகளில் ஏற்படக்கூடிய அபிவிருத்தியை ஊகித்தறிந்து அதற்கான முன் ஏற்பாடுகளைச் செய்ய முடியாவிட்டாலும் எதிர் காலத்தில் விசேஷ மாறுதல்கள் ஏற்படக்கூடும் என எதிர் பார்த்தார்கள். ஆகையால் அரசியலமைப்பில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதைச் செய்வதற்கான வழியையும் வகுத்திருந்தார்கள். அப்படி அவர்கள் முன்னேற்பாடு செய்திருந்தது எவ்வளவு புத்திசாலித்தனமானது என்பதை காலம் காட்டிவிட்டது. அரசியலமைப்பு அங்கீகரிக்கப்பட்டதிலிருந்து அதில் செய்யப்பட்ட பல திருத்தங்கள் அதை நவீனமாகவும் பயனுள்ளதாகவும் செய்துவிட்டன.

அரசியலமைப்பு தயாரிப்பாளர்கள் கவனிக்கவேண்டிய பல பிரச்னைகள் இருந்தபோதிலும் அரசியலமைப்பு வகுத்த அரசாங்க முறை சென்ற ஒன்றரை நூற்றுண்டாக மக்களுக்கு நல்ல சேவை செய்திருக்கிறது. ஆதியிலிருந்த 13 ராஜ்யங்களின் எளிய தேவைகளையும், 148,000,000 மக்கள், 48 ராஜ்ய அரசாங்கங்கள், 3,000 பிராந்திய நிர்வாகங்கள், ஆயிரக்கணக்கான நகராண்மைக் கழகங்கள், 150,000 ஸ்தலஸ்தாபனங்களும் அடங்கிய தற்கால அமெரிக்காவின் பலதரப்பட்ட சிக்கல் நிறைந்த தேவைகளையும் பூர்த்தி செய்யத்தக்க வகையில் அதன் அடிப்படை அம்சங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. சில ராஜ்யங்கள் ஐரோப்பாவிலுள்ள சில நாடுகளைவிடப் பெரியவை. ஒவ்வொரு ராஜ்யமும் ஜில்லாக்களாக (County) வும், ஜில்லாக்கள் பல நகரங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

நகரங்களில் பெரிதும் சிறிதும் இருக்கின்றன. நியூயார்க்கின் ஜனத்தொகை 7,000,000-க்கு மேற்பட்டது. உலகில் அநேகமாக ஒவ்வொரு நாட்டிலிருந்தும் அங்கு குடியேறியுள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அது வருஷத்திற்கு 1,000,000,000 டாலர்கள் செலவு செய்கிறது. தென் டகோடாவிலுள்ள ஒரு நகரத்தில் ஆறு பேர்தான் வசிக்கிறார்கள். இவ்விரு நகரங்களுக்கிடையே ஆயிரக்கணக்கான பெரிய நகரங்கள், பெருநகரங்கள், கிராமங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு உட்பிரிவிற்கும் தனி ஆட்சி இருக்கிறது. தனது பிராந்தியத்திற்குள் ஆதிபத்யம் செலுத்தக்கூடிய அதிகாரங்கள் அவைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. அதனதன் சாஸனத்திற்குட்பட்டு நடக்கையில் நகராண்மைக் கழகங்கள், ஜில்லா (County) நிர்வாகத்தில், அசாதாரண சந்தர்ப்பம் ஏற்பட்டாலொழிய, ராஜ்ய அரசாங்கம் தலையிட முடியாது. அதே மாதிரி ராஜ்ய அரசாங்கங்களுக்கு உள்ள ஏராளமான அதிகாரங்களில் சமஷ்டி அரசாங்கம் தலையிட முடியாது.

அநேக சமயங்களில் ஒரே அதிகாரம் பல்வேறு அரசாங்கப் பகுதிகளுக்கு இருக்கிற நிலைமை ஏற்படக்கூடும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் இரு பகுதிகளும் ஒன்று சேர்ந்து வித்தியாசங்களை நிவர்த்தித்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நாடெங்கணும் உள்ள பொதுப் பள்ளி நிர்வாகம் ராஜ்ய அரசாங்கங்களின் பிரத்தியேக ஆதிக்கத்திற்குட்பட்டது. ஆனால் சமஷ்டி அரசாங்கம் ராஜ்யங்களுக்குப் பண உதவி செய்கிறது. ஏனெனில் கல்வி அபிவிருத்தி ராஜ்யங்களின் அக்கரை மட்டுமல்ல, தேசீய பொறுப்புமாகும். ஏழை எளியவர்கள் சுத்தமான இடங்களில் சொற்ப செலவில் குடியிருப்பு வசதி பெற முனிஸிபாலிடிகளுக்கு சமஷ்டி அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கங்களும் உதவி புரிகின்றன. அடிக்கடி அரசாங்கத்தின் பல்வேறு இலாக்காக்களுக்குள் அதிகாரப் பாகுபாடு பற்றி அபிப்

பிராயபேதங்கள் ஏற்படுவதுண்டு. அம்மாதிரி வித்தியாசங்கள் நீதி ஸ்தலங்களுக்கு அனுப்பப்பட்டு தீர்க்கப்படுகின்றன, அல்லது மாறுபாடுகளை ஒழுங்கு செய்யும் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. அமெரிக்கா ஈடு இணையில்லாத வளர்ச்சியும் அபிவிருத்தியும் அடைந்தபோதிலும் அரசியலமைப்பால் ஸ்தாபிக்கப்பட்ட அதனுடைய சுயஆட்சி அடித்தளம் எல்லா சோதனைகளுக்கும் ஈடுகொடுத்து வந்திருப்பதுடன் அதை நடத்தும் அமெரிக்க நாட்டு மக்களுக்கு நிகரற்ற நலன்களை அளித்திருக்கிறது.

(2)

ஒரு அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது.

அமெரிக்க குடியரசின் ஆதார தஸ்தாவேஜான அரசியலமைப்பைத் தயாரிப்பதற்குக் கூடிய மகாநாடு (Convention) ஒரு அடிப்படையான விஷயத்தில்தான் ஒன்றுபட்டிருந்தது. பலம் பொருந்திய மத்திய அரசாங்கத்தின் அவசியத்தை எல்லா பிரதிநிதிகளும் உணர்ந்திருந்தார்கள். அதனுடைய எட்டு வருஷ சர்ச்சையில் 13 ராஜ்யங்களின் கூட்டு மகாநாடு தனது தோல்வியையும் திறமையின்மையையுமே காட்டிற்று. ராஜ்யங்களுக்குள் கட்டுப்பாடு ஏற்படுத்தக்கூடிய மத்திய அரசாட்சி இல்லாததன் விளைவு தெளிவாகத் தெரிந்தது. பிரிவினை உணர்ச்சி தலைகாட்டத் தொடங்கியதற்கான சூசகங்கள் தென்பட்டன. ராஜ்யங்களுக்கிடையே காணப்பட்ட பரஸ்பர அவநம்பிக்கை உடனடியாகத் தடை செய்யப்படாவிட்டால் எதிர்காலத்தில் பல சச்சரவுகள் விளைய அது காரணமாயிருக்கும் என்பதும் நன்கு விளங்கியது. சமஷ்டியின் நலன்களைக் கவனியாமலும், சில சமயம் அவைகளுக்கு பங்கம் ஏற்படும் வகையிலும், ராஜ்யங்கள் தத்தம் காரியங்களையே பிரதானமாக கவனித்துவந்தன. ஒருவேளை நாடு தாக்கப்பட்டால் கூட்டுப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்வது சாத்தியமாயிராது என்பதை சந்தேகத்துக்கிடமின்றிக் காட்டியது.

சமஷ்டி அரசாங்கத்திற்கு என்னென்ன அதிகாரம் அளிப்பது என்பதைப்பற்றி கணிசமான அபிப்பிராய பேதமிருந்தது. பதின்மூன்று ராஜ்யங்களிலும் பலத்த பகுதிகள் தங்களுக்குப் புதிதாகக் கிடைத்த சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் உறுதியுடன் இருந்ததுமின்றி, பலம் வாய்ந்த மத்திய அரசாங்கத்தின்



செனட் சபையிலும் பிரதிநிதி சபையிலும் நடந்தவற்றை அறிய காங்கிரஸ் பதிவுப்புத்தகம் வெளியிடப்படுகிறது ; ஒவ்வொரு நாட் காலையிலும் இது காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகிறது ; முந்திய நாள் காங்கிரஸில் என்ன நடந்தது என்பதை அதிலிருந்து ஒன்று விடாமல் அறிந்துகொள்ளலாம். கமிட்டிக் கூட்டங்கள் முதலிய அலுவல்களுக்காகக் காங்கிரஸுக்கு வர முடியாமல் போன காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு இது மிக உபயோகம். பொது மக்கள் கேட்டாலும் அது கொடுக்கப்படுகிறது.



இந்தக் காங்கிரஸ் அங்கத்தினர் காங்கிரஸ் சபைகூடும் காலத்தில் வாஷிங்டனில் வசிக்கிருர்; நாட்டுக்கு வேண்டிய சட்டங்கள் செய்ய மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர் தொகை 531.

ஆதிக்கத்திற்குட்பட விரும்பவில்லை. எல்லா ராஜ்யங்களையும் பாதிக்கக்கூடிய விஷயங்களில் விசேஷ அதிகாரங்களுடன் தலையிட்டு சமாளிக்கக்கூடிய மத்திய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்திய மற்ற கோஷ்டிகளும் இருந்தன.

இந்த பெரிய அபிப்பிராய பேதத்தைத் தவிர மற்ற மாறுபட்ட கருத்துக்களுள்ள விஷயங்களும் இருந்தன. ஒவ்வொரு பிரதிநிதியும் தன்னுடைய விச்வாசத்தை முதலாவதாகத் தன்னுடைய ராஜ்யத்திற்கும் அதனுடைய பிரத்தியேக அக்கரைகளுக்குமே அளித்தனர். தோட்ட முதலாளிகள், சிறு குடியானவர்கள், உற்பத்தியாளர்கள், சிறு வியாபாரிகள், உழைப்பாளிகள் போன்ற ஒவ்வொரு கோஷ்டிக்கும் அதனதன் நலனை மட்டும் முக்கியமாகக் கருதும் பிரதிநிதிகள் இருந்தனர். மாறுபட்ட வழக்கங்களைப் பின்பற்றுபவர்கள், பல்வேறு அரசியல், மத அபிப்பிராயங்களைக் கொண்டவர்களும் இருந்தனர். மகாநாட்டில் (Convention) நடந்த விவாதத்திற்கு எல்லையில்லை. விவாதம் நடக்க நடக்க, அபிப்பிராயபேதங்களைவிட பொதுவான தேவைகள் முக்கியம் என்கிற உணர்வு தென்பட்டது. கீழ்க் காணும் பிரச்னைகள் தெளிவாகத் தெரிந்தன.

கான்பெடரேஷனின் ஷரத்துகளின் பலஹீனத்தினால் எல்லா ராஜ்யங்களும் அனுவசியமாகக் கஷ்டப்பட்டன.

எல்லா ராஜ்யங்களின் தேவைகளும் ஒரே மாதிரி இருந்ததுடன் சட்டங்கள், சுதந்திரம், சுய ஆட்சி முதலியவற்றைப் பற்றி ராஜ்யங்களின் கருத்துக்கள் ஒரே மாதிரி இருந்தன.

அந்நிய அரசாங்கத்தின் ஆக்ரமிப்பினால் தாக்கப்படலாம் என்கிற ஆபத்து எல்லா ராஜ்யங்களுக்கும் இருந்தது.

எந்த ராஜ்யமும் தனித்து நின்று அமெரிக்க இந்திய பிரச்னையைத் திருப்திகரமாகத் தீர்க்க முடியாது.

உள்நாட்டு கால்வாய்களை எந்த ராஜ்யமும் தனித்து நின்று ஒழுங்குபடுத்த முடியாது.

எல்லா ராஜ்யங்களையும் பிணைக்கும் ரஸ்தாக்களும் அவைகள் மூலம் வியாபார, பிரயாண தபால் வசதிகள் பெருகுவது எல்லா ராஜ்யங்களுக்கும் அத்தியாவசியமாயிருந்தது.

பிரதிநிதிகள் விவாதத்திற்கிடமுள்ள விஷயங்களை சர்ச்சை செய்தார்கள்; தங்களுடைய பிரத்தியேக நலன்களுக்காக வாதாடினார்கள்; இவ்வாறு நான்கு மாதங்கள் வாதப் பிரதி வாதங்கள் நடந்தன. எந்த நோக்கமும் ஈடேருமல், சொற் போரில் மெய்மறந்து ஈடுபட்டுவிடுவார்களோ என்று சிலர் பயப்படும் சில சந்தர்ப்பங்கள் இருந்தன. ஏற்படப்போகும் மத்திய அரசாங்க சம்பந்தமாக வெளியான கருத்துகளிலி ருந்து, சில சிறிய ராஜ்ய பிரதிநிதிகள் தாங்கள் பெரிய ராஜ்ய மக்களின் பிடியில் அகப்பட்டுக்கொண்டு அவதிப்பட நேரிடுமோ என அஞ்சி மகாநாட்டிலிருந்து வெளியேறினார்கள். எனினும், பல சமரஸங்கள் மூலம் வித்தியாசங்கள் அகற்றப்பட்டன. காங் கிரஸிலுள்ள இரு சபைகளில் ஒன்றில் எல்லா ராஜ்யங்களுக் கும் சமப் பிரதிநிதித்துவம் அளிப்பதன் மூலம் சிறிய ராஜ் யங்களின் அச்சம் நீக்கப்பட்டது. ஒவ்வொரு ராஜ்யமும், அதன் விஸ்தீர்ணம் யாதாயிருந்தாலும், செனட் சபையில் இரு ஸ்தானங்கள் பெற்றது. செல்வம் படைத்த மத்திய அரசாங்கத்திற்கு அதிக வரி செலுத்தும் பெரிய ராஜ்யங்களுக்கு ஒரு சலுகை காட்டப்பட்டது, காங்கிரஸின் மற்றொரு பகுதியான பிரதிநிதிகள் சபையில் இந்த ராஜ்யங்களுக்கு அவைகளின் ஜனத்தொகைக்கேற்ற பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. மேலும் பெரிய ராஜ்யங்களுக்கு பெருவாரியான பிரதிநிதித்து வம் உள்ள பிரதிநிதிகள் சபைக்கே சமஷ்டி வருமானத்தைப் பெருக்கவும், மத்திய அரசாங்கத்தின் செலவினங்களை அனு மதிக்கவும் உள்ள சட்டமியற்றும் அதிகாரம் அளிக்கப்பட்டது.

புதிய ஜனநாயகத்திற்கு ஸ்திரத்தன்மை அளிக்கும் வகை யில் அதை உருவாக்கும் பொறுப்பை வகித்த பிரதிநிதிகளில்

பலர் பிரமாதமான மேதைவாய்ந்த தலைவர்கள். அவர்களில் பிரசித்தி வாய்ந்தவர் மகாநாட்டிற்குத் தலைமை வகித்த ஜார்ஜ் வாஷிங்டன். அவர் பரந்த அறிவும் தீர்க்க திருஷ்டியும் வாய்ந்தவர். அவர் அந்த கண்டத்தின் படைத் தலைவராய் அனுபவம் பெற்றவரானதால், பல ராஜ்ய மக்களையும் அவர்கள் மனதை வாட்டும் பிரச்னைகளையும் நன்கு அறிந்தவர். மகா பண்டிதரும், விஞ்ஞானியும், திறமைவாய்ந்த ராஜதந்திரியு மான பெஞ்சமின் பிராங்கிலின் பிரதிநிதிகளிடையே மிகுந்த செல்வாக்குடையவராயிருந்தார். அதே மாதிரி வர்ஜினியாவின் ஜேம்ஸ் மாடிஸன், நியூயார்க் கவர்னர் மாரிஸ், பென்ஸில் வேனியாவின் ஜேம்ஸ் வில்ஸன் முதலியோரும் பிரதிநிதிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். நியூயார்க்கின் துணிவு மிக்க சமஷ்டிவாதியும் சிறந்த அறிவாளியுமான அலெக்ஸாண் டர் ஹாமில்டன் என்பவர் பலம் படைத்த மத்திய அரசாங்கத் தின் அவசியத்தை வற்புறுத்துபவர்.

இவர்களும் இன்னும் மற்ற பிரதிநிதிகளும் பல இடங் களிலிருந்து தங்கள் கருத்துக்களை சேகரித்தார்கள். எழுத் துருவம் பெறாத ப்ரிட்டிஷ் அரசியலமைப்பிலிருந்து பல கருத் துக்களையும் கொள்கைகளையும் ஏற்றுக்கொண்டார்கள். குடி யேற்ற நாடுகளின் சாஸனங்களிலிருந்து தாராளமாக பல கருத்துகளை ஸ்வீகரித்துக்கொண்டார்கள். ராஜ்யங்களின் பிர ஜைகளுக்கு இந்த சாஸனங்கள் ஏற்கெனவே தெரிந்தவை. ஆகையால் அவைகளில் பெரும்பாலானவை அவர்களின் ஆத ரவைப் பெற்றன. சுதந்திர பிரகடனத்தில் குறிப்பிடப்பட் டிருந்த அரசாங்கங்களின் அடிப்படை நோக்கங்கள்—மக்களுக்கு சேவை, ஜீவாதார உரிமைகளைக் காப்பது—அவர்களுக்கு வழி காட்டியாகயிருந்தன. ராஜ்ய அரசியலமைப்புகளும், கான் பெடரேஷன் ஷரத்துகளும் பழங்காலத் தவறுகள் மீண்டும் நிகழாமலிருக்க உதவியாயிருந்தன.

அரசாங்க அமைப்பு முறைகள் பற்றி பல பிரதிநிதிகள் பண்பட்ட கருத்துகளுடையவர்களாயிருந்தனர். மற்ற நாட்டு

அரசியல் ஞானிகளின் செல்வாக்கும் பயன்பட்டது. பிரஞ்சு பிரமுகர் மாண்டெஸ்குயூ, ஆங்கில ஞானி ஜான்லாக் முதலியவர்களின் நூல்கள் கவர்னர் மாரிஸுக்கும் மற்ற பிரதிநிதிகளுக்கும் அரசாங்க அதிகாரத்தை சட்டமன்றம், நிர்வாகம், நீதி பரிபாலனம் ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் பகிர்ந்து கொடுக்கும் அவசியத்தை எடுத்துக்காட்டின.

கோடைகாலம் முடிய விவாதம் நடந்த பிறகு அரசியலமைப்பின் இறுதி நகலைத் தயாரிக்கும்படி கவர்னர் மாரிஸ் கேட்டுக் கொள்ளப்பட்டார். இந்த வேலையை அவர் 1787 செப்டம்பர் மத்தியில் செய்து முடித்தார். பிரதிநிதிகளின் கையெழுத்துக்கு நகல் சமர்ப்பிக்கப்பட்டது. சில பிரதிநிதிகள் கூட்டத்திற்கு வரவில்லை, மற்றும் சிலர் கையெழுத்திட மறுத்தனர். மொத்தம் 38 பிரதிநிதிகள் கையெழுத்திட்டனர். இன்னும் ஒரு கடைசி வேலை பாக்கியிருந்தது. இந்த நகலின் பிரதிகளை எல்லா ராஜ்யங்களின் அங்கீகாரத்திற்கும் அனுப்பவேண்டும். அரசியலமைப்பு அமுலுக்கு வரவேண்டுமானால் ஒன்பது ராஜ்யங்களாவது நகலை அங்கீகரிக்க வேண்டும்.

அரசியலமைப்பு நகலில் கடைசி பிரதிநிதி கையெழுத்திடும் சமயத்திலேயே அதன் அங்கீகாரம் எதிர்ப்பின்றியோ சீக்கிரமாகவோ நடைபெறாது, என்பது நன்றாகத் தெரிந்திருந்தது. டிலாவர் ராஜ்யம்தான் முதன் முதலில் அங்கீகரித்தது. அதன் சட்டசபை ஏகமனதாக அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டது. அவ்வாறே நியூ ஜெர்ஸி, ஜார்ஜியா சட்டசபைகளும் ஆதரித்தன. பென்ஸில்வேனியாவும் கனெக்டிகட்டும் மிகப் பெரும்பான்மையான ஓட்டுகளால் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தன. மஸாசுஸெட்ஸில் விவாதம் கடுமையாயிருந்தது. அங்கீகார தீர்மானத்தைப் பிரேரித்தவர்கள் தங்கள் தீர்மானத்தில் அரசியலமைப்புக்குச் சில திருத்தங்களையும் குறிப்பிட்டிருந்தனர். இந்தத் தீர்மானம் 10 சத அதிகப்படி ஓட்டுகளால்தான் ஜெயித்தது. ஒரு வருஷம் முடிவதற்குள் மேரிலாண்டு, தென் கரோலினா, நியூ ஹாம்ப்ஷயர் முதலிய ராஜ்யங்களும்

தங்களது சம்மதத்தைத் தெரிவித்தன. இத்துடன் தேவையான 9 ஓட்டுகள் கிடைத்து அரசியலமைப்பு அமுலுக்கு வந்தது.

ஆறில் மூன்று கேந்திரமான சக்திவாய்ந்த ராஜ்யங்களான நியூயார்க், வர்ஜீனியா, வட கரோலினுவும், ரோட் தீவு எனும் சிறு ராஜ்யமும் அங்கீகரிக்கவில்லை. வர்ஜீனியாவிலிருந்து வந்திருந்த 6 பேர் அடங்கிய கோஷ்டியில் மூன்று பேர் நகலில் கையெழுத்திட மறுத்துவிட்டனர். சமஷ்டியில் அதிக ஜனத்தொகையுடைய வர்ஜீனியா மக்களில் சாதக பாதகத்திற்கு சமபலமிருந்தது. ஆனால் வாஷிங்டன் பெயரின் ஆகர்ஷண சக்தியினுல் சிறிய அளவு அதிகப்படி ஓட்டுகளால் அங்கீகாரப் பிரேரணை நிறைவேறியது.

நியூயார்க்கில் மக்கள் மனதைத் திருப்புவதற்காக அலெக்ஸாண்டர் ஹாமில்டன், ஜேம்ஸ் மாடிஸன், ஜான்ஜே மூவரும் பெருமுயற்சி செய்தார்கள். அங்கீகாரத்திற்குக் காரணங்களை அலசி 85 கட்டுரைகள் எழுதினுர்கள். இந்தக் கட்டுரைகளை ஒன்று சேர்த்து **சமஷ்டிவாதி** எனும் புத்தகமாக வெளியிட்டார்கள். இன்றுகூட அமெரிக்க அரசாங்க முறைகளை விளக்கும் சிறந்த நூலாக அது விளங்குகிறது. 3 அதிகப்படி ஓட்டுகளால் (சாதகமாக 30 பாதகமாக 27) நியூயார்க் அரசியல் நிர்ணய சபை அரசியலமைப்பை அங்கீகரித்ததற்கு இந்த மூன்று பிரமுகர்கள்தான் காரணம் என்று அநேக சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர்.

கடைசியில் வடக்கு கரோலினுவும் அங்கீகரித்தது. சுற்றிலும் புதிய குடியரசு சூழ்ந்திருக்க ஒரு சிறு ராஜ்யம் தனித்திருக்க முடியாது என்பதை அறியும் வரையில் ரோட் தீவு எதிர்த்து நின்றது. கடைசியில் 1790 மே மாதத்தில் அதுவும் சம்மதித்தது.

இவ்வாருக ஒரு புது மாதிரியான அரசாங்கத்தின் அடிப்படை சாஸனம் தயாரிக்கப்பட்டு அங்கத்தினர் ராஜ்யங்களால்

அங்கீகரிக்கப்பட்டது. மிக விரிவான வாதப் பிரதிவாதத்திற்குப் பிறகுதான் அது உருப்பெற்றது. அதை அங்கீகரித்தவர்களும் பூரணமாக ஆதரித்துவிடவில்லை. ராஜ்யங்கள் அதை ஏற்றுக்கொள்வதிலும் எதிர்ப்பிருந்தது. அது நிறைவேறிய பிறகும் அதை அங்கீகரித்தவர்களில் அநேகர் தாங்கள் சம்மதித்தது புத்திசாலித்தனமான காரியமல்ல என்று கருதினார்கள். அரசியலமைப்பு பலமும் உறுதியும் பெற்றதற்கு, இது மாற்ற முடியாத பூர்ணத்துவம் பெற்ற இறுதி தஸ்தாவேஜு அல்ல, பிற்கால தேவைகளுக்கேற்ப மாற்றக்கூடிய சுயஆட்சி சாதனம் என்ற உணர்வே காரணமாயிருக்கலாம்.

தேவையான 9 ராஜ்யங்கள் அரசியலமைப்பை அங்கீகரித்த பிறகு புதிய அரசாங்கத்தை ஸ்தாபிக்க மக்கள் முயற்சி செய்தனர். முதலில் நடக்க வேண்டியது காங்கிரஸைத் தேர்ந்தெடுப்பது. ஓட்டுரிமை பெற்ற ஜனங்கள் சேர்ந்து பிரதிநிதிகள் சபையின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஒவ்வொரு ராஜ்ய சட்டசபையும் செனட்டில் அங்கம் வகிக்க வேண்டிய இரண்டு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தன. ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான பிரமுகர்கள் ஜாபிதாவை ஒவ்வொரு ராஜ்யமும் தேர்ந்தெடுத்தது. இவர்கள் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியையும், உப ஜனாதிபதியையும் தேர்ந்தெடுக்க வேண்டும். நியூயார்க்தான் நாட்டின் முதல் தலைநகராக நிர்ணயிக்கப்பட்டது. அந்நகரின் புரட்சி வீரரும், அமெரிக்க யூனியன் தலைசிறந்த ராஜ தந்திரியுமான ஜார்ஜ் வாஷிங்டன் 1789 ஏப்ரல் 30-ம் தேதி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மஸாசுஸெட்ஸைச் சேர்ந்த ஜான் ஆடம்ஸ் முதல் உப ஜனாதிபதியானார். மேரிலாண்டும் வர்ஜீனியாவும் தங்கள் ராஜ்யங்களில் ஒரு பகுதியை தலைநகருக்காக தானம் செய்தன. கொலம்பியா ஜில்லாவென அழைக்கப்பட்ட இப்பகுதி ஆதிபத்ய உரிமையுள்ளதாகக் கருதப்பட்டு சமஷ்டி அரசாங்கத்தின் தலைநகராக வாஷிங்டன் விளங்கியது.

(3)

அரசியலமைப்பு: அதிகாரத்தின் மூலஸ்தானம்

அமெரிக்க நிர்வாக முறையில், அரசியலமைப்புதான் நாட்டின் ஜீவாதாரமான சட்டம்; அதுதான் அதிகாரத்தின் மூலஸ்தானம். மத்திய அரசாங்கத்தின் ஆதிக்க எல்லையை அதுதான் நிர்ணயித்து வரையறுக்கிறது; அதுதான் அரசாங்கத்தின் மூன்று பகுதிகளாகிய நிர்வாக இலாகா, சட்டமியற்றும் ஸ்தாபனம், நீதி இலாகா முதலியவைகளின் கடமைகளையும் பொறுப்புகளையும் அளிக்கிறது. அதன் மூலம்தான் அமெரிக்க மக்களாகிய வோட்டர்களுக்கு முடிவான 'அதிகார கிரீடம் கிடைக்கிறது.

தேர்தல் அல்லது உத்தியோக நியமனம் மூலம் அதிகாரிகளுக்குத் தம் கடமைகளைச் சரிவர நிறைவேற்றும் அதிகாரத்தை மக்கள் அளிக்கின்றனர்.

தகுதியின்மை அல்லது சட்ட விரோத நடத்தைக்காக பகிரங்க விசாரணை நடத்தும் முறையை, உத்தியோகஸ்தர்களை எவ்வளவு பெரிய பதவி வகிப்பவர்களானாலும் அவர்களுடைய பதவிகளிலிருந்து விலக்குவதற்கு உபயோகிக்கலாம். தங்களுடைய ஓட்டுரிமையின் மூலம் மக்கள் உத்தியோகஸ்தர்களை நியமிக்கலாம், அல்லது நீக்கியவர்களுக்கு பதிலாக வேறு யாரை யாவது நியமிக்கலாம்.

தனிநபர்களின் ஜீவாதார உரிமைகள் பாதுகாக்கப்படும், அவ்வுரிமைகள் எக்காரணத்தாலும் பறிமுதலாகாது என்று அரசியலமைப்பு உத்தரவாதம் அளிக்கிறது. அமெரிக்காவின் அரசாங்க முறைக்கு சமஷ்டிக் குடியரசு என்று பெயர்—

சமஷ்டி என்றால் " சம உரிமையுள்ளவர்களுக்குள் உடன்பாடு " என்று பொருள்—அதாவது தேசிய அரசாங்கமும் 48 தனித் தனி ராஜ்ய அரசாங்கங்களும் சேர்ந்த கூட்டுறவு.

ஆதி அரசியலமைப்பில் பெரும் பகுதி சமஷ்டி அமைப்பு முறை நிறுவுதலை விவரிக்கிறது. சட்டமியற்றும் பகுதியில் எந்தெந்த விஷயங்களைப் பற்றி சட்டம் செய்யலாம் என்கிற ஜாபிதா விவரிக்கப்பட்டிருக்கிறது. நிர்வாக யந்திரத்தின் தலைவர் என்கிற முறையில் ஜனாதிபதியின் கடமைகளும் அதிகாரங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக ஜனாதிபதி அயல் தேச உறவுகளை நிர்ணயிக்கலாம், அயல்நாடுகளுக்கு தூதர்கள், மந்திரிகள் முதலியவர்களை அனுப்பலாம், அயல் நாடுகளின் தூதர்களை வரவேற்கலாம்.

அரசாட்சிக் கொள்கைகள் :

மேலே கூறப்பட்ட ஷரத்துகள் தவிர, மிகமுக்கியமான கீழ்க்காணும் கொள்கைகளையும் அரசியலமைப்பு வகுத்திருக்கிறது. சட்டசபைகள் சட்டங்களை இயற்றுகின்றன; அரசாங்கத்தை நடத்தும் நிர்வாகம் சட்டங்களை நிறைவேற்றுகின்றன ; நீதி இலாகா சட்டங்களுக்கு வியாக்யானம் செய்து அதன் முன்வரும் தாவாக்களைத் தீர்த்து வைக்கின்றது. இவ்வாறு நடக்கும் அரசாங்கத்தின் மூன்று பகுதிகளும் தனித்தனியானது, ஒவ்வொரு பிரிவும் மக்களின் பிரதிநிதியாக விளங்குகின்றது என்று அரசியல் அமைப்பு பிரகடனம் செய்கிறது. ஒவ்வொரு பகுதிக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் எந்தப் பகுதியும் மற்றிரு பகுதிகளையும் யதேச்சாதிகாரமாக ஆள முடியாமல் பாதுகாக்கிறது. இந்த சம அந்தஸ்து, ஒரு பாகம் மற்ற பாகம் ஹத்து மீறிச் செல்லாமல் தடைசெய்கிறது.

அரசியலமைப்பு, காங்கிரஸினால் ஒழுங்காக நிறைவேற்றப் பட்ட சட்டங்கள், ஜனாதிபதியினால் செய்யப்பட்டு செனட்டினால் அங்கீகரிக்கப்பட்ட பிறதேச உடன்படிக்கைகள் இவைகள்தான் நாட்டில் எல்லோரையும் கட்டுப்படுத்தக்கூடிய சட்டம்.

சட்டத்தின் முன் எல்லோரும் சமம், எல்லோருக்கும் சட்டத்தின் பாதுகாப்பைப் பெற சம உரிமை உண்டு. எல்லா ராஜ்யங்களும் சமம், எந்த ராஜ்யமும் தேசீய அரசாங்கத்தினிட மிருந்து தனிச் சலுகை பெற முடியாது.

ஒவ்வொரு ராஜ்யமும் குடியரசு ஆட்சி பெறும் உரிமை யுடையது என்றும், அந்த ஆட்சியைக் கட்டுப்படுத்தும் இறுதி அதிகாரமும் மக்களுடையது என்றும் உத்தரவாதம் செய்யப்பட் டிருக்கிறது. அரசாங்க அதிகாரத்தை மக்கள் தங்களுடைய சட்டசபை பிரதிநிதிகளுக்கு ஒப்படைத்திருக்கிறார்கள்.

காங்கிரஸிலுள்ள தங்களுடைய பிரதிநிதிகள் மூலம் அர சியலமைப்பையே மாற்றும் உரிமை தேசமக்களுக்கு என்றும் உண்டு ; ஆனால் அந்த மாறுதல் முக்கால் வாசி ராஜ்யங்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

திருத்தத்திற்கான ஷரத்துகள்

தேசத்தின் வளர்ச்சிக்கேற்ப அரசியலமைப்பு நீடித்து நிற்க வேண்டுமானால் அவ்வப்போது அதில் மாறுதல் செய்யவேண்டு மென்பதை அதன் கர்த்தாக்கள் உணர்ந்திருந்தனர். எனினும் பெரும்பாலான மக்களின் ஆதரவைப் பெறுமல் தீர ஆலோசி யாமல் அவசரமாக மாறுதல் செய்வதற்கு அவர்கள் இட மளிக்கலாகாது. எவ்வித மாறுதலும் செய்ய முடியாமல் ஒரு சிறுபான்மையினர் முட்டுக்கட்டை போடுவதைத் தவிர்க்கவும் விரும்பினர்.

ஆகையால் அரசியலமைப்பை மாற்றுவதற்கு பல்வேறு வழி வகைகள் செய்தனர். காங்கிரஸ் அதன் இரு உருப்புக ளாயிருக்கும் சட்ட சபைகளில் மாறுதலைப் பிரேரிக்கலாம். மூன்றிலிரண்டு பங்கு ராஜ்யங்களின் சட்டசபைகள் மாறுதல் செய்யவேண்டுமென்று காங்கிரசுக்கு மனுச் செய்து கொள்ள லாம். பின்கண்ட முறை அனுஷ்டிக்கப்பட்டால் பிரஸ்தாப திருத்தத்தை ஆலோசித்து தயார் செய்ய ஒரு தேசிய

மகாநாட்டை (Convention) க்கூட்ட காங்கிரஸ் கடமைப்பட்டிருக்கிறது. இவ்விரு முறைகளில் எதை மேற்கொண்டாலும் திருத்தம் முக்கால் பங்கு ராஜ்யங்களால் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். மேலும் திருத்தம் ராஜ்யங்களின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்படுகையில் காங்கிரஸ் ஒன்று ராஜ்ய சட்டசபைகள் திருத்தத்தை முடிவு செய்யும்படி கோரலாம், அல்லது இந்த திருத்தத்தைப் பரிசீலனை செய்து தீர்மானம் செய்வதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மகாநாட்டை ஒவ்வொரு ராஜ்யமும் கூட்ட வேண்டுமென்று கட்டளையிடலாம்.

புதிய நிலைக்கேற்ப அரசியலமைப்பை மாற்றுவதற்கான இந்த நேரடி வழியைத் தவிர, வேறு முறைகளிலும் மாறுதல் ஏற்படலாம். தேசத்தின் புதிய தேவைகளுக்கு உதவியாக அரசியலமைப்பு கொள்கைகளைக் கையாண்டு நீதிபதிகள் வியாக்கியானம் செய்யலாம். இந்த முறையினுல் அரசியலமைப்பு விசேஷமாக விரிவடைந்திருக்கிறது. ரேடியோ, டெலிபோன், தந்திப் போக்குவரத்து முதலிய சாதனங்களைக் கையாள்வது, ரயில்பாதை விமானவசதி நிர்வாகம், இன்னும் தேசிய அல்லது ராஜ்யங்களுள் பரஸ்பர உறவுகளை பாதிக்கும் பல ஸ்தாபன நிர்வாகங்கள் அரசியலமைப்பின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட கொள்கைகளாலே நிர்வகிக்கப்பட்டுவருகின்றன. நீதிஸ்தலங்கள் முன்வரும் தாவாக்களுக்குப் பொருத்தமான அரசியலமைப்பு ஷரத்துகளுக்கு வியாக்யானங்கள் கூறும் பல தீர்ப்புகள் மூலம் நன்கு ஒழுங்கு செய்யப்பட்ட அரசியலமைப்பு சட்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த தீர்ப்புகள் அரசியலமைப்பை விரிவுபடுத்தியிருப்பதுடன், அசல் சாஸனத்தின் ஜீவனையோ வாசகத்தையோ மாற்ருமல் அதன் அடிப்படைக் கொள்கைகளை பிராபல்யப்படுத்தியிருக்கின்றன.

அரசியலமைப்பின் வாசகத்தையும் ஆணைகளையும் அடிப்படையாகக் கொண்டு காங்கிரஸினுல் இயற்றப்பட்ட சட்டங்கள் ஏராளமாய் உள்ளன. ஏனெனில், அரசியலமைப்பின் ஆக்ஞையை நிறைவேற்றவோ அல்லது புதிய நிலைமைகளுக்கேற்ப

புதுக்கொள்கைகளை வகுக்கவோ காங்கிரஸினுல் முடிவு செய்யப்பட்ட சட்டங்கள் பொதுப்படையாக இருக்கின்றன ; இவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும் அரசாங்க ஸ்தாபனங்கள் அவைகளுக்கு விளக்கம் கூற வேண்டியிருக்கின்றன. நீதி ஸ்தலங்கள் இவைகளை ஏற்று நடக்கும் வரையில் இவைகளுக்கு சட்டத்திற்குள்ள மதிப்பு உண்டு. இவைகள் மூலம் அரசியலமைப்பு விரிவுபடுகிறது. இந்த வளர்ச்சி மக்களின் பல பகுதியினரை வெகுவாக பாதிக்கிறது.

இன்று அமெரிக்காவில் அரசாங்கத்தின் பல பகுதிகள் இருக்கின்றன. ஏராளமான சட்டங்களும், சட்டத்திற்குள்ள மதிப்புவாய்ந்த கோட்பாடுகளும் இருக்கின்றன. ஆனுல் அரசியலமைப்பின் ஆதிகர்த்தாக்கள் இவ்வளவு சட்டங்களும் ஷரத்துகளும் தேவையாயிருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. எதிர்காலத்தில் இம்மாதிரி பல மாறுதல்கள் ஏற்படலாம். ஆனுல் எல்லா மாறுதல்களும் சட்டபூர்வமான சோதனைக்குள்ளாகின்றன. அரசாங்கத்தின் நீதிநிர்வாக பகுதியின் அபிப்பிராயத்தில் இம்மாறுதல்கள் அரசியலமைப்பின் ஆதிகர்த்தாக்களின் நோக்கத்திற்கு ஏற்றது, முரணுனதல்ல என கருதப்படவேண்டும்.

அரசியலமைப்பு சாஸனத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணுனது என்று கருதி சில சமயம் நீதி ஸ்தலங்கள் காங்கிரஸ் இயற்றிய சட்டங்களையோ, ராஜ்யங்களால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களையோ, நிர்வாகிகள் முடிவுகளையோ கீழ்ப்பட்ட நீதிஸ்தலங்களின் திர்ப்புகளையோ சட்ட விரோதமானவை ஆகையால் செல்லுபடியாகாது என்று தீர்ப்புச் செய்துவிடலாம்.

உரிமைகள் மசோதா (Bill of Rights)

அரசியலமைப்பின் நேரடியான வளர்ச்சியில் சென்ற 160 வருஷங்களில், 1949 ஜனவரி மாதம் முதல் தேதி வரையில் 21 திருத்தங்கள் நிறைவேறியிருக்கின்றன. 10 திருத்தங்கள் அடங்கிய "உரிமைகள் மசோதா" (Bill of Rights) முதல்

காங்கிரஸின் நிகழ்ச்சி திட்டத்தில் முதல் ஸ்தானம் பெற்றிருந்தது. அவைகள் சீக்கிரத்தில் நிறைவேறின. (பிரதிநிதிகள் சபையின் அங்கத்தினர்கள் யாவரும் இரண்டு வருஷத்திற்கொரு முறை தேர்ந்தெடுக்கப்படுவதால் இரண்டு வருஷத்திற்கொரு காங்கிரஸ் ஏற்படுகிறது). அரசியலமைப்பின் மூலம் உத்தரவாதம் செய்யப்படவில்லை என்று காங்கிரஸினால் கருதப்பட்ட சில தனிநபர் சுதந்திரங்களை இந்த மசோதா பிரத்தியேகமாக உத்தரவாதம் செய்கிறது. அரசியலமைப்பை ஆதியில் அங்கீகரிப்பதற்கு இருந்த எதிர்ப்புக்குக் காரணம் ஒருசில தனிநபர் சுதந்திரங்களை வியர்த்தமாக உத்தரவாதம் செய்யாதது தான். பிலடல்பியா கன்வென்ஷனில் தயார் செய்யப்பட்ட அரசியலமைப்பு நகலை அங்கீகரிப்பதற்குக் கூட்டப்பட்ட மஸாசுஸெட்ஸ் பிரதிநிதிகள் இந்தக் குறைபாட்டைத்தான் விசேஷமாக வாதித்தார்கள். அந்த விவாதத்தின் பயனாக, இந்தக் குறைபாட்டை நிவர்த்திப்பதற்கு சீக்கிரம் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று அவர்கள் அறிவித்தார்கள்.

மத சுதந்திரம்

உரிமைகள் மசோதாவில் அடங்கியுள்ள பத்து திருத்தங்கள் தான் சென்ற $1\frac{1}{2}$ நூற்றாண்டாக அமெரிக்கர் கண்ணும் கருத்துமாகப் போற்றி வளர்த்துவரும் தனி நபர் சுதந்திரங்களுக்கு அடிப்படை. மத வழிபாடு, பேச்சுரிமை, பத்திரிகை சுதந்திரம் அமைதியாக ஒன்றுகூடும் உரிமை, அரசாங்கத்திற்கு மனு செய்து கொள்ளும் உரிமை முதலியவைகளை முதல் திருத்தம் உத்தரவாதம் செய்கிறது.

இரண்டாவது திருத்தம் மக்கள் ஆயுதம் தாங்கும் உரிமை வழங்குகிறது.

வீட்டு சொந்தக்காரர் சம்மதம் பெறாமல் படையினர் தனிப்பட்டவர்கள் வீட்டில் முகாம் செய்யலாகாது என்று மூன்றாவது திருத்தம் உறுதி கூறுகிறது.

வாரண்டின்றி யாரையும் கைது அல்லது சோதனை செய்வதில்லை, எந்த வீடுகளும், சாமான்களும், தஸ்தாவேஜுகளும் கைப்பற்றப்படமாட்டா என நான்காவது திருத்தம் கூறுகிறது.

ஜூரிமார்கள் குற்றம் சாட்டாமல் யாரும் பெரிய குற்றங்களுக்கு விசாரணை செய்யப்படமாட்டார், ஒரே குற்றத்திற்கு பன்முறை விசாரணை கூடாது, சட்ட சம்மதமின்றி தண்டனை விதிக்கலாகாது ; குற்றவாளி தனக்கெதிராக சாட்சியமளிக்கும்படி நிர்ப்பந்திக்கப்படலாகாது ; நியாயமான விலை கொடுக்காமல் யாருடைய சொத்தையும் பொதுஜன உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளலாகாது. இந்த பாதுகாப்புகளை ஐந்தாவது திருத்தம் வழங்குகிறது.

குற்றம் நடந்த ஜில்லாவில் குற்றவாளியை துரிதமாக பகிரங்க விசாரணை நடத்தவேண்டும் ; மிகைப்படுத்திக் கூறுமல் குற்றப்பத்திரிகை படித்தவுடன் பாரபட்சமற்ற ஜூரியின் உதவியுடன் விசாரணை நடத்தவேண்டும் ; எதிரிக்கு வக்கீல் வைத்துக் கொள்ளும் உரிமை ; எதிரியின் சாட்சிகள் வாக்குமூலம் கொடுக்க கட்டாயமாக வரவழைத்தல் ; எல்லா சாட்சிகளும் எதிரியின் முன் வாக்குமூலம் கொடுக்கவேண்டும்—இந்த உரிமைகளை 6-வது திருத்தம் அளிக்கிறது.

20 டாலர் பெறுமானத்திற்கு மேற்பட்ட தொகைக்கான தாவாக்கள் ஜூரிகளின் உதவியுடன் நடைபெறவேண்டும் என்று ஏழாவது திருத்தம் உத்தரவாதமளிக்கிறது.

கிரிமினல் வழக்குக் குற்றவாளிகளை ஜாமீனில் விட அகாதமாக ஜாமீன் தொகை கோருவது, அகாத அபராதம் விதிப்பது, இயற்கைக்கு மாருக கொடூரமான தண்டனையளிப்பது முதலியவைகளை எட்டாவது திருத்தம் தடைசெய்கிறது.

அரசியலமைப்பில் பிரஸ்தாபிக்கப்படாத உரிமைகளை மக்களிடமிருந்து பறிப்பதை ஒன்பதாவது திருத்தம் தடைசெய்கிறது.

மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கப்படாத அதிகாரங்களும், ராஜ்யங்கள் அனுபவிக்கலாகாது என்று அரசியலமைப்பினால் தடை செய்யப்படாத அதிகாரங்களும், ராஜ்யங்களோ அதன் மக்களோ கையாளலாம் என பத்தாவது திருத்தம் விவரிக்கிறது.

தனிப்பட்டவர் சுதந்திரத்திற்கு பலத்த பாதுகாப்பு

இந்த திருத்தங்களின் பொருள் விளக்கமின்றியே விளங்கும். தனிப்பட்டவர் சுதந்திரத்திற்கு அவை அளிக்கும் பாதுகாப்பு சர்வாதிகார அல்லது கொடுங்கோல் அரசாங்கம் ஏற்படாமல் தவிர்க்கிறது.

ஜனநாயக லட்சியம் உலகெங்கும் பரவப் பரவ அநேக நாட்டு மக்கள் அமெரிக்க அரசியலமைப்பையும் உரிமைகள் மசோதாவையும் மாதிரியாக வைத்து தங்களது அரசாங்கங்களை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். யுத்த நெருக்கடி ஏற்பட்ட சமயத்திலும், அரசாங்கத்தின் நிர்வாக இலாகாவிற்கு ஏராளமான விசேஷ அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கையிலும், தேசத்தின் பத்திரத்தை உத்தேசித்து, நாட்டிலிருந்து வெளியே அனுப்பப்படும் செய்திகள் தணிக்கை செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் அமெரிக்காவின் பத்திரிகைகளும், தனிப்பட்ட பிரஜைகளும் அரசாங்கக் கொள்கைகளை குறைகூறும் உரிமை குறைக்கப்படவேயில்லை.

பேச்சு சுதந்திரம்

சமீபத்தில் ஜனாதிபதியின் செய்கைகளை எதிர்த்த சிறு சிறு கோஷ்டிகள் வாஷிங்டனில் ஜனாதிபதியின் வாசஸ்தலமாகிய வெள்ளை மாளிகை முன் எதிர்ப்பு விளம்பரங்களைத் தாங்கி மறியல் செய்து தங்களுடைய கூட்டம் கூடும் சுதந்திரத்தை நிலைநாட்டினார்கள். இது சம்பந்தமாக அரசாங்கம் செலுத்திய கவனம், மறியல் செய்தவர்களைப் பிறர் துன்புறுத்தாமல் பாதுகாக்க கொலம்பியா ஜில்லாவிலிருந்து பல போலீஸ்காரர்களை அனுப்பியதும், ஓரத்திலுள்ள ஒற்றையடிப் பாதையில் ஜனங்கள்

நடமாடுவதை மறியல் செய்தவர்கள் தடை செய்யாமல் பாது காத்ததும்தான்.

அமெரிக்க உரிமைகள் மசோதாப்படி, குற்றம் சாட்டப்பட்ட ஒருவன் தன்னை நிரபராதி என்று ருசு செய்ய சந்தர்ப்பமளிக் கப்படுகிறான். நியாயமாகவும் பகிரங்கமாகவும் நடத்தப்பட்ட விசாரணையில் அவன் குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரையில் அவன் நிரபராதி என்றே கருதப்படுகிறான்.

அரசாங்க நிர்வாகம் எல்லா அம்சங்களாலும் அதிகாரம் மக்களிடமேயிருக்கிறது என்பது இந்த சாஸனத்தில் வற் புறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. இந்த உரிமைகள் மசோதா நிறைவேறிய பிறகு அரசியல் அமைப்பில் செய்யப்பட்ட திருத் தங்கள் பல்வேறு விஷயங்களைப் பற்றியவை. சமஷ்டி அர சாங்கத்தின் நீதி நிர்வாக அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டிருக் கிறது ; ஜனாதிபதியின் தேர்தல் முறையில் மாறுதல் செய்யப் பட்டிருக்கிறது ; யோக்யதையுள்ள பிரஜைகளுக்கெல்லாம் ஓட் டுரிமை விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது ; தனிப்பட்டவர்கள் வரு மானத்திற்கு வரி விதிக்கும் உரிமையும் விரிவாக்கப்பட்டிருக் கிறது. ராஜ்ய சட்டசபைகளுக்குப் பதிலாக ராஜாங்க மக்களே செனட்டிற்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்க வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

18-வது திருத்தம் அமெரிக்காவில் போதை வஸ்துக்கள் விற்பனையைத் தடை செய்தது. இது 21-வது திருத்தத்தின் மூலம் ரத்து செய்யப்பட்டுவிட்டது.

19-வது திருத்தம் மாதர்களுக்கு ஓட்டுரிமை வழங்குகிறது. ஜனாதிபதி, உப ஜனாதிபதி, செனட்டர்கள், பிரதிநிதி சபை அங்கத்தினர்கள் பதவி காலம் எப்பொழுது ஆரம்பிக்கிறது முடிவடைகிறது என்பதை 20-வது திருத்தம் மாற்றி அமைத் திருக்கிறது.

அரசியலமைப்பும், அதற்கு செய்யப்பட்ட திருத்தங்களும் மட்டுமே சுயஆட்சி அனுபவத்தின் சரித்திரமாக அமைந்திருக்கிறது. இதில் சிறப்பான அம்சங்களும் குறைபாடுகளும் சேர்ந்து இருக்கின்றன. ஜனங்களும், அதிகாரம் செலுத்துபவர்களும் தங்கள் பொறுப்புகளை சரிவர வகித்து, ஒற்றுமையுடனும், விட்டுக் கொடுக்கும் சுபாவத்துடனும் வேலை செய்தால் சிறப்பான நிர்வாக லட்சியங்களை எந்த புதிய சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றபடி சமாளித்து கையாளலாம் என்பதையும், அரசியலமைப்பும் அதில் ஏற்பட்ட திருத்தங்களும் நிரூபிக்கின்றன.

அரசியலமைப்பின் ஷரத்துகளும், எல்லா திருத்தங்களும் இந்த நூலின் அனுபந்தத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன.



பிரதிநிதிகள் சபையில் ஒரு மசோதாவைப் பிரேரேபிக்க வேண்டுமானுல் அதை அதற்கெனவுள்ள ஒரு பெட்டியில் போட வேண்டும். செனட் சபையில் மசோதா வாயால் பிரேரேபிக்கப்படுகிறது. ஒரு மசோதா சட்டமாக வேண்டுமானுல், பிரதிநிதிகள் சபை, செனட் ஆகிய இரண்டிலும் அதற்குப் பெரும்பான்மையோரின் ஆதரவு கிடைக்க வேண்டும். பெரும்பான்மையான மசோதாக்கள் இரண்டு சபைகளில் எதிலும் முதன் முதல் தோன்றலாம் ; ஆனுல் வருமானம்பற்றிய மசோதாக்கள் எல்லாம் பிரதிநிதிகள் சபையில் மட்டும்தான் முதலில் தோன்றமுடியும்.



தலைநகர்த் தபாலாபீஸில் எப்போதும் வேலை இருந்துகொண்டே யிருக்கும். காங்கிரஸ் அங்கத்தினர் பொதுமக்கள் கருத்தை அறியப் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் கவனமாய் ஆராய்வார்கள்; அவர்களுடைய சொந்த ஜில்லாக்களிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் அவர்களுக்குக் கடிதங் களும், தந்திகளும் வந்தவண்ணமாக இருக்கும்; இவற்றின் வழி யாகவும் அவர்கள் பொதுமக்கள் கருத்தை அறிந்துகொள்கிறார்கள்.

(4)

பிரஜா உரிமையின் பொறுப்புகள்

சுய ஆட்சி ஒருபுறம் உரிமைகளையும் சுதந்திரங்களையும் அளிக்கையில் மற்றொரு புறம் பிரஜா உரிமையின் விளைவான கடமைகளையும் பொறுப்புகளையும் சுமந்து நின்றன என்பதை அமெரிக்கா, மற்ற ஜனநாயகங்களின் சரித்திரம் நிரூபிக்கிறது. வரி செலுத்துவதன் மூலம் பிரஜைகள் அரசாங்கத்தின் செலவுக்கு வழி செய்யக் கடமைப்பட்டிருக்கின்றனர். தங்கள் உதவியால் இயற்றப்பட்ட சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடப்பது அவர்கள் கடமையாகிறது. இவைகள் பிரஜா உரிமைப் பொறுப்பின் இயல்பான அம்சங்கள். இவை மாதிரியே மிக முக்கியத்வம் வாய்ந்த பிரஜைகள் தாமாகச் செய்யவேண்டிய பல அம்சங்களும் இருக்கின்றன.

இப்படி மக்கள் தம்மிச்சையாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளில் சிறந்தது ஓட்டுரிமையை புத்திசாலித்தனமாக உபயோகிப்பது. புத்திவாய்ந்த ஓட்டர்கள், பெருவாரியான மக்களின் பெருவாரியான நன்மை என்கிற ஜனநாயக தத்துவ அடிப்படையை மறக்கமாட்டார்கள். தான் வசிக்கும் நகரத்தின் தெருக்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வதிலிருந்து, தேசத்தின் எதிர்காலத்தை பாதிக்கக்கூடிய தேசீய பிரச்னைகள் வரை சமூக நலனுக்கான எல்லா நடவடிக்கைகளையும் ஒவ்வொரு பிரஜையும் சிந்தித்து எப்படி ஓட்டுச் செய்வது என்பதை முடிவு செய்கிறான்.

அபாயமான காலங்களில் திடகாத்திரமுள்ள ஆண்களும் பெண்களும் தேசத்தைக் காப்பதற்காக ராணுவ சேவைக்கு தங்களை அர்ப்பணித்துக்கொள்ளுகிறார்கள். சென்ற யுத்தத்தின்போது, பல துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த, ஆனால்

ராணுவ சேவைக்கு அசக்தர்களானவர்கள் தொழில்களை ஆயுதத் தயாரிப்புக்கு லாயக்காக மாற்றுவதில் உதவி புரிந்தனர். நாடெங்கணும் யாதொரு பிரதிப் பிரயோஜனமும் எதிர்பார்க்காமல் ஆயிரக்கணக்கானவர்கள் பல ஸ்தல கமிட்டிகளில் அங்கம் வகித்து படைக்கு ஆள்திரட்டுவது போன்ற மற்ற தேசாபிமானம் வாய்ந்த காரியங்கள் செய்வதிலும் ஈடுபட்டனர்.

சமாதான காலத்தில் பல சமூக, ராஜீய, தேசீய பொதுக் காரியங்களில் ஈடுபடுவதன்மூலம் அமெரிக்க பிரஜைகள் தங்கள் சேவை ஆர்வத்தைக் காட்டுகின்றனர். நகர நன்மைகளைத் திட்டம் செய்யும் சங்கங்களில் தனிப்பட்டவர்கள் தம்மிச்சையாகவே சேருகின்றனர். பள்ளிக்கூட நிர்வாகம், கல்வி அபிவிருத்திக் கொள்கை முதலியவைகளை திட்டம் செய்யும் கல்வி சங்கங்களும், பெற்றோரும் உபாத்திமார் சங்கங்களும் ஒன்றுகூடி பணி புரிகின்றன.

தேசீய நோக்குள்ள மற்ற ஸ்தாபனங்கள் பொதுநல பிரச்னைகளைப் பற்றி பகிரங்கமாக சர்ச்சை செய்கின்றனர். இவ் விவாதங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்க அதிகாரிகளின் செயல்களை பெரிதும் உருவகப்படுத்துகின்றன.

அரசியலையே தங்கள் வாழ்க்கைப் பணியாகக் கொண்டவர்கள் தவிர, அரசாங்க அதிகாரம் வகிப்பதையே தங்கள் வாழ்க்கை சாதனமாகக் கொள்ளும் பிரஜைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இவர்கள் தேர்ந்த ஆராய்ச்சி, அனுபவத்தின் மூலம் அரசாங்க நிர்வாகத்தின் ஏதாவது ஒரு பகுதியில் நிபுணர்களாகிவிடுகின்றனர். அமெரிக்காவில் பல நகர நிர்வாகங்களின் பிரதம அதிகாரிகள் அரசியல் கட்சியில் பற்றில்லாத ஆனால் அரசியலையே வாழ்க்கைத் துறையாகக் கொண்டவர்களாயிருக்கின்றனர். மேலும் தனிப்பட்ட வியாபாரத்தில் வெற்றி கண்ட பல ஆடவரும் பெண்டிரும், பொதுஜன சேவையில் ஈடுபடுவதை தேசத்திற்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமையாகக் கருதிவருகின்றனர்.

சமஷ்டி, ராஜ்ய, ஜில்லா, நகர நீதி மன்றங்களில் சேவை புரியும் ஜூரிகள் சாதாரண பிரஜைகளிலிருந்தே பொருக்கப் படுகின்றனர். பெரிய ஜூரி என்று அழைக்கப்படும், ஏராள மான அதிகாரங்கள் கொண்ட ஜூரிக்கு சமூகத் தலைவர்களா யிருந்து கியாதிபெற்றவர்கள், தேர்ந்த அறிவாளிகள், அபார அனுபவமுள்ளவர்கள்தான் நியமிக்கப்படுகின்றனர். கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கெதிராக சர்க்கார் வக்கீல்கள் சமர்ப்பிக்கும் சாட்சியத்தைப் பரிசீலனை செய்து, விசாரணைக்கு அனுப்புவதற்குப் போதுமான சாட்சியம் இருக்கிறதா அல்லது குற்றவாளியை விடுதலை செய்துவிடலாமா என்பதை இந்த பெரிய ஜூரி முடிவு செய்கிறது. இந்த சேவையும் பொறுப்பும் மகத்தரனதாயிருந்தாலும் பெரிய ஜூரிகளுக்குள்ள புலன் விசாரிக்கும் எல்லையற்ற அதிகாரம் அபாரமானது. நிலைமை இடமளிக்கும் என அவர்கள் கருதினால் குற்றம் செய்ததாக அல்லது ஊழலுக்கிடம் தருமான செயல்கள் புரிந்ததாக சந் தேகப்பட்டால் அதைப்பற்றி புலன் விசாரிக்க இவர்களுக்கு அதிகாரம் உண்டு. தங்களுக்கு திருப்தி யளிக்கக்கூடிய சர்க்கார் வக்கீல்களைக்கொண்டு புலன் விசாரிக்கவேண்டும் என்று அவர் கள் நிர்ப்பந்தம் செய்யலாம். பிரமாணத்தின்பேரில் சாட்சியம் கொடுக்கும்படி அவர்கள் எந்த சர்க்கார் உத்தியோகஸ்தரையும் கட்டளையிடலாம்.

பிரஜா உரிமைக்கான யோக்யதாம்சங்கள்

ஒரு ஜனநாயகத்தில் இறுதியான அதிகாரமும் ஆதிபத்ய அதிகாரமும் ஓட்டுரிமையும் அதை ஒவ்வொரு பிரஜையும் எப்படி உபயோகிக்கிறன் என்பதைப் பொறுத்திருப்பதால் ஓட்டுதான் பிரஜா உரிமையின் சிறப்பும் பொறுப்புமாகும். பிரஜையல்லாதவன் ஓட்டுச் செய்ய முடியாதாகையால் பிரஜா உரிமையின் யோக்கியதாம்சங்கள் யாவை என்பதை ஆராய்வது பயனுள்ளதாகும்.

அமெரிக்காவில் பிறந்து அதன் ஆதிக்கத்திற்குட்பட்ட வர்கள் யாவரும், அவர் வசிக்கும் ஜில்லா, அமெரிக்கா இரண்

டியும் பிரஜைகளாவார்கள். சில நிபந்தனைகளுக்குட்பட்டு, அமெரிக்கப் பெற்றோர்களுக்கு பிரயாணம் செய்கையிலோ அல்லது அயல்நாடுகளில் வசிக்கையிலோ பிறந்த குழந்தைகளும் அமெரிக்கப் பிரஜைகளாவார்கள். அலாஸ்கா, ஹவாய், புவர்ட்டோரிகோ, வர்ஜீன் தீவுகள் முதலிய நாட்டு மக்களுக்கு பிரஜா உரிமை அளித்து காங்கிரஸ் சட்டங்கள் இயற்றியிருக்கிறது.

பிரஜா உரிமை பெறுதல்

அயல்நாட்டில் பிறந்தவர்களும் அமெரிக்காவில் குடியேறி பிரஜா உரிமை பெறலாம். அயல்நாட்டானை பிரஜா உரிமை பெறும்படி நிர்ப்பந்தப்படுத்த முடியாது. அப்படி பிரஜா உரிமைக்கு மனுச் செய்யாததற்காக தண்டிக்கவும் முடியாது. அமெரிக்க பிரஜா உரிமை பெறாத 20 லட்சம் பேர்கள் அமெரிக்காவில் வசித்துக்கொண்டு, ஆனால் பிரஜைகள் அனுபவிக்கும் சிந்தனை, செயல் சுதந்திரம் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களும் பிரஜைகள் மாதிரி தங்கள் குழந்தைகளை பொதுப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பலாம். மற்றவர்கள் மாதிரியே இதர சமூக நலன்களை அடையலாம். ஆனால் அந்நியருக்குள்ள அந்தஸ்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. சில உத்தியோகங்களை வகிக்க பிரஜைகள்தான் லாயக்கானவர்கள். வக்கீலாகவோ டாக்டராகவோ தொழில் நடத்த அனுமதி பிரஜைகளுக்குத்தான் அளிக்கப்படுகிறது. முதியோர், நோயாளிகள், உத்தியோகமில்லாதவர்களுக்கு சட்டப்படி கிடைக்கும் சலுகைகள் பிரஜைகளல்லாதாருக்குக் கிடையாது. தேர்தல் அல்லது நியமனம் மூலம் கிடைக்கக்கூடிய பதவிகளுக்கு பிரஜைகளல்லாதவர்கள் அருகதையற்றவர்கள்.

அந்நியர் பிரஜா உரிமை பெற வேண்டுமானால் அவன் ஒன்று வெள்ளையனாயிருக்க வேண்டும், அல்லது ஆபிரிகனாகவோ அல்லது ஆபிரிக்கர்களுக்குப் பிறந்தவனாகவோ இருக்க வேண்டும், அல்லது மேற்சத்தி கண்டங்களில் வசிக்கும் ஜாதியில் தோன்றியவனாயிருக்க வேண்டும். மேலும் அவன்

அமெரிககாவில் வசிக்க அனுமதிக்கப்பட்டு, தொடர்ந்து ஐந்து வருஷம் அவ்வாறு வசித்திருக்கவேண்டும். இந்த நிபந்தனை களை நிறைவேற்றினுல், அவன் கிரிமினல் தண்டனை அனுபவிக் காமலிருந்து, அராஜகக் கொள்கையைப் பின்பற்றுபவனல்லாம லிருந்தால் பிரஜையாக ஏற்றுக்கொள்ளும்படி மனுச்செய்ய லாம். பிரஜா உரிமை அளிக்கும் அதிகாரமுள்ள சுமார் 2,000 சமஷ்டி அல்லது ராஜாங்க கோர்ட்டுகளில் ஒன்றில் அந்த கோர்ட் அதிகாரி முன் தான் பிரஜையாக வர விரும்புவதாக மனுச் செய்துகொள்ளலாம். இம்மாதிரி மனுச் செய்த இரண்டு வரு ஷங்களுக்கு மேற்பட்டு ஏழு வருஷங்களுக்குள் அவன் மறுபடி யும் கோர்ட் முன் ஆஜராகி தன்னுடைய மனுவில் பிரமாணம் செய்து கையெழுத்திடவேண்டும். இந்த மனுவில், தான் சட்டப் படி அமைக்கப்பட்ட அரசாங்கத்திற்கு எதிரிடையாயில்லையென் றும், அரசியல் அமைப்பின் கொள்கைகளைத் தான் மனப் பூர்வமாக நம்புவதாகவும், எந்த அயல் நாட்டு அரசன் அல்லது அரசாங்கத்திற்குட்பட்டிருந்ததைக் கைவிட்டுவிட்டதாகவும் உறுதி கூறவேண்டும். நாட்டிற்குள்ளோ அல்லது வெளியிலோ உள்ள பகைவர்கள் தாக்கினுல் அரசியலமைப்பையும், அதற்குட்பட்டு இயற்றப்பட்ட சட்டங்களையும் பாதுகாப்பதாகவும் வாக்குறுதி யளிக்க வேண்டும்.

பிரஜா உரிமை மனுவில் கையெழுத்திடுகையில் உண்மை யுரைப்பதற்குப் பேர்போன இரு அமெரிக்கப் பிரஜைகள், மனு தார் வாசகாலம் சம்பந்தமான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து விட்டார் என்றும், அவர் நல்லொழுக்கமானவர் என்றும், அமெரிக்க அரசியலமைப்புக் கொள்கைகளில் பற்றுதலுள்ளவர் என்றும் அத்தாட்சி அளிக்கவேண்டும். நீதி இலாகாவில் குடி யேற்ற பிரஜா உரிமைப் பகுதி உத்தியோகஸ்தர் கேட்கும் கேள்விகளுக்கு மனுதாரும் அவருடைய சாட்சிகளும் தங்கள் மனு உண்மையானது என்று அவர்கள் திருப்தியடையும்படி பதில் கூறவேண்டும்.

பிரஜா உரிமை பெறுவதற்கு கடைசி கட்டம் விசுவாசப் பிரமாணம் செய்தல். மனுவில் பிரமாணம் செய்து கையெழுத்துப் போட்டு 30 நாளாக வேண்டும், விசுவாசப் பிரமாணம் செய்வதற்கு என்று சட்டம் கூறுகிறது. மனுதார் பிரஜா உரிமை பெறுவதற்குத் தகுதியானவர் என நீதிபதி கருதினுல் அவருக்கு விசுவாசப் பிரமாணத்தை ஓதி, பிரஜை உரிமை அளித்து தீர்ப்பில் கையெழுத்திடுகிறுர். மனுதார் இந்தப் புது அந்தஸ்து பெற்றதற்கறிகுறியாக பிரஜா உரிமைப் பத்திரம் ஒன்று வழங்கப்படுவார். சாதாரணமாக இந்த பத்திரம் கிடைத்தவுடன் புதிய பிரஜை ஓட்டளித்து அரசாங்க அமைப்பிலும் நிர்வாகத்திலும் கலந்துகொள்ளலாம்.

ஆனுல் பிரஜா உரிமை கிடைத்த மாத்திரத்தில் ஓட்டுரிமை கிடைத்துவிடுவதில்லே. அவருடைய ஜாதி, கொள்கை, நிறம், பால் காரணமாக எந்தப் பிரஜையின் ஓட்டுரிமையும் பறிக்கப்படலாகாது என்று அரசியலமைப்பு கூறினுலும் சில ராஜாங்கங்கள் ஒரு புது பிரஜை ஓட்டளிக்குமுன் சில நிபந்தனேகளேப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று விதிக்கலாம். பெருவாரியான ராஜ்யங்களில் ஒரு பிரஜையாவதற்கு 21 வயதாகியிருக்கவேண்டும், பல காலம் அந்த ராஜ்யத்தில் வசித்திருக்க வேண்டும். அறிவுத்திரனில்லாதவர்களுக்கும் மூளேக்கோளாறுள்ளவர்களுக்கும், பெரிய குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்களுக்கும் சில ராஜ்யங்கள் ஓட்டுரிமை மறுக்கின்றன. சில ராஜ்யங்களில் ஓட்டர் எழுதப்படிக்கத் தெரிந்தவராயிருக்கவேண்டும் என விதி செய்யப்பட்டிருக்கிறது.

வோட்டை உபயோகித்தல்

ஒரு வோட்டரின் சக்தியும், அவன் பொறுப்பின் மகத்துவமும் அதை புத்திசாலித்தனமாகவும் ஒழுங்காகவும் பிரயோகிப்பதைப் பொருத்திருக்கிறது. தனது அபிப்பிராயத்தை அவன் தெரிவிப்பது பல்வேறு தன்மை வாய்ந்தது ; அப்படித் தெரிவிக்க அவனுக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. பொதுத்

தேர்தலில், நகர கவுன்ஸிலர், நகர மேயர், ராஜ்ய செனட்டர், அல்லது கவர்னர், வாஷிங்டனில் அவருடைய ஜில்லாவுக்கு பிரதிநிதிகள் சபையிலும் செனட்டிலும் பிரதிநிதி, தேச ஜனாதி பதி முதலிய பதவிகளுக்கு அபேட்சகர்கள் ஜாப்தாவிலிருந்து தனக்குப் பிடித்தமானவர்களைத் தேர்ந்தெடுக்கிறார். ஓட்டர் எந்த அரசியல் கட்சியில் அங்கத்தினரோ பொதுத் தேர்தலில் அந்த கட்சி அபேட்சகராக யாரை நியமிப்பது என்பது பற்றி முதல் தேர்தலில் அபிப்பிராயம் கூற உரிமையுண்டு. பதவிகளுக்கு ஆசைப்படுபவர்கள் யாவரையும் அபேட்சகர்களாக நியமிப்பது அசாத்யமாகையால் அபேட்சகர்களை பொறுக்கும் முதல் தேர்தல் முறை உபயோகப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் கட்சி அங்கத்தினர்களில் ஒரு பதவிக்கு ஆசைப்படுபவர்கள் முதல் தேர்தலில் அதிகப்படி ஓட்டுகள் பெறுபவர்கள் கட்சியின் இறுதி அபேட்சகராக பொதுத் தேர்தலுக்கு நியமிக்கப்படுகிறார்கள். மற்றும் சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட எண்ணிக்கை ஓட்டர்கள் ஒருவரை அபேட்சகராக விரும்பி மனுச்செய்தால் அவர் அபேட்சகராக நியமிக்கப்படுகிறார்.

நியமன முறையில் மூன்றாவது வகையும் உண்டு. அது கன்வென்ஷன் கூட்டி அதில் நியமனம் செய்வது. இதற்கு சிறந்த உதாரணங்கள், நாலு வருஷத்திற்கொரு முறை அரசியல் கட்சிகள் ஜனாதிபதி உப-ஜனாதிபதி பதவிகளுக்கு தங்கள் அபேட்சகர்களை நியமிக்கக் கூடும். கட்சிக் கூட்டங்கள். அமெரிக்க

ரகஸ்ய வோட்டு முறை சுய ஆட்சி யின் அடிப்படை

ஓட்டர்களின் பெரும் பகுதியினர் அமெரிக்காவிலுள்ள பெரிய கட்சிகளின் ஏதாவது ஒன்றிற்கு பக்தி செலுத்துபவர்கள். இந்தக் கட்சிக் கூட்டங்களுக்கு ஓட்டர்கள் பிரதிநிதிகளை யனுப்புகிறார்கள். ஒவ்வொரு பதவிக்கும் யார் யாரை அவர்கள் ஆதரிக்க வேண்டும் என வோட்டர்கள் தங்கள் பிரதிநிதிகளுக்கு தாக்கீது கொடுக்கிறார்கள். கட்சிக் கூட்டத்தில், எந்த திட்டத்தின்பேரில் பொதுத் தேர்தலில் மக்கள் ஆதரவைக் கோருவது என்று

பிரதிநிதிகள் முடிவுசெய்து இந்த திட்டத்தை வெற்றிகரமாக நடத்தக்கூடிய பிரதிநிதிகளையும் குறிப்பிடுகிறார்கள்.

நியமனம், தேர்தல், ஆட்சி அமுல்—இவ்வளவையும் முடிவுசெய்யும் முடிவான சக்தி ஓட்டரிடம்தானிருக்கிறது.

சில ராஜ்யங்களில், சில சந்தர்ப்பங்களில் சட்டமியற்றும் முறை நேரடியாக ஓட்டர்களிடமே ஒப்படைக்கப்படுகிறது. ஒரு சட்டம் தேவையென்று பெருவாரியான வோட்டர்கள் மனுச் செய்தால் சட்டசபை கூடி விவாதிக்கவேண்டிய அவசியமில்லை. அந்த பிரேரணை பொதுத் தேர்தலிலோ அல்லது, அதற்கென நடத்தப்படும் தேர்தலிலோ உரிமையுள்ள வோட்டர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. அவர்களில் பெரும்பாலோர் ஆதரித்தால் அது சட்டமாகிவிடுகிறது. வோட்டர்களின் விருப்பம் தெரிவதற்காக சில ராஜ்யங்கள் பொதுஜன வாக்கெடுப்பு முறையைக் கையாள்கின்றன. ராஜாங்க கடன் பத்திரம் வெளியிட்டு பணம் வசூலித்து ஏராளமான பணச் செலவில் நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு திட்டத்தை சட்டசபையில் பெரும்பான்மையினர் முடிவுசெய்கின்றனர். அது ஓட்டர்களின் அபிப்பிராயத்திற்கு விடப்பட்டு அவர்கள் ஆதரித்தால் திட்டம் நிறைவேறுகிறது. ஒரு திட்டம் சட்டசபையில் நிறைவேறியிருந்தாலும், பொது ஜன வாக்கெடுப்பில் பெருவாரி ஆதரவு பெறாவிட்டால் அது அடிப்பட்டுப்போகிறது.

ஒரு ராஜாங்கம் அல்லது நகராட்சிக் கழகத்தின் முன் நிற்கும் பிரச்னைகளுக்கு பொது ஜன ஆதரவு பெறுவதற்கு பொதுஜன வாக்கெடுப்பு சாதனம் கையாளப்படுகிறது. அந்த பிரச்னை கல்விசாலை முறையில் விரிவான மாறுதல் பற்றியதாயிருக்கலாம், அல்லது முனிசிபல் போக்குவரத்து சாதனத்தை மாற்றுவதாயிருக்கலாம், அல்லது அரசாங்க அமைப்பிலேயே மாறுதலாயிருக்கலாம். வோட்டர்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துவிட்டால் ராஜாங்க அல்லது ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் அதன்படியே நடக்கவேண்டும்.

நியூ இங்கிலாந்து சமூகத்தினர் சிலரிடையே நகர மக்கள் கூட்ட முறை இன்னும் அமுலிலிருக்கிறது. நகரத்தில் ஓட்டுரிமையுள்ளவர்கள் வருஷத்திற்கொருமுறையோ அதற்கு மேற்பட்டோ கூடி நகர நிர்வாக சம்பந்தமான பல விஷயங்களை சட்டசபை மாதிரியே விவாதித்து முடிவுசெய்கின்றனர்.

அரசியல் கட்சிகள்

அமெரிக்க அரசியல் இரட்டைக்கட்சி முறையில் இயங்குகிறது. தனிப்பட்ட வோட்டரின் அபிப்பிராயங்களை அறிந்து அவைகளை உருவகப்படுத்த அரசியல் கட்சி முறைதான் ஏற்ற சாதனம். அமெரிக்காவின் இருபெரும் கட்சிகளான ஜனநாயக. குடியரசு கட்சிகள், பெருவாரியான தேசீய, ராஜாங்க உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. சென்ற மகா யுத்தத்திலிருந்து அமெரிக்காவின் அயல்நாட்டுக் கொள்கை பற்றி இருகட்சிகளும் ஒன்றுபட்டு வேலைசெய்கின்றன. உள் நாட்டு நடைமுறை பிரச்னைகள் பலவற்றில் இருகட்சிகளும் மாறுபட்டு நிற்பதையும் காணலாம்.

தங்களுடைய அரசியல் கருத்துகளை இருகட்சிகளும் சரிவர பிரதிபலிக்க வில்லை என்று கருதும் வோட்டர் குழாம்கள் அவ்வப்போது மூன்றுவது கட்சியாக நிற்பதையும் காணலாம். இதுவரையில் ஒரு மூன்றுவது கட்சி ஒரே ஒரு முறைதான் தேசீய தேர்தலை பங்கு பற்றி நடத்தியிருக்கிறதாலும் இரண்டு பெரும் கட்சிகளின் நடவடிக்கைகளை மூன்றுவது கட்சி தாக்கி சர்ச்சை செய்ததன் விளைவாக இவ்விரு கட்சிகளின் கொள்கையிலும், அரசியல் தத்துவத்திலும் பன்முறை விசேஷ மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. காலத்தின் தேவைக்கேற்ப, நிலையாயிருக்கும் கட்சிகள் தங்கள் அரசியல் கருத்துகளை மாற்றும்படி மூன்றும் கட்சிகள் நிர்ப்பந்தம் செய்திருக்கின்றன.

அமெரிக்க சரித்திரத்தில் வெற்றிபெற்ற மூன்றுவது கட்சி குடியரசு கட்சி தான். அது 1860-ம் வருஷம் நடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றது. இந்த வெற்றியானது

விக் கட்சிக்கு சாவுமணியடித்ததுமின்றி அது வகித்துவந்த ஸ்தானத்தை குடியரசு கட்சி கைப்பற்றியது.

ராஜாங்க முனிசிபல் நிர்வாகங்களில், தேசிய நிர்வாகத்தில் காணும் சிக்கலான பிரச்னைகள் கிடையாது. மேலும் இவ் வோட்டர் அதிகாரிக்கு அருகாமையிலேயே இருக்கிறார்; ஸ்தல பிரச்னைகள் கட்சி திட்டத்தில் இடம் பெறுவதில்லை. ஆகையால் ராஜாங்க, முனிசிபல் நிர்வாகத்தில் மூன்றுவது கட்சிகள் தங்கள் செல்வாக்கை தீவிரமாக உபயோகிப்பது சாத்தியமாகிறது. ஒரு வோட்டர் தனது வோட்டை புத்திசாலித்தனமாக உபயோகிப்பது, அவனது சொந்த அறிவையும், பொதுநல விஷயங்களைப்பற்றி அவன் பெறும் ஞானத்தையும் பொருத்திருக்கிறது. தங்குதடையின்றியும், செய்தித் தணிக்கையில்லாமல் அமெரிக்காவில் செய்திகள் வருவது அந்நாட்டு ஜனநாயகத்திற்கு ஜீவாதாரமாக விளங்கும் வோட்டர்களுக்குப் பேருதவியாயிருக்கிறது. தனிப்பட்ட பத்திரிகைகள் தங்கள் தலையங்கங்களில் பொது விவகாரங்களில் ஏதாவது ஒரு கட்சியை ஆதரித்து எழுதினாலும் பத்திரிகையின் செய்திப் பகுதிகள் உண்மை சம்பவங்களையே வெளியிடுவது அமெரிக்க பத்திரிகைகளின் சம்பிரதாயமாயிருந்துவருகிறது.

அமெரிக்க பிரஜை பல வழிகளில் செய்திகளை அறிந்து கொள்கிறான். அதாவது பத்திரிகைகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், சினிமா செய்திப்படங்கள், டெலிவிஷன், ரேடியோ மூலம்.

செய்தி வர்ணனை, விசேஷ கட்டுரைகள் மூலம் அமெரிக்க பத்திரிகைகள் நடைமுறை பிரச்னைகளை அரசாங்கம் எப்படி தீர்த்துவைக்கிறது என்பதை விமர்சனம் செய்கின்றன. சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் பிரசங்கங்களும் அறிக்கைகளும் ஒலிப் பதிவு செய்யப்படுகின்றன; செய்திகளில் பிராதான்யம் பெறும் நபர்களின் சரித்திரமும், பிரதிநிதிகள் சபை செனட் சபையில் நடக்கும் விவாதங்கள் சினிமாப்படமாகப் பிடிக்கப்படுகின்றன,

ஒலிபரப்பப்படுகின்றன. அரசாங்க மந்திரிகளும் பிறரும் நிர்வாகமுடிவுகள் அல்லது கொள்கைகள் பற்றி நடத்தும் பத்திரிகை நிருபர்கள் கூட்ட விவரங்களும் பிரசுரிக்கப்படுவதுடன் சினிமாப்படமாகவும் காட்டப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றன. பொது நல விவகாரங்கள் சம்பந்தமாக நிகழும் பல்வேறு சம்பவங்களும் நிகழ்ச்சிகளும் வெளியிடப்பட்டு ஆவலுடன் செய்திகளை படிக்கும் ஏராளமான மக்களிடம் பரவுகின்றன. மேலும் பத்திரிகைத் தலையங்கங்கள், பிரத்தியேக நிபுணர்கள் எழுதும் விசேஷ கட்டுரைகள் இன்னும் பத்திரிகைகளை அலங்கரிக்கும் மற்ற பகுதிகள் குறிப்பிட்ட அரசாங்க நிர்வாகப் போக்குகளை விவாதித்து விளக்கி, தாக்கி, ஆதரித்து பொதுமக்கள் சிந்தனைகளைக் கிளறுகின்றன. இம்மாதிரி பிரசார முறைகள் மூலம் நாட்டில் என்ன நடந்தது, என்ன நடக்கிறது என்பதுபற்றி அமெரிக்க வோட்டர் பூரண ஞானம் பெறுகிறுன்.

அமெரிக்காவின் பிரபலமான சஞ்சிகைகளில் நான்கு, செய்திகளை வெளியிடுவதற்கே பயன்படுத்தப்படுகின்றன. ஏராளமாக விற்பனையாகும் செல்வாக்குள்ள மற்ற பிரசுரங்கள் நடைமுறைப் பிரச்னைகளையும், ஸ்தல, தேசீய, சர்வதேசப் பிரச்னைகளில் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களையும் பற்றி சர்ச்சை செய்யும் விசேஷ கட்டுரைகளை வெளியிடுகின்றன. ரேடியோத் தொடர்களும் தனிப்பட்ட ரேடியோ நிலையங்களும் மணிக்கொரு செய்தி அறிக்கையை ஒலிபரப்புகின்றன. மேலும் செய்திகளைப்பற்றி நுட்பமான ஆராய்ச்சி விமர்சனம் செய்யும் நிருபர்களின் நிகழ்ச்சிகளுக்கு ரேடியோக்கள் ஏராளமாக அவகாசமளிக்கின்றன. ஒலிபரப்பு மூலமும் டெலிவிஷன் மூலமும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பொதுஜன நலனுக்கான விஷயங்கள் பற்றிச் செய்யும் பிரசங்கங்கள் வெளியாகின்றன. பொருளாதாரம், நிதி நிர்வாகம், அரசாட்சிமுறை, குடியிருப்பு வசதி போன்ற பொதுநல விஷயங்களைப்பற்றி பிரபலஸ்தர்களும் நிபுணர்களும் செய்யும் விவாத அரங்குகளுக்கு ரேடியோக்கள் இடமளிக்கின்றன.

வியாபார சஞ்சிகைகள் வர்த்தகர்களின் அக்கறைகளை பாதிக்கும் சர்க்கார் நடவடிக்கைகளை விவாதித்து கட்டுரைகள் வெளியிடுகின்றன. இம்மாதிரி வெளியாகும் பல்வேறு பிரசுரங்கள் நிஷ்பக்ஷபாதமாக எழுதப்படுகின்றன என்று கூறுவதற்கில்லை. சில பகிரங்கமாகவே கட்சி சார்புள்ளதாகவே இருக்கின்றன. ஆனால் சிரத்தையுள்ள வோட்டர் எல்லா பிரச்னைகளின் சாதக பாதகங்களை நன்கு ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்ப்பதற்கு ஏராளமான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

பல சமூக சங்கங்களும், நேயர் கோஷ்டிகளும் அடிக்கடி கூடி பிரசங்கங்கள் கேட்கிறார்கள், அல்லது விவாதம் நடத்துகிறார்கள். நியூயார்க் நகரத்தில் மாத்திரம் இம்மாதிரி 10,000 கோஷ்டிகள் இருக்கின்றன.

தேர்தல் பிரசாரத்தின்போது அரசியல் கட்சிகள் பிரசங்கங்கள், பிரசுரங்கள் மூலம் நடைமுறைப் பிரச்னைகளைப்பற்றி வோட்டருக்கு அறிவிக்க தீர்மானமான ஏற்பாடு செய்கின்றன. அதே சமயத்தில் தங்கள் கட்சி திட்டம் தான் சிறந்ததென்றும், தங்கள் கட்சி அபேட்சகர்கள்தான் சிறப்பான சேவை செய்வர் என்றும் நாட்டவர்கள் நம்புவதற்கான முயற்சி செய்கின்றனர்.

சுய ஆட்சிக்கான இந்த சாதனங்கள் இருப்பதனாலும், இவைகளை ஜனங்கள் உபயோகிப்பதனாலும் அல்லது உபயோகிக்கத் தவறுவதனாலும்தான் ஜனநாயகத்தின் மக்கள் தகுதிக்கேற்ற அரசாங்கமே அவர்களுக்குக் கிடைக்கிறது என்கிற தத்துவம் ஏற்பட்டது. விழிப்புடனிருக்கும் மக்கள், தங்கள் அதிகாரத்தை மனச்சாட்சிக்கொப்ப புத்திசாலித்தனமாக உபயோகிப்பவர்கள் திறமையான அரசாங்கத்தின் சேவையைப் பெறுகிறார்கள். தனக்குள்ள சுய ஆட்சிப்பொறுப்பை அண்டையிலிருப்பவர் தலையில் சுமத்திவிட்டுச் செல்லும் மனப்பாண்மையுள்ள அலட்சிய புத்தியுள்ள ஜனங்கள், சர்வாதிகார ஆட்சிக்கு அடிமையாகும் பக்குவமுள்ள சுயநல ஆட்சியின் சுமையைத் தாங்கவேண்டிவரும்.

(5)

சமஷ்டி அரசாங்கம்

அரசியலமைப்பின் 52 வார்த்தைகளடங்கிய பூர்வபீடிகையில் கையெழுத்திட்ட தீர்க்கதரிசனமுள்ள ராஜதந்திரிகளான ஜார்ஜ் வாஷிங்டன், பெஞ்சமின் பிராங்க்லின், ஜேம்ஸ் மாடிஸன், அலெக்ஸாண்டர் ஹாமில்டன் போன்ற தலைவர்கள் கீழ் வேலை செய்த 39 பேரின் அறிவும் அனுபவமும் ஒருங்கே திரண்டிருப்பதைக் காண்கிறோம். சமஷ்டி யூனியனின் நோக்கங்களை அவர்கள் தெள்ளத் தெளியக் கூறியிருக்கிறார்கள். அமெரிக்க மக்கள் யாவர் சார்பிலும் பேசுவதற்கான துணிவும் தன்னம்பிக்கையும் அரசியலமைப்பின் ஆதிகர்த்தாக்களுக்கிருந்தது: அரசியலமைப்பை ஸ்தாபிப்பதில் ஜனங்களுக்கிருந்த ஆறு நோக்கங்களும் கொள்கைகளும் அன்றிருந்து இன்றுவரை அரசாங்கத்திற்கு வழிகாட்டும் கொள்கைகளாயிருந்து வருகின்றன.

" . . . . அதிக திருப்திகரமான யூனியன் அமைக்க . . . . "

அதிக திருப்திகரமான சமஷ்டியை (யூனியனை) அமைக்கும் இந்த வேலை 1787-ல் 13 ராஜ்யங்கள் முன்நின்ற கடுமையான பிரச்னையாயிருந்தது. கான்பெடரேஷன் ஷரத்துகளின்படி அமைந்ததைவிட எந்த யூனியனும் " அதிக திருப்திகரமாக " இருக்கும் என்பது தெளிவாகத் தெரிந்தது.

தனி ராஜ்யங்கள் தங்களது பிரத்தியேகத் தேவைகளை திருப்தி செய்துகொள்ளவும், அவர்கள் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவைகளைப் பெறுவதற்கும் அவசியமான அதிகாரங்களை அவர்களுக்குக் கொடுக்க அரசியலமைப்பு கர்த்தாக்கள்

அனுமதித்தார்கள். ஆனால் அவ்வதிகாரங்கள் குறிப்பிட்ட சில துறைகளில் அமெரிக்க மக்களின் நலனுக்கும் தேவைகளுக்கும் ஹானி விளைவிக்காமலிருக்கவேண்டும். இம்மாதிரி சமஷ்டி (யூனியன்) அமைப்பதைப்பற்றித்தான் 1787-ல் அரசியலமைப்பு கர்த்தாக்கள் சிந்தனைசெய்து பொறுமையாக விவாதித்தார்கள். வியாபார ஸ்தாபனங்கள், தொழில் நிலைமை, விவாகம், விவாக ரத்து, "போலீஸ் அதிகாரம்" போன்ற ஸ்தல விவகாரங்களின் ராஜ்ய ஆதிக்கம் பூரணமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக அக்கம்பக்கத்திலுள்ள இரு ராஜ்யங்களில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட சட்டங்கள் அமுலி லிருப்பதைக் காண்கிறோம்.

இந்த "ராஜ்ய உரிமைகள்" 1861-ல் ராஜ்யங்களுக்குள் பலத்த போர் மூண்டு 4 வருஷம் ரத்தக் களறியாகவிருக்க காரணமாயிருந்தன. வடக்கத்தி ராஜ்யமக்கள் புதிய ராஜ்யங்களின் அடிமைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என வாதாடின; ஆனால் தெற்கத்தி ராஜ்யங்கள் அடிமைகளை வைத்துக்கொள்வது பழைய, புதிய ராஜ்யங்களின் தனிப்பொறுப்பு என்று எதிர்வாதம் செய்தன. அடிமைத்தனத்தை ஆதரிக்கும் ராஜ்யங்கள் சமஷ்டியை விட்டு விலக முயன்றன. ஆனால் தேசீய அரசாங்கம் அவைகள் வெளியேறாமல் நிர்ப்பந்தப்படுத்தியது. கடுமையான போராட்டத்திற்குப் பிறகு, வெளியேற விரும்பியவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். அடிமைத்தனமும் ரத்து செய்யப்பட்டது. ஒவ்வொரு ராஜ்யத்திற்கு குடியரசு ஆட்சிமுறை உத்தரவாதம் செய்யப்பட்டதால், இந்த போராட்டத்திற்குப் பிறகு முன்போல் எல்லா ராஜ்யங்களும் தங்கள் காரியங்களை தாங்களே நிர்வகித்து வந்தன.

பரந்த கண்டத்தின் பலவேறு பாகங்களிலுள்ள, பல்வேறு பிரச்னைகளும் அக்கறைகளும் உள்ள 48 ராஜ்யங்களின் சமஷ்டி பூரண திருப்திகரமாக இருக்காது. ஆனால் அரசியலமைப்பின் ஆதிகர்த்தாக்களால் நிறுவப்பட்ட சமஷ்டி அமெரிக்க மக்களுக்கு மகத்தான, சாசுவதமான நன்மையளித்து வந்திருக்கிறது.

" . . . . நீதியை நிலைநாட்ட . . . . ."

அரசியலமைப்பின் ஆதிகர்த்தாக்களுக்கு முக்கியமான வழி காட்டியாயிருந்தது சுதந்திர பிரகடனம். மனித சுதந்திர சாஸனமாகிய இது எல்லா மக்களும் சமமாக சிருஷ்டிக்கப்பட்ட னர் என்றும், என்றென்றும் பறிக்கப்படக்கூடாத சில உரிமை கள் அவர்களுக்கு இருக்கின்றனவென்றும், இம்மாதிரி உரிமை களில் முக்கியமானவை "வாழ்வு, சுதந்திரம், சுகவாழ்வு தேடுதல்" என்றும் இந்த சாஸனம் பறைசாற்றியது. அமெரிக் காவில் சட்டத்தின் முன் யாவரும் சமமானவர்கள். ஒருவன் பிரக்யாதிபெற்றவனுயிருந்து மற்றொருவன் யாருமறியாமல் இருந்தாலும், ஒருவன் பணக்காரனுகவும், மற்றொருவன் ஏழை யாயிருந்தாலும் இருதரத்தாரும் சட்டத்திற்கு முன் சமமாக பாவிக்கப்படுவார்கள். இருவரும் சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும், இருவரும் சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்குரிய வர்கள். அவரவர் அந்தஸ்தோ செல்வாக்கோ யாதாயிருப் பினும் அரசியலமைப்பின் கொள்கைப்படி, சட்டத்தை மீறிய தாக நிரூபிக்கப்பட்டால், ஒரேமாதிரி தண்டனைக்குள்ளாவார்கள். சொந்த அல்லது வியாபார வித்தியாசங்களை நீதிஸ்தலத்தில் தீர்த்துக்கொள்வதிலும் இதேமாதிரி நேர்மை காட்டப்படும் என்று உத்தரவாதம் செய்யப்படுகிறது. தகராறுகளை சமாதான மாகத் தீர்த்து, நீதி வழங்க தேசத்தின் நீதி மன்றங்கள் மக்களுக்கு வசதியளிக்கின்றன.

" . . . . .உள்நாட்டு அமைதியை உறுதிசெய்துகொள்ள . . . ."

சமஷ்டி அரசியலமைப்பை வகுத்ததற்கு ஒரு முக்கிய காரணம் ராஜ்யங்கள் ஒன்றுக்கொன்று நேசமாயிருப்பதற்கு சந்தர்ப்பமளிக்க வேண்டும் என்பதுதான்; மற்றொரு காரணம் பகைவர்கள் தாக்கினுல் பாதுகாத்துக் கொள்ளத்தக்க வகையில் சமஷ்டி ராஜாங்கத்தை பலப்படுத்தி உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டுவது. அரசியலமைப்பின் 4-வது ஷரத்து, ஒவ்வொரு

ராஜ்யத்தையும் ஆக்ரமிப்பிலிருந்து பாதுகாக்கவும், ராஜ்ய அர சாங்கம் கோரினுல் உள்நாட்டுக் கலகங்களை அடக்குவதற்கு உதவி செய்யவும் உத்தரவாதம் செய்தது. 1815-லிருந்து அமெரிக்கா வின் எப்பகுதியும் எந்த அயல் நாட்டாலும் ஆக்ரமிக்கப்படவில்லை. பிறர் உதவியின்றி ஒவ்வொரு ராஜ்யமும் தனது எல்லைக்குள் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்ட சக்தி வாய்ந்ததாகவே யிருந்துவந்திருக்கிறது. ஆகையால் உள்நாட்டுக் கலகங்களில் தலையிட்டுத் தடுக்கவேண்டிய அவசியமே சமஷ்டி அரசாங்கத் திற்கு ஏற்பட்டதில்லை. ஆனுல் பலம்வாய்ந்த சமஷ்டி அரசாங் கத்தின் அதிகாரம் உள்நாட்டு அமைதியைக் காக்கத் தயாரா யிருந்து வந்திருப்பதுடன், மற்ற நாடுகள் அமெரிக்காவைத் தாக்காமல் பாதுகாத்து வந்திருக்கிறது.

" . . . . பொதுப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்ய . . . . . . "

அமெரிக்காவின் ஆதிகாலத்தில் அதன் பிரஜைகள் பல்வேறு நாடுகளின் ஆக்ரமிப்புக்கு இலக்காக இருந்தனர். பிரிட்டிஷார் கனடாவிற்குச் சொந்தக்காரர்களாகவும், பிரஞ்சுக்காரர் லூயி ஸியானுவின் யஜமானர்களாகவும், பிளாரீடா, மெக்ஸிகோ, டெக்ஸாஸ் முதலிய இடங்களில் ஆள்பவர் ஸ்பானிஷ் காரராகவும் இருந்தனர். அவ்வளவாக நேசப்பான்மையில்லாத நாட்டின ரால் சூழப்பட்டிருந்தது புதிய பலஹீனமான அமெரிக்கா. சமஷ்டி யரசாங்கம் அமைத்தவுடன் அமெரிக்காவைச் சுற்றி யிருந்த இந்த ஐரோப்பிய நாட்டினர் பல ஐரோப்பிய யுத்தங் களில் ஈடுபட்டு தங்களுக்குள்ளாகவும் சண்டையிட்டுக்கொண் டிருந்தனர். ஆகையால் அரசியலமைப்பின் கொள்கைகளில் ஒன்ருன "கூட்டுப் பாதுகாப்பு"ப் பிரச்னை மிக முக்கியமான தொன்றுகிவிட்டது. ஆனுல் இந்த பாதுகாப்பு அமைப்பது நிதானமாகவே நடந்தது. இதற்குக் காரணம் ஆதியிலிருந்த 13 ராஜ்யங்களுக்கு மேற்கே புதிய நிலப்பரப்பை பிடித்து ஒழுங்கு செய்வதில் நாட்டின் சக்திபூராவும் செலவழிந்து வந்ததுடன்,

அந்த புதிய இடத்தில் இந்தியர்களிடமிருந்து கிளம்பும் எதிர்ப்பை சமாளிப்பதிலும் கவனம் செலுத்தவேண்டி வந்துவிட்டது.

நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் தக்க பாதுகாப்பு ஏற்படுத்தும் பொறுப்பு சமஷ்டி அரசியலமைப்பு பிரகாரம் அமெரிக்க அரசாங்கத்தின் சட்டசபை, நிர்வாகப் பகுதிகளுக்குள் பகிர்ந்து பாகுபாடு செய்யவேண்டி வந்துவிட்டது. யுத்தம் தொடரவும், ஒரு ராணுவம் கடற்படை இரண்டுக்கும் ஆன செலவுகள் செய்யவும் அதிகாரம் காங்கிரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதிதான் சேனாதிபதி. நாடுகளுக்குள் அமைதியான உறவை ஏற்படுத்துவதே அமெரிக்காவின் கொள்கை. ஆனால் அரசியலமைப்பு ஆக்ஞைப்படி கூட்டுப் பாதுகாப்பு ஏற்படுத்தி அது உலகிலேயே மிகுந்த பலம்வாய்ந்த படையையும், கடற்படையையும் வைத்திருக்கிறது.

" . . . . பொதுஜன நலத்தை வளர்க்க . . . . . ."

சுதந்திர யுத்தம் முடிந்தவுடன் அமெரிக்க நாட்டுமக்கள் மிகவும் கஷ்டமான நிலையிலிருந்தனர். பயிர் வளர்க்க, வீடுகட்ட, கடைகளையும் ஆறுகளையும் மேற்பார்வை பார்க்க, வளரும் நாட்டின் கப்பல் தளத்தை நிர்வகிக்கவேண்டிய பலம் தளபதி வாஷிங்டனின் படையில் சேர்ந்து 6 ஆண்டுகள் போர்புரிவதில் செலவழிந்தது. 13 ராஜ்யங்களிலுள்ள மக்களின் தொழில்கள் ஸ்தம்பித நிலையிலிருந்தன. நாடும், அதன் உருப்பினராயிருந்த ராஜ்யங்களும் கடன்பட்டவர்களாகிவிட்டன. அவர்களின் பண நோட்டுகளுக்கு மதிப்பே இல்லை. இம்மாதிரி நிலையினால் ஏற்பட்ட கஷ்டத்திற்கு அளவில்லை. தேசத்தின் பொருள் நிலையை பலப்படுத்துவதே சமஷ்டி அரசாங்கத்தின் முதல் வேலையாகிவிட்டது.

மக்கள் யாவருக்கும் பலன்தரும் சட்டங்கள் இயற்றும் அதிகாரத்தை காங்கிரஸுக்கு அளித்ததில் சமஷ்டி அரசியலமைப்பு 8-வது விதி முதல் பிரிவில் வருமாறு கூறுகிறது :—

“வரி விதித்து . . . . வசூலிக்கவும் . . . கடன்களை செலுத்தவும், அமெரிக்காவின் கூட்டுப் பாதுகாப்புக்கும் பொதுநலனுக்கும் ஏற்பாடு செய்யவும் காங்கிரசுக்கு அதிகாரம் உண்டு.”

வரி விதிக்கும் அதிகாரத்தைக் கையாள்வது யுத்தக் கடன்களைச் செலுத்தவும், நாணய நிலைமையை கவலைக்கிடமில்லாமல் செய்யவும் அரசாங்கத்திற்கு உதவிபுரிந்தது. பொக்கிஷ இலாகா காரியதரிசியும், யுத்த காரியதரிசியும், அரசாங்க காரியதரிசியும், சட்ட மந்திரியும் நியமிக்கப்பட்டனர். அரசாங்கத்தின் நிர்வாகப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட முதல் இலாகாக்கள் இவை தான். பொக்கிஷ இலாகா அரசாங்கத்தின் நிதி நிலைமையை கவனித்துவந்தது; அரசாங்க இலாகா மக்களுச்கும் அயல் நாட்டினருக்கும் உள்ள உறவை கவனித்துவந்தது; யுத்த இலாகா ராணுவத்தையும் கடற்படையையும் நிர்வகித்தது; சட்ட மந்திரி அரசாங்கத்தின் சட்ட ஆலோசகராகவும் சமஷ்டி சர்க்காரின் வக்கீலாகவும் இருந்துவந்தார்.

நாடு விஸ்தீரணத்தில் விரிவுபட்டு அதன் பொருளாதார அமைப்பு சிக்கலானதாகப் போனதால் பொதுநல நன்மையை உத்தேசித்து நிர்வாகத்தில் புது பகுதிகள் தொடங்கப்பட்டன. அரசாங்கத்தின் பல்வேறு பகுதிகளின் நடவடிக்கைகளை விவரிக்கும், பிற் பகுதிகளில், இவைகள் விரிவாக விளக்கப்படும்.

“. . . . . நமக்கும் நம் சந்ததியாருக்கும் சுதந்திர பாக்கியங்கள் பெற . . . . .”

பெற்ற சுதந்திரம் கைநழுவிப்போகாமல் பாதுகாப்பதே சமஷ்டி அரசியலமைப்பை ஜனங்கள் ஏற்றுக்கொண்டதன் நோக்கங்களில் ஒன்று. சமஷ்டி அரசாங்கத்திற்கு அதிகாரமளிப்பதில், தேசீய, ராஜ்ய அரசாங்கங்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் எல்லா மக்களின் உரிமைகளையும் பாத்தியதைகளையும் பாதுகாப்பதில் அரசியலமைப்பின் ஆதிகர்த்தாக்கள் மிகுந்த கவனம் செலுத்தினர். இதன்மூலம் அமெரிக்கநாட்டு மக்கள்

சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கிற வரையிலும் அவர்கள் சுதந்திரமாக எங்குவேண்டுமானாலும் போகலாம், பயமின்றி வாழ்ந்து தங்கு தடையின்றி சொத்துக்களை அனுபவிக்கலாம், தங்கள் உரிமைகள் பாதிக்கப்பட்டுவிட்டன என்று கருதும்போது நீதிஸ்தலங்களின் உதவியையும் பாதுகாப்பையும் நாடலாம்.

எந்த சந்தர்ப்பத்திலும் தனி நபரின் "பறிக்கமுடியாத உரிமைகளை" பறிப்பதை ஐயமறத் தடுத்திருக்கும் பிரிவுகள் தான் அரசியலமைப்பிலும், உரிமைகள் மசோதாவிலும் குறிப்பிடத்தக்க அம்சங்கள். அரசியலமைப்பைத் தயாரித்தவர்களும், உரிமைகள் மசோதாவை அங்கீகரிக்கத் தூண்டின பொதுஜன எழுச்சியும் அரசியலமைப்பின் பிரதான கருத்து மனித சுதந்திரங்களைப் பாதுகாப்பதுதான், நிர்வாகத்திற்குத் தேவையான அதிகாரங்களை அளிப்பது இரண்டாம்பட்சம் என்பதற்கு தக்க சான்றாகும். இந்த நோக்கம் ஒரே வாக்கியத்தில் தெளிவாக சுதந்திரப் பிரகடனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

"இந்த உரிமைகளைப் பெறுவதற்கே தங்களுடைய நியாயமான அதிகாரங்களை அரசாளப்பட்டவர்களிடமிருந்து பெற்ற அரசாங்கங்கள் மக்களிடையே அமைக்கப்பட்டிருக்கின்றன."

* * *

(6)

சமஷ்டி அரசாங்கத்தின் சட்டசபைப் பகுதியின் அமைப்பு

சமஷ்டி அரசியலமைப்பின் முதல் பிரிவில் முதல் வாக்கியத்தின் வாசகம் வருமாறு :—

" ஒரு செனட், ஒரு பிரதிநிதிகள் சபை ஆக இரு பகுதிகள் கொண்ட காங்கிரஸிற்கு சட்டமியற்றும் அதிகாரம் இதன்மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டமியற்றும் அதிகாரம் ஒரு கோஷ்டிக்கு மட்டும் அளிக்கப்படவில்லை. இரு கோஷ்டிகளுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. அவை இரண்டும் ஒன்று பட்டு வேலைசெய்கின்றன."

அரசியல் நிர்ணய சபைக்கு வந்திருந்த சிறு ராஜ்யங்களின் பிரதிநிதிகள் பெரிய ராஜ்யங்களுக்கு சமதையான பிரதிநிதித்துவம் இரு சட்டசபைகளிலும் தங்களுக்கும் வேண்டும் என்று கோரினார்கள். ஆனால் கடைசியில் சமரசம் செய்து கொண்டார்கள். செனட்டிற்கு ஒவ்வொரு ராஜ்யமும் இரு பிரதிநிதிகள் அனுப்பலாமென்றும், பிரதிநிதிகள் சபையில் ஒவ்வொரு ராஜ்யத்தின் ஜனத்தொகைக் கேற்ற பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்பதும்தான் அந்த சமரஸம். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தற்சமயம் என்ன பிரதிநிதித்துவம் அளிக்கப் பட்டிருக்கிறது எனும் விவரம் 47-49 பக்கங்களில் விவரிக்கப் பட்டிருக்கின்றன.

1913-ல் 19-வது திருத்தம் நிறைவேறிய பிறகு அமெரிக்காவின் செனட் சபை அங்கத்தினர்களை ராஜ்யங்களின் வோட்டர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களும் வோட்டர்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 1913-

க்கு முன் செனட்டர்கள் ராஜ்ய சட்ட சபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுவந்தனர். இதற்குக் காரணம் பெரிய ராஜ்யங்களுக்கு சமமான பிரதிநிதித்துவம் சிறிய ராஜ்யங்களுக்குக் கிடைப்பதற்காக செனட்டர்கள் ராஜ்ய சர்க்கார்களின் பிரதிநிதிகளாகக் கருதப்பட்டுவந்ததுதான்.

ஆதிகாலத்தில் குடியேற்ற நாடுகளாயிருந்த 13 ராஜ்யங்களில் பெரும்பாலானவையில் கவர்னரின் ஆலோசனை சபையினரை மன்னரே நியமித்துவந்தார். இந்த கவுன்சில் ஜனங்கள் பிரதிநிதிகளடங்கிய சட்டசபையின் முடிவுகளை புனராலோசனை செய்யலாம். வழக்கமாக இந்த ஆலோசனை சபை மெம்பர்கள் ஒன்று பணக்காரர்களாகவோ, பிரபலஸ்தர்களாகவோ, அல்லது கவர்னரின் உறவினர்களாகவோ, அல்லது ஆங்கில குடும்பங்களில் பிறந்தவர்களாகவோ இருந்தனர். அவர்கள் தனத்தின் அல்லது சொத்தின் பிரதிநிதிகளாயிருந்தால் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதில் அவர்கள் நிர்த்தாட்சணியமாக இருப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. குடியேற்ற நாடுகள் தனி ராஜ்யங்களாகப் போனவுடன் சட்டமியற்றும் அதிகாரத்தை குறுகிய காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட, பணம் படைக்காதவர்களிடம் சட்ட மியற்றும் அதிகாரத்தை அளிக்க வரி செலுத்துபவர்கள் பயப்பட்டனர். பென்ஸில்வேனியா, ஜார்ஜியா தவிர இதர ராஜ்யங்களின் அரசியலமைப்புகளில் சொத்துரிமையுள்ள, நீண்ட காலத்திற்கு அங்கம் வகிக்கக்கூடிய செனட் சபைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டன.

தேசீய காங்கிரஸின் அமைப்பு

	பிரதிநிதிகள் சபை	செனெட்
மொத்த அங்கத்தினர்கள்	*435	96
ஒவ்வொரு ராஜ்யத்திற்குமுள்ள பிரதிநிதிகள் எண்ணிக்கை	ஜனத்தொகைக்குத் தகுந்தபடி	2

தேசீய காங்கிரஸின் அமைப்பு—(தொடர்பு)

*	பிரதிநிதிகள் சபை	செனெட்
தேர்ந்தெடுப்பவர்கள்	காங்கிரஸ் ஜில்லாவிலுள்ள வோட்டர்கள் (தொகுதியில்லாத பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பவர்கள் ராஜ்யத்தின் எல்லா வோட்டர்களும்).	ராஜ்யத்திலுள்ள எல்லா வோட்டர்களும்.
பதவி காலம்	2 வருஷங்கள்	6 வருஷங்கள்
இடைக்கால காலி ஏற்படின்	பிரத்தியேக தேர்தலிலாவது தேசீய பொது தேர்தலிலாவது தேர்ந்தெடுக்க வேண்டும்.	பிரத்தியேக தேர்தல், அல்லது பிரத்தியேக அல்லது தேசீய பொதுத் தேர்தல் நடக்கும்வரை கவர்னரால் நியமனம்.
சம்பளம்	† 15,000 டாலர்	† 15,000 டாலர்
கூட்டம் கூடும் காலம் (வழக்கமாக)	ஒவ்வொரு வருஷமும் ஜனவரி 3-ம் தேதி கூடுகிறது.	ஒவ்வொரு வருஷமும் ஜனவரி 3-ம் தேதி கூடுகிறது.
தலைமை வகிப்பவர்	தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்	அமெரிக்க உப ஜனாதிபதி.
ஒவ்வொரு சபைக்கும் உள்ள பிரத்தியேக அதிகாரங்கள்	(1) பண சம்பந்தமான மசோதாக்கள் பிரேரித்தல் (2) ஸிவில் உத்தியோகஸ்தர்கள் மீது குற்றம் சாட்ட (3) எந்த அபேட்சகரும் பெரும்பான்மை வோட்டுப் பெருவிட்டால் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல்	(1) உடன்படிக்கைகளை ஏற்பது அல்லது மறுப்பது. (2) குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிப்பது. (3) ஜனாதிபதி செய்த உத்தியோக நியமனங்களை அங்கீகரிப்பது அல்லது மறுப்பது. (4) எந்த அபேட்சகரும் பெரும்பான்மை வோட்டு பெருவிட்டால் உபஜனாதிபதியை தேர்ந்தெடுத்தல்.

* 1940 ஜனக் கணக்குப்படி.

† வரி விலக்குடன் செலவுக்காக வருஷாந்திரம் அனுமதிக்கப்பட்டுள்ள 2,500 டாலர்கள் படி. இந்த ஏற்பாடு 2–8–1946-லிருந்து அமுலிலிருக்கிறது.

அரசியல் நிர்ணய சபை சட்டமியற்றும் சபையை அமைப்பது பற்றி திட்டமிடுகையில் இந்த ராஜ்ய அரசாங்க வழக்கத்தில் (இரு சபைகள் அமைப்பு) மிகுந்த பயனிருப்பதை அறிந்தது. ஒரு கோஷ்டி ராஜ்ய ஆட்சியினருக்குப் பிரதிநிதியாகவும் மற்றொன்று ராஜ்ய மக்களுக்குப் பிரதிநிதியாகவும் இருந்து ஒரு சட்டம் அமுலுக்கு வருவதற்குமுன் இரு சபைகளும் அதை அங்கீகரிக்கவேண்டும் என்கிற ஏற்பாடு சட்டங்கள் பொறுப்பின்றியும் அவசரமாகவும் இயற்றப்படும் அபாயத்தைத் தவிர்க்கும் என்பதை அரசியலமைப்பு கர்த்தாக்கள் ஆலோசித்துப் பார்த்தனர். ஒரு சபை மற்றொன்றைக் கட்டுப்படுத்தும். செனட்டில் பிரதிநிதித்துவம் பெற்ற சிறிய ராஜ்யங்களின் அக்கறையும் பிரதிநிதிகள் சபையில் அதிக பிரதிநிதித்துவம் பெற்ற பெரிய ராஜ்யங்களின் அக்கறையும் ஒரு தராசின் இரு பகுதிகளாக சமபலமுள்ளவையாயிருக்கும். இந்த தடைகள் மூலம் ஏற்றத் தாழ்வுகள் சமனம் செய்யும் முறை பிந்திய அத்தியாயம் ஒன்றில் விவாதிக்கப்படுகிறது.

காங்கிரஸ் அங்கத்தினர்களின் யோக்யதாம்சங்கள்

காங்கிரஸுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை சமஷ்டி அரசியலமைப்பு ராஜ்யங்களுக்களித்தது. தேர்தல் சமயத்தில் 30 வயதானவர்களாயும், 9 வருஷ காலத்திற்கு அமெரிக்க பிரஜையாகவும், தாங்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் ராஜ்யத்தில் வசிப்பவர்களாகவும் பார்த்து ஒவ்வொரு ராஜ்ய சட்டசபையும் செனட் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறே ராஜ்யத்திலுள்ள வோட்டர்கள், பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை அரசியலமைப்பு அளித்தது. ஆனால் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்ட சமயத்தில் 25 வயதானவராகவும், 7 வருஷ காலத்திற்கு அமெரிக்க பிரஜையாயிருந்தவராகவும் இருக்கவேண்டும். மற்ற யோக்யதாம்சங்களை அந்தந்த ராஜ்யங்களே நிர்ணயிக்கலாம். ஆனால் ஒவ்வொரு

சட்டசபையும் தன் அங்கத்தினர்களின் யோக்யதாம்சங்களை நிர்ணயிக்கும் அதிகார முடையதாயிருந்தது.

காங்கிரஸின் மேல்சபையில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கு இரண்டு செனட்டர்கள் பிரதிநிதிகளாயிருப்பார்கள். 1,248 சதுர மைல்கள் விஸ்தீர்ணமுள்ள ரோட் ஐலண்டு எனும் ராஜ்யத்திற்கு, 265,941 சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள டெக்ஸாஸ் ராஜ்யத்திற்குள்ள செனட்டில் சட்டமியற்றும் அதிகாரமிருக்கிறது. 1940-ம் வருஷ ஜனக் கணக்குப்படி 110,247 ஜனத்தொகையுள்ள நிவாட ராஜ்யத்திற்கு 13,479,142 ஜனத்தொகையுள்ள நியூயார்க்குக்கு செனட்டிலுள்ள வோட்டுகளே இருக்கின்றன. ஆகையால் 48 ராஜ்யங்களுக்கு 96 செனட்டர்கள் இருக்கின்றனர்.

பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்கள் எண்ணிக்கையை காங்கிரஸே நிர்ணயிக்கிறது. இந்த எண்ணிக்கை ராஜ்யங்களின் ஜனத்தொகைக் கேற்ப பகிர்ந்தளிக்கப்படுகிறது. பகிர்ந்தளிக்கும் முறை எதானாலும், சபையின் மொத்த அங்கத்தினர் எண்ணிக்கை எதாயிருந்தாலும் அரசியல் சட்டபூர்வமாக ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஒரு பிரதிநிதியாவது உண்டு என்று உறுதிகூறப்பட்டிருக்கிறது. அவ்வப்போது ஜனக் கணக்கெடுக்க அரசியலமைப்பிலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஷரத்தின் பயனாக ஜனத்தொகை மாறுதலுக்கேற்ப ஒவ்வொரு ராஜ்யத்திற்குமுள்ள பிரதிநிதிகள் எண்ணிக்கையும் மாறுவதற்கு இடமேற்படுகிறது. இந்த முறையில் அரசாங்கத்தினர் நிர்வாகத்திலுள்ள ஒவ்வொரு பிரஜையின் பங்கு ஏற்றத்தாழ்வின்றி சமமாக இருக்கிறது. அரசாங்க அலுவல்கள் நடத்துவதில் எந்த ராஜ்யத்திற்கும் கூடுதலான அதிகாரம் கிடையாது.

அமெரிக்காவின் ஜனத்தொகை வேகமாக ஏறிக்கொண்டு போனாலும் பிரதிநிதிகள் சபை அங்கத்தினர் எண்ணிக்கை அவ்வளவு வேகமாக ஏறவில்லை. 1790-ன் ஜனத்தொகைக்கும்

பிரதிநிதிகளுக்கும் உள்ள விகிதம் அமுலிலிருந்தால் தற்சமயம் காங்கிரசில் 4,000 பிரதிநிதிகள் இருப்பார்கள்.

முதல் காங்கிரசில் 65 பிரதிநிதிகள் இருந்தனர். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் எவ்வளவு பிரதிநிதிகள் உண்டு என்பதை அரசியல் நிர்ணய சபை திட்டம் செய்தது. முதல் ஜனக்கணக்குக்குப் பிறகு எண்ணிக்கை 106 ஆக உயர்ந்து அதிகப்படியான ஸ்தானங்கள் ராஜ்யங்களுக்குப் பகிர்ந்துகொடுக்கப்பட்டது. அதன் பிறகு 10 வருஷத்திற் கொருதரம் பிரதிநிதிகள் எண்ணிக்கை திருத்தியமைக்கப்பட்டு வந்தது. ஆனால் 1920-ம் வருஷ ஜன எண்ணிக்கைக்குப் பிறகு ஜனப் பிரதிநிதிகள் எண்ணிக்கையில் மாறுதல் இல்லை. 1790-ல் இருந்ததைவிட தற்சமய 33 மடங்கு ஜனத்தொகை அதிகரித்திருந்தாலும் 1910-லிருந்த ஜனப்பிரதிநிதிகள் சபையின் எண்ணிக்கை 435-லேயேயிருக்கிறது.

தற்போதுள்ள சட்டப்படி ஒவ்வொரு ஜனக்கணக்குப்படி ஜனத்தொகை எவ்வளவு என்றும், அதற்கேற்ப பிரதிநிதிகள் சபையில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் எத்தனை பிரதிநிதிகள் இருக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி காங்கிரசுக்கு அறிவிப்பார். இந்த அறிவிப்பிலிருந்து 60 நாட்களுக்குள் காங்கிரஸ் தன் அங்கத்தினர்களின் எண்ணிக்கையை மாற்ற விரும்புகிறதா, ராஜ்யங்களின் பிரதிநிதிகள் எண்ணிக்கையை நிர்ணயிப்பதில் வேறு முறையைக் கையாள விரும்புகிறதா என்று முடிவு செய்யவேண்டும்.

ஒவ்வொரு ராஜ்யத்திலிருந்தும் காங்கிரசுக்கு எத்தனை பிரதிநிதிகள் அனுப்பவேண்டும் என்று முடிவுசெய்த பிறகு, இந்த பிரதிநிதிகளை எப்படித் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதை ராஜ்ய சட்டசபைகள் முடிவுசெய்யவேண்டும். வழக்கமாக ஒவ்வொரு பகுதியிலும் ஒரே அளவில் ஜனத்தொகை இருக்கும்வகையில் ராஜ்யங்கள் ஜில்லாக்களாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு பிரதிநிதி அனுப்பும்

உரிமை அளிக்கப்படும். எந்தப் பகுதியும் ஏதாவது ஒரு ஜில்லா வைச் சேர்ந்ததாயிருக்கும். தங்கள் சார்பாக காங்கிரசில் பேசும் ஒரு பிரதிநிதியை ஒவ்வொரு ஜில்லா மக்களும் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஆனால் ஒவ்வொரு ராஜ்யமும் ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று கட்டுப்படுத்தும் சட்டம் கிடையாது. சில ராஜ்யங்களில் பல வருஷங்களாக ஜில்லா பிரிவினையில் எவ்வித மாறுதலும் செய்யப்படவில்லை. சில ராஜ்யங்களுக்குள்ள பிரதிநிதிகள் எண்ணிக்கையை விடக் குறைவான ஜில்லாக்கள் இருக்கின்றன. அம்மாதிரி ராஜ்யங்களில் அதிகப்படியாயுள்ள பிரதிநிதிகள் ராஜ்யமக்கள் யாவரும் சேர்ந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு "தொகுதியில்லாத பிரதிநிதிகள்" என்று பெயர். தற்போதைய காங்கிரசில் 300,000 ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதி இருக்கிறார்.

இரட்டைப்படை நம்பருள்ள வருஷம் நவம்பரில் செனட்டர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால் செனட்டர்களின் மூன்றில் ஒரு பகுதியினர்தான் அந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த முறைப்படி செனட் முழுதும் புது அங்கத்தினர் கொண்டதாயிருக்கமுடியாது. எந்த சமயத்திலும் அந்த சபையில் அனுபவம் வாய்ந்த மூன்றில் இரு பகுதி அங்கத்தினர் இருப்பர்.

பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களும் இரட்டைப்படை வருஷத்தின் நவம்பர் மாதத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால் இந்த அங்கத்தினர்கள் எல்லோருடைய பதவிகாலமும் ஒரே சமயத்தில் முடிவடைகிறது. அவர்கள் மறுபடி பிரதிநிதி சபையில் அங்கம் பெற விரும்பினால் அடுத்துவரும் தேசப் பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அநேக அங்கத்தினர்கள் வேலை அவரவர்கள் ஜில்லா மக்களுக்கும் பிடித்திருப்பதால் அவர்களே மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவ்வாறாக பிரதிநிதிகள் சபையிலும்

எல்லாம் புதிய அங்கத்தினர்களாக எச்சமயத்திலும் இருந்ததில்லை.

பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்கள் இரண்டு வருஷத்திற்கொருதரம் தேர்ந்தெடுக்கப்படுவதால் காங்கிரஸின் ஆயுள் காலமும் இரண்டு வருஷமாகக் கருதப்படுகிறது. சட்டப்படி வேறு தேதியில் கூடுவதாக திட்டமிடப்பட்டாலொழிய அரசியலமைப்பின் 20-வது திருத்தத்தின்படி காங்கிரஸ் ஒவ்வொரு வருஷமும் ஜனவரி மாதம் 3-ம் தேதி பிற்பகலில் கூட வேண்டும். வாஷிங்டனில் உள்ள **காபிடாலில்** அது கூடும். அதனுடைய அங்கத்தினர்கள் கூட்டத்தை ஒத்திப்போட்டாலொழிய காங்கிரஸ் தொடர்ந்து நடந்துகொண்டேவரும். அவர் அவசியமெனக் கருதும்பொழுது ஜனாதிபதி காங்கிரஸின் விசேஷ கூட்டத்தைக் கூட்டலாம்.

அதிகாரங்கள்

(1) பண சம்பந்தமானது தவிர மற்ற எவ் விஷயங்கள் பற்றியும் இரு சட்டசபைகளும் சட்டமியற்ற மசோதா கொண்டுவரலாம்.

(2) ஒரு சட்டசபை நிறைவேற்றி மற்ற சபைக்கு அனுப்பப்பட்ட எந்த மசோதாவையும் அங்கீகரிக்கவோ, நிராகரிக்கவோ செய்யலாம்.

அரசியலமைப்பின் கீழ் செனட்டிற்கு மட்டும் கீழ்க்காணும் அதிகாரங்கள் இருக்கின்றன :

(1) அநேக முக்கிய பதவிகளை வகிப்பதற்கு ஜனாதிபதி செய்யும் நியமனங்களை செனட் அங்கீகரிக்காமல் தடைசெய்யலாம்.

(2) பிரசன்னமாயுள்ள செனட்டர்களில் மூன்றில் இரு பங்கு பேர் ஆதரித்தால்தான் அமெரிக்கா பிற நாடுகளுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கைகள் அமுலுக்கு வரும்.

(3) குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரித்து முடிவு செய்யும் அதிகாரம் செனட்டிற்குத்தான் பிரத்தியேகமாக அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிரதிநிதிகள் சபைக்குத்தான் பகிரங்கமாகக் குற்றம்சாட்டும் உரிமை உண்டு. (அதாவது உத்தியோகத்திலிருந்து ஒதுக்கப்படும் அளவுக்கு தகாத முறையில் நடந்துகொண்ட அமெரிக்க அரசாங்க உத்தியோகஸ்தர்மீது குற்ற பத்திரிகை வாசிப்பது. ஆனால் இந்த குற்றச்சாட்டை செனட் தான் விசாரிக்கலாம்.)

ஒருபுறம் பிரதிநிதிகள் சபைக்கு மிக முக்கியமான பணம் சேகரிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. எல்லா வரி விதிக்கும் சட்டங்களும் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறினால் தான் அவைகளை செனட் அமுல்நடத்தலாம். இதன் விளைவாக சமஷ்டி அரசாங்கத்திற்குத் தேவையான தொகையை நிர்ணயிப்பதிலும், அந்தத் தொகையை எவ்வகையில் சேகரிப்பது என்பதை முடிவு செய்வதிலும் சிறிய ராஜ்யங்களைவிட பெரிய ராஜ்யங்களுக்கு அதிக வோட்டுகள் இருக்கின்றன. ஆனால் நடைமுறையில் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறிய பண மசோதாவுக்கு செனட் சபை எவ்வளவு திருத்தங்கள் வேண்டுமானாலும் கொண்டுவரலாம். இதற்குப் பிறகு இருசபை அங்கத்தினர்களடங்கிய "கூட்டுக் கமிட்டி" இரு சபைகளுக்கும் திருப்தியளிக்கக்கூடிய சமரசத்தைக் கொண்டு வரவேண்டும். அப்புறம்தான் பண மசோதா சட்டமாகிறது. ஆனாலும் பண மசோதாக்களை பிரேரேபிக்கும் பிரதிநிதிகள் சபையின் அதிகாரம் மிகவும் முக்கியமானது. சட்டசபைகள் ஒன்றையொன்று கட்டுப்படுத்தி சமநிலை ஏற்படுத்தும் முறைகளில் இது ஒன்று.

இம்மாதிரி அரசியலமைப்பு விதிகளினால் இறுதியான அதிகாரம் தங்கள் கையில்தானிருக்கிறது என்றும், நாட்டின் நலனுக்கு பிரதிநிதிகளும் செனட்டர்களும் தங்களுக்குப் பொறுப்பாளி என்று அமெரிக்க நாட்டுமக்கள் நம்பி வாழ்வதற்கு உதவியாயிருக்கிறது.

(7)

சட்டசபைப் பகுதியின் அதிகாரங்கள்

சட்டம் இயற்றுவதில் காங்கிரஸின் இருசபைகளுக்கும் ஒரே மாதிரி அதிகாரம் இருக்கிறது. பண சம்பந்தமானது தவிர புது சட்டம் கொண்டுவருவதற்கான பிரேரணை இரண்டு சபைகளும் செய்யலாம். ஆனால் ஒரு சட்டசபை ஆதரித்த மசோதாவை மற்ற சட்டசபை நிராகரிக்கலாம்.

அமெரிக்காவின் அரசியலமைப்பில் ஜனங்கள் சமஷ்டி அரசாங்கத்திற்கு சில அதிகாரங்களைக் கொடுக்கிறார்கள். காங்கிரஸ் சட்டமியற்ற லாயக்கான 18 விஷயங்களின் பட்டியல் இருக்கிறது. அரசியலமைப்பின் முதல் ஷரத்து 8-வது வரியில் விவரிக்கப்பட்டிருக்கும் விஷயங்கள் பொதுப்படையானவை, ஆனால் முக்கியமானவை. அவை வருமாறு :

1. வரி விதித்து வசூலிப்பது.
2. பணம் கடன் வாங்குவது.
3. ராஜ்யங்களுக்குள்ளும், பிறநாடுகளுடனும் வியாபாரத்திற்கான விதிகள் வழிவகைகளை நிர்ணயிப்பது.
4. நாணயப் பதிவு, அதன் மதிப்பை நிர்ணயித்தல், கனத்தை இடைபோடும் படிக்கற்கள் திட்டம் செய்தல், கள்ளநாணயம் செய்பவர்களை தண்டித்தல்.
5. பிரஜா உரிமைத் தகுதிபெறுவதற்கான ஒரேமாதிரி விதி செய்தல்.
6. நாடு முழுவதற்கும் கடன்பட்டார் சம்பந்தமாக ஒரேமாதிரி சட்டங்கள் செய்தல்.
7. தபால் ஆபீஸ்கள், தபால் எடுத்துச்செல்லும் ரஸ்தாக்கள் நிறுவுதல்.

8. வியாபார உரிமைகள் அச்சுரிமைகள் வழங்குதல்.
9. சமஷ்டி நீதிஸ்தல முறை அமைத்தல்.
10. கடற்கொள்ளைகளுக்கு தண்டனை விதித்தல்.
11. யுத்த பிரகடனம் செய்தல்.
12. ராணுவம் திரட்டி அதைப் பாதுகாத்தல்.
13. கடற்படை அமைத்தல்.
14. ராணுவத்திற்கும் கடற்படைக்கும் நடைமுறை விதிகள் செய்தல்.
15. சமஷ்டி சட்டங்களை நிர்வகிக்கவும், சட்டம் மீறிய குழப்பங்களை அடக்கவும், ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் ராணுவப்படையின் உதவியை நாடுதல்.
16. ராஜ்யங்களுடன் ஒத்துழைத்து ராணுவத்தை அமைத்து அதற்கு ஆயுதங்கள் வழங்க ஏற்பாடு செய்தல்.
17. கொலம்பியா ஜில்லாவிற்கான எல்லா சட்டங்கள் செய்யவும்.
18. அரசியலமைப்பின் மூலம் அமெரிக்க அரசாங்கத்திற்கோ, அல்லது அதன் அதிகாரம் பெற்ற ஸ்தாபனத்திற்கோ, அல்லது அதன் உத்தியோகஸ்தர்களுக்கோ கொடுக்கப்பட்ட அதிகாரங்களை அமுல் செய்வதற்கான சட்டங்களை இயற்றுதல்.

காங்கிரஸுக்கு கீழ்க்கண்ட காரியங்களைச் செய்யாமல் அரசியலமைப்பு தடைகள் விதித்திருக்கிறது :

(1) உள்நாட்டுக் கலகம், அல்லது எதிரி படையெடுப்பு நிகழும் சமயங்களைத் தவிர மற்ற சந்தர்ப்பங்களில் சிறைப்பட்டவர்களை நீதிஸ்தலத்தின் முன் ஆஜர் செய்யும் உரிமையை ரத்துசெய்தல்.

(2) விசாரணையின்றி யார் மீதும் குற்றம் சாட்டுவதற்கான சட்டமியற்றுதல்.

(3) ஒரு காரியம் நடந்த சமயத்தில் அது குற்றமல்லாம லிருந்து பின்னர் அதை குற்றமென்று பிரகடனம் செய்யும் சட்டம் இயற்றுதல்.

(4) ஏற்கனவே எடுக்கப்பட்ட ஜனக்கணக்கு அடிப்படை யிலல்லாமல், ராஜ்ய பிரஜைகள் மீது நேரடியாக வரி விதித்தல்.

(5) எந்த ராஜ்யத்திலிருந்தும் செய்யப்படும் ஏற்று மதிக்கு வரி விதித்தல்.

(6) எந்த ராஜ்யத்தின் துறைமுகங்களுக்கோ, அல்லது துறைமுகங்களை உபயோகிக்கும் மரக்கலங்களுக்கோ வியாபார விஷயத்தில் பிரத்தியேக சலுகைகள் அளிப்பது.

(7) பிரபுக்கள் போன்ற பட்டங்கள் அளிப்பதை அனுமதிப்பது.

காங்கிரஸின் தலைவர்களும் உத்தியோகஸ்தர்களும்

செனட் சபைக்கு உப ஜனுதிபதி தலைமை வகிப்பார் என்று அரசியலமைப்பு குறிப்பிடுகிறது. ஏதாவது ஒரு பிரேரணை சம் பந்தமாக இரு பக்கங்களிலும் சமமான ஓட்டுக் கிடைத்திருந் தால் ஏதாவது ஒரு பக்கத்திற்கு தலைவர் வோட்டளிக்கலாம். இது தவிர, அவருக்கு ஓட்டு கிடையாது. பிரதிநிதிகள் சபை தனது தலைவரையும் மற்ற உத்தியோகஸ்தர்களையும் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளலா மென்றும், உப ஜனுதிபதி வராமலிருந்தால் அவருக்கு பதிலாக தற்காலிகமாக தலைமை வகிக்க ஒருவரையும் பிற உத்தியோகஸ்தர்களையும் செனட்டே நியமிக்கலாமென்றும் அரசியலமைப்பு விதி வகுத்திருக்கிறது. பிரதிநிதிகள் சபையின் தலைவர் அந்த சபையில் எந்த கட்சி யினர் அதிகமாயிருக்கின்றனரோ அந்தக் கட்சியைச் சேர்ந்தவரா யிருப்பர். சபை நடவடிக்கைகளை சமாளிப்பதிலும் முக்கியமான கமிட்டிகளுக்கு அங்கத்தினர்கள் நியமிப்பதிலும் அவருக்கு மிகுந்த செல்வாக்குண்டு.

செனட்டில் அங்கம்வகிக்கும் ஒவ்வொரு கட்சி அங்கத்தின ரும் புது காங்கிரஸின் தொடக்கத்தில் கூடி சட்டசபைக் கட்சித் தலைவரையும் அவருக்கு உதவி செய்ய செனட்டிலுள்ள சில கட்சி அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுப்பார்கள். இதே மாதிரியே பிரதிநிதிகள் சபையிலுள்ள கட்சி அங்கத்தினர்களும் செய்வார்கள். இந்த தலைவர் தேர்தல் அந்தந்த கட்சி வழக்கப் படி நடக்கிறது. தங்கள் கட்சி ஆதரிக்கும் சட்டங்களை இயற்றுவ திலும், எதிர்க்கும் சட்டங்களைத் தோற்கடிப்பதிலும் இவர்கள் முக்கியமான உதவி செய்கின்றனர். சட்டமியற்றும் அரசியல் முறையில் இவர்கள் முக்கியமான ஸ்தானம் வகிக்கிறார்கள்.

சட்டமியற்றும் முறை

காங்கிரஸில் ஒரு கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மசோதாக் கள் அதன் பரிசீலனைக்கு வருகின்றன. பொருளிலும் முக்கி யத்துவத்திலும் இவை பலதரப்பட்டவையா யிருக்கும். ஒரு மசோதா சட்டமாவதற்கு முன் அதில் அக்கறையுள்ள பிரஜை கள் அதனால் பாதிக்கப்படக்கூடிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களை விசாரித்து அவர்களுடைய கருத்துக்களை அறிந்து கொள்வது ஒரு வழக்கம்; சில சமயம் காங்கிரஸின் அங்கத்தி னர்களே மசோதாவின் பலாபலன்களைப் பற்றி சாட்சியம் கூறு வதும் உண்டு.

இந்த முறைகளினால் ஏற்படும் வேலைச் சுமையை சமா ளிப்பதற்கு காங்கிரஸின் இரு சட்டசபைகளும் தங்களில் ஒரு சிறு பகுதியினரை நியமித்து மசோதா விவாதித்து எல்லா அங்கத்தினர்களும் வோட்டுச் செய்யுமுன், அதன் பல அம்சங்களை ஆராய்ந்து அறிவிக்கும்படி ஏற்பாடு செய்வதுண்டு. இப்படி நியமிக்கப்படும் சிறு குழுவுக்கு "கமிட்டி" என்று பெயர். அதற்கு காங்கிரஸில் பெரும்பான்மைக் கட்சியைச் சேர்ந்த ஒரு அங்கத்தினரே தலைமை வகிப்பார். இந்த கமிட்டியில் சிறு பான்மைக் கட்சியினரின் பலத்திற்கேற்ற பிரதிநிதித்துவம் அளிக்கப்படும். இதற்குத் தலைமை வகிப்பவர் சட்ட சபை

அமெரிக்கக் காங்கிரஸ் கூடும் முதல் நாள் அன்று, புதிதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் விசுவாசப் பிரமாணம் செய்து அமெரிக்காவின் அரசியல் திட்டத்தைப் போற்றிக் காப்பதாக உறுதி கூறுவார்கள். எழுத்திலுள்ள அரசியல் திட்டங்களிலெல்லாம் மிகவும் பழையது அமெரிக்க அரசியல் திட்டமாகும்.

ஒரு மசோதா சட்டமாகப்போவதை ஒட்டியோ வெட்டியோ பொது மக்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்க காங்கிரஸின் கமிட்டிகள் பொது விசாரணைகள் நடத்தும். சிலர் மசோதாவைப் பற்றிப் பேசத் தமக்கு இடங் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு, வருவார்கள். சிலரைக் கமிட்டியே வந்து பேசும்படி அழைக்கும். . இந்த விசாரணைகள் பல நாட்கள் நடைபெறும் ; சிலசமயம் சில வாரங்களாகவும் நீடிக்கும். விசாரணை நடப்பதை வெளியிலுள்ளவர் யாரும் வந்து கவனிக்கலாம், பத்திரிகை நிருபர்களும் படம் பிடிப்பவர்களும் வந்திருந்து அறியலாம்.

வேலையில் மிக அதிகமான அனுபவம் வாய்ந்த காங்கிரஸ் அல்லது செனட் கமிட்டி அங்கத்தினரா யிருப்பர். சமீபத்தில் நிறைவேறிய சட்டசபை புனரமைப்பு சட்டத்தின் விளைவாக சட்டமியற்றும் அமைப்பிலிருந்த பல மாசுபடிந்த வழக்கங்கள் அகற்றப்பட்டு நிரந்தர கமிட்டியின் எண்ணிக்கை செனட்டில் 15, பிரதிநிதிகள் சபையில் 19 என்று திட்டம் செய்யப்பட்டு விட்டது. அவைகளின் பெயரிலிருந்தே ஒவ்வொன்றும் எந் தெந்த விஷயத்தில் நிபுணத்துவம் வாய்ந்தது என்பதை அறியலாம். உதாரணமாக செலவு, விவசாயம், ராணுவப் படைகள், சமுதாய நிலங்கள், வீரர்கள் விஷயம், பாங்கிகள், நாணயம், அயல்நாட்டு விவகாரம் முதலியன.

எந்த சட்டசபையில் ஒரு மசோதா வந்தாலும் அது ஒரு கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகிறது. உதாரணமாக சாதாரண சட்டசபை நடைமுறைப்படி தானியங்களுக்கு சரியான விலை நிர்ணயிப்பது பற்றிய மசோதா விவசாய நிரந்தர கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பப்படலாம். அம் மசோதா கமிட்டிக்கு வந்தவுடன் அது சம்பந்தமாக அது பலமுறைகளைக் கையாளலாம். அது கமிட்டியின் பெரும்பான்மை அங்கத்தினர்களால் ஆதரிக்கப்படலாம், அல்லது நிராகரிக்கப்படலாம். சம்பந்தப்பட்ட முழு சட்டசபைக் கூட்டத்தின் வோட்டிற்கு விடப்படலாம்.

மசோதா பரிசீலனைக் கமிட்டியின் பெரும்பான்மை ஆதரவு பெறுவிட்டால், அதன் அங்கத்தினர்கள் தங்கள் இஷ்டப்படி அதை மாற்றலாம். அதில் அவர்கள் சில்லரைத் திருத்தங்கள் செய்யலாம் அல்லது விசேஷ மாறுதல்கள் செய்யலாம், அல்லது மசோதாவையே திருத்தி எழுதலாம். மசோதாவை கவனிக்காமலே விட்டு அதை சாகஅடிக்கலாம். இப்படிச் செய்வது மசோதாவின் முடிவு என்று கூறிவிடமுடியாது. பிரதிநிதிகள் சபையில் 218 பேர் கையெழுத்திட்டு மசோதாவை கமிட்டியிலிருந்து வாபஸ் பெற்று பரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரினால் அது முழு சபையின் விவாதத்திற்குக் கொண்டு

வரப்படும். செனட்டின் பரிசீலனைக் கமிட்டியைக் கலைத்துவிட வேண்டும் எனும் தீர்மானத்தை பெரும்பான்மையினர் ஆதரித்தால் மசோதா அந்த சபையின் ஆலோசனைக்கு வருகிறது.

மசோதாக்களை பலமுறைகளில் பிரேரணை செய்யலாம். சில பரிசீலனைக் கமிட்டிகளாலேயே தயார் செய்யப்படுகின்றன; மக்களின் பிரத்தியேக தேவைகளை பூர்த்தி செய்ய காங்கிரஸின் விசேஷ கமிட்டிகள் மசோதாக்களை தயார்செய்கின்றன. பழைய செயல்முறைகளை மாற்றவும், நிர்வாகத் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் ஜனாதிபதியோ அல்லது நிர்வாக அதிகாரிகளோ அதற்கான சட்டங்கள் இயற்றவேண்டுமென காங்கிரஸிற்கு யோசனை கூறலாம். இன்னும் சில, பிரஜைகளோ அல்லது பொதுஸ்தாபனங்கள் கூறும் யோசனையின் பேரில் காங்கிரஸினால் கொண்டுவரப்படலாம். மற்றும் சில, மசோதாக்கள் தனிப்பட்ட காங்கிரஸ் அங்கத்தினரால் கொண்டுவரப்படலாம். இருசபைகளில் எதில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டாலும் முதலில் அதன் தலைப்பு படிக்கப்படுகிறது, பிறகு அதற்கு ஒரு வரிசை எண் கொடுக்கப்படுகிறது. பின்னர் சபையின் குமாஸ்தா (அதிகாரி)வால் சம்பந்தப்பட்ட கமிட்டிக்கு அனுப்பப்படுகிறது. மசோதா பற்றி கமிட்டி விசாரணை நடத்தினால் அதை ஆதரிப்பவர்களும் எதிர்ப்பவர்களும் அதைப் பற்றி தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கலாம். சில சமயம் ஒரு மசோதாவைப் பற்றிய சாதக பாதகக் கருத்துக்களை கமிட்டி பரிசீலனை செய்யும். விசாரணை பல வாரங்கள் அல்லது மாதங்களுக்கு நீடிப்பதுண்டு.

மசோதா பற்றி காங்கிரஸ் விசாரணை

காங்கிரஸின் இந்த பரிசீலனை முறை, வேலை சீராகவும் திறமையாகவும் நடக்க உதவிபுரிகிறது. இதுதவிர இம்முறையினால் நீடித்த பலன்களும் உண்டு. அரசாங்கத்திற்கு மிகுந்த அக்கறையுள்ள துறைகளில் நிபுணர்கள் ஏற்படுத்துவதில் இந்த முறை நீடித்த பயனளிக்கிறது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு காங்கிரஸ் அங்கத்தினர் தொழிலாளர் சம்

பந்தமான பரிசீலனைக் கமிட்டியில் அங்கம் பெற்றால் அப்பொழுது முதலாளி தொழிலாளர் உறவின் தொழில் நுட்ப அம்சம், தொழில், தொழிலாளர் சங்க தொடர்புபற்றி அவருக்கு ஆழ்ந்த ஞானம் இல்லாமலிருக்கலாம். ஆனால் மாதக் கணக்கில் தொழிலாளர் சம்பந்தமான விசாரணையை அவர் கேட்டுக்கொண்டுவருகிறார். நேரடியாக இவ் விஷயத்தில் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள், வியாபார நிர்வாகிகள், தொழிலாளர் தலைவர்கள் பிரச்னையின் எல்லா அம்சங்களையும் தீவிரமாக ஆராய்வதை அறிந்துகொள்கிறார். தொழிலாளர் உறவு சம்பந்தமான நிபுணர்களின் நிஷ்பட்சபாதமான கருத்துக்களுக்குச் செவிசாய்க்கிறார். கமிட்டியின் தகவலுக்கும் ஆராய்ச்சிக்கும் அனுப்பப்படும் எண்ணற்ற யதாஸ்துகளைப் படிக்கிறார். இவ்வாறு காங்கிரஸின் பரிசீலனைக் கமிட்டிகளின் பல கூட்டங்கள் நடந்த பிறகு தொழிலாளர் முதலாளி உறவு பற்றிய சட்டங்கள் பற்றி நன்கு மதிப்பிடும் ஆழ்ந்த விரிவான ஞானமும், நடைமுறை அனுபவமும் அவருக்கு எற்படுகின்றன. தேவையான பிரச்னைகளைத் தீர்க்கும் சட்டமியற்றுவது பற்றி யோசனை கூறும் தகுதி பெற்றுவிடுகிறார்.

பரிசீலனைக் கமிட்டி ஒரு மசோதாவை திருப்பி சட்டசபைக்கு அனுப்பினால் அங்கத்தினர்கள் அதைப்பற்றி பகிரங்கமாக விவாதித்து அதன்மீது வோட்டுச் செய்கின்றனர். பிரதிநிதிகள் சபையில் எராளமான அங்கத்தினர்களிருப்பதால் விதிகள் கமிட்டி வழக்கமாக விவாதத்தை கட்டுப்படுத்துகிறது. ஆனால் செனட்டில் ஒவ்வொரு அங்கத்தினரும் சொல்லவேண்டியதையெல்லாம் சொல்லும் வரையில் விவாதம் நீடிக்கிறது. வோட்டெடுப்பின் மூலம் சபை மசோதாவை நிறைவேற்றலாம், அல்லது நிராகரிக்கலாம், அல்லது பரிசீலனை செய்யாமல் உள்ளே தள்ளிவிடலாம், அல்லது மறுபடியும் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பலாம். ஒரு மசோதா ஒரு சட்ட சபையில் நிறைவேறினால் அது உடனே மற்ற சட்டசபையின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகிறது.

முதல் சட்டசபையில் நடந்த பந்தா பூராவிற்கும் மசோதா இரண்டாவது சட்டசபையிலும் உட்பட வேண்டியிருக்கிறது. இரண்டாவது சட்டசபை அதை நிறைவேற்றலாம் அல்லது நிராகரிக்கலாம். இரண்டாவது சட்டசபை மசோதாவைத் திருத்தத்துடன் நிறைவேற்றியிருந்தால் அது மீண்டும் முதல் சட்டசபைக்கு அனுப்பப்படவேண்டும். முதல் சட்டசபை திருத்தங்களை ஏற்றுக்கொள்ள மறுத்தால் இருசபைகளும் சமப் பிரதிநிதித்துவம்பெற்ற "சமரஸ கமிட்டி" முன் அனுப்பப்படும். இந்த கமிட்டி வித்தியாசங்களை அகற்றமுடிந்தால் அந்த சமரஸ ஏற்பாடு இருசபைகளின் தனித்தனி அங்கீகாரத்திற்கு அனுப்பப்படுகிறது.

இரு சட்டசபைகளாலும் நிறைவேற்றப்பட்ட மசோதா ஜனாதிபதிக்கு அனுப்பப்படுகிறது. இது சம்பந்தமாக அரசியலமைப்பின் ஷரத்து வருமாறு :—

"பிரதிநிதிகள் சபை, செனட் இரண்டின் அங்கீகாரத்தையும் பெற்ற ஒவ்வொரு மசோதாவும், சட்டமாவதற்கு முன், அமெரிக்காவின் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்."

ஜனாதிபதி பூரா மசோதாவையும் ஏற்றுக் கையொப்பமிடலாம் அல்லது நிராகரிக்கலாம். அவரிடம் மசோதா வந்து சேர்ந்த, ஞாயிற்றுக்கிழமைகள் நீங்கலாக, பத்து நாட்களுக்குள் அவர் கையெழுத்திடாவிட்டால் மசோத அவர் கையெழுத்தின்றியே சட்டமாகிவிடுகிறது. ஆனால் இந்த பத்து நாட்களுக்குள் காங்கிரஸ் கூட்டம் ஒத்திப்போடப்பட்டுவிட்டால், அந்த காலத்திற்குள் ஜனாதிபதி கையெழுத்திடாத மசோதா சட்டமாகாது. ஒரு மசோதா சட்டமாகாமல் தடைசெய்யும் முறைக்கு (pocket veto) என்று பெயர் (அதாவது நிராகரிப்பு அதிகாரம் எப்பொழுதும் ஜனாதிபதி ஜேபியில் இருக்கிறது என்பது பொருள்).

காங்கிரஸ் நடந்துகொண்டிருக்கும்போது ஜனாதிபதி ஒரு மசோதாவை நிராகரித்துவிட்டால், அவருடைய நிராகரிப்பை

ஒவ்வொரு சட்டசபையும் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் சேர்ந்து ரத்துசெய்யாவிட்டால் மசோதா சட்டமாகாது.

காங்கிரஸின் ஒவ்வொரு கூட்டத்திலும் பிரரேபிக்கப்படும் ஆயிரக்கணக்கான மசோதாக்களில் ஒரு சிலவே சட்டமாகின்றன.

காங்கிரஸின் விசாரணை அதிகாரங்கள்

இரண்டு சட்டசபைகளுக்கும் விசாரணை அதிகாரம் உண்டு. இதற்கு ஏற்கனவேயுள்ள கமிட்டிகளேயோ அல்லது பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட கமிட்டியையோ நியமிக்கலாம். அல்லது இரு சபைகளின் " கூட்டுக் கமிட்டி " யை நியமித்து விசாரணை நடத்தச் சொல்லலாம்.

புது சட்டங்கள் தேவையா என்பதற்கான நிலேகளேப்பற்றி விசாரிக்கச் சொல்லலாம். அல்லது நிர்வாக அல்லது நீதி பரிபாலன இலாகா எப்படி வேலேசெய்கின்றது என்பதை ஆராயச் சொல்லலாம். அல்லது தேவையான சட்டங்களேப்பற்றி மக்களிடையே அக்கறையைத் தூண்டுவதற்காகவுமிருக்கலாம். சில சமயம் காங்கிரஸ் தனது அங்கத்தினர் குழாமுக்கு வெளியே உள்ள நிபுணர்கள் அல்லது தனிப்பட்ட பிரஜைகளே நியமித்து தகவல்கள் கொடுக்கும்படி செய்யலாம். இம்மாதிரி விசாரணைகள் காங்கிரசுக்கு மக்களுடன் நெருங்கிய தொடர்பு நீடிப்பதற்கு உதவியாயிருக்கின்றன.

ஒவ்வொரு காங்கிரஸ் அங்கத்தினரும் பலவிதமான சேவைகள் செய்யவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. ஒவ்வொருவரும் தன்னுடைய கட்சி உதவியினுல் தேர்ந்தெடுக்கப் பட்டவராதலால் அவர் தன்னுடைய கட்சி திட்டத்தையே பின்பற்ற முயற்சிக்கிருர். வோட்டர்கள் தங்கள் அதிகாரத்தைப் பிரதிநிதிகளுக்கு அளித்து தங்களுடைய நன்மைக்குப் பாடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கின்றனர். தேசத்திற்கான சட்டங்களே இயற்றும் சபையில் அவர்கள் அங்கத்தினர்களாயிருப்ப

தால் தேசம் பூராவிலுமுள்ள மக்களின் நலனுக்கு அவர்கள் பாடுபடவேண்டியவர்களாகிருர்கள்.

குறிப்பிட்ட ஒரு உரிமையாளரின் பிரதிநிதிகளாயிருப்பவர்கள் தங்களுடைய தனித் தேவைகளை காங்கிரஸ் சபையினரிடம் வற்புறுத்திக் கூறுகின்றனர். சட்டசபை அங்கத்தினர்கள் தமது ஜில்லா அல்லது ராஜ்ய மக்களின் நலன்களையும் தம் பிராந்தியத்தின் பிரத்தியேக தேவைகளையும் தேசத்தின் பொது நலன்களையும் சமமாகப் பாவித்து வேலைசெய்வது சாமான்யமான காரியமல்ல.

* * *

(8)

ஜனதிபதி பதவி

சமஷ்டி அரசியலமைப்பின் இரண்டாவது ஷரத்து நிர்வாக அதிகாரத்தை ஜனதிபதியிடம் ஒப்படைக்கிறது. அது அதிகாரத்தை உபஜனதிபதிக்கோ, ஜனதிபதியின் மந்திரிசபைக்கோ பிற உத்தியோகஸ்தர்களுக்கோ அளிக்கவில்லை.

அரசியலமைப்பு அங்கீகரிக்கப்படுமுன் சில ராஜ்யங்கள் நிர்வாக அதிகாரத்தைப் பல உத்தியோகஸ்தர்களடங்கிய குழுவுக்கு அளித்தன. அந்த குழுவில் எந்த அதிகாரிக்கும் மற்ற அதிகாரிகளைவிட அதிக அதிகாரம் கிடையாது. இதே முறையை அனுஷ்டிக்கும்படி அரசியல் நிர்ணய சபையில் பெஞ்சமின் பிராங்கிலின் வற்புறுத்தினர். பல வருஷங்களாக நன்கு ஆட்சி நடத்திவந்த ஸ்விஸ் குடியரசின் நிர்வாக கவுன்ஸில் உதாரணம் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. பிரிட்டிஷ் மன்னருக்கு அதிகப்படி அதிகாரங்கள் இருந்ததனுல் ஏற்பட்ட அபாயத்தை அரசியலமைப்பு கர்த்தாக்கள் அறிந்திருந்தனர். எனினும் எல்லா அதிகாரங்களையும் அமெரிக்க ஜனதிபதி என அழைக்கப்படும் ஒருவருக்கே கொடுக்கத் தீர்மானித்தார்கள்.

ஜனதிபதி மாதிரியே உப ஜனதிபதியும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானித்தனர். செனட் கூட்டத்திற்குத் தலைமைவகிப்பதுதான் அவருடைய ஒரே வேலை. ஜனதிபதி, பதவியிலிருந்து நீக்கப்பட்டால், அல்லது அவர் இறந்துவிட்டால், அல்லது ராஜினமாச் செய்தால் அல்லது எக்காரணத்தாலோ பதவி வகிக்க அசத்தராகிவிட்டால் அவருக்குப் பதிலாக உப ஜனதிபதி அவருடைய பதவியை வகிப்பார். ஜனதிபதி, உப ஜனதிபதி இருவரும் இறந்தாலும் பதவியிலிருந்து விலகி

னாலும் யார் அவர்களுக்கு பதிலாகவருவது என்பதுபற்றி முடிவு செய்யும் அதிகாரம் காங்கிரசுக்குக் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு காரியதரிசியின் கீழ் வேலை செய்யும் நிர்வாக இலாகாக்கள் இன்னும் மற்ற தனிப்பட்ட ஏஜன்ஸிகள் யாவற் றிற்கும் ஜனாதிபதிதான் தலைவர். இவர்கள் மூலம் அரசிய லமைப்பு அதிகாரங்களையும், காங்கிரஸ் இயற்றும் சட்டங்களையும் ஜனாதிபதி நிறைவேற்றிவைத்து ஜனங்கள் நலனைப் பாது காக்கும் முறையில் அரசாங்க காரியங்களை நடத்துகிறார். வாஷிங் டனில் வெள்ளைமாளிகை என்று அழைக்கப்படும் இடத்தில் ஜனாதிபதி வாசம்செய்கிறார். முக்கிய அரசியல் கட்சிகள் நடத்தும் மகாநாடுகளில் (கன்வென்ஷன்) ஜனாதிபதி பதவிக்கு அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஏதாவது ஒரு நகரத்தில் தங்கள் மகா நாட்டைக் கூட்டுகின்றது. தேர்தல் நடக்கவேண்டிய வருஷத் தில் கோடைக்காலத்தில் இந்த மகாநாடு நடைபெறுகிறது. ஒவ்வொரு ராஜ்யத்திலுமுள்ள கட்சிஸ்தாபனம் இதற்குப் பிரதி நிதிகளை அனுப்புகிறது.

மகாநாடு தனது நிர்வாகஸ்தர்களையும் கமிட்டிகளையும் நிய மித்து கட்சி திட்டத்தையும் வகுத்தபிறகு ஜனாதிபதி உப ஜனாதிபதி பதவிகளுக்கு அபேட்சகர்களை நியமிக்கிறது. மகா நாட்டுத் தலைவர் ஒவ்வொரு ராஜ்யத்தின் பெயரையும் படிப்பார். அப்படிப் படிக்கும்பொழுது ஒவ்வொரு ராஜ்ய பிரதிநிதி கோஷ் டியும் ஜனாதிபதி பதவிக்கு அபேட்சகர் பெயரைக் குறிப்பிடலாம். எல்லா ராஜ்யங்களும் தங்களுக்கு விருப்பமான பெயர்களை அறிவித்தவுடன் பிரதிநிதிகள் தங்களுக்கு இஷ்டமான வர்களுக்கு வோட்டுச் செய்கின்றனர். எந்த அபேட்சகருக்கு பெரும்பான்மை வோட்டுகள் கிடைத்திருக்கின்றனவோ அவர் அடுத்த நவம்பரில் நடக்கும் தேர்தலில் கட்சி அபேட்சகராவார். பிலடல்பியாவில் கூடிய அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர் கள் ஜனாதிபதி தேர்தலில் ஜனங்களே வோட்டுப்போடுவது

நல்லதல்ல என்று கருதியதனுல் ஜனுதிபதியைத் தேர்ந்தெடுக்க ஒரு " மறைமுக முறையை " வகுத்தனர்.

நவம்பர் தேர்தலில் ஜனுதிபதி பதவிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டிய எலக்டர்களை ஒவ்வொரு ராஜ்ய வோட்டர்களும் தேர்ந்தெடுக்கிருர்கள். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் பிரதிநிதி சபையிலும் செனட்டிலும் எவ்வளவு பிரதிநிதிகள் உண்டோ அவ்வளவு எலெக்டர்களைத் தேர்ந்தெடுக்கிருர்கள். இந்த எலெக்டர்கள் ஜனுதிபதி, உபஜனுதிபதி பதவிகளுக்கு நியமிக்கப்படும் தங்கள் கட்சி அபேட்சகர்களுக்கு வோட்டுச் செய்வதற்காகவே தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். இவ்வாறு 48 ராஜ்யங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் எலெக்டர்களுக்கு " எலெக்டரல் காலேஜ் " (தேர்தல் குழு) என்று பெயர். ஆனுல் இவர்கள் ஒன்ருகக் கூடுவதில்லை. ஏனெனில் அரசியலமைப்புக்கு 12-வது திருத்தம் வோட்டர்கள் தத்தம் ராஜ்யத்திலேயே கூடி வோட்டுச் செய்யவேண்டும் என்று கூறுகிறது. இந்த தேர்தல் குழு (" எலெக்டரல் காலேஜ் ") ஜனுதிபதியையும் உப ஜனுதிபதியையும் பொறுக்குகிறது. ஒவ்வொரு ராஜ்ய தேர்தல் குழுவினரும் தங்கள் ராஜ்யத்தில் அதிகப்படி வோட்டுப் பெற்ற அபேட்சகர்களுக்கே வோட்டுச் செய்கின்றனர்.

நவம்பர் தேர்தலுக்குப் பிறகு ஜனவரி மாதம் 20-ம் தேதி நடக்கும் ஆரம்ப விழாவுடன் தனது கடமைகளை ஜனுதிபதி செய்யத் துவங்குகிருர். தலைநகருக்குச் சென்று அமெரிக்க பிரதம நீதிபதி முன் விசுவாசப் பிரமாணம் செய்துவிட்டு பதவி ஏற்பதுதான் சம்பிரதாயம்.

விசுவாசப் பிரமாண வாசகம்:

" அமெரிக்க ஜனுதிபதி பதவியை நாணயமாக வகித்து நடப்பேன் என்று மனப்பூர்வமாக உறுதிகூறுகிறேன். என்னுல் இயன்ற அளவுக்கு அமெரிக்காவின் அரசியலமைப்பை வளர்த்து, பாதுகாத்து, காப்பாற்றுவேன்."

வழக்கமாக ஜனாதிபதி ஒரு ஆரம்பப் பிரசங்கம் செய்கிறார். அது நாடெங்கும் ஒலிபரப்பப்படுகிறது. இந்தப் பிரசங்கத்தில் தனது அரசாங்கம் பின்பற்றப்போகிற கொள்கைகளை பொதுப் படையாக எடுத்துக்கூறுவார்.

ஜனாதிபதியின் அதிகாரங்கள்.

தேசீய அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரம் சட்டப்படி அமெரிக்க ஜனாதிபதிக்கு அளிக்கப்படவேண்டும் என அரசியலமைப்பு கூறுகிறது. மற்ற எல்லா அதிகாரிகளும் அவருக்குப் பொறுப்பாளிகளாவர். தங்களுடைய நிர்வாகக் கடமைகளை நிறைவேற்றும் அதிகாரங்களை பிற உத்தியோகஸ்தர்கள் ஜனாதிபதியிடமிருந்து பெறுகிறார்கள்.

நிர்வாக மாளிகை-வெள்ளை மாளிகை

அமெரிக்க ஜனாதிபதி பதவி உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த முக்கியமான பதவியாகும். முதலாவதாக ஜனாதிபதி "சட்டங்களெல்லாம் நாணயமாக நிர்வகிக்கப்படும்" என்பதை கவனமாகப் பார்க்கவேண்டும். தேசீய அரசாங்கத்தை நடத்தும் மகத்தான நிர்வாக அமைப்பை சரிவர நிர்வகிக்க வேண்டும். இந்த பொறுப்பை நிறைவேற்ற அவருக்கு நிர்வாகப் பகுதியை நடத்தும் பொறுப்பைத் தவிர, சட்டமியற்றும் பகுதியிலும், நீதி பரிபாலனத் துறையிலும் முக்கியமான அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

காங்கிரசினால் நிறைவேற்றப்பட்ட எந்த மசோதாவையும் ஜனாதிபதி நிராகரித்துவிடலாம். மூன்றில் இரண்டு பங்கு வோட்டளித்து ஒவ்வொரு சட்டசபையிலும் ஜனாதிபதியின் நிராகரிப்பை ரத்து செய்யாவிட்டால் எந்த மசோதாவும் சட்டமாகாது. அவர் முக்கியமெனக் கருதும் பிரச்னையைப்பற்றி யோசித்து முடிவு கூறும்படி இரு சட்டசபைகளையும் ஒன்றாகக் கூடும்படி அழைப்பதன்மூலம் அவைகளின் அபிப்பிராயத்தை உருவகப் படுத்தலாம். வருஷாந்தரம் அல்லது விசேஷ காலங்களில் காங்கிரஸுக்கு அவர் அனுப்பும் செய்திகள் மூலம் மக்க

ளுக்குத் தேவையான சட்டங்களை இயற்றும்படி சிபாரிசு செய்ய லாம். தனது மேடைப் பிரசங்கங்களில் மறைமுகமாக காங் கிரசுக்கு யோசனை கூறலாம். உபஜனுதிபதி தவிர மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரி ஜனுதிபதி ஒருவரேயாகையால் நாட்டின் நலத்தை வளர்க்கும் திட்டத்தை தேசத்திற்கு சமர்ப் பிக்கும் பொறுப்பு அவரையே சாருகிறது. தனது கட்சியின் தலைவர் என்கிற முறையில் காங்கிரசிலுள்ள தனது கட்சியி னரை அவர் வெளியிடும் திட்டத்தை ஆதரிக்கும்படி வற் புறுத்தலாம்.

நீதிபரிபாலன, நிர்வாக அதிகாரங்கள்

காலி ஏற்படும்போது அந்த ஸ்தானங்களுக்கு——பிரதம நீதி ஸ்தலம் உள்பட——சமஷ்டி நீதிபதிகளை ஜனுதிபதி நிய மிக்கிருர். ஆனுல் அவர் நியமனங்கள் அமெரிக்க செனெட் சபையின் ஊர்ஜிதம் பெறவேண்டும். பகிரங்க விசாரணை குற் றத்திற்கு தண்டனைபெற்றவர்கள் தவிர மற்ற குற்றங்களுக்காக தண்டனைபெற்றவர்கள் தண்டனையை பூராவாகவோ ஓரள வுக்கோ ரத்துசெய்துவிடலாம். கிரிமினல் குற்றத்திற்காக தண் டிக்கப்படுபவர்கள் தண்டனைக் காலத்தைக் குறைக்கலாம்; அல்லது அபராதத் தொகையைக் குறைக்கலாம். தூக்கு தண்டனை காலத்தை ஒத்திப்போடலாம்.

ஜனுதிபதியின் ஏராளமான நிர்வாக அதிகாரங்கள் யாவற் றையும் விவரிப்பது சுலபமல்ல. ஜனுதிபதி அரசியலமைப்பை அமுல்செய்வதுடன் காங்கிரஸ் இயற்றும் சட்டங்களையும் நிறை வேற்றுகிருர். அப்படிச் செய்வதில் அவர் அநேக விதிகள், ஏற்பாடுகள், யோசனைகள் வெளியிடவேண்டியிருக்கிறது. இவை களுக்கு நிர்வாக உத்திரவுகள் என்று பெயர்.

அவர் அமெரிக்காவின் ராணுவம், கடற்படை, போலீஸ்படை ராஜ்யத்திலுள்ள படை போர் நடவடிக்கையில் ஈடுபடுகையில் அதற்கும் சேனுதிபதியாயிருக்கிருர். இந்த பிரிவு ஜனுதிபதிக்கு

யுத்தம் அல்லது அபாய காலத்தில் ஏராளமான அதிகாரத்தை யளிக்கிறது.

அயல்நாட்டு விவகாரங்களில் அதிகாரங்கள்

அமெரிக்காவின் அயல்நாட்டு உறவுகள் சம்பந்தமான பொறுப்புகள் யாவும் ஜனுதிபதியின் மீது விழுகின்றன. தூதர்கள், மந்திரிகள், ஸ்தானிகர்கள் முதலியோரை செனட்டின் அங்கீகாரம்பெற்று நியமனம் செய்யும் அதிகாரத்தை அரசியலமைப்பு ஜனுதிபதிக்கு அளிக்கிறது. அதேமாதிரி செனட் அங்கீகாரம் பெற்று பிறநாட்டு தூதர்களை வரவேற்கும் பொறுப்பும் அவருடையதே. ராஜாங்க காரியதரிசியின் உதவி கொண்டு அவர் பிறநாட்டு அரசாங்கங்களுடன் தொடர்பு கொள்கிருர். ராஜாங்க இலாகா மூலம் வெளிநாடுகளில் பிரயாணம் செய்யும் அமெரிக்கப் பிரஜைகளையும் அமெரிக்காவில் பிரயாணம் செய்யும் அயல்நாட்டினரையும் பாதுகாக்கிருர். இந்த அதிகாரத்தின் மூலம் ஒரு புதிய நாட்டையோ அரசாங்கத்தையோ ஏற்றுக்கொள்ளவோ அல்லது ஏற்க மறுக்கவோ சாத்தியமாகிறது. செனட்டில் மூன்றில் இரண்டு பங்கு ஓட்டுகள் ஆதரவுபெற்று மற்ற அரசாங்கங்களுடன் உடன்படிக்கைகள் செய்துகொள்ளலாம். மேலும் செனட்டின் அங்கீகாரம் தேவையில்லாத “ நிர்வாக உடன்பாடுகள் ” பிற நாடுகளுடன் செய்து கொள்ளலாம்.

அமெரிக்காவின் ராணுவ, கடற்படைகளை உலகின் எந்த பாகத்திற்கு வேண்டுமானுலும் அனுப்பலாம்.

நியமன அதிகாரங்கள்

அரசாங்கத்தின் முக்கிய வேலைக்குப் பொறுப்பான இலாகா தலைவர்களை ஜனுதிபதிதான் நியமிக்கிருர். பல சமஷ்டி சர்க்கார் பதவிகளுக்கும் உத்தியோகஸ்தர்களை அவரே நியமிக்கிருர். ஆனுல் நிர்வாக இலாகாவின் பல உத்தியோகஸ்தர்கள் ஸிவில் உத்தியோகஸ்தர் நியமன முறை மூலம் பொறுக்கப்படுகின்றனர்

என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த நியமன முறைப்படி உத்தியோகம் பெறுபவர்கள் தங்கள் தகுதியை நிரூபிப்பதற்கான பரீட்சைகளில் தேறவேண்டும்.

ஜனாதிபதி.

பதவிகாலம்	4 வருஷம்.
சம்பளம்	வருஷத்திற்கு 100,000 டாலர்களும் படிச்செலவு தொகையும்.
தேர்தல்	4 வருஷத்திற் கொரு தரம் நவம்பர் மாதம்.
ஆரம்பம்	தேர்தல் முடிந்த அடுத்துவரும் ஜனவரி 20-ம் தேதி.
எப்படி தேர்தல்	எலக்டரல் காலேஜ் மூலம் ஜனங்களால்.
யோக்கியதாம்சங்கள் ..	அமெரிக்காவில் பிறந்த பிரஜையாயிருக்கும் 35 வயதுள்ளவராயும் 14 வருஷம் அமெரிக்காவில் தொடர்ந்து வாழ்ந்தவராயுமிருக்க வேண்டும்.

அவருக்குப் பதிலாக பதவிக்கு வருபவர்கள் :

1. உப ஜனாதிபதி.
2. பிரதிநிதிகள் சபைத் தலைவர்.
3. செனட்டின் தாற்காலிக தலைவர்.
4. ராஜாங்க காரியதரிசி.
5. பொக்கிஷ இலாகா காரியதரிசி.
6. பாதுகாப்பு காரியதரிசி.
7. சட்ட இலாகா தலைவர்.
8. தபால் இலாகா தலைவர்.
9. உள்நாட்டுக் காரியதரிசி.
10. விவசாய இலாகா காரியதரிசி.
11. வர்த்தக இலாகா காரியதரிசி.
12. தொழிலாளர் இலாகா காரியதரிசி.

முக்கியமான அதிகாரமும் கடமையும்

அரசியலமைப்பை அமுல்நடத்துவது, காங்கிரஸ் நிறைவேற்றும் சட்டங்களை நிர்வகிப்பது, உடன்படிக்கைகளை நிறைவேற்றுவது.

மற்ற அதிகாரங்கள்

1. மசோதாக்களை நிராகரித்தல்.
2. காங்கிரஸுக்கு, சட்டமியற்றுதல் சம்பந்தமாக சிபார்சு செய்வது.
3. காங்கிரசின் விசேஷ கூட்டங்கள் கூட்டுவது.
4. காங்கிரசுக்கு விசேஷ செய்திகள் அனுப்புவது.
5. சமஷ்டி நீதிபதிகள் நியமிப்பது.
6. அயல்நாடுகளுக்கு பிரதிநிதிகள் நியமிப்பது.
7. இலாகா தலைவர்களையும் மற்ற முக்கியமான உத்தியோகஸ்தர்களையும் நியமிப்பது.
8. குற்றவாளிகளை மன்னிப்பது.
9. அயல்நாடுகளுடன் உத்தியோக அலுவல்கள் நடத்துவது.
10. ராணுவப் படைகளுக்கு தளபதியாயிருப்பது.

(9)

அரசாங்கத்தின் நிர்வாக இலாகாக்கள்

சமஷ்டி சட்டங்களை நிர்வகித்து அமுல்நடத்துவதில் ஜனாதிபதிக்கு உதவிபுரிய காங்கிரஸ் அவ்வப்போது நிர்வாக இலாகாக்களை சிருஷ்டித்திருக்கிறது. இந்த இலாகாத் தலைவர்களை ஜனாதிபதி செனட்டின் அங்கீகாரத்தின் மீது நியமிககலாம் என்று காங்கிரஸ் விதித்திருக்கிறது. நிர்வாக இலாகா தலைவர்கள் சேர்ந்த குழுவுக்கு "ஜனாதிபதியின் மந்திரி சபை" என்று பெயர்.

ஜார்ஜ் வாஷிங்டன் ஜனாதிபதியாக முதல் தடவையாகப் பதவிவகித்தபோது 4 மந்திரிகளைத்தான் நியமித்தார். அரசாங்கத்தின் அலுவல்கள் அதிகரித்தவுடன் புது இலாகாக்களை காங்கிரஸ் நிறுவியிருக்கிறது. 1948-ல் கீழ்க்கண்ட மாதிரி 9 நிர்வாக இலாகாக்கள் இருந்தன.

இலாகா	இலாகா தலைவர்	சட்ட பூர்வமாக எந்த வருஷம் ஏற்பட்டது
1. ராஜாங்கம்	ராஜாங்க காரியதரிசி	1789
2. பொக்கிஷம்	பொக்கிஷ இலாகா காரியதரிசி	1789
3. பாதுகாப்பு	பாதுகாப்பு இலாகா காரியதரிசி	(1) 1947
4. நீதி	சர்க்கார் பிரதம வக்கீல்	1789
5. தபால் ஆபீஸ்	தபால் இலாகா தலைவர்	1794
6. உள்நாடு	உள்நாட்டிலாகா காரியதரிசி	1849
7. விவசாயம்	விவசாய இலாகா காரியதரிசி	1889
8. வர்த்தகம்	வர்த்தக இலாகா காரியதரிசி	(2) 1903
9. தொழில்	தொழிலாளர் இலாகா காரியதரிசி	1913

(1) 1947 ஜூலை 1-ம் தேதி 253-வது பொதுச் சட்டப்படி காங்கிரஸ் யுத்த இலாகாவையும் கடற்படை இலாகாவையும் ஒன்றுபடுத்தி தேசீய ராணுவ

மந்திரி சபை

ஜனுதிபதிக்கு ஆலோசனை கூறுபவர்கள் குழுதான் மந்திரி சபை. ஒவ்வொரு அங்கத்தினரும் ஜனுதிபதியால் நியமிக்கப் பட்டு அவருக்கே பொறுப்புவாய்ந்த நிர்வாக இலாகாக்களின் தலைவர்கள். அவரால் நியமிக்கப்பட்டவர்களுக்கும், அவர்க ளுடைய இலாகாக்கள் செய்யும் வேலைக்கும் ஜனுதிபதி தேசத் திற்குப் பொறுப்பாளியாவார். அவர்களுடைய பதவி காலம் ஜனுதிபதியின் இஷ்டத்தைப் பொறுத்தது. தான் விரும்பும் போது அவர்களை அழைப்பார். அவர்களுடைய இலாகாக்களைப் பற்றித் தனித்தனியே ஒவ்வொரு இலாகா தலைவரையும் அழைத்துப் பேசலாம். மந்திரி சபைக் கூட்டங்கள் ரகஸ்யமாக நடக்கும், அவைகளுக்கு பொதுமக்கள் வரமுடியாது.

ஜனுதிபதியின் மந்திரிசபை அமைப்பதற்கு அரசிய லமைப்பில் வியக்தமான ஏற்பாடு இல்லை. "ஒவ்வொரு நிர் வாக இலாகா சம்பந்தப்பட்ட விஷயங்களில் அந்த இலாகா முக்கிய அதிகாரியின் அபிப்பிராயத்தை எழுத்துமூலம் அனுப் பச்சொல்லி ஜனுதிபதி கோரலாம்" என்று அரசியலமைப்பு கூறுகிறது. ஆனுல் அது இலாகாக்களின் பெயர்களையோ இவைகளின் அலுவல்கள் என்னவென்றே குறிப்பிடவில்லை. மந்திரிசபை, அரசாங்க அமைப்பின் ஒரு பகுதியாக இப்பொழுது ஒப்புக்கொள்ளப்படுகிறது. மந்திரிசபையிலிருப்பவர்களின் யோக்கியதாம்சங்களையும் சட்டம் நிர்ணயிக்கவில்லை.

ஒவ்வொரு மந்திரிக்கும் தனது இலாகாவை நிர்வகிப்பதற் கான அதிகாரத்தை ஜனுதிபதி அளித்திருக்கிருர். சமஷ்டி அரசாங்கத்தின் ஒரு உத்தியோகஸ்தர் என்கிற முறையில் அவ

ஸ்தாபனத்தை அமைத்தது. இந்த ஸ்தாபனத்தின் தலைவர்தான் பாதுகாப்பு இலாகா காரியதரிசி. இந்த ஸ்தாபனத்தில் இராணுவ இலாகா, கடற்படை இலாகா, விமான இலாகா இன்னும் தேசீய அமைதிக்குத் தேவையான மற்ற ஸ்தாபனங்களும் அடங்கியிருக்கின்றன.

(2) 1903-ம் வர்த்தக, தொழில் இலாகா சிருஷ்டிக்கப்பட்டது ; இது 1913-ல் இரு தனி இலாகாக்களாகப் பிரிக்கப்பட்டது.

ருடைய கடமைகள் தேசம்பூராவிலும் வியாபித்திருக்கின்றன. அவருக்கு பல உதவியாளர்களும் ஆலோசகர்களும் இருக்கின்றனர். அவருடைய இலாகாவில் பல பகுதிகள், உட் பிரிவுகள், உத்தியோகங்கள், சேவைகள் அடங்கியிருக்கின்றன. இவைகள் மூலம் அவருடைய வேலையின் பல பகுதிகள் நடைபெறுகின்றன. நிர்வாக இலாகாக்களில் இவ்வாறு நூற்றுக்கணக்கான பகுதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு நிர்வாக இலாகாவின் வேலையும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாயிருப்பதால் அவைகளைத் தனித்தனியே விவரிப்பது அவசியமாகிறது.

ராஜாங்க இலாகா

ஜனாதிபதி, உபஜனாதிபதிக்கு அடுத்தபடியான அந்தஸ்துள்ளவர் ராஜாங்க இலாகா காரியதரிசி. அயல்நாட்டு உறவு, கொள்கை சம்பந்தமாக ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறுபவர் இவர்தான்.

ராஜாங்க இலாகாவின் பொது நோக்கங்கள் வருமாறு :

அமெரிக்காவுக்கும் அயல்நாடுகளுக்கும் நேச உறவைப் பாதுகாப்பது.

அயல்நாடுகளுடன் வியாபாரத்தை வளர்ப்பது.

அமெரிக்க பிரஜைகளையும் அவர்களுடைய சொத்துக்களையும் பிறநாடுகளில் பாதுகாப்பது.

இந்த பொதுவான கொள்கைகளை நடைமுறையில் நிறைவேற்றுவதில் அந்த இலாகா அமெரிக்காவின் ஸ்தானிகர்களுக்கும் பிறநாடுகளுக்கும் தொடர்பு கொண்டு வெளிநாடுகளிலுள்ள அமெரிக்க பிரஜைகளையும் அவர்கள் அக்கரைகளையும் பாதுகாத்து வளர்க்க அமெரிக்க தூதர்கள், ஸ்தானிகர்கள், மந்திரிகள் அலுவல்களை மேற்பார்வை பார்க்கிறது.

மற்ற நாடுகளுடன் உடன்படிக்கை ஏற்படுத்துவதிலும், அவைகளை நிறைவேற்றுவதிலும் உதவிபுரிகிறது.

அயல்நாடுகளில் பிரயாணம்செய்ய விரும்பும் அமெரிக்கர்களுக்கு பாஸ்போர்ட்டுகள் வழங்குகின்றது.

அயல்நாட்டு ஸ்தானிகர்கள் அல்லது மந்திரிகளை ஜனாதிபதி வரவேற்பதற்கான ஏற்பாடு செய்கிறது.

ஒரு புது அயல்நாட்டு அரசாங்கத்தை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதை முடிவுசெய்வதில் உதவிபுரிகிறது.

அயல்நாடுகளின் பொருளாதார, அரசியல், சமூக நிலைகள் பற்றி தகவல்கள் சேகரிக்கிறது.

குடியேறுவதற்கோ அல்லது பிரயாணத்திற்கோ அயல் நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு வரவிரும்புபவர்களின் மனுக்களை அந்நாடுகளிலுள்ள நமது தூதர் காரியாலயம் பரிசீலனைசெய்து, அவர்களை நமது குடியேற்ற சட்டங்கள்படி ஏற்றுக்கொள்ளலாமெனக் கருதினால் அவர்களுக்கு பாஸ்போர்ட்டுகளை வழங்குகிறது.

இந்த வேலைகளைத் தவிர ராஜாங்க இலாகா, சமஷ்டி சட்டங்களையும், அமெரிக்காவுக்கும் இதர நாடுகளுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைகள், இன்னும் மற்றும் சில சர்க்கார் தஸ்தாவேஜுகளையும் பிரசுரம் செய்கின்றது.

பொக்கிஷ இலாகா.

பொக்கிஷ இலாகாவின் பொதுவான கொள்கைகளாவன:

அமெரிக்க அரசாங்கத்தின் நிதி சம்பந்தமான விஷயங்களை நிர்வகிப்பது.

அரசாங்கத்தின் வருமானத்திற்கு திட்டமிட்டு அதைப் பெருக்குவது.

அமெரிக்க நாணயத்தின் மதிப்பையும் சமஷ்டி அரசாங்கத்தின் செல்வநிலையையும் பாதுகாப்பது.

இந்த பொதுவான கொள்கைகளை நிறைவேற்றுவதில் செய்யும் பல வேலைகளில் பொக்கிஷ இலாகா அரசாங்கத்திற்காக வரி வசூலிக்கிறது.

அமெரிக்க அரசாங்கத்தின் பாதுகாப்பு, அயல்நாடுகளுக்கு உதவி, உள்நாட்டு அபிவிருத்தி திட்டங்களுக்கு பணம் தேவை ஏற்பட்டு அவசியமேற்படும்போது வட்டிக்கு கடன்நோட்டுகள் பத்திரங்கள் பொதுமக்களிடையேயும் ஸ்தாபனங்களிடையேயும் வழங்கி கடன் வாங்குகிறது.

சட்டப்படி அரசாங்கத்தின் கடன்கள் செலவுகளுக்குப் பணம் கொடுக்கிறது.

அரசாங்கத்தின் நிதி நிலைபற்றி ஜனாதிபதிக்கும் காங்கிரசுக்கும் அறிக்கை சமர்ப்பிக்கிறது.

நாணயம், நோட்டுகள், பாண்டுகள், தபால் பில்லைகள் பதிப்பித்து, அச்சிடுதலை மேற்பார்வை பார்க்கிறது.

கப்பல் தொழிலைப் பாதுகாத்து திருட்டுத்தனமாக சரக்குகள் உள்ளே வராமல் தடுத்து கடலோரப் பாதுகாப்புப் படை மூலம் காவல்காக்கிறது.

அரசாங்கத்திற்காக சொத்துக்கள் சாமான்கள் வாங்குதல் வினியோகித்தலை மேற்பார்வை பார்க்கிறது.

போதை பானங்கள் வஸ்துக்களின் உள்நாட்டு விற்பனை ராஜ்யங்களுக்குள்ளும் அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதி முதலியவைகளை ஒழுங்குபடுத்துகிறது. ரகஸ்ய போலீஸ் இலாகாவை நிர்வகிக்கிறது.

பாதுகாப்பு இலாகா

தேசத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பு வகித்து ஒன்றுபட்டு வேலைசெய்யும் புது இலாகா இது. இதன் கீழ் முன்பு தனித்தனியாக வேலைசெய்த ராணுவம், கடற்படை இலாகாக்களும்,

புதிதாக நிறுவப்பட்ட விமான இலாகாவும் அடங்கியுள்ளன. நாட்டின் பாதுகாப்பின் சம்பந்தமாக எழும் எல்லாப் பிரச்னைகளையும் இந்த இலாகா கவனிக்கும். 253 நெம்பர் பொதுச் சட்டம் அதன் பொறுப்புகளை பொதுப்படையாக விவரிக்கிறது:

" . . . . அமெரிக்காவின் எதிர்காலப் பாதுகாப்புக்கு ஒரு விரிவான திட்டம் வகுக்கவும்; தேசப் பாதுகாப்பு சம்பந்தமான சர்க்கார் இலாகாக்கள், ஏஜென்ஸிகள், வேலைகள் பற்றிய கொள்கைகளையும் நடைமுறைகளையும் முரணபாடின்றி வகுக்கவும்; ராணுவம், கடற்படை (கடற்படை விமானங்கள், அமெரிக்க, ரோந்து கடலோரப்படை) விமானப்படை நடத்துவதற்கும் நிர்வகிப்பதற்கும் மூன்று ராணுவ இலாகாக்களை அமைத்து, அதற்கு சண்டை நிர்வாகப் பகுதிகள் சேர்ப்பது; இவைகளை ஒன்று சேர்க்காமல் சிவிலியன் நிர்வாகத்தில் ஒரேமாதிரி கொண்டு செலுத்தும் நடைமுறையை திட்டம் செய்வது; தரையிலும், கடலிலும், வானவெளியிலும் ஒரே தலைமையில் தந்திரமாகப் போர்புரியும் வழிவகை செய்யவும்."

ராணுவ இலாகா

தேசீய ராணுவ ஸ்தாபனத்தின் ஒரு பகுதியாக ராணுவ இலாகா செய்யவேண்டிய வேலை அமெரிக்காவையும் அதற்குட்பட்ட நாடுகளையும் தனி நடவடிக்கைகளின் பாதுகாக்கத்தக்க திறமைவாய்ந்த தரைப்படையைச் சேர்த்து, பயிற்சியளித்து, அதற்கான ஆயுதங்கள் வழங்கி நிர்வகிப்பது. சமாதான காலத்தில் நாட்டை பாதுகாக்க ஒரு படை தயாராக வைத்திருக்கிறது இந்த இலாகா. யுத்த சமயத்தில் விரிவுபடுத்தப்பட்டு உடனடியாக உபயோகப்படுவதற்காக அமெரிக்க ராணுவத்தின் சிவில் பகுதியும் அதன் உறுப்புகளான ரிசர்வ் ஆபீஸர்கள் பயிற்சிப்பட்டை, தேசீய பாதுகாப்பு படை, ரிசர்வ் படையும் அமைத்து நிர்வகிப்பது; இதன் வேலை ஐந்துவகைப்பட்டது: நிர்வாகம், தொழில்துறை சம்பந்தப்பட்டவை அதற்கனுசரணையான வேறு தந்திரம் ராணுவ தந்திரம் கடைசி இரு பகுதிகளி

லும் பயிற்சி பெறுவதும் அது சம்பந்தமாக திட்டமிடுவதும் சமாதான காலத்தில்தான் சாத்தியம். இவைகளிலேயே அடங்கிய மற்ற பொறுப்புகள் ஆயுதங்கள் மற்ற தளவாடங்கள் யுத்த முறைகள் சீர்திருத்தம்; நியூயார்க் வெஸ்ட்பாயின்டிலுள்ள ராணுவ கல்லூரி, கான்ஸாசிலுள்ள லெவன்வொர்த்தில் நடக்கும் ராணுவ, ராணுவ உத்தியோகஸ்தர்கள் கல்லூரி, புதிதாகச் சேர்க்கப்பட்ட படையினருக்கும் படைத்தலைவர்களுக்கும் பயிற்சியளிக்கும் இதர பள்ளிகளை நடத்துவது; ஜனாதிபதி கட்டளையிடும்போது கைப்பற்றப்பட்ட அல்லது சரணாகதியடைந்த நாடுகளில் படைகளை அமைத்து அவைகளை நிர்வகிப்பது; பாதுகாப்பு இலாகா காரியதரிசியால் வகுக்கப்பட்ட கொள்கைகளை அனுசரித்து கடற்படை விமானப் படைகளின் நடவடிக்கைகளை சீர்படுத்துவது.

ராணுவ இலாகா நதிகள், துறைமுகங்கள் அபிவிருத்தியையும் மேற்பார்கின்றது; அமெரிக்கா, அலாஸ்கா, ஹவாய், போர்ட்டோரிகோ முதலிய இடங்களிலுள்ள மரக்கலப் போக்குவரத்திற்கு லாயக்கான நதிகளின் உபயோகத்தைக் கட்டுப்படுத்துகிறது; வெள்ளக் கட்டுப்பாட்டில் உதவிபுரிதல், வெள்ளகாலத்தில் ஸிவில் அதிகாரிகளுக்கு உதவி செய்தல், உள்நாட்டுக் குழப்பம் போன்ற அபாயகரமான காலங்களில் சிவில் அதிகாரிகளுடன் ஒத்துழைத்தல்; பனமா கால்வாய் நிர்வாகத்தை மேற்பார்ப்பதுடன் கால்வாய் உபயோகத்தை கட்டுப்படுத்தல்.

கடற்படை இலாகா

அமெரிக்காவின் பாதுகாப்பிற்குத் தேவையான யுத்தக் கப்பல்களை வைத்துப் பராமரிப்பது கடற்படை இலாகாவின் முக்கிய வேலை. அதன் தளபதியாகிய ஜனாதிபதி உத்தரவிடும் காலத்தில் கடற்படையை உபயோகிக்க இந்த இலாகா தயாராயிருக்கவேண்டும். அமெரிக்காவின் வர்த்தகத்தையும், அதற்குச் சொந்தமான வெளியிடங்களையும் பாதுகாப்பதற்கு கடற்படையிலாகாவே பொறுப்பாளி.

இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதில் கடற்படை இலாகா—

அமெரிக்காவின் கடற்படையினரைச் சேர்த்து, பயிற்சியளித்து பராமரிக்கிறது, யுத்தக் கப்பல்கள் கட்டி அவைகளுக்கான ஆயுதங்கள் அமைக்கிறது.

அன்னுபோலிஸ், மேரிலாண்டு முதலிய இடங்களில் கடற்படைக் கல்லூரியையும், ரோடு ஐலண்ட் நியூபோர்ட்டிலுள்ள கடற்படை யுத்த கல்லூரி, சேர்க்கப்பட்ட கடற்படை வீரர்கள், படைத் தலைவர்களுக்கும் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடங்களை பராமரிக்கிறது ; கடற்படை அதன் உருப்பினர்களின் திறமையை வளர்ப்பதற்கான கடற்படைப் பயிற்சி, ஆயுதப் பயிற்சி நடத்தும்.

தரையிலோ, கடலிலோ சேவைசெய்யத் தயாராயுள்ள ஒரு கடற்கரை ரோந்துப் படையைப் பராமரிக்கிறது.

கடலில் செல்லும் கப்பல்களுக்குள்ளும், கடற்படை துறைமுக நிலையங்களுக்குள்ளும் ரேடியோ போக்குவரத்து வைத்திருக்கிறது. கடல் விமானப் போக்குவரத்திற்கு உதவியான பூமி அமைப்பு படங்கள், வழிகாட்டும் சித்திரங்கள் வழங்குகிறது ; கடற்படை ஆயுதங்கள் சீர்திருத்தத்திற்கான ஆராய்ச்சி நிலையங்கள் நடத்துகின்றது. கடற்படை கால நிலை அறிவிப்பு நிலையத்தின் மூலம் நாடெங்கும் ஒரே மணி காட்டுவதற்கான உதவி செய்கிறது ; மேலும் கப்பல்கள் விமானங்களின் வழிகாட்டும் யந்திரங்கள் கணக்காக வேலைசெய்வதற்கும் உதவுகிறது.

விமானப்படை இலாகா

வானவெளியில் நீடித்து உடனடியாக போர்புரிவதற்கான விமானப்படை அமைத்து, பயிற்சியளித்து, அதற்கென ஆயுதங்கள் அமைத்துக்கொடுப்பதற்கு விமானப்படை இலாகா பொறுப்பு வகிக்கிறது. குறிப்பாக அமெரிக்காவை விமான மூலமாகப் பிறர் தாக்காமல் பாதுகாக்கிறது. வானவெளியில் நிகரற்ற ஸ்தானம்பெற்று அதைக் காப்பாற்றுவதும், விரோத விமானப்

படைகளை முறியடிப்பதும், கேந்திரமான இடங்களைக் காப்பதும், பொதுவாக விமானத் துறையில் தலைமை ஸ்தானம் வகிப்பதும் இதன் நோக்கங்கள். விமானப் போர் தந்திரத்தை சிறப்பாகக் கையாள்வதும் அதன் பொறுப்பு. படைகளை எடுத்துச்செல்ல விமான வசதியளிப்பதும், தரைப்படையின் தேவைகளை விமான மூலம் பூர்த்திசெய்தல், விமானத்திலிருந்து படம் பிடிப்பது, எதிரிகள் பலத்தை விமான மூலம் வேவுபார்ப்பது, எதிரியின் படைபலத்தையும் போக்குவரத்து வசதிகளையும் தகர்ப்பது போன்ற அனுசரணையான உதவியையும் பலத்தையும் அளிப்பதும் அதனுடைய வேலையாகும். விமானங்களிலிருந்து எடுக்கப்பட்ட படங்களை ராணுவ உபயோகத்திற்கு அளிக்கிறது. உலகெங்கும் காணமற்போன விமானங்களையும் பிறவற்றையும் தேடுவதற்கான கோஷ்டியை வைத்திருக்கிறது.

விமான மூலம் பகைவன் கடற்படை பலத்தைக் குறைப்பது, நீருக்குள் ஓடும் படகுகளின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவது, கப்பல் போக்குவரத்தைக் காப்பது, விமான மூலம் கடற்கண்ணிகளை வைப்பது போன்ற கடற்படைக்கு அனுசரணையான காரியங்களிலும் ஈடுபடுகிறது.

இது விமானப் பயிற்சி சர்வகலாசாலை, விமான நுணுக்கக் கல்விசாலை, விமான நிலைய வைத்தியக் கலாசாலை, மற்றும் விமானப்படையில் சேருபவர்கள், படைத் தலைவர்கள் முதலியோருக்குப் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடங்கள் முதலியவற்றை நடத்துகின்றது.

நீதிபரிபாலன இலாகா

சட்டமந்திரி (அட்டார்னி ஜெனரல்) தான் நீதி இலாகாவின் தலைவர். இதன்மூலம் அவர் தேசிய அரசாங்கத்தின் பிரதம சட்ட அதிகாரியாயிருக்கிறார். சட்ட சம்பந்தமான விஷயங்களில் அவர் அமெரிக்காவின் பிரதிநிதி. ஜனதிபதியோ, நிர்வாக இலாகாக்களின் தலைவர்களோ கேட்கும்போது அவர் யோசனை கூறுவார். புது சட்டங்கள் தயாரிப்பதிலும் அதுவும் புதிய

சிக்கலான பிரச்னைகள் தோன்றும்போதும் அடிக்கடி அவரு டைய இலாகாக்கள் சேவை பயன்படுத்தப்படுகிறது.

சொலிஸிடர் ஜெனரல் அடார்னி ஜெனரலுக்கு உதவி செய்கிறார், அவருடைய யோசனைப்படி நடப்பார். அமெரிக்க அரசாங்கத்தின் சார்பாக அவர் பிரதம நீதி ஸ்தலத்தில் ஆஜ ராவார். அரசாங்கம் சம்பந்தப்பட்ட தாவாவின்பேரில் செய்யப் படும் அப்பீல் அவருடைய மேற்பார்வையில்தான் நடைபெறும். அரசாங்கத்தின் சார்பாக மாவட்ட அப்பீல் கோர்ட்டிலோ அல்லது அமெரிக்க உயர்தர நீதிமன்றத்திலோ செய்யப்படும் அப்பீல்கள் அவருடைய அனுமதி பெற்றிருக்கவேண்டும்.

சமஷ்டி புலன்விசாரணை ஸ்தாபனம் இந்த இலாகாவின் ஒரு கிளையாகும். சமஷ்டி சட்டங்களுக்கு எதிராகப் புரியப்படும் குற்றங்களில் புலன் விசாரிப்பதும் எதிரிகளைக் கண்டுபிடித்துக் கைதுசெய்வதும் இந்த ஸ்தாபனத்தின் வேலையாகும்.

நீதி இலாகாவின் முக்கிய நோக்கங்கள்

சமஷ்டி சட்டங்கள் ஒழுங்காக நிர்வகிக்கப்படுவதற்கு உதவு வது.

அமெரிக்காவுக்கு சட்டப்படியுள்ள உரிமைகளைப் பாது காப்பது.

நாட்டிலுள்ள சட்டத்தை அமுல்நடத்தும் ஸ்தாபனங்களு டன் ஒத்துழைப்பது.

இந்த வேலைகளைச் செய்வதில் இந்த இலாகா——உயர்தர நீதி மன்றத்திலும் மற்ற சமஷ்டி நீதிமன்றங்களிலும் அரசாங்கத் தின் சார்பாக தாவாக்கள் நடத்துகிறது.

அமெரிக்க ஜில்லா அடார்னிகள், மார்ஷல்கள் செய்யும் காரியங்களுக்கு வழிசொல்லி மேற்பார்வை பார்க்கிறது.

சமஷ்டி சட்டங்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களில் புலன் விசாரித்து குற்றவாளிகள்மீது வழக்கு நடத்துகிறது.

தாற்காலிக விடுதலைக்கான மனுக்கள், குற்றவாளிகள் மன்னிப்பு மனுக்கள், முதலியவைகளைப் பற்றி விசாரித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கும்.

நீதிஸ்தல நடைமுறைகளுக்கான விதிகள் தயாரிப்பதில் உதவுகிறது.

ஜனாதிபதியோ, நிர்வாக இலாகா தலைவர்களோ கோரும் பொழுது சட்ட சம்பந்தமான விஷயங்களில் அபிப்பிராயம் கூறுகிறது.

அமெரிக்க சட்டங்களும், அரசியலமைப்பும் உத்தரவாதம் செய்த தனி நபர்களின் ஸிவில் உரிமைகளை அவர்கள் அனுபவிப்பதில் பாதுகாப்பளிக்க உறுதி கூறுகிறது.

அமெரிக்காவின் குடியேற்ற, தேசீய பிரஜா உரிமை சம்பந்தமான சட்டங்களை அமுல்நடத்துகிறது.

தபால் ஆபீஸ் இலாகா

தபால் வசதி மூலம் அதிகம் செலவில்லாத் திறமான பொதுப் போக்குவரத்து வசதியை நிலைநாட்டிப் பராமரிப்பதே இந்த இலாகாவின் பிரதான நோக்கம். போஸ்ட்மாஸ்டர் ஜெனரல்தான் இதன் தலைவர். அவருக்கு உதவிசெய்பவர்கள் ஏராளமாக உண்டு. இந்த இலாகா—

அமெரிக்கா பூராவிலும் தபால்களை சேகரித்து வினியோகிக்கிறது.

ரயில், நீராவிக் கப்பல்கள், விமானங்கள் இன்னும் மற்ற போக்குவரத்துகள் மூலம் தபால்கள் ஏற்றிச் செல்வதை மேற்பார்வை பார்க்கிறது.

நாடு பூராவிலும் தபாலாபீஸ்களை நடத்துகிறது. எல்லா தபால் ஸ்தாபனங்களையும் அவைகளின் நடைமுறையையும் ஜடுதிசெய்து நாடெங்கும் மேற்பார்வை பார்க்கிறது.

தபால் சேமிப்பு, ரிஜிஸ்டர் தபால், தபால் பார்ஸல், மணியார்டர்கள் முதலிய சாதனங்களை ஜனங்களுக்கு வழங்குகிறது.

ஜனாதிபதியின் அனுமதியின்பேரில் அந்நிய அரசாங்கங்களுடன் தபால் உடன்படிக்கைகள் செய்துகொள்கின்றது.

உள்நாட்டிலாகா

உள்நாட்டிலாகாவின் பிரதான நோக்கம் உள்நாட்டு நலனை வளர்ப்பதும், நாட்டில் தேசீய சக்திகளைப் பெருக்குவதுமாகும். இந்த சக்தியின் ஒரு பகுதி இயற்கை வளம், மற்றொன்று மனிதனின் திறமை.

தனது கடமைகளை நிறைவேற்றுவதில் இந்த இலாகா—

அமெரிக்காவின் மேய்ச்சல் தரை உள்ளிட்ட சமுதாய நிலங்களை மேற்பார்க்கிறது. அமெரிக்காவின் இயற்கை வளங்களையும் எண்ணெய், நிலக்கரி, இயற்கை வாயு, நீர்வீழ்ச்சி மூலம் மின்சார சக்தி, உலோகங்கள் முதலியவைகளிலிருந்து உற்பத்தியாகும் பொருள்களைப் பற்றி ஆராய்ந்து அறிகிறது.

நீர்ப்பாசன நிலங்கள், பாசனத்திற்கான நீர்ஊற்று ஸ்தானங்களை மேற்பார்த்து நிலச்செய்னேத்தி, சட்டங்கள் மூலம் நீர்ப்பாசன திட்டங்களுக்கு அனுமதிக்கப்பட்ட பணத்தை செலவு செய்வது பற்றி திட்டமிடுகிறது.

சுரங்கங்களில் ஏற்படும் விபத்துகளின் காரணங்களை அறிந்து, அம்மாதிரி விபத்துகள் நேராமல் தடுப்பதற்கான முறைகளை ஆராய்கிறது.

உல்லாஸப் பொழுதுபோக்குக்கோ வர்த்தக ரீதியிலோ வேட்டையாடுதல் அல்லது மீன்பிடித்தல் சம்பந்தமான சமஷ்டி

சட்டங்களை அமுல் நடத்துகிறது. இதன்மூலம் தேசத்தின் மீன், காட்டு மிருகங்கள், பட்சிகளைப் பராமரிக்கிறது.

அமெரிக்காவின் தேசீய நந்தவனங்களை மேற்பார்த்து, அவைகளின் வனப்பை வளர்த்து, அவைகளை அமெரிக்க மக்கள் விளையாட்டு ஸ்தலங்களாக உபயோகிக்க உதவுகிறது.

புயூர்ட்டோரிகோ, வர்ஜ்ஜீனிய தீவுகளின் நிர்வாகத்திற்கு பொறுப்பு வகிக்கிறது ; ஹவாய், அலாஸ்கா பிராந்தியங்களையும் அலாஸ்காவிலுள்ள அரசாங்க ரயில்பாதை நிர்வாக சம்பந்தமாகவும் சில அதிகாரங்களை உபயோகிக்கிறது.

விவசாய இலாகா

இந்த இலாகா தேசத்தின் உணவுப்பொருள் உற்பத்தி, நிலக்கண்டுமுதல் சம்பந்தமான பொறுப்புகளை வகிக்கிறது. குடியானவனின் நலனையும் பாதுகாக்கிறது. ஒரு தானியத்தின் தேவைக்கேற்ப அதன் உற்பத்தியைப் பெருக்குவது சம்பந்தமாக காங்கிரஸ் நிறைவேற்றும் சட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பு இந்த இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் விலைபோகாத பொருள்களின் உற்பத்திக் குவியலைத் தடுத்து, தேவைக்குக் குறைவான உற்பத்தியினால் விலையேறி சாமான்களை உபயோகிக்கும் மக்கள் திண்டாடாமல் இந்த இலாகா பாதுகாக்க முடிகிறது. தனது கடமையை நிறைவேற்றுவதில் விவசாய இலாகா—

நிலவளங்களைப் பெருக்கும் முறைகளையும், பலவகை தானியங்களை மாற்றி மாற்றிப் பயிர்செய்வதையும் தூண்டி ஆதரிக்கிறது. இதன்மூலம் நாட்டின் நிலங்களின் வளம் பெருகுகிறது.

திடமான கால்நடைகள் உற்பத்தியைப் பெருக்கி அதன் மூலம் நாட்டுமக்களுக்குத் தேவையான மாமிச உணவும், பால் பதார்த்தங்களும் கிடைக்க உதவிபுரிகிறது.

குடியானவன் வடிகால் கட்டவும், குடியிருப்பு வீடுகட்டவும், உழவுசாதனங்கள் பெறவும், குடிநீர் அடையவும் யோசனை கூறுகிறது.

உணவுப்பொருள் சப்ளை, வினியோகம், விலை முதலியவைகளைப் பற்றிய தகவல்கள் பிரசுரித்து, குடியானவன், தான் உற்பத்திசெய்யும் பொருள்களை புத்திசாலித்தனமாக விற்பனை செய்ய உதவிபுரிகிறது.

கால்நடைகள் நோய், செடிகள் நோய், பயிரழிக்கும் பூச்சிகள் இவைகளைப் போராடி ஒழிக்க உதவுகிறது.

தேசத்தின் காடுகளைப் பராமரித்து நாட்டினருக்கு தேக்கு சப்ளை ஒழுங்காகக் கிடைக்க உதவிசெய்கிறது.

விவசாயத்திற்கு சீரான கடன் வசதி கிடைக்க ஏற்பாடு செய்கிறதுடன் குடியானவர் விற்பனை, கொள்முதல், வர்த்தக கூட்டுறவு சங்கங்களுக்கு போதிய கடன் வசதியளிக்கிறது.

கிராம மின்சார சப்ளை நிலையங்கள் நிறுவ கடன் உதவி செய்கிறது.

வர்த்தக இலாகா

நாட்டின் அயல்தேச, உள்நாட்டு வர்த்தகத்தை வளர்ப்பதும், சுரங்க, உற்பத்தி, கப்பல், மீன்பிடிக்கும் தொழில்களையும் அமெரிக்காவில் போக்குவரத்து வசதிகளை விருத்தி செய்வதும் இந்த இலாகாவின் கடமைகள். இந்த இலாகாவின் பல பகுதிகளும் ஏஜென்ஸிகளும் பலதரப்பட்ட சேவைகள் செய்கின்றன.

உள்நாட்டு அயல்நாட்டு வர்த்தக ஸ்தாபனம் சரக்குகளின் உற்பத்தி, வினியோக முறைகளை ஆராய்ந்து உள்நாட்டிலும் வெளிநாடுகளுக்கும் வர்த்தகம் விருத்தியடைய தூண்டுதலளிக்கிறது. அன்றாட வியாபார விவரங்களை வியாபாரிகள் அறிவதற்காக இந்த ஸ்தாபனம் அமெரிக்காவின் முக்கியமான இடங்

களில் கிளேகளை வைத்திருக்கின்றது. இந்தப் பகுதி அரசாங்கத்தில் வியாபாரிகளின் பிரதிநிதியாயிருக்கிறது.

கரையோரம், பூசத்து ஆராய்ச்சிப் பகுதி, அமெரிக்க கடற்கரை, அலேமோதும் நதிகள், முதலியவைகளைச் சுற்றிப்பார்த்து புள்ளிவிவரங்கள் தயாரித்து கப்பல் வசதியைப் பாதுகாப்பதற்கான யோசனை கூறும் அறிக்கைகளை வெளியிடுகிறது.

ஜனத்தொகைப் பகுதி 10 வருஷத்திற் கொருதரம் நாட்டின் ஜனத்தொகைகளைக் கொடுக்கிறது. மற்ற புள்ளிவிவரங்கள் தயார் செய்வதில் அது தொடர்ந்து ஈடுபடுகிறது. உற்பத்தி போன்ற உபயோககரமான துறைகளில் புள்ளி விவரங்கள் தயாரித்து வியாபாரிகளுக்கு உதவிபுரிகிறது.

பேடன்ட் காரியாலயம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உரிமைசீட்டு அளித்து, வியாபாரக் குறிகள், தலைப்புகள் சம்பந்தமான புத்தகத்தில் பதிவுசெய்கிறது.

தேசீய எடைப் பகுதி வியாபாரப் பொருள்களை ஒழுங்காக விற்பதற்கான எடைகள் படிக்கற்கள் தயாரித்தளித்து சரக்கு வாங்குபவர்கள் மோசடிக்காளாகாமல் பாதுகாக்கிறது. சரக்குகளைச் சோதித்து அவைகளைப் பற்றிய விளம்பரத்திற்குத் தக்கபடி இருக்கின்றனவா என்று பார்க்கிறது.

உள்நாட்டு கால்வாய் ஸ்தாபனம் அமெரிக்காவின் கால்வாய் போக்குவரத்து வசதிகளைப் பெருக்கி அபிவிருத்தி செய்கிறது. மிஸிஸிபி நதியில் அரசாங்கத்திற்குச் சொந்தமான படகுகளை ஓடச் செய்கிறது.

சீதோஷ்ண நிலே ஸ்தாபனம் நாடெங்கும் கிளேகளை ஸ்தாபித்து சீதோஷ்ண நிலே, புயல் அபாயம், குளிர்காற்று, பனி பெய்தல், காட்டுத் தீ, வெள்ளம் பற்றி எச்சரிக்கை சம்பந்தமான முன் அறிவிப்புகள் செய்கின்றது. இந்த தினசரி முன் அறிவிப்புகள் வியாபாரம், தொழில், பொதுமக்கள் எல்லாவற்றிற்கும் மிகுந்த உபயோகமாயிருக்கின்றன.

தொழில் இலாகா

தொழில் இலாகாவின் நோக்கம் "கூலி பெற்றுவாழும் அமெரிக்க மக்களின் நலனைப் பேணி வளர்த்து அவர்கள் வாழ்க்கை, வேறு வசதிகளைப் பெருக்கி, அவர்கள் லாபகரமான தொழிலில் ஈடுபட" உதவுவதாகும். அப்படிச் செய்வதில் இந்த இலாகா—

தொழில் சம்பந்தமாகவும் குறிப்பாக தொழிலாளர் முதலாளி உறவு, கூலி, வேலை செய்யும் நேரம், அவர்கள் நலனைப் பெருக்கும் வழி சம்பந்தமாகவும் தகவல்கள் சேகரிக்கிறது.

முதலாளி—தொழிலாளி தகராறுகளை சமாதானமாகத் தீர்த்துவைக்கிறது.

தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஸ்திரீகள் நலனைப்பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கிறது.

பெண் தொழிலாளிகளின் ஆரோக்கியம், பத்திரம் முதலியவைகளைப் பாதுகாத்து பொதுவாக தொழிலாளர் வேலை வசதிகளைச் சீர்திருத்துகிறது.

அரசாங்க சரக்குகள் தயாராகும் இடங்களில் தொழிலாளர் வேலை காலம், கூலி, வேறு வசதி முதலியவைகளை திட்டம் செய்கிறது.

நீண்டகால உழைப்பு, குறைந்த கூலி இவைகளைத் தடுக்கும் சட்டங்களை அமுல் நடத்துகிறது.

*　　　*　　　*

(10)

தனிப்பட்ட ஏஜன்ஸிகள்

நிர்வாக இலாகாக்கள் தவிர, சமஷ்டி சட்டங்களை நிர்வகிக்க பல சர்க்கார் பகுதிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் நிர்வாக இலாகாக்களைச் சேர்ந்தவை யல்லாததனாலும் இவை களுக்கு தனிப்பட்ட ஏஜன்ஸிகள் என்று பெயர். நிர்வாக இலாகாவின் பொறுப்பில் நடக்கும் வேலைக்கும், சட்டப்படி இந்த தனி ஸ்தாபனங்கள் செய்யவேண்டிய வேலைக்கும் மிகுந்த வித்தியாசம் இருப்பதால் இவைகள் சுதந்திரமுள்ள தனி ஸ்தாபனங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை களில் சில நீதிஸ்தலங்கள் மாதிரி இருக்கின்றன. ஏனெனில் சில பிரத்தியேக சட்டங்களை விளக்கி அவைகளை நிர்வகிப்பதும், அல்லது விசேஷ நிகழ்ச்சிகளைப்பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதும் இவைகளின் வேலை; இவைகளில் சில எல்லா நிர்வாக இலாகாக்களுக்கும் பிரத்தியேகமான உதவி செய் கின்றன. இந்த ஏஜன்ஸிகள் பல்வேறுவிதமான சேவைகள் புரிகின்றன. கீழ்க்காண்பவைகளை உதாரணங்களாகக் கூறலாம்.

ஸிவில் சர்வீஸ் கமிஷன்:

65 வருஷங்களுக்கு முன், சர்க்கார் உத்தியோகங்களை அர சியல் கட்சியிலிருந்து விடுவித்து தகுதியின்பேரில் நியமனம் செய்யும் முறையை வகுப்பதற்காக அமைக்கப்பட்டது. 1,700 வகையான பதவிகளுக்கு தகுந்த உத்தியோகஸ்தர்களை பொறுக்கி எடுக்க இந்த கமிஷன் பரீட்சைகள் நடத்துகின்றது. அமெரிக் காவின் நூற்றுக்கணக்கான, சௌகரியமான இடங்களில் இந்தப் பரீட்சைகள் நடக்கின்றன. நாளுக்கு நாள் “ஸிவில் சர்விஸ்” பூர்த்திசெய்யும் உத்தியோகங்கள் அதிகரித்துவருகின்றன; அதாவது அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுமுன் தங்கள் தகுதியை நிரூபிக்கவேண்டும். ஸிவில் சர்வீஸ் அந்தஸ்து

ஏற்பட்டால் உத்தியோகம் நிலைத்தது என்கிற உறுதியும், காலக்கிரமத்தில் சம்பள உயர்வு கிடைக்கும் என்கிற நம்பிக்கையும் ஏற்படுவதால் அரசாங்க உத்தியோகம் பெறுவது ஒரு சிறந்த வாழ்க்கை சாதனம் என்று திறமைசாலிகள் எதிர்பார்க்க இடமளிக்கிறது.

பொது கணக்கு காரியாலயம் :

(ஜெனரல் அகௌண்டிங் ஆபீஸ்).

இதன் தலைவர் அமெரிக்காவின் பிரதம கணக்கதிகாரி. நிர்வாக இலாகாக்களின் தலையீடின்றி அமெரிக்க அரசாங்கம் கொடுக்கவேண்டிய அல்லது அதற்கு வரவேண்டிய தொகைகளையும், சர்க்கார் சம்பந்தமான பணக் கணக்குகளையும் இந்த ஸ்தாபனம் வசூலித்து தீர்த்துவைக்கிறது. பொதுப்பணம் சட்டப்படி செலவு செய்யப்படுகிறதா என்று பார்க்க இந்த ஸ்தாபனம் சர்க்காரின் வரவுசெலவுப் பேரேடுகளை சரிபார்க்கிறது.

ராஜ்யங்களின் பரஸ்பர வியாபார கமிஷன் :

ரயில்பாதை, கப்பல், பஸ்கள், லாரிகள், எண்ணெய் போகும் குழாய்கள் மூலம் ராஜ்யங்களுக்குள் நடக்கும் வியாபாரம், கட்டண விகிதங்கள் முதலியவற்றை ஒழுங்குபடுத்துகிறது. மேற்கூறப்பட்ட போக்குவரத்து ஸ்தாபனங்கள் தங்களிடமுள்ள சாமான்கள், கடன் பத்திரங்கள் மூலம் பணம்பெறுவதைக் கட்டுப்படுத்துவதுடன் ரயில்பாதை, மோட்டார் வசதிகளுக்கு விபத்துகள் ஏற்படாமல் பாதுகாக்கிறது.

சமஷ்டி வியாபார கமிஷன் :

வியாபார ஊழல்கள், தகாத முறைகளில் வர்த்தகத்தைப் பெருக்குவது முதலியவைகளைப் பற்றி விசாரித்து தடுக்கிறது; இது விசாரணை நடத்துகிறது, புகார்கள் செய்கிறது, பிரஜைகள் வியாபார ஊழல்களைப்பற்றி புகார் செய்தால் விசாரித்து முடிவு கூறுகிறது.

வீரர்கள் நிர்வாக நிலையம் :

அங்கஹீனர்களான வீரர்களுக்கு ஆஸ்பத்திரிகள் கட்டி நிர்வகிக்கிறதுடன், யுத்த வீரர்களுக்கும், அவர்களின் விதவைகள், குடும்பத்தினருக்கும் பலவகைகளில் நிவாரணமளித்து உதவி புரிகிறது. பென்ஷன்கள், கல்வி உதவிகள், யுத்த அபாய இன்ஷுரன்ஸ், தேசிய சேவை இன்ஷுரன்ஸ், நஷ்டஈடு சரி செய்தல் இன்னும் அமெரிக்க வீரர்களுக்கான பண உதவிகள் யாவற்றையும் இந்த ஸ்தாபனம் நிர்வகிக்கிறது.

பத்திரங்கள், நாணய மாற்று கமிஷன் (செக்யூரிடீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் கமிஷன்) :

பண முதலீடு செய்பவர்கள் பாண்டுபத்திரங்கள் வாங்குவதற்கான பாதுகாப்பளிப்பதற்காக ஏற்பட்டது. இது நிர்வகிக்கும் சட்டப்படி தங்களிடமுள்ள பங்குகள் பாண்டுகளை வழங்கி பணம் சேகரிக்க விரும்பும் கம்பெனிகள், தங்கள் ஸ்தாபனத்தின் உண்மையான நிலவரங்களை இந்த கமிஷன்முன் தாக்கல் செய்யவேண்டும். பங்குகள் விற்பனையில் மோசடி ஏற்படாமல் தடுத்து தண்டிக்க இதற்கு அதிகாரமுண்டு. பங்கு விற்பனையை ஒழுங்குபடுத்தவும், பங்கு விற்பவர் வாங்குபவர் மோசடி செய்யாமல் தடுக்கவும் கமிஷனுக்கு அதிகாரமுண்டு.

அமெரிக்க கடல் வியாபார கமிஷன் :

அமெரிக்காவுக்கு பலம்வாய்ந்த வர்த்தகக் கப்பல்கள் சேர்த்து பராமரிப்பதற்கும், கப்பல் மூலம் நடக்கும் வர்த்தகத்தை எல்லா வகைகளிலும் வளர்ப்பதற்கும் இந்த கமிஷன் பொறுப்பு வகிக்கிறது. யுத்த சமயத்தில் கடற்படைக்கு உதவியாக வர்த்தகக் கப்பல்கள் சேவை செய்வதற்கான வழிசெய்வதும் இதன் பொறுப்பு.

சமஷ்டி ஸ்திரத்தன்மை ஸ்தாபனம் :

பொதுநலனில் ஈடுபட்டுள்ள பல பகுதிகளை இந்த ஸ்தாபனம் மேற்பார்க்கிறது. பொதுவாக இந்த ஸ்தாபனத்தின்

நோக்கம் சமூக பொருளாதார ஸ்திரத்தன்மை, கல்வி வசதி பெறும் சந்தர்ப்பம், தேசமக்களின் ஆரோக்கியம் முதலிய வற்றைப் பாதுகாத்து வளர்ப்பது.

உதாரணமாக, அமெரிக்க கல்வி ஸ்தாபனம் அமெரிக்கா வின் வெளிநாடுகளிலும் ஏற்படும் கல்வி சம்பந்தமான பிரச்னை களை ஆராய்ந்து அறிகிறது. ஸ்தல ராஜாங்க கல்வி அதிகாரி களுக்கு கல்வித் துறையில் ஏற்படும் அபிவிருத்திகள், பள்ளி நிர்வாகம் கல்வி பரப்புதல் பணிகளை சிறப்பாக நடத்தும் மார்க்கம் முதலியவைகள் பற்றி இந்த ஸ்தாபனம் முக்கியமான அறிக்கைகளைத் தயாரித்து வினியோகிக்கிறது. பள்ளி முறை களைச் சீர்திருத்துவதில் ஒத்துழைக்கும் ராஜ்ய அரசாங்கங் களுக்கு சமஷ்டி அரசாங்கம் பண உதவி செய்ய இந்த ஸ்தாபனம் உதவுகிறது.

அமெரிக்க பொது ஆரோக்கிய ஸ்தாபனம் :

அநேக ஆஸ்பத்திரிகளை நடத்துகின்றது. அநேக ஆரோக் கிய சம்பந்தமான சட்டங்களையும், தொத்துநோய் பரவாமல் தடுப்பதற்கான விதிகளையும் நிர்வகிப்பது, விஷ மருந்துகள், அம்மைகுத்தும் மருந்துகள் விற்பனையை ஒழுங்குபடுத்துகிறது. அமெரிக்காவிற்கு வரவிரும்பும் அன்னியர்கள் ஆரோக்கியத் தைப் பரிசோதிக்கிறது ; நோய்கள், தொத்துவியாதிகள் முத லியவற்றின் காரணங்களை ஆராய்ந்து அவைகளை நிவர்த்திக்கும் வழிகளைத் தேடுகிறது ; மிக மதிக்கத்தக்க அறிக்கைகளையும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிடுகிறது. மற்றும் தேச மக்களின் நல்லொழுக்கத்தை காத்து வளர்க்கப் பாடுபடுகிறது.

சமூகப் பாதுகாப்பு நிர்வாகம் :

வியாபார, தொழில் துறைகளில் வேலை செய்பவர்களுக்கு முதியோர் பண உதவி ஏற்பாடு செய்கிறது. கூலிபெற்று உழைப்பவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்ட நஷ்டஈடு நல்கு தல், உதவி தேவையான முதியோருக்குப் பொது உதவி, அந்தகர்க்கு உதவி, அநாதைகளுக்கு உதவி முதலியவை

செய்ய ராஜ்யங்களுக்கு உதவி செய்கின்றது. சமூகப் பாது காப்பு திட்டத்தின் கீழ் வேலையிலிருந்து விலகுபவர்களுக்கு அவர்கள் விலகிய பிறகு மாதாந்திரம் பண உதவி அவர் களுக்கோ, அல்லது அவர்களுடைய விதவைகளுக்கோ, அவர் களை அண்டிவாழும் குழந்தைகளுக்கோ, அல்லது பெற்றோர்க ளுக்கோ வழங்குகிறது. வாராந்தரம் வேலையில்லாத் திண்டாட்ட நஷ்டஈடு கொடுக்கும் ராஜ்யங்களுக்கு அதில் ஒரு பகுதியைக் கொடுக்கிறது.

உணவு, மருந்து நிர்வாகம் :

பலவிதமான உணவுகளையும் மருந்துகளையும் பரிசோதித்து அபாயகரமான அல்லது அசுத்தமான உணவுகள் மக்கள் உட்கொள்ளாமல் பாதுகாக்கிறது.

இந்த ஏஜன்ஸிகள் தவிர தேசமக்களுக்கு அத்தியாவசிய மான முக்கியத்துவம் வாய்ந்த சேவைகள் செய்யும் பல ஸ்தா பனங்கள் இருக்கின்றன.

* * *

(11)

சமஷ்டி நீதி இலாகா

சமஷ்டி அரசாங்கத்தின் மூன்றுவது பகுதியான நீதி இலாகாவின்கீழ் பல சமஷ்டி நீதி ஸ்தலங்கள் இருக்கின்றன. இந்த பகுதியின் நோக்கம் சமஷ்டி சட்டங்களுக்கு வியாக்யானம் கூறுவது, ஒரு ராஜீய பிரஜைகளுக்கும், மற்றொரு ராஜ்யப் பிரஜைகளுக்குள்ளும் எற்படும் வழக்குகளைத் தீர்த்து வைப்பதும், சிலவிதமான சட்ட மீறுதல்களுக்கு தண்டனை விதிப்பதுமாகும்.

ஒரு சட்டம் தயார்செய்கையில் அதனுடைய பொதுப்படையான நோக்கம் என்ன என்பதை காங்கிரஸ் வியக்தமாகக் கூறியிருக்கலாம். ஆனால் அந்த சட்டம் ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பொருந்துமானதா என்ற முடிவு செய்வது அவ்வளவு தெளிவாக இல்லை. ஆகையினால் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருகையில் அதற்கு வியாக்யானம் கூற வேண்டியிருக்கிறது. வழக்கமாக இந்த வியாக்யானம், ஒரு பரீட்சார்த்த வாயிலாக சமஷ்டி நீதிமன்றம் ஒன்றில் தொடரப்படும் வழக்கின்மூலம்தான் எழுகிறது. இம்மாதிரி வழக்குகளில் நீதிபதி அளிக்கும் தீர்ப்பு அந்த வழக்கு சம்பந்தமான தீர்ப்பு மட்டுமல்ல. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் நீதி இலாகா தனது கடமைகளில் ஒன்றுன சட்டத்திற்கு விளக்கம் கூறும் சமஷ்டி நீதிஸ்தலத்தின் பொறுப்பு பிறநாடுகளுடன் செய்துள்ள உடன்படிக்கைகள் ஒப்பந்தங்கள் மட்டுமின்றி அரசியலமைப்புக்கே விளக்கும் கூறும் வரை நீடிக்கிறது. சமஷ்டி நீதிஸ்தலங்களுக்கு வேறு கடமைகளும் இருக்கின்றன.

அமெரிக்காவில் யாராவது ஒருவன் சமஷ்டி சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டால் அவன் குற்றவாளியா அல்லவா

என்று முடிவு செய்வதற்காக சமஷ்டி நீதிஸ்தலங்கள் ஒன்றின் முன் கொண்டுவரப்படுகிறான். இம்மாதிரி வழக்குகளின் தீர்ப்புக்கூற நீதிபதி வழக்கு சம்பந்தமான உண்மைகளைத் தெரிந்துகொள்வதோடல்லாமல் இந்த நிரூபிக்கப்பட்ட உண்மைகளுக்கு சட்டம் எவ்வாறு பொருந்துகிறது என்றும் தெரிந்து கொள்ளவேண்டும். "எல்லாருக்கும் சமநீதி" என்கிற தத்துவத்திற்கு ஒத்ததுதான் இந்த கொள்கை.

ராஜ்யங்களுக்குள் ஏற்படும் தகராறுகளைதீர்ப்பதற்கு சமஷ்டி கோர்ட்டுகள் உதவியாயிருக்கின்றன. ஒரு ராஜ்யத்தின் பிரஜைக்கு மற்றொரு ராஜ்யத்தின் பிரஜையின்பேரில் சட்டபூர்வமான தாவா இருந்தால் அதை ஒரு சமஷ்டி நீதிஸ்தலத்தில் தீர்த்துக்கொள்ளலாம்.

சமஷ்டி அரசாங்கத்தின் சட்டமியற்றும், நிர்வாக பகுதிகளுக்கு அரசியலமைப்பு பல கஷ்டமான கடமைகளை நிறைவேற்றும்படி பணித்திருக்கிறது. சமஷ்டி அரசியல் மூலம் ஜனங்கள் அளித்துள்ள அதிகாரங்களில் சட்டமியற்றும் பகுதி, நிர்வாகப் பகுதி இரண்டில் எது அதிகப்படியான அதிகாரங்களை கையாள முயற்சித்திருக்கிறது என்பதில் தீர்ப்புக் கூறுவதன்மூலம் இவ்விரு பகுதிகளில் எதன் கையும் மேலோங்காமல் நீதி இலாகா தடைசெய்கிறது. அரசியலமைப்பு சில அதிகாரிகளை சமஷ்டி அரசாங்கத்திற்களித்து பாக்கியுள்ளவைகளை ராஜ்யங்களுக்கு ஒதுக்கியிருக்கிறது. இந்த பாகுபாட்டை எந்தப் பகுதி மீறுகிறது என்பதை முடிவு செய்யவும் நீதி இலாகாவின் உதவி அவசியமாகிறது.

அரசியலமைப்பினால் அமைக்கப்பட்ட சமஷ்டி நீதிஸ்தலம் உயர்தர நீதிமன்றம் ஒன்றுதான். அரசியலமைப்பைத் திருத்தாமல் இந்த நீதிமன்றத்தைக் கலைக்கமுடியாது. தேசத்தின் மிக உயர்ந்த நீதிஸ்தலம் இதுதான். அதன் தீர்ப்புகள் இறுதியானவை. அதன் தீர்ப்பிலிருந்து அப்பீல் செய்வதற்கு

வேறு நீதிமன்றம் கிடையாது. உயர்தர நீதிமன்றத்தை சிருஷ்டித்தது காங்கிரஸல்லாவிட்டாலும் அந்த நீதிஸ்தலத்தின் அமைப்பு, நடைமுறை பற்றி சட்டமியற்ற அதற்கு அதிகாரமிருக்கிறது. காங்கிரஸ் இந்த நீதிமன்றத்திற்கு எவ்வளவு நீதிபதிகள், அவர்கள் சம்பளம் என்ன என்பவை பற்றி அவ்வப்போது சட்டம் செய்யலாம். உயர்தர நீதிமன்றத்தில் காலி ஏற்படுகையில் அவைகளைப் பூர்த்திசெய்ய ஜனாதிபதி நியமனம் செய்தால் அதற்கு செனட் சபையின் அங்கீகாரம் வேண்டும். ஒரு வரம்புக்குட்பட்டு, உயர்தர நீதிமன்றம் எந்தெந்த வழக்குகளை விசாரிக்கலாம் என்பதை காங்கிரஸ் திட்டம் செய்யலாம். ஆனால் அரசியலமைப்பு உயர்தர நீதிமன்றத்திற்கு அளித்திருக்கும் அதிகாரங்களை காங்கிரஸ் மாற்றமுடியாது.

உயர்தர நீதிமன்றம்.

சமஷ்டி கீழ்க் கோர்ட்டுகள்.

மற்ற சமஷ்டி கோர்ட்டுகள் ஆதிக்கம் செலுத்த அரசியலமைப்பு காங்கிரசுக்கு அதிகாரமளித்திருக்கிறது. எப்பொழுது அதிகப்படி சமஷ்டி கோர்ட்டுகள் அமைக்கலாம், அதிகப்படி நீதிபதிகள் நியமிக்கலாம், ஒவ்வொரு வகை சமஷ்டி கோர்ட்டும் எந்தெந்த வழக்குகளை விசாரிக்கலாம் என்பதை காங்கிரஸ் முடிவு செய்யலாம். உயர்தர நீதிமன்றம் தவிர மற்ற சமஷ்டி கோர்ட்டுகளில் எதையும் காங்கிரஸ் மாற்றவோ கலைக்கவோ செய்யலாம்.

காங்கிரஸ் இரு விஷயமான சமஷ்டிக் கோர்ட்டுகளை அமைத்திருக்கிறது. அவைகளுடைய வேலை ஒவ்வொரு கோர்ட்டிலும் அதிகப்படியாக எத்தனை வழக்குகள் விசாரிக்கலாம் என்பதை நிர்ணயிப்பது. இதன்மூலம் உயர்தர நீதிமன்றத்தின் வேலைச் சுமை குறைகிறது. நாடு பத்து நீதி ஸ்தல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அப்பீல் கோர்ட்டு—இருவகை நீதி மன்றங்களில் இது உயர்ந்தது—பல ஜில்லாக் கோர்ட்டுகள் உண்டு. ஜில்லா கோர்ட்டுகளின்

எண்ணிக்கை சுமார் 100. கொலம்பியா என்கிற நீதி ஸ்தல ஜில்லாவில் அமெரிக்க அப்பீல்கள் கோர்ட் ஒன்று இருக்கிறது.

சட்டப்படி பெரும்பான்மையான சமஷ்டி வழக்குகளோ அல்லது கிரிமினல் தாவாக்களோ முதலில் ஜில்லா கோர்ட்டு களில்தான் விசாரிக்கப்படவேண்டும். சில சந்தர்ப்பங்களில் கட்சிக்காரர்கள் கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பு சரியானதல்ல என்று கருதினுல் உயர்தர சமஷ்டி கோர்ட் ஒன்றிற்கு அப்பீல் செய்து கொள்ளலாம். சில சமயம் அப்பீல்களை உயர்தர நீதிமன் றத்திலேயே தாக்கல் செய்துவிடலாம். மற்றும் சில சமயங் களில் அப்பீலை முதலில் மாவட்ட அப்பீல் கோர்ட்டில்தான் தாக்கல் செய்யவேண்டும். சில வழக்குகளில் மாவட்ட அப்பீல் கோர்ட்டின் தீர்ப்பே முடிவானது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் காங்கிரஸ் சில விசேஷ கோர்ட்டு களை ஸ்தாபித்திருக்கிறது. 1855-ல் பண தாவா கோர்ட் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தக் கோர்ட் அதிகாரம் பெறுமுன் அரசாங்கத்திற்கெதிராக பணத்திற்கு தாவா கொண்டுவர இட மில்லாமலிருந்தது. இம்மாதிரி வழக்குகளையே பிரத்தியேக மாக விசாரிக்கும் அதிகாரம் இந்த புது கோர்ட்டிற்கு அளிக்கப் பட்டது. மற்றொரு விசேஷ நீதி ஸ்தலம் 1926-ல் ஸ்தாபிக்கப் பட்ட அமெரிக்க சுங்க வரி கோர்ட். அமெரிக்காவிற்குள் இறக்குமதி செய்யப்படும் சரக்குகளுக்கு எவ்வளவு சுங்க வரி விதிப்பது என்பது பற்றி இந்த கோர்ட் முடிவு செய்யும். இவை தவிர அமெரிக்க சுங்க, வியாபார உரிமை அப்பீல்கள் கோர்ட்டு இருக்கின்றது. சுங்க வரி, வியாபார ஏகபோக உரிமைகள் சம் பந்தமாக, தான் கண்டுபிடித்ததற்கு ஏகபோக உரிமை வழங்க மறுத்தது பற்றி வியாபார இலாகா செய்த உத்தரவின் பேரில் இந்த கோர்ட்டில் அப்பீல் தொடரலாம்.

எது சம்பந்தமாக வழக்குத் தொடரப்படுகிறதோ அந்த விஷயமும், அதற்குப் பொருத்தமான சட்டமும் மிகவும் நுணுக் கமாக இருந்தால் அம்மாதிரி வழக்குகளை விசாரிக்க பல விசேஷ கோர்ட்டுகள் இருக்கின்றன.

சமஷ்டி நீதிபதிகள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு நியமனங்கள் செனட்டில் அங்கீகாரம் பெறவேண்டும். அவர்கள் வேலைகளைத் திருப்திகரமாகப் பார்த்துவரும் வரையில் பதவி வகிப்பார்கள். ஏதாவது ஒருவர் பதவியிலிருக்கையில் பெரிய குற்றம் செய்தால், ஜனாதிபதியோ அமெரிக்காவின் மற்றெந்த ஸிவில் அதிகாரியோ குற்றம் சாட்டப்படுவதுபோல் பிரதிநிதிகள் சபையினால் குற்றம் சாட்டப்பட்டு பகிரங்க விசாரணை செய்யப்படலாம். சமஷ்டி நீதிபதிகள் என்ன சம்பளம் பெற வேண்டும் என்பதை காங்கிரஸ் முடிவு செய்கிறது. ஆனால் நீதிபதிகளின் சம்பளம் "அவர்கள் பதவி வகிக்கும்போது **குறைக்கப்படலாகாது**" என்று அரசியலமைப்பு திட்டம் செய்திருக்கிறது.

70 வருஷங்களுக்கு மேலாக அமெரிக்க உயர்தர நீதிமன்றத்தில் ஒரு பிரதம நீதிபதியும் எட்டு துணை நீதிபதிகளும் பதவி வகித்து வந்திருக்கின்றனர்கள். பிரதம நீதிபதி நீதிஸ்தலத்திற்குத் தலைமை வகிக்கிறார். ஏதாவது ஒரு சரியான காரணத்திற்காக ஒய்வு அனுமதிக்கப்பட்டிருந்தாலொழிய எல்லா நீதிபதிகளும் ஒன்றாய் அமர்வார்கள். விசாரணையில் கலந்துகொண்ட நீதிபதிகளில் பெரும்பான்மையோர் முடிவே கோர்ட்டின் தீர்ப்பாகும்.

பெரும்பான்மையினரில் ஒருவர் தீர்ப்பை எழுதி கோர்ட்டின் முடிவைக் கூறுகிறார். பெரும்பான்மை முடிவை ஒப்புக் கொள்ளாத நீதிபதி தன் அபிப்பிராயத்தையே கூறலாம். உயர்தர நீதிமன்றத்தின் தீர்ப்புகளை வக்கீல் தொழில் செய்பவர்களும் மற்ற கோர்ட் நீதிபதிகளும் கவனமாகப் படிக்கின்றனர். இந்தத் தீர்ப்புகளில் வெளியாகும் கருத்துக்களும் கொள்கைகளும் மற்ற கோர்ட்டுகளில் எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டு வாதம் செய்யப்படுகிறது. இந்த தீர்ப்புகளுக்கு சட்டத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு உண்டு.

(12)

ராஜ்ய அரசாங்கம்

அமெரிக்க அரசாங்கத்தின் பாணியில் ராஜ்ய உருப்புகள் தனி ஸ்தானம் வகிக்கின்றன. அரசியல் நிர்ணய சபைக்கு வந்த பிரதிநிதிகளும் அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களும் முதல் முதலாக தங்கள் விசுவாஸத்தைத் தங்கள் தாயகங்களாகிய ராஜ்யங்களுக்கே அளித்தனர். சமஷ்டி அரசியலமைப்பும், அதன்மூலம் ஏற்பட்ட அரசாங்கமும் அமுலுக்கு வருமுன், ஏற்கெனவே எழுத்துமூலம் உள்ள அரசியலமைப்புகளின்கீழ் இயங்கி வந்த 13 ராஜ்யங்களும் அரசாங்க ரீதியில் சமஷ்டி அரசாங்கத்தைவிட நாள்பட்டவை எனும் வகையில் ஒரு தனி அந்தஸ்து பெற்றிருந்தன. ஆகையால் புது சமஷ்டி அரசியலமைப்பை தயாரித்தவர்கள் ராஜ்யங்கள் கோரிய உரிமைகளுக்கு மதிப்பளித்தார்கள்.

சமஷ்டி அரசாங்கத்திற்கும், பலவேறு ராஜ்ய அரசாங்கங்களுக்குமுள்ள அதிகாரங்களின் வரையறை ராஜ்யங்களின் எல்லைகளில் தொடங்கியது. ராஜ்ய எல்லைக்குள் ஏற்படும் விஷயங்களைக் கவனிக்கும் பாத்தியதை பொறுப்பு அந்த ராஜ்யத்தினுடையது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த பாகுபாடு, குடியேற்ற நாட்டந்தஸ்து நீங்கியவுடன் ஏற்பட்ட நிலைக்குப் பொறுத்தமாயிருந்தது, கிட்டத்தட்ட அதே நிலை பல வகைகளில் இன்றைக்கும் பொருந்தும். அமெரிக்காவின் சமூக பொருளாதார அபிவிருத்தியானது பல துறைகளில் சமஷ்டி அரசாங்கத்தையும் ராஜ்ய அரசாங்கங்களையும் கூட்டாளிகளாகப் பிணைத்துவிட்டது. ஆனல் ஒருபுறம் சமஷ்டி அரசாங்க அதிகாரம் படிப்படியாக உயர்ந்தாலும், தனி ராஜ்யங்கள் தங்களுடைய ஆதிபத்யத்தைச் சிதையாமல் வகித்துவருகின்றன.

ராஜ்ய உரிமைகள் அமெரிக்க அரசாங்கத்தின் உடமைகளில் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன.

ராஜ்ய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே ராஜ்ய அரசாங்கங்களின் முக்கிய கடமையாகும். உள் நாட்டு போக்குவரத்து, சொத்து, தொழில், வியாபாரம், பொது ஜன சௌகரிய நிலையங்கள் சம்பந்தமான கோட்பாடுகள்; கிரிமினல் சட்டம், ராஜ்யத்திற்குள் வேலை வசதிகள்; இவைகள் ராஜ்யங்களின் ஆதிக்கத்திற்குட்பட்டவைகளில் முக்கியமானவை. இதுதவிர ராஜ்யத்தில் வசிக்கும் தனிநபரின் கவனத்திற்குள்ளான பல விஷயங்கள் இருக்கின்றன. ராஜ்யங்களின் ஆதிபத்தியத்திற்கு முக்கிய நிபந்தனை அவைகள் குடியரசுகளாயிருக்க வேண்டும்; சமஷ்டி அரசாங்கத்தின் சட்டங்கள், உடன்படிக்கைகள், அரசியலமைப்பு முதலியவைகளுக்கு முரணான சட்டங்களை அவைகள் இயற்றலாகாது என்பதுதான். சமஷ்டி அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற விரும்பும் புது ராஜ்யங்கள் தேசீய காங்கிரஸின் ஆதரவைப் பெறவேண்டும்.

சில சில்லரை விஷயங்களில் ராஜ்யங்களின் அரசியலமைப்புகள் மாறுபட்டிருந்தாலும் பொதுப்படையில் அவைகள் ஒரே பாணியில் அமைந்தவை. பூர்வ பீடிகை வழக்கமாக அரசாங்கத்தின் நோக்கங்களைக் குறிப்பிடும்—அதாவது ராஜ்யத்திற்குள் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவது. இந்த நோக்கமும் மற்ற நோக்கங்களும், நிறைவேறுவதற்காக அரசாங்கத்தின் மற்ற பகுதிகளுடன் ஒத்துழைப்பதும்; தனிநபர் உரிமைகள் உத்தரவாதம் செய்யப்படுகின்றன; மற்றவர்களுக்குத் தீங்கு நேரிடும் வகையில் அவைகளை துஷ்பிரயோகம் செய்தல் தடை செய்யப்படுகிறது.

ராஜ்ய அரசியலமைப்பின் முக்கிய பகுதிகளில் கீழ்க்காண்பவைகள் வழக்கமாக இடம் பெற்றிருக்கும்:

ராஜ்யத்தில் வசிக்கும் மக்களின் உரிமைகள் பற்றிய விவரம்.

ராஜ்ய அரசாங்கம் எப்படி அமையவேண்டும் என்பதற்கு பொதுவான திட்டம்.

குற்றங்கள் அவைகளுக்கான தண்டனைகளடங்கிய விவரணை.

பெரு நகரங்கள், கவுண்டிகள், நகரங்கள், கிராமங்கள் முதலியவைகளுக்கு விதிகள்.

பொதுநல சாதனங்கள், வியாபார நிலையங்கள், ராஜ்ய பாங்குகள், பரிபாலன ஸ்தாபனங்கள் இன்னும் மற்ற நிலையங்கள் எப்படி நடக்கவேண்டும் என்பதற்கான பொது நிபந்தனைகள்.

ராஜ்ய அரசியலமைப்பை எப்படி மாற்றலாம் என்பதற்கான குறிப்பு.

ஒவ்வொரு ராஜ்ய அரசியலமைப்பும் இறுதி அதிகாரம் மக்களுடையது என்று குறிப்பிட்டிருக்கிறது. அரசாங்கம் அமைத்ததன் நோக்கங்களை ஒவ்வொன்றும் பொதுப்படையாகக் குறிப்பிடுகின்றன. ராஜ்யத்தின் ஆதிக்கத்தின் கீழ் இயங்கும் ராஜாங்கப் பகுதிகளுக்குள் பரஸ்பர தொடர்பு பற்றி வழி வகுக்கப்பட்டிருக்கிறது. தங்கள் அரசாங்கத்தின் அடிப்படையாக ராஜ்ய மக்கள் மேற்கொண்டுள்ள கொள்கைகளையும் தராதரங்களையும் ஒவ்வொரு ராஜ்யமும் அறிவித்திருக்கிறது.

ராஜ்ய அரசாங்கங்கள் செய்யும் சேவைகள்.

மக்களுக்குத் தன் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற விரும்புவதால் ராஜ்ய அரசாங்கம் பலவிதமான அலுவல்களில் ஈடுபடவேண்டியிருக்கிறது. சில சமயங்களில் தனியாகவும் மற்ற சமயங்களில் பல சர்க்கார் ஸ்தாபனங்களுடனும் ஒத்துழைத்து இக்கடமைகளை நிறைவேற்றுகின்றது.

உதாரணமாக பொதுஜன ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில்; ஜனங்களின் கல்விக்கு வழி செய்வதில்; ஜனங்களின்

உயிர்களையும் சொத்துக்களையும் காப்பதில்; போக்குவரத்துகளை அபிவிருத்தி செய்வதில்; பொது உதவி தேவையானவர்கள் விஷயத்தில் அக்கரை செலுத்துவதில்; ராஜ்யங்களின் காடுகள், சுரங்கப் பொருள்கள், நிலங்களின் பூசத்து முதலியவைகளைக் காத்தல்; வேறு வாழ்க்கை வசதிகளை அபிவிருத்தி செய்தல்; இன்னோரன்ன காரியங்களில் அரசாங்க இலாகா தீவிரமாயிருக்கிறது.

ராஜ்யமும் பொது சுகாதாரமும்: 48 ராஜ்யங்களிலும் மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதே கடமையாகக் கொண்ட ஸ்தாபனமோ ஸ்தாபனங்களோ இருக்கின்றன. ராஜ்ய அரசியலமைப்பு அல்லது ராஜ்ய சட்டங்கள் அளிக்கும் அதிகாரத்தின் கீழ் அதிகாரிகள், வைத்தியர்கள், நர்ஸுகள், மருந்து விற்பவர்கள், நோய்நொடிகளை எதிர்த்துப் போராடுபவர்களைப் பரிசோதித்து திருப்திகரமாயிருந்தால் அவர்களுக்கு தொழில்கள் நடத்த அனுமதிச் சீட்டு அளிக்கின்றன. டாக்டர்களும் நர்ஸுகளும் தங்கள் தொழில்களை நடத்த சில தராதர விதிகளை திருப்தி செய்யவேண்டும் என்று ராஜ்ய சட்டங்கள் இருக்கின்றன.

நோயாளிகள், பைத்தியக்காரர்களுக்கு ராஜ்யங்கள் ஆஸ்பத்திரிகள் நடத்துகின்றன. பலவிதமான உணவுகள் மருந்துகளை ராஜ்ய உத்தியோகஸ்தர்கள் பரிசோதனை செய்து அவைகள் ஜனங்கள் உட்கொள்ளத்தக்கனவா என்று முடிவு செய்கிறார்கள். இன்னும் பல்வேறு வகைகளில் நோய் வராமல் தடுக்கிறார்கள். பள்ளிச் சிறுவர்கள் அடிக்கடி ஆரோக்கிய சம்பந்தமான பரிசோதனை செய்யப்படுகிறார்கள். பால் தரும் கால்நடைகள் பரிசோதிக்கப்பட்டு காசம் முதலிய கொடிய நோய்க்குட்பட்டிருந்தால் அவைகளைக் கொன்றுவிடும் அதிகாரமளிக்கும் சட்டங்களை ராஜ்யங்கள் இயற்றியிருக்கின்றன.

ராஜ்யமும் கல்வியும்: தங்களுடைய பிரஜைகளுக்கு கல்வி கற்கும் சந்தர்ப்பங்கள் அளிக்க ராஜ்ய அரசாங்கங்கள் எவ்வ

ளவோ செய்கின்றன. வரிப்பணத்திலிருந்து நடக்கும் பள்ளிக் கூடங்கள் அமைத்திருக்கின்றன. அமெரிக்க வாழ்க்கை முறைக்கு அடிப்படையின் ஒரு பகுதி வரிப் பணத்தின் உதவிபெற்று நடைபெறும் பொதுப் பள்ளிக்கூடங்கள். கட்டாயமாக குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்வதற்கான சட்டங்களை சபைகள் இயற்றலாம். பொதுப் பள்ளிக்கூடங்களில் பல நகரங்களில் எம்மாதிரி பாடங்கள் போதிக்கலாம் என்பதை திட்டம் செய்யும் பொறுப்பு ராஜ்ய அரசாங்க அதிகாரிகளுக்கு ஏற்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் எந்தெந்தப் பாட புத்தகங்கள் வைக்கலாம் என்பதைக்கூட அவர்கள் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. நல்ல பள்ளிக்கூடங்கள் அமைக்கப் பண வசதியில்லாத சமூகத்தினருக்கு ராஜ்ய அரசாங்கத்தி லிருந்து பண உதவி செய்யும் அதிகாரமும் இவர்களுக்கு இருக்கிறது. ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப் பள்ளிகளும் கல்லூரிகளும் கட்டி நடத்துகிறார்கள். அநேக ராஜ்யங்கள் ராஜ்ய சர்வகலாசாலைகளும் கல்லூரிகளும் நடத்துகின்றன. சில சமயம் குடித்தனப் பெண்கள் குடித்தனம் நடத்தும் வகை அறிவதற்கும், தொழிலாளர்கள் தொழில்கள் கற்பதற்கும், குடியானவர்கள் விஞ்ஞான முறையில் பயிர்த்தொழில் கற்பதற்கும் பிரத்தியேக பள்ளிகளும் வகுப்புகளும் ராஜ்யங்கள் நடத்துகின்றன. மக்களுக்கு சிறந்த போதனு முறை, ஜனங் களைப் பாதுகாக்கும் வழி முதலியவைகளைப் பற்றி நிபுணர்கள் ஆராய்ச்சி செய்யும் நிலையங்களையும் அவர்கள் நிறுவுகிறார்கள்.

கிராம பள்ளிக்கூடம்

ராஜ்யம் உயிர்களையும் சொத்துக்களையும் பாதுகாக்கின்றன :

தேசீயப் பாதுகாப்புப் படை எனப்படும் பயிற்சி பெற்ற வீரர் குழாத்தை ராஜ்யங்கள் அமைத்திருக்கின்றன. ஸ்தல அதிகாரி கள் இவர்கள் உதவியை தேவையானபோது நாடலாம். இந்தப் படைக்கு ராஜ்ய கவர்னர்தான் தளபதி. ஸ்தல அதிகாரிகள் அமைதியை நிலைநாட்ட முடியவில்லை என்று எண்ணும்போது கவர்னர் இவர்களை குழப்பமேற்படும் இடங்களுக்கு அனுப்பலாம்.

உயிருக்கோ, சொத்துக்கோ தீங்கு ஏற்படக்கூடிய சமயத்தில் இந்த பாதுகாப்புப் படை ஜனங்களுக்குப் பாதுகாப்பளிக்கிறது. ரஸ்தாக்களில் ரோந்து சுற்றி பொதுஜன அமைதியைப் பாது காக்கும் போலீஸ் படைகளையும் சில ராஜ்யங்கள் வைத்திருக் கின்றன.

ராஜ்யமும் மோட்டார் வசதியும்

அமெரிக்கா பூராவிலும் 400 லட்சம் மோட்டார்கள் இருக் கின்றன. மோட்டார் ஒரு சிறந்த போக்குவரத்து சாதனம்; லாரி கள் மூலம் ஏராளமான சாமான்கள் இடத்துக்கிடம் மாற்றப்படு கின்றன. இவை ஒழுங்காக நடமாட சிறப் பான கெட்டியான பல ரஸ்தாக்கள் தேவை. பல வருஷங்களாக ரஸ்தா வசதியை அபிவிருத்தி செய்து பராமரிக்க ராஜ்யங்கள் கோடிக் கணக்கான டாலர்களை செலவிட்டிருக்கின்றன. உலகத்தில் மிகச் சிறந்ததெனப் புகழ் பெற்ற ரஸ்தாக்கள் அமெரிக்காவில் இருப்பதற்கு ராஜ்யங்களின் முயற்சிகளே பெரிதும் காரணம்.

ஆரோக்கிய வசதிகள்

ரஸ்தா அமைப்பு, மராமத்து செலவுகள் மிதமிஞ்சிப் போவதால் பல ஸ்தல ஆட்சிகள் கஷ்டப்பட்டு ராஜ்யங்களின் உதவியை எதிர்பார்க்கின்றன. மேலும் பூராவும் ராஜ்ய நிதிகளிலிருந்து நிர்வகிக்கப்படும் ராஜ்ய ரஸ்தாக்கள் இருக்கின் றன. பல்வேறு ராஜ்யங்களை ஒன்றுகப் பிணைக்கும் பெரிய ரஸ்தாக்கள் அமைப்புச் செலவை சமஷ்டி அரசாங்கத்தின் ஒத் துழைப்பை நாடி ராஜ்ய சர்க்கார்கள் பகிர்ந்துகொள்கின்றன.

ரஸ்தாவில் ஓடும் வாகனங்களுக்கு ராஜ்யங்கள் லைசென்ஸ் அளிக்கின்றன; அவைகளின் யந்திர அமைப்பு ஒழுங்காயிருக் கின்றதா, பத்திரமாக அவைகளில் பிரயாணம் செய்ய முடியுமா என்று பரிசோதனை செய்யப்படுகிறது. மோட்டார் ஓட்ட விரும்புபவர்களைப் பரீட்சித்து அதில் தேரியவர்களுக்கே லைசென்ஸ் அளிக்கப்படுகிறது. ரஸ்தாக்களில் பத்திரமாக நட

மாடுவதற்காக வாகனங்கள் எவ்வளவு மைல் வேகத்திற்கு மேல் செல்லலாகாது என்ற நிர்ணயமும், வளைவுகள், உயரங்கள் வாயிற்படிகள் பற்றிய எச்சரிக்கைகளும், ரயில் ரோடு சந்திப்பு களில் விளக்குகளும், விபத்து நேராமல் தடுக்கப் பல்வேறு சாதனங்களும் வகுத்திருக்கிறார்கள்.

சகாயம் நாடுபவர்களுக்கு ராஜ்ய உதவி

தங்களுக்கு வேண்டியவைகளைத் தாங்களாகவே கவனித் துக்கொள்ள முடியாத பிரஜைகளுக்கு ராஜ்ய அரசாங்கங்கள் உதவிபுரிகின்றன. அனாதைகள், அங்கஹீனர்களான குழந்தை களுக்கு அவர்கள் விடுதிகள் அமைத்து உதவுகின்றனர். வயதானவர்களுக்கு விடுதிகளும் அந்தகர்கள் செவிடர்களுக்கு விசேஷமாக பள்ளிக்கூடங்களும் நடத்துகின்றனர். முக்கியமாக வேலையில்லாமல் கஷ்டப்படும் சமயத்தில் அவர்கள் நலனை ராஜ்ய சர்க்கார்கள் கவனிப்பது அவசியமும் முக்கியமுமாகும்.

ராஜ்யம் தனது இயற்கை வளத்தைப் பாதுகாக்கிறது

பல வருஷங்களாக அமெரிக்க மக்கள் தங்கள் காடுகளையும் நிலத்தின் செழிப்பையும் கவனிக்காமலிருந்தனர். இன்று ராஜ்ய சர்க்கார்களும் தேசீய சர்க்காரும் இம்மாதிரி நம் இயற்கை வளம் வீணுவதற்கு முடிவு கட்ட ஒன்று சேர்ந்து உழைக்கின்றனர்.

அவர்கள் ஒன்றுபட்டு உழைக்கும் மற்ற விஷயங்கள் :—

ராஜ்ய அல்லது தேசீய சர்க்கார்களுக்கு தேக்குக் காடுகள் வாங்கவோ அல்லது அதற்கென நிலங்கள் ஒதுக்கி அவைகளில் வளரும் மரங்களை வெட்டுவதை திட்டப்படுத்துவது.

வெட்டப்பட்ட அல்லது விழுந்துவிட்ட அல்லது வெந்து போன மரங்களுக்குப் பதிலாக புது மரங்கள் நடுதல்.

பூ சத்து கரையாமல் பாதுகாத்தல்

ராஜ்ய அல்லது தேசீய நந்தவனங்கள் அமைத்துப் பரா மரித்தல்.

காட்டு மிருகங்களைப் பாதுகாத்தல்.

எப்பொழுது எப்படிப் பயிரிடுவது, எப்படி உரம் உபயோகிப்பது என்பனவற்றைக் குடியானவர்களுக்குப் போதித்து பூமியை செழிப்பாக வைத்திருத்தல்.

நதி, ஓடைகளில் ஓடும் ஜலத்தையும் அதனுள்ளிருக்கும் மின்சார சக்தியையும் பயனுள்ள முறையில் உபயோகிப்பதற்கு ஏற்பாடு செய்தல்; எண்ணெய், நிலக்கரி, உலோகங்கள் முதலியவைகளைக் கட்டுப்படுத்தல், சாகுபடிக்கு லாயக்கான பூமியை அதிகரிக்க தண்ணீர்ப் பஞ்சமுள்ள பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் ஆகும்படி திட்டங்களை வகுத்தல்.

இயற்கை வளங்களில் மக்களுக்கு இருக்கவேண்டிய அக்கறையை அவர்கள் உணர்ந்து, அவைகளைப் பாதுகாப்பதில் பங்கு கொள்ளும்படி அவர்களுக்கு போதனை செய்தல்.

வர்த்தகத்தை ராஜ்யங்கள் பாதுகாத்து ஒழுங்குபடுத்துகின்றன : வியாபாரம் செய்வதற்காக சொந்த கம்பெனி ஆரம்பிக்கவிரும்புபவர்கள் தங்களுடைய தலைமைக் காரியாலயம் வேலை செய்யப் போகும் இடமுள்ள ராஜ்யத்தில் அனுமதி பெற வேண்டும். இந்த அனுமதிச் சீட்டு கம்பெனியின் தலைமைக் காரியாலயத்தை அந்த ராஜ்யத்திற்குள் வைத்துக்கொள்ள அதிகாரமளிக்கிறது. வியாபாரத்தின் நிலை எவ்வாறு இருக்கின்றது என்று அவ்வப்போது கம்பெனி நிர்வாகிகள் தெரிவிக்க வேண்டும் என்று ராஜ்ய அரசாங்கங்கள் கோரலாம். சுரங்கங்கள், ஆறுகள், இன்னும் மற்றும் மக்கள் வேலை செய்யுமிடங்களை மேற்பார்வை பார்க்கவும், சோதனை செய்யவும் ராஜ்ய அரசாங்கங்களுக்கு வழக்கமாக அதிகாரமுண்டு. தங்கள் எல்லைக்குள்ளிருக்கும் போக்குவரத்து வழிகளையும் ராஜ்யங்கள் ஒழுங்குபடுத்தலாம். தந்தி, டெலிபோன், எரிவாயு, தண்ணீர், மின்சார நிலையங்களையும் அவர்கள் ஒழுங்குபடுத்தலாம், ஜனங்கள் தங்கள் பணங்களை முதலீடு செய்யும் பாங்குகள், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளை சீர்படுத்தலாம். இந்த சட்டங்கள், விதிக

ளின் நோக்கம் கம்பெனிகளின் வாடிக்கைக்காரர்களாகிய மக்களேயும், அவைகளில் முதல் போட்டிருக்கும் நபர்களின் நலனேயும் பாதுகாப்பதேயாகும்.

வாழ்க்கை, வேறு வசதிகளை ராஜ்யம் ஒழுங்குபடுத்துகிறது : அவர்களுடைய "போலீஸ் அதிகாரங்" களின்கீழ் ராஜ்யங்கள் பொதுநலனுக்காக பல சட்டங்களை நிறைவேற்றுகிறார்கள். அதாவது தங்களுடைய உயிர், ஆரோக்கியம், ஒழுக்கம் முதலியவைகளைப் பாதுகாத்து, தங்களுடைய பத்திரம், சௌகரியம், சுகவாழ்வு முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்வதற்காக ஜனங்கள் ஒரு ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கின்றனர். சூதாட்டம், லாட்டரி முதலியவைகளைத் தடை செய்வதும், மது வகை விற்பனைகளைக் கட்டுப்படுத்தியும் சட்டம் செய்கையில் ராஜ்யங்கள் தங்கள் "போலீஸ் அதிகாரங்"களை உபயோகிக்கின்றன. இந்த அதிகாரத்தின்கீழ் ராஜ்யங்கள் சில சமயம் பெண்கள் குழந்தைகள் வேலைக் காலத்தைக் கட்டுப்படுத்தியும், அபாயமான சூழ்நிலைகளிலிருந்து தொழிலாளர்களைக் காப்பாற்றியும் ராஜ்யங்கள் சில சமயம் சட்டமியற்றியிருக்கின்றன. ஆலைகளில் போதிய அளவு காற்றேட்டம், வெளிச்சம், குளிப்பதற்கு வசதி, தீயணைக்கும் வசதி, அபாயகரமான யந்திரங்களுக்கு பலியாகாமல் பாதுகாக்கும் சாதனங்கள் சம்பந்தமாக சட்டமியற்றுவதும் இந்த அதிகாரத்தில் அடங்கியிருக்கிறது. வேலை செய்கையில் காயம் ஏற்பட்டால் அதற்கு நஷ்டஈடு அளிக்க வேண்டுமென்று பல ராஜ்ய சர்க்கார்கள் சட்டம் செய்திருக்கின்றன. முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்படும் தகராறுகளை சமாதானமாகத் தீர்த்துவைக்கும் விசேஷ ஸ்தாபனங்களை ராஜ்யங்கள் அமைத்திருக்கின்றன.

* * *

(13)

ராஜ்ய அரசாங்கங்களின் அமைப்பு

ஒவ்வொரு ராஜ்ய அரசியலமைப்பும் அந்தந்த ராஜ்யத்தின் பிரத்தியேக பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்டது. பெரிய நகரங்களுக்கும், சிறு நகரங்கள், கவுண்டிகள், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் எவ்வாறு ஆட்சி முறை அமைப்பது என்பதை மனதில் வைத்துக்கொண்டே ராஜ்ய அரசியலமைப்புகள் வகுக்கப்பட்டன.

48 ராஜ்யங்களும் ஒன்றுக்கொன்று விசேஷ மாறுபாடுகள் உள்ளவைகளாயிருந்தன. ரோடு தீவு 1,200 சதுர மைலுக்கு சிறிது அதிகமான விஸ்தீரணமுள்ளதாயிருந்தது. டெக்ஸாஸின் விஸ்தீரணம் 266,000 சதுர மைல்கள். சில ராஜ்யங்கள் பெரிதும் விவசாயத்தை நம்பி வாழ்வதாயிருந்தன. மற்றவை ஆலைத் தொழிலை நம்பியிருந்தன. ஆட்சி அமைப்பில் முக்கியமான வித்தியாசங்கள் இல்லாமல் அந்தந்த ராஜ்ய மக்களின் பிரத்தியேக தேவைகள் யாவன என்பதை மட்டும் கவனித்தன.

தேசீய அரசாங்கம் மாதிரி ராஜ்ய அரசாங்கங்களிலும் மூன்று தனித்தனிப் பகுதிகள் இருந்தன : சட்டசபை, நிர்வாகம், நீதிபரிபாலனம்.

நெப்ராஸ்கா தவிர மற்றெல்லா ராஜ்யங்களிலும் இரு சட்டசபைகள் இருக்கின்றன. ஒன்றுக்குப் பெயர் செனட், மற்றொன்றிற்குப் பெயர் பிரதிநிதிகள் சபை. நெப்ராஸ்காவில் மட்டும் ஒரு சட்டசபைதானிருக்கிறது. மற்ற ராஜ்யங்களில் பெரும்பான்மையானவைகளில் செனட்டைவிட பிரதிநிதிகள் சபையில்தான் அதிக அங்கத்தினர்கள் இருக்கின்றனர்.

செனட்டிற்கும் பிரதிநிதிகள் சபைக்கும் பிரதிநிதிகள் கவுண்டிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டாலும் சில ராஜ்யங்களில் பல கவுண்டிகள் அடங்கிய ஜில்லாக்களிலிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மற்றும் சில இடங்களில் கவுண்டியின் ஜனத்தொகை அதிகமாயிருந்தால் ஒரு கவுண்டி இரண்டு அல்லது மூன்று ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு அவைகளிலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பல ராஜ்யங்களில் செனட்டர்கள் 4 வருஷமும் பிரதிநிதி சபையினர் இரண்டு வருஷமும் பதவி வகிக்கின்றனர். சில ராஜ்யங்களில் இரண்டு சபையினரும் இரண்டு வருஷ காலத்திற்கும், மற்றும் சிலவற்றில் இரண்டு சபையினரும் நான்கு வருஷத்திற்கும் பதவி வகிக்கின்றனர்.

தேசம், ராஜ்யம், நகரம் மூன்றிலும் அரசாங்க அமைப்பில் உள்ள ஒருமைப்பாடுகள் :

எந்த அரசாங்கம்	ஒவ்வொன்றிலும் சட்டமியற்றும் பகுதி இருக்கிறது	ஒவ்வொன்றிலும் நிர்வாகப்பகுதி இருக்கிறது	விளக்கி சட்டங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர நீதி இலாகா
தேசம்	காங்கிரஸ் : செனட்: பிரதிநிதிகள் சபை.	ஜனாதிபதி, உப ஜனாதிபதி, நிர்வாக இலாகாக்கள், மற்ற நிர்வாக ஏஜென்ஸிகள்.	சமஷ்டி கோர்ட்டுகள்.
ராஜ்யம்	ராஜ்ய சட்டசபை (நெப்ராஸ்காதவிர மற்ற ராஜ்யங்களில் இரு சட்ட சபைகள்.)	கவர்னரும், இலாகா தலைவர்களும்.	ராஜ்ய கோர்ட்டுகள்.
நகரம்	நகர சபை அல்லது கமிஷனர்கள்.	மேயர், அல்லது மானேஜர், அல்லது கமிஷனர்கள் போர்டு.	நகர கோர்ட்டுகள்.

பெரும்பான்மையான ராஜ்யங்களில் இரண்டு சட்டசபைகளும் ராஜ்யத் தலைநகரில் இரண்டு வருஷத்திற்கொரு தரம் கூடுகின்றன. சில ராஜ்யங்களில் சட்டசபைகள் வருஷா வருஷம் கூடுகின்றன; அலபாமாவில் சபைகள் நான்கு வருஷங்களுக்கொரு தரம்தான் கூடுகின்றன.

ராஜ்ய சட்டசபைகளைத் தேர்ந்தெடுப்பது.

ராஜ்யங்கள் ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ஜில்லா மக்களும் ஒரு ராஜ்ய செனட்டரையும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுக்கிறார்கள். வழக்கமாக ராஜ்யத்தில் ஒரு வருஷத்திற்குக் குறையாமல் வசித்தவர்களே அபேட்சகர்களாக நிற்கலாம். ராஜ்ய சட்டசபைகளில் நகர, கவுண்டி மக்களுக்கு பிரதிநிதித்வம் அளிக்கும் வகையில் ஜில்லாக்கள் பிரிப்பதில் ராஜ்ய அரசாங்கங்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது.

இரண்டு சட்டசபைகள் உள்ள 47 ராஜ்யங்களில் சட்டம் ஒரே மாதிரிதான் இயற்றப்படுகிறது. இரு சட்டசபைகளில் ஏதாவது ஒன்றில் அங்கத்தினராயிருப்பவர், தான் விரும்பும் சட்டத்திற்கான பிரேரணையைக் கொண்டுவரலாம். ஏதாவது ஒரு சபையில் மசோதா பிரேரிக்கப்பட்டவுடன் அது அந்த சபையின் சிலரடங்கிய கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகிறது.

ராஜ்ய சட்டசபைகளில் பெரும் பகுதி வேலை, கமிட்டிகளின் மூலமே நடைபெறுகின்றது. முக்கியமான மசோதாக்கள் பற்றி கமிட்டிகள் ஆலோசிக்கையில் வழக்கமாக பகிரங்க விசாரணை நடத்தி மசோதாவைப் பற்றிய சாதக பாதகமான அபிப்பிராயங்களைக் கேட்கின்றன. மசோதா சட்டமாக வேண்டுமென கமிட்டி அபிப்பிராயப்பட்டால் அது ஒரு அறிக்கை தயாரித்து மசோதா நிறைவேறுவதற்கான அவசியத்தையும், அதனால் ஏற்படக்கூடிய நன்மையைப் பற்றியும் தங்கள் அபிப்பிராயத்தைக் கூறுகின்றனர். அநேக மசோதாக்கள் விஷயத்தில், பரிசீலனை செய்யும் கமிட்டிகள் அவைகளை ஏற்றுக்கொள்ளாததால்

ஒருவித அபிப்பிராயமும் கூறுமலிருந்துவிடுகின்றனர். கமிட்டியினுல் தள்ளப்பட்ட மசோதாக்களை விரும்பும் சட்டசபை அங்கத்தினர்கள் பெரும்பான்மை அங்கத்தினர்களின் ஆதரவைப் பெற்று நிறைவேற்றினுலொழிய அவைகள் சட்டசபையின் ஆலோசனைக்கு வருவதேயில்லை.

பரிசீலனைக் கமிட்டி சாதகமாக அறிக்கை சமர்ப்பித்த பிறகு வழக்கமாக சட்டசபையில் அதுபற்றி விவாதம் நடப்பதுண்டு. அங்கத்தினர்கள் அதன் நல்ல அம்சங்கள், தீய அம்சங்கள் பற்றி எடுத்துக் கூறுகின்றனர். வோட்டெடுக்கும் சமயத்தில் பெரும்பான்மை அங்கத்தினர் ஆதரிக்காவிட்டால் அது அடிப்பட்டுப்போகும். பரிசீலனைக் கமிட்டி, மசோதாவில் மாறுதல்கள் செய்யலாம். கமிட்டி சிபார்சு செய்த பிறகும் அங்கத்தினர்கள் மசோதாவில் திருத்தங்கள் கொண்டுவரலாம். அவைகளை பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொண்டால் திருத்தங்களுடன் மசோதா நிறைவேறும். ஒரு மசோதா ஒரு சட்டசபையில் நிறைவேறியவுடன் மற்ற சட்டசபைக்கு அனுப்பப்படுகிறது. அங்கேயும் இதே பரிசீலனை முறை கையாளப்படுகிறது. அங்கேயும் ஒரு கமிட்டி பரிசீலனை செய்து முடிவு கூற அனுப்பப்படுகிறது. சாதகமான சிபார்சுடன் வந்தால் அந்த சட்டசபையில் விவாதிக்கப்பட்டு வோட்டுக்கு விடப்படுகிறது. இரண்டாவது சபையில் மசோதா மாற்றப்பட்டால், இரு சபைகளின் அங்கத்தினர்களடங்கிய "சமரஸக் கமிட்டி"க்கு அனுப்பப்படுகிறது. இரண்டு சபைகளுக்கும் பிடித்தமான மாறுதல்களைச் சேர்த்து திருத்தியமைக்கலாம். இது திருப்திகரமாக முடிந்தால் மசோதாவை இரு சபைகளும் அங்கீகரிக்கின்றன. அப்புறம் அது கவர்னருக்கு அனுப்பப்படுகிறது. கவர்னர் கையெழுத்திட்டால் மசோதா சட்டமாகிறது.

வட கரோலினு தவிர மற்ற ராஜ்யங்களில் கவர்னருக்குப் பிடிக்காவிட்டால் ஒரு மசோதாவை நிராகரித்துவிடலாம். கவர்னர் கையொப்பமின்றியே சட்டமாக்க விரும்பினுல் சட்டசபை மெம்பர்கள் மறுபடியும் மசோதாவின்மீது வோட்டுச் செய்ய

லாம். சில ராஜ்யங்களில் சட்டசபை அங்கத்தினர்களில் பெரும் பான்மையினர் ஆதரித்து வோட்டுச் செய்தால் மசோதா சட்ட மாகிவிடும். மற்ற ராஜ்யங்களில் ஒவ்வொரு சட்டசபையிலும் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் வோட்டுச் செய்தால் தான் மசோதா சட்டமாக முடியும்.

பொதுவாக ராஜ்யங்கள், ராஜ்யங்களின் பொறுப்பிலுள்ள வைகளைப் பற்றியே சட்டம் இயற்றுகின்றன. சமஷ்டி அரசியலமைப் பின்படி, ராஜ்ய சட்டசபைகள் தேசீய அரசியலமைப்பு, காங்கிர ஸின் சட்டங்கள் அல்லது பிற நாடுகளுடன் செய்யப்பட்டிருக்கும் உடன்படிக்கைகள் முதலியவற்றிற்கு மாறுக சட்டமியற்றக் கூடாது.

* * *

ராஜ்ய அரசாங்கத்தின் நிர்வாகப் பகுதி

ராஜ்யத்தின் பிரதம நிர்வாகி கவர்னர். அவரை ஜனங்கள் தேர்ந்தெடுக்கின்றனர். பாதி ராஜ்யங்களில் கவர்னர்களின் பதவிகாலம் இரண்டு வருஷம் ; மற்ற பாதியில் 4 வருஷம்.

ராஜ்ய அரசியலமைப்பில் கவர்னரின் அதிகாரங்கள் விவ ரிக்கப்பட்டிருக்கின்றன. அவசியமென அவருக்குத் தோன் றும் விஷயங்கள் பற்றி சட்டமியற்றும்படி அவர் சட்டசபை களுக்கு யோசனை கூறலாம். அம்மாதிரி சட்டங்களைப் பற்றி ஆலோசிப்பதற்காக அவர் சட்டசபைகளைக் கூட்டலாம். அநேக கமிஷன்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் பிரதிநிதிகளை நியமிக் கிருர். சில ராஜ்யங்களில் அவர் செய்யும் முக்கியமான நியம னங்கள் அந்த ராஜ்ய செனட்டின் அங்கீகாரம் பெற வேண்டும். அவர் ராஜ்ய தேசீயப் பாதுகாப்புப் படையின் தலைவர், நாட்டின் அமைதிக்கு ஆபத்து ஏற்பட்டதாக அவர் கருதும் சமயத்தில் அதை அடக்க அவர் பாதுகாப்புப் படையை அனுப்பலாம்.

ராஜ்ய கோர்ட்டாரால் தண்டிக்கப்பட்டவர்களை மன்னித்து அல்லது அவர்கள் தண்டனையைக் குறைக்கலாம். கவர்னருடன் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி கவர்னர் அந்த ராஜ்ய செனட் சபைக்குத் தலைமை வகிப்பார். கவர்னர் இறந்தாலும் அல்லது பதவியிலிருந்து விலக்கப்பட்டாலும் அவருக்குப் பதிலாக உதவி கவர்னர் பதவி வகிக்கலாம்.

ராஜ்ய அரசாங்கத்தின் நிர்வாகப் பகுதியில் பல முக்கிய மான நிர்வாக அதிகாரிகள் இருக்கின்றனர். ராஜ்ய தஸ்தா வேஜுகளைப் பாதுகாக்க ஒரு அரசாங்கக் காரியதரிசி இருக்கிறார். அவர் ராஜ்ய சட்டங்களைப் பிரசுரிக்கிறார். தேர்தல் சம்பந்தமான அறிவிப்புகள் அனுப்புகிறார். ராஜ்ய தேர்தல் முடிவை அவர் தான் வழக்கமாக அனுப்புகிறார்.

அட்டார்னி ஜெனரல்தான் ராஜ்யத்தின் பிரதம சட்ட அதி காரி. ராஜ்ய மக்களின் நலனைப் பாதிக்கக்கூடிய வழக்குகளில் ராஜ்ய சர்க்காரின் பிரதிநிதியாக அவர் கோர்ட்டுகள் முன் ஆஜராகிறார் அல்லது தனது உதவி உத்தியோகஸ்தர்களை அனுப்புகிறார். பல ராஜ்ய சட்டங்கள், அவைகளின் அனுஷ்டா னம் பற்றி கவர்னருக்கும் மற்ற ராஜ்ய உத்தியோகஸ்தர்களுக் கும் யோசனை கூறுகிறார்.

ராஜ்யக் கணக்குப் பரிசோதகர்: ராஜ்ய சர்க்கார் செய்ய வேண்டிய செலவினப் பட்டியல்களைப் பரிசோதித்து அவைகள் ஒழுங்காயிருந்தால் அவைகளைச் செலுத்தும்படி பொக்கிஷ இலாகாவுக்கு உத்திரவிடுகிறார்.

கஜானாவில் போட்ட பணம், அதிலிருந்து செலவு செய்த பணம், ராஜ்ய சட்டசபைகள் அனுமதித்த செலவினங்கள் யாவற்றிற்கும் அவர் சரியான கணக்கு வைத்திருக்க வேண்டும்.

ராஜ்ய அரசாங்கத்தின் மூன்று தனித்தனி பகுதிகள்



ராஜ்யத்திற்காகப் பண வசூல் செய்யும் கவுண்டி, நகர, கிராம உத்தியோகஸ்தர்கள் வைத்திருக்கும் கணக்குகளையும் இவர் பரிசோதிக்கிறார். அநேக இடங்களில் ஆடிட்டரை ஜனங்களே தேர்ந்தெடுக்கின்றனர்.

வரிகள், லைசென்ஸின் கட்டணம், மற்ற கட்டணங்கள் மூலம் கிடைக்கும் பணத்தை ராஜ்ய பொக்கிஷதார் பாதுகாக்கிறார். சரியான உத்தரவு கிடைக்கும்போது அவர் பணம் கொடுப்பார்.

இவை தவிர பல இலாகாக்களும் கமிஷன்களும் இருக்கின்றன. அநேக ராஜ்யங்களில் தொழில் கமிஷனர் எனும் அதிகாரி, தொழில் போர்டு எனும் ஸ்தாபனம் இருக்கின்றன. இவைகள் ராஜ்யத்தின் தொழில் நிலைக்குப் பொறுப்பாளிகளாயிருக்கின்றன. ராஜ்ய பாங்குகள் எப்படி நடக்கின்றன என்பதைப் பரிசீலனை செய்ய ஒரு பாங்கிங் கமிஷன் இருக்கிறது. பிரஜைகளின் ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்வதற்கு என்றெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறபடி ஒரு ஆரோக்கிய போர்டு இருக்கிறது. ரஸ்தாக்கள் அமைக்கவும், மராமத்து செய்யவும் ஒரு ரஸ்தா கமிஷன் இருக்கிறது.

வழக்கமாக முக்கியமான ராஜ்ய நிர்வாகிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சில ராஜ்யங்களில் மற்ற ராஜ்ய அதிகாரிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த கவர்னர்கள் விசேஷ அதிகாரம் பெற்றிருக்கின்றனர். மற்றும் சிலவற்றில் கவர்னர்களுக்கு இம்மாதிரி அதிகாரமே கிடையாது.

ராஜ்ய அரசாங்கத்தில் உத்தியோகம் வகிப்பவர்களைப் பொறுக்கி எடுக்க சமஷ்டி அரசாங்கத்தில் போலவே சில ராஜ்யங்களில் சிவில் சர்விஸ் முறை இருக்கிறது. ராஜ்ய அரசாங்க உத்தியோகம் வகிக்க விரும்புபவர்கள் பரீட்சைக்கு அமர்ந்து தங்கள் தகுதியை நிரூபிக்கிறார்கள். ராஜ்ய நிர்வாகிகளுக்கு உதவிபுரியும் உத்தியோகஸ்தர்களை இம்மாதிரி பொருக்கி

யெடுப்பதன் மூலம் அரசியல் கட்சி பிரதிகட்சிகளில் சிக்காத திறமைசாலிகளின் உதவி நிர்வாகத்திற்குக் கிடைக்கிறது. சில ராஜ்யங்களில் ஏராளமான பதவிகளுக்கு ஸிவில் ஸர்விஸ் பரீட்சை இல்லாமலேயே நபர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ராஜ்ய கோர்ட் முறையில் நீதி இலாகா ராஜ்ய சட்டங்களை விளக்கிக் கூறுகிறது. தனிப்பட்டவர்களோ ஸ்தாபனங்களோ கொண்டு வரும் வழக்குகளுக்கு சட்டங்களை எப்படி பிரயோகிப்பது, அல்லது ராஜ்ய சர்க்கார் தொடரும் கிரிமினல் வழக்குகளில் தண்டனையளிப்பது முதலியவற்றை கவனிக்கிறது. ஸ்தல ஆட்சி களுக்குள்ளும், தனிப்பட்ட வர்களுக்குள்ளும், ஸ்தாபனங்களுக் குள்ளும் ஏற்படும் தகராறுகளை ராஜ்ய கோர்ட்டுகள் தீர்த்து வைக் கின்றன. தனிநபர் உரிமைகள், சொத்துக்கள் சம்பந்தமான வழக்குகளை விசாரணை செய்கின்றன. ராஜ்ய சட்டங்களை மீறிய தாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகளா நிரபராதி களா என்பதை முடிவு செய்து குற்றவாளிகளுக்குத் தக்க தண்டனை விதிக்கின்றன.

ராஜ்ய உயர்தர நீதிமன்றம் ராஜ்ய சட்டசபையில் நிறை வேற்றப்பட்ட சட்டம் ராஜ்ய அரசியலமைப்புக்கோ சமஷ்டி அர சியலமைப்புக்கோ முரணானது என்று கூறி அது செல்லுபடி யாகாது என்று பிரகடனம் செய்துவிடலாம்.

ராஜ்ய கோர்ட்டுகளின் வேலை

ராஜ்ய கோர்ட்டுகள் ஸிவில், கிரிமினல் இருவிதமான வழக்குகளையும் விசாரிக்கலாம். சுதந்திரம், சொத்து, உயிர் வாழும் உரிமைகள் ஒவ்வொருவருக்கும் உண்டு. இந்த உரிமை களுக்கு மற்றொருவன் பங்கம் விளைவித்தால் அவன்மீது, பாதிக்கப்பட்டவன் வழக்குத் தொடரலாம். இம்மாதிரி வழக்கு களில் இரு தரப்பினரையும் விசாரித்து தீங்குக்கேற்ற ஈடு குற்றவாளி கொடுக்கும்படி செய்வது கோர்ட்டுகளின் கடமை. தீமை பொதுமக்களை பாதிக்காத வழக்குக்கு சிவில் வழக்கு என்று பெயர். தீங்கு பொது மக்களை பாதித்து, மக்களைப்

பாதுகாக்கும் ஏதாவது ஒரு சட்டத்தை மீறுகிறது என்றால் இந்தச் செய்கை "குற்ற"மாகும். அம்மாதிரி சம்பவங்களில் ராஜ்யம், சட்டத்தை மீறியவன் மீது "கிரிமினல் வழக்கு" தொடருகிறது. இம்மாதிரி குற்றங்களில் முக்கியமானவை கொலை, ஆயுத உதவியுடன் கொள்ளை, கொள்ளை, லஞ்சம் வாங்குவது கொடுப்பது, பொய்ச் சாட்சியம் சொல்வது போன்றவை.

ராஜ்ய கோர்ட்டுகளில் சாமான்யமானதற்கு **ஜஸ்டிஸ் ஆப் தி பீஸ்** (மாஜிஸ்டிரேட்) தலைமை வகிக்கிறார். சொற்ப தொகைகளுக்கோ, அற்ப குற்றங்களுக்கோ தொடரப்படும் வழக்குகளை இந்த கோர்ட்டுகள் விசாரிக்கின்றன. பெரிய நகரங்களில் இம்மாதிரி வழக்குகளை வழக்கமாக போலீஸ் கோர்ட்டுகளும், விசேஷ முனிசிபல் கோர்ட்டுகளும் விசாரிக்கின்றன.

இதைவிட முக்கியமான பிரச்னைகளை ஜில்லா கோர்ட்டுகள், உயர்தர கோர்ட்டுகள், மாவட்ட கோர்ட்டுகள், காமன் பிளீ கோர்ட்டுகள் விசாரிக்கின்றன. அநேகமாக இந்த கோர்ட்டுகளுக்கு சிவில் கிரிமினல் இருவிதமான வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரம் உண்டு. ராஜ்யத்தில் மிகவும் உயர்ந்த கோர்ட் உயர்தர நீதிமன்றம். கீழ்க் கோர்ட்டுகளில் முடிவு செய்யப்பட்டு, ஆனால் அது நியாயமாக முடிவு செய்யப்படவில்லை என்று தோற்றவன் கருதி அப்பீல் செய்த வழக்குகளை இந்த நீதிமன்றம் விசாரிக்கிறது. அதன் வேலையில் பெரும் பகுதி இம்மாதிரி அப்பீல்களை விசாரிப்பதுதான். அநீதி யாருக்கும் ஏற்படாமல் பாதுகாப்பதற்காக கீழ்க்கோர்ட்டு தீர்ப்புகளை புனர் பரிசீலனை செய்யும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி பரிசீலனை கோருவதற்கு அப்பீல் உரிமை என்று பெயர்.

சில ராஜ்யங்களில் ஏராளமான விசேஷ கோர்ட்டுகள் இருக்கின்றன. உதாரணமாக இறந்தவர்கள் சொத்துக்களை பிரித்துக் கொடுப்பதற்காக வார்சு சர்ட்டிபிகேட்டுகள் வழங்கும் கோர்ட்டு

கள் இருக்கின்றன. சிறுவர்கள் சட்டம் மீறிய வழக்குகளை விசாரிக்க சிறுவர் நீதிமன்றங்கள் இருக்கின்றன. கணவன் மனைவி தகராறுகளைத் தீர்த்துவைக்க குடும்ப விவகார கோர்ட்டு கள் இருக்கின்றன. குறைந்த செலவில் சில்லரைக் கடன்களை வசூல் செய்ய உதவும் கோர்ட்டுகள் இருக்கின்றன.

அநேகமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகளே வழக்குகளை விசாரிக்கிறார்கள். ஆனால் சில ராஜ்யங்களில் இவர்களை கவர்னரோ ராஜ்ய சட்டசபையோ நியமிக்கின்றன. உயர்தர நீதிஸ்தல நீதிபதிகள் பதவி காலம் 6-லிருந்து 15, அதற்கும் மேற்பட்டிருக்கிறது. கீழ்க் கோர்ட் நீதிபதிகள் பதவி காலம் இன்னும் குறைவானது.

கோர்ட் நடைமுறையும் ஜூரிகளும்

அமெரிக்காவில் நிலவி வரும் பல நீதிஸ்தல சம்பிரதாயங் கள் ஆங்கில நீதி முறையைத் தழுவியவை. கிரிமினல் குற்றம் சாட்டப்பட்ட யாவரும் ஜூரியின் உதவி கொண்டு விசாரணை நடத்தும் உரிமை கோரலாம். ஒரு குற்றத்திற்கு எந்த குற்ற வாளியும் பன்முறை தண்டிக்கப்படலாகாது.

இரு விதமான ஜூரி முறைகள் வழக்கத்திலிருந்து வரு கின்றன ; பெரிய ஜூரி, சிறிய ஜூரி விசாரணை. குற்றம் சாட்டப் பட்ட ஒருவன் தன் கட்சியை எடுத்துக் கூறும்படி நிர்ப்பந்தப் படுத்தப்படலாமா என்பதை பெரிய ஜூரி முடிவு செய்ய வேண்டும். பெரிய ஜூரியில் பெரும்பான்மையினர் குற்றம் சாட்டப்பட்டவனை விசாரிக்கப் போதிய சாட்சியம் இருக்கிறது என்று கருதினால் எழுத்து மூலம் அது குற்றச் சீட்டு தயாரித்து அதை வாசிக்கிறது. எதிரி குற்றவாளியா அல்லது நிரபராதியா என்பதை முடிவு செய்ய உடனே விசாரணை நடக்கவேண்டும். இதற்கு ஒரு சிறிய ஜூரி அமைத்து விசாரணை நடைபெறும். விசாரணை ஜூரியில் 12 பிரஜைகள் இருப்பர். சாட்சியத்தை அவர்கள் கேட்டு எதிரி குற்றவாளியா அல்லவா என்று முடிவு

கூறுவார்கள். அநேக ராஜ்யங்களில் இந்த விசாரணை ஜூரியின் அபிப்பிராயம் ஏகமனதாயிருக்கவேண்டும். ஜூரர்கள் சரியான முடிவிற்கு வர உதவுவதற்காக நீதிபதி சட்டத்தை அவர்களுக்கு விளக்கிக் கூறவேண்டும்.

எதிரி வக்கீல் வைத்து வாதாடுவதற்கு பணம் செலவு செய்ய இயலாதவனுயிருந்தால் பொதுச் செலவில் அவனுக்கு வக்கீல் வைத்துக் கொடுத்து அவன் நிரபராதி என்று நிரூபிக்க முயலுவதற்கு ராஜ்ய சர்க்கார் உதவி செய்யும். சர்க்கார் வக்கீல் எதிரி குற்றவாளி என ருசு செய்வதற்காக சர்க்காரின் கட்சியை எடுத்துக் கூறுவார்.

* * *

(14)

நகர அரசாங்கம்

பல வகைகளில் ராஜ்ய அரசாங்கத்திற்கும் அதற்குட்பட்ட ஸ்தல அரசாட்சி ஸ்தாபனங்களுக்கும் உள்ள உறவு சமஷ்டி அரசாங்கத்திற்கும் ராஜ்ய அரசாங்கத்திற்கும் உள்ள உறவு போன்றதே. ஸ்தல ஸ்தாபனங்களின் நோக்கங்களையும் அதிகாரங்களையும் விவரிக்கும் சாஸனங்களை நகர அரசாங்கங்கள் ராஜ்ய ஆட்சியினரிடமிருந்து பெறுகின்றன. எனினும் நகர ஆட்சி ராஜ்ய அரசாங்கத்திற்கு அடிமைப்பட்டதல்ல; பல துறைகளில் அவைகளுக்கு சுயேச்சையாக காரியங்கள் செய்வதற்கு இடமிருக்கிறது.

அரசாங்கத்தின் ஆட்சி எல்லை குறுகக் குறுக அது நிர்வகிக்கும் மக்களின் பிரத்தியேக தேவைகளை மக்களுடன் ஒன்றி பூர்த்தி செய்வதே அதன் வேலையாகிவிடுகிறது. சமஷ்டி, ராஜ்ய அரசாங்கங்களைவிட நகர ஆட்சி மன்றங்கள் மக்களின் அன்றாடத் தேவைகளை கவனித்து திருப்தி செய்யவே பெரிதும் பாடுபடுகின்றன. அமெரிக்காவின் பொருளாதார சமூக முன்னேற்ற பாதைகள் வகுக்கப்பட்ட முறைகளின் விளைவாக பெரிய நகரங்கள் அநேகம் ஏற்பட்டுவிட்டதால் அநேக நகராட்சி மன்றங்கள் சில ராஜ்யங்களைவிட அதிகமாயுள்ள ஜனக்கூட்டத்திற்குச் சேவை செய்ய வேண்டியிருக்கிறது. 1940-ல் 48 ராஜ்யங்களில் 3 ராஜ்யங்களில்தான் நியூயார்க்கின் 7,400,000 மக்களை விட அதிக ஜனத்தொகை இருந்தது. 1940-ல் சிகாகோவின் ஜனத்தொகையைவிட அதிக ஜனங்கள் கொண்ட ராஜ்யங்கள் 38 தான்.

ஏராளமான மக்கள் நகரங்களில் திரண்டு வாழ்வதால், குறைந்த ஜனத்தொகைகள் உள்ள ராஜ்ய அரசாங்கங்களைவிட,

அதிக சிக்கலான, சிரமம் தரக்கூடிய பிரச்னைகளை நகராட்சி மன்றங்கள் கவனித்துத் தீர்க்க வேண்டியிருக்கின்றன. அமெரிக்க ஜனாதிபதிக் கடுத்தபடியாக நியூயார்க் மேயருக்குக் கஷ்டமான நிர்வாகப் பிரச்னைகளைத் தீர்க்கும் பொறுப்பு இருக்கிறது என்ற பொதுஜன வாக்கில் ஓரளவு உண்மை இருக்கிறது. அமெரிக்காவின் பாதி ஜனங்கள் நகரங்களில் வசிக்கிறார்கள் என்பதிலிருந்து, அமெரிக்க அரசாங்க அமைப்பில் நகராண்மை மன்றம் எவ்வளவு முக்யத்துவம் அடைந்துவிட்டது என்பதை மதிப்பிடலாம்.

நகர ஆட்சியின் நோக்கம்.

சமூகத்தினர் செவ்வனே வாழ்ந்து வேலை செய்ய தகுந்த இடமளிப்பதுதான் நகராட்சியின் நோக்கம் என்று பொதுப் படையாகக் கூறலாம். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் நகராட்சி அநேகமாக நேரிடையாகவும், சில விஷயங்களில் மேற்பார்வை செலுத்தும் வகையிலும் பல காரியங்களில் ஈடுபட வேண்டியிருக்கிறது. நூறாயிரக்கணக்கான மக்களின் அன்றாட அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்யும் கருவியை அளிப்பது மகத்தானதும் சிக்கல் நிறைந்த காரியமுமாகும். உதாரணமாக போதிய அளவு சுத்தமான குடி தண்ணீரை குழாய்கள் மூலம் நகருக்குள் கொணர்ந்து எல்லா வீடுகளுக்கும் சப்ளை செய்வது முனிசிபல் நிர்வாகத்தின் பொறுப்பு; இந்த தண்ணீர் திட்டம் செவ்வனே பயனளிக்கும்படி வேலை செய்யும் நகர ஸ்தாபனத்தில் பம்பிங் ஸ்டேஷன்களைக் கட்டி நிர்வகிக்கும் பல யந்திர நிபுணர்கள், எஞ்ஜினியர்கள், வடிகட்டும் யந்திரம் போன்ற பல நுட்பமான கருவிகளை கையாளும் நிபுணர்கள், பூமிக்கடியில் குழாய்ப் போட்டுப் பராமரிக்கும் சிப்பந்திகள் போன்ற பலர் இருக்கின்றனர்.

பெரு நகரங்களும், நகரங்களும், ஸ்தல பிரச்னைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்கின்றனர்

ஆரோக்கியமும் சுகாதாரமும் : நகரத்திற்கு தண்ணீர் எவ்வளவு அவசியமோ அதே மாதிரி ஆரோக்கியம் நிறைந்த சுகாதார சூழ்நிலையுள்ள வாழ்க்கை வசதிகளும் இன்றியமையாதனவாகும். இதற்காக, கெட்டுப்போன மாமிசம், பாழ்பட்ட உணவு, அசுத்தமான அல்லது தண்ணீர் கலந்த பால் விற்பனையாகாமல் மக்களைப் பாதுகாக்க ஒவ்வொரு நகர ஆட்சி மன்றமும் மேற்பார்வை பார்க்கும் உத்தியோகஸ்தர் குழாமை வைத்திருக்கிறது. சுத்தமான தின்பண்டங்கள், பானங்கள் கிடைப்பதற்காக ஹோட்டல்கள், ரொட்டிக் கிடங்குகள், பானங்கள் விற்குமிடங்கள் அடிக்கடி சோதனை செய்யப்படுகின்றன. அநேக நகரங்களில் குழந்தைகள் ஆரோக்கியத்தையும் பற்களையும் சோதனை செய்யும் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. பள்ளிக்கூடங்களில் குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க நர்ஸுகள் இருக்கிறார்கள். இந்த ஆஸ்பத்திரிகளில் ஏழைகளுக்கு இலவச வைத்திய வசதியும் அளிக்கப்படுகிறது.

ஜனங்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க அநேகமாக ஒவ்வொரு நகராட்சி மன்றமும் ஒரு ஆரோக்கிய இலாகா நடத்துகிறது. நகர சுகாதார இலாகாவின் மிக முக்கியமான பணி தொத்துநோய்கள் பரவாமல் தடுப்பது. நோய்கள் கண்ட இடத்திற்கு மற்றவர்கள் வராமலும், அங்கிருந்து யாரும் வெளியே போகாமலும் தடுக்கவேண்டும். நோய் பரவாமல் தடுப்பதற்கு ஆன விசேஷ வைத்திய உதவி தருகின்றனர். ஏதாவது நோய் பரவக்கூடிய இடத்தில் மருந்துகள் தெளித்து நோய் பரவாமல் தடுக்கவேண்டும். மேலும் தொத்து நோய் கண்டவர்கள் பெயர்களை ஆரோக்கிய இலாகாவுக்கு எல்லா டாக்டர்களும் தெரிவித்தே யாகவேண்டும். ஆரோக்கிய அதிகாரிகள் ஜனன மரணக் கணக்கு வைத்திருப்பதுடன் நோய்கள் மரணங்களுக்கான காரணங்களையும் ஆராய்ச்சி செய்கின்றனர். சில சமயம் மரணத்தின் காரணத்தை அறிவதன் மூலம் டாக்டர்கள் தொத்து நோய்களைத் தடுக்கின்றனர். குப்பை

கூளம், கழிபொருள்களை அவ்வப்போது அப்புறப்படுத்துவதில் நகராண்மைக் கழகங்கள் எப்பொழுதும் கவனம் செலுத்து கின்றன. நகர சுத்திக்கு இது அவசியமாயிருப்பதுடன் நோய் காணுமலும் தடுக்க உதவுகிறது. நகராட்சியினர் சாக்கடை கட்டி அவைகளை ஒழுங்காக வைத்திருப்பதுடன், மழைத் தண் ணீர் வடிவதற்கும் ஏற்பாடு செய்கின்றனர். நல்ல சாக்கடை கள் வடிகால்களின்றி ஏராளமான பேர் நகரங்களில் நெருக்க மாக வாழ்ந்துகொண்டு ஆரோக்யமாகவும் வாழ முடியாது என்பதை நவீன ஆரோக்கிய சாஸ்திர நிபுணர்கள் அறிந்திருக் கின்றனர். ஒரு நகரத்தை சுத்தமாகவும், நிசப்தமாகவும் அழகாகவும் வைத்திருக்க நகராட்சி மன்றம் புழுதி, சப்தம், புகை முதலியவைகளைக் குறைக்க தன்னுலானதைச் செய்கின்றது.

நகர ரஸ்தா இலாகா: நகரத்தின் ரஸ்தாக்கள் இந்த இலாகா வின் பொறுப்பிலிருக்கிறது. இது தெருக்களையும் நடைபாதை களையும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருக்கின்றது. புதிய ரஸ்தாக்கள் அமைப்புக்களையும், பழையவைகளின் மராமத்தை யும் இந்த இலாகாதான் கவனிக்கிறது. பிரயாண நெருக் கடியைத் தவிர்த்து, எல்லோரும் சௌகரியமாக பிரயாணம் செய்வதற்காக முற்போக்கான இந்த இலாகாக்கள் போக்கு வரத்து சாதனங்களைக்கட்டி அமைத்து, ஜனநடமாட்டத்தை ஒழுங்குபடுத்தி விபத்து நேராமல் தடுக்க தரைக்கடிப் பாலங்கள், பாலங்கள் முதலியவைகள் கட்டுகிறுர்கள்.

போலீஸ் இலாகா: முனிசிபல் நிர்வாகத்தில் போலீஸ் இலாகா ஒரு முக்கியமான பகுதி. போலீஸாரின் கடமை அமைதியை நிலைநாட்டுவது, சட்டம் மீறுபவர்களைக் கண்டுபிடித்து கைது செய்வது, இவர்களுடைய கலகாஸ்பதமான நடத்தைகளிலிருந்து சட்டத்திற்குட் பட்டு நடக்கும் மக்களைக் காப்பாற்றுவது. அநேக போலீஸ் இலாகாக்களில் நகரம் பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ் வொரு ஜில்லாவுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கை போலீஸாரை

நியமிக்கின்றனர். ஒவ்வொரு ஜில்லா அல்லது பகுதியில் ஒரு போலீஸ் தலைமை காரியாலயம் இருக்கிறது. இது நகர மத்திய தலைமைக் காரியாலயத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்டு அதற்குப் பொறுப்பு வகிக்கிறது. போலீஸ் உடைதரித்த ஜில்லா அல்லது பகுதி படையினர் கால்நடையாக சுற்றி பந்தோபஸ்து வேலை பார்க்கின்றனர். சில சமயம் இந்தப் படையினருக்கு ரேடியோ வசதியுள்ள ரோந்துகார்கள் கொடுக்கப்படுகின்றன. இது தவிர துப்பறியும் போலீஸார், போலீஸ் உடையின்றி சாதா உடையில் உளவு போலீஸாரும் இந்தப் பகுதிப் படையிலிருக்கின்றனர்.

பெரிய நகரங்களில் போலீஸ் தலைமை காரியாலயங்களில் குறிப்பிட்ட போலீஸ் வேலையில் பயிற்சி பெற்ற துப்பறியும் போலீஸார் இருக்கின்றனர். ஜில்லா அல்லது பகுதி போலீஸ்காரன் தனது ஜில்லாவை நன்கு அறிந்திருப்பதனால் எப்படி நல்ல சேவை செய்ய முடிகிறதோ அதே மாதிரி குற்றம் துலக்கும் அனுபவமுள்ள போலீஸாரின் பிரத்தியேக சேவையினால் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதும், குற்றம் நிகழாமல் தடுப்பதும் சாத்தியமாகிறது. போலீஸ் உடை தரித்தவர்கள் ஜன, வாகன நடமாட்டத்தை ஒழுங்கு செய்கின்றனர். இன்னும் பல்வேறு விதமான வேலைகள் செய்கின்றனர்.

அவர்களுடைய சேவையின் தன்மையினால் அநேக போலீஸ்காரர்கள் மிகுந்த கஷ்டமான தேக உழைப்புக்குள்ளாகிறார்கள். அவர்கள் அமுல் நடத்தும் சட்டஞானம்பற்றி பரீட்சைகளிலும் அவர்கள் தேறியிருக்கவேண்டும்.

தீ அணைக்கும் நகரப் பாதுகாப்புப் படை : நகரப் பகுதியில் கட்டிடங்கள் நெருக்கமாயிருப்பதனால் தீப்பிடிக்கும் அபாயம் சகஜமாயிருக்கிறது. தீ விபத்தை எதிர்த்து நகர ஆட்சியினர் இருவித போராட்டம் நடத்துகின்றனர். ஒன்று தீ விபத்தேற்படாமல் தடுப்பது. ஒரு கட்டிடம் கட்டுவதற்கு முன் அதன் சொந்தக்காரர் நகராண்மைக் கழகத்தினரிட

மிருந்து அனுமதி பெறவேண்டும். நகரமைப்புத் திட்ட விதிகளைத் திருப்தி செய்யாத கட்டிட திட்டங்களுக்கு அனுமதி யளிப்பது கிடையாது. தீப்பற்றுவதற்குக் காரணமாயிருக்கக் கூடிய கட்டிட சாதனங்களை உபயோகிப்பவர்களுக்கு அனுமதி யளிக்கலாகாது என்று விதி இருக்கிறது. மின்சார கம்பிகள் போட்டு அவைகள் தீப்பிடிப்பதற்குக் காரணமாகாதபடிக்கு மூடப்படவேண்டும். சுவற்றிற்குள் தீயைத் தடுக்கும் சாதனங்கள் அமைக்கப்படவேண்டும். மேலும் கட்டிட திட்டத்தில் தகுந்த விரிவான வாயிற்படிகளும் பாதுகாப்பு சாதனங்களும் இருப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கவேண்டும்.

கட்டப்பட்ட கட்டிடங்கள் அவ்வப்போது சோதிக்கப்படுகின்றன. மின்சார கம்பிகள், அடுப்பு வகையறுக்கள், புகைப் போக்கிகள் பரீட்சிக்கப்படுகின்றன. வாயு எண்ணெய், தீப் பற்றக்கூடிய பொருள்கள் இருப்பதை பரிசோதகர்கள் ஜுதி பார்க்கிறார்கள். தீப்பற்றுவதற்குக் காரணமாயுள்ள கந்தைகள் குப்பைகளை அப்புறப்படுத்தும்படி அடிக்கடி மக்களுக்கு வேண்டுகோள் விடப்படுகிறது.

மேலும் தீப்பிடித்தால் அணைப்பதற்கான படையினரையும் நகராட்சியினர் வைத்திருக்கின்றனர். இவர்களுடைய ஸ்தாபனத்தின் அமைப்பு போலீஸ் ஸ்தாபனத்தின் அமைப்பு மாதிரிதான். தீயணைக்கும் பகுதியினர் முனிசிபல் எல்லையின் பல பகுதிகளில் இருக்கின்றனர். 24 மணி நேரமும் விழிப்புடன் இருக்கின்றனர்.

கல்விக்கு நகர் ஏற்பாடு செய்கிறது : ஒவ்வொரு நகரும் ஒரு பள்ளி திட்டம் வைத்திருக்கிறது. இதனால் பலதரப்பட்ட ஆரம்ப, உயர்தரப்பள்ளிகளும் அதற்கான கட்டிடங்களும், முதியோருக்குப் பிரத்தியேக கல்விச்சாலைகளும் வைத்து நடத்தவேண்டியிருக்கிறது. அநேகமாக இந்த கல்வி திட்டத்தில் தொழில் கல்வியும், செவிடு குருடர்கள், அங்கஹீனர்கள் ஆகியோருக்குப் பிரத்தியேக கல்வியும் அளிக்க ஏற்பாடு செய்யப்படுகின்றது. புத்தக நிலையங்கள், பொது

பிரசங்க மண்டபங்கள், உபாத்தியாயர் போதனுசாலைகள் வைத்தும் கல்வியைப் பரப்புகின்றனர்.

நோயாளிகள், ஏழைகளை நகரம் கவனிக்கிறது: நோயாளிகள், முதியோர், அநாதைகள், முதலிய தங்கள் நலனைத் தாங்களே பார்த்துக்கொள்ள முடியாதவர்கள் நலனை கவனிப்பது சமூகத்தின் கடமை. மூளைக் கோளாறுள்ளவர்கள் பலஹீனமானவர்கள், அநாதைகள், ஏழைகள் முதலியோரைக் காப்பதற்கானது செய்வதும் சமூகத்தின் பொறுப்பு. குழந்தைக் குற்றவாளிகளைத் திருத்துவதற்கும் அநேக நகரங்கள் ஏற்பாடு செய்திருக்கின்றன.

நகராட்சிகள் எதிர்காலத்திற்கு திட்டமிடுகின்றன: அமெரிக்காவின் பழைய நகரங்களில் பல சீரான எதிர்கால திட்டமின்றியே வளர்ந்துவந்தன. ஆனால் சமீப காலத்தில் எதிர்கால அபிவிருத்திக்கு ஆழ்ந்து சிந்தித்து தீட்டப்பட்ட திட்டங்கள் தேவை என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. திட்ட இலாகாக்கள் சமூகங்களின் பலதரப்பட்ட வாழ்க்கை அம்சங்களைக் கவனிக்கின்றன. எதிர்கால தண்ணீர் சப்ளை, கழிநீர் ஒழித்தல், தெரு அமைப்பு, பிரயாண எல்லை வசதிகள், விமான நிலையங்கள், கட்டிட அமைப்பு முறை எல்லாம் திட்ட இலாகாவின் மேற்பார்வையிலிருக்கின்றன. நகரமைப்பு திட்டக்காரர்கள் நகரங்களில் ஒரு பகுதியை வாசஸ்தலமென்றும், மற்றதை தொழில் அபிவிருத்திப்பகுதி என்றும் பிரித்திருக்கிறார்கள். இந்தப் பாகுபாட்டின் நோக்கம் நகர அமைப்பைச் சிறப்பாகச் செய்வதும், நிலப் பரப்பையும் மற்ற வசதிகளையும் தற்போதுள்ள எதிர்காலத்தில் வளரக்கூடிய ஜனங்களின் நன்மையைப் பெருக்குவதுதான்.

பொழுது போக்குக்கு நகர ஏற்பாடு: நகரங்களிலுள்ள ஜன நெருக்கமும், நகரத்தில் நிலத்தின் விலை உயர்வும், மக்களுக்குப் பொழுதுபோக்கு வசதி அளிக்க வேண்டுமானல் அதற்கு சமூக ரீதியில்தான் ஏற்பாடு செய்யவேண்டும் என்பதை

வற்புறுத்திவிட்டது. நவீன அமெரிக்க நகரங்களின் எல்லேக்குள் ஜனங்கள் காற்றேட்டமாக உலாவிவர நந்தவனங்கள், விளையாட்டு மைதானங்கள், நீச்சு நீர் நிலையங்கள் மக்கள் இலவசமாக அனுபவிப்பதற்காக வைத்து நடத்தப்பட்டுவருகின்றன. அநேக நகரங்களில் காலி மைதானங்கள், டென்னிஸ் பந்தாடுமிடங்களும் இருக்கின்றன. எல்லா நகரங்களிலும் நூல் நிலையங்களும், பலதரப்பட்ட காட்சிசாலைகளும், ஓவிய காட்சிப் பகுதிகளும் இருக்கின்றன.

பொதுஜன வசதிகள்—நகர் ஏற்பாடு : சில நகரங்களில் எரிவாயு, மின்சார, டெலிபோன் வசதி, சொந்த லாபத்திற்கு ஓடும் பஸ் போக்குவரத்துபோன்ற அத்தியாவசிய வசதிகள் அளிக்கும் கம்பெனிகள் இருக்கின்றன. சொற்ப செலவில் நல்ல நன்மை கிடைக்கும் இந்த தனிப்பட்ட கம்பெனிகளை நகராட்சிகள் ஒழுங்குபடுத்துகின்றன. சில நகரங்களில் ஆட்சியினரே இம் மாதிரி வசதி வழங்கும் பொறுப்பை ஏற்று நடத்துகின்றனர்.

(15)

நகர அரசாங்கத்தின் அமைப்பு

அமெரிக்காவின் நகரங்களில் பலவிதமான அரசாட்சி அமைப்புகள் இருக்கின்றன. ஆனால் நகர வேலைகளைத் திட்டமிட்டு நடத்த நகரம் ஒவ்வொன்றிலும் பொறுக்கியெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், அமைப்பின் தலைவராக ஒரு மேயர் அல்லது மானேஜரும் இருக்கின்றனர். மேலும் பலவிதமான இலாகாக்கள் நிர்வாக வேலையைப் பகிர்ந்து செய்கின்றன; இவர்களுக்குக் கீழ் வேலை செய்யும் அநேக சிப்பந்திகள் இருக்கின்றனர்.

நகர ஆட்சி முறையில் மூன்றுவிதமான பாணி இருக்கிறது. சில நகரங்களில் பிரதம நிர்வாகியாக ஒரு மேயரையும், சட்டமியற்றுவதற்காக ஒரு கவுன்ஸிலையும் தேர்ந்தெடுக்கின்றனர். கவுன்ஸில் அங்கத்தினர்களுக்கு ஆல்டர்மென் என்று பெயர். இவர்கள் பல்வேறு ஜில்லாக்கள் அல்லது வார்டுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சில நகரங்களில் எல்லா வோட்டர்களும் சேர்ந்து எல்லா ஆல்டர்மென்களையும் தேர்ந்தெடுக்கின்றனர். மற்றும் சில நகரங்களில் வோட்டர்கள் உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இந்த உத்தியோகஸ்தர் குழாமுக்கு கமிஷன் என்று பெயர். மற்றும் சில நகரங்களில் வோட்டர்கள் சட்டமியற்றும் சில பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். இந்தப் பிரதிநிதிகள் நகர ஆட்சியின் பிரதம நிர்வாகியாக ஒரு மானேஜரைத் தேர்ந்தெடுக்கின்றனர். இந்த மூன்று அரசாட்சிகள் வருமாறு விவரிக்கப்படுகின்றன.

மேயர்-கவுன்ஸில் முறை.
கமிஷன் ஆட்சி முறை.
நகர-மானேஜர் முறை.

இந்த மூன்று முறைகளிலும் உள்ள பல அம்சங்கள் அடங்கிய ஆட்சிமுறையை அநேக நகரங்கள் அமைத்திருக்கின்றன.

மேயர்-கவுன்ஸில் முறை

சுமார் 50 வருஷங்களுக்கு முன் எல்லா அமெரிக்க நகரங்களும் இந்த மேயர்-கவுன்ஸில் அமைப்பைத்தான் உபயோகித்து வந்தன. அமெரிக்காவிலிருந்த புராதனமான நகராட்சி முறை இது. அநேக வகைகளில் இது தேச, ராஜ்ய ஆட்சி முறைகளை ஒத்திருக்கிறது. மேயர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏராளமான அதிகாரங்கள் உள்ளவராயிருக்கிறார். வழக்கமாக இவர்தான் நகராட்சியின் இலாகா தலைவர்களையும், சில சமயம் அதற்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களையும் நியமிக்கிறார். ஆனால் சில சந்தர்ப்பங்களில் இவர் செய்யும் முக்கியமான நியமனங்களை நகர கவுன்ஸில் அங்கீகரிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம். மேயர் நகர சட்டங்களில் கையெழுத்திடலாம் அல்லது நிராகரிக்கலாம். நகர சட்டங்களை அவர்தான் அமுல் நடத்தவேண்டும்; இதில் அவருக்கு உதவி செய்ய அவருக்குக் கீழ் பல உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றனர். சில சமயம் அவர் நகரத்தின் வரவு செலவு திட்டத்தைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது. இந்த திட்டந்தான் நகருக்காக எவ்வளவு பணம் வசூல் செய்யவேண்டும், செலவு செய்ய வேண்டும், என்பதுபற்றி கவுன்ஸிலுக்கு அவர் செய்யும் சிபார்சு.

இந்த நகராட்சி முறையில் கவுன்ஸில்தான் சட்டமியற்றும் பகுதி. கவுன்ஸில் சட்டங்களை நிறைவேற்றுகின்றன. இவைகளுக்குப் பெயர் “ஆர்டினென்ஸ்கள்”. ஆனால் கவுன்ஸில் இயற்றும் சட்டம் நகர அமைப்பு சாஸனத்திற்கோ, ராஜ்ய அல்லது தேச சட்டங்களுக்கோ, அல்லது ராஜ்ய அல்லது தேச அரசியலமைப்புகளுக்கோ முரணாயிருக்கலாகாது. ஜனங்களிடமிருந்து வசூலிக்கவேண்டிய வரி விகிதத்தை கவுன்ஸில் நிர்ணயிக்கிறது. மேயரின் யோசனையின்பேரில், ஒவ்வொரு

நகர நிர்வாக இலாகாவும் எவ்வளவு பணம் செலவு செய்ய லாம், எந்த காரியங்களுக்காக செலவு செய்யலாம் என்பதை கவுன்ஸில் முடிவு செய்கிறது.

கமிஷன் ஆட்சி முறை.

மேயர்-கவுன்ஸில் திட்டத்தைவிட கமிஷன் ஆட்சி முறை நவீனமானது. இந்த முறைப்படி நகர வோட்டர்கள் தங்கள் பிரதிநிதிகளாக மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கமிஷனர் களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இவர்கள் ஜில்லாக்கள் அல்லது வார்டுகளிலிருந்தல்லாமல் வழக்கமாக நகரம் பூராவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நகராட்சியின் சட்டமியற்றும், சட்ட அமுல் செய்யும் இரு பணிகளையும் இவர்கள் செய் கிறார்கள். இவர்கள் வரி விகிதத்தை நிர்ணயித்து வசூலான பணத்தை எப்படி செலவு செய்கிறது என்றும் முடிவு செய் கிறார்கள். பல கம்பெனிகளுக்கு வியாபாரம் செய்ய இவர்கள் அனுமதியளித்து அவைகள் நடைமுறையையும் மேற்பார்வை பார்க்கின்றனர். இவர்கள் கூட்டத்திற்கு ஒரு கமிஷனர் தலைமை வகிக்கிறார். தலைமை வகிப்பவருக்கு மேயர் என்று பெயர். ஆனால் தலைமை வகிப்பவருக்கு மற்ற கமிஷனர்களை விட அதிகப்படி அதிகாரம் கிடையாது.

நகரத்தின் வேலை பல இலாகாக்களாக நடத்தப்படுகின்றன. பொதுஜன பாதுகாப்பு, பொதுநல அபிவிருத்தி, நிதி, நந்த வனம், பொது சொத்துக்கள் முதலியவைகளின் நிர்வாக சம்பந்தமாக இலாகாக்கள் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கமி ஷனரும் ஒன்று அல்லது அதற்கதிகமான இலாகாக்களை நிர் வகித்து அதற்கான பொறுப்பு வகிக்கிறார்.

நகர-மானேஜர் முறை.

நகர-மானேஜர் முறை முதல் முதலாக 1908-ல் வர்ஜீனியா ராஜ்யத்தில் ஸ்டாண்டன் எனும் நகரத்தில் அமுலுக்கு வந்தது. இதற்குப் பிறகு மற்றும் பல நகரங்களில் இம்முறை ஏற்கப் பட்டு நடந்துவருகிறது. இந்த முறைப்படி நகர மக்கள் ஒரு

கோஷ்டி அல்லது கவுன்ஸிலைத் தேர்ந்தெடுக்கின்றனர். இந்த கவுன்ஸில் சட்டங்கள் இயற்றி, பொதுப்படையான பல திட்டங்கள் வகுக்கிறது. இந்த கவுன்ஸிலுக்கு, மிகுந்த அனுபவமும் பயிற்சியுமுள்ள கெட்டிக்காரர் ஒருவரை பிரதம நிர்வாகியாக சம்பளத்திற்கு அமர்த்தும் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலைக்குத் தகுதியுள்ள சிறந்தவரை நகரிலிருந்தோ வெளியிலிருந்தோ நியமிக்கும் அதிகாரத்தை மக்கள் இந்த கவுன்ஸிலுக்கு அளித்திருக்கின்றனர். இந்த நகர மானேஜர், இலாகா தலைவர்களையும் மற்றும் சில உத்தியோகஸ்தர்களையும் நியமிக்கிறார்.

கவுன்ஸில் நிறைவேற்றிய சட்டங்களை அமுல் நடத்துவது மானேஜரின் பொறுப்பு. நகரத்தின் தேவைகளைப்பற்றி கவுன்ஸிலுக்கு அறிவிப்பதுடன் நகரின் பணத்தை எப்படிச் செலவழிப்பது, எவ்வாறு சீர்திருத்தங்கள் செய்வது என்பன பற்றியும் கவுன்ஸிலுக்கு யோசனை கூறுவார். அநேகமாக கவுன்ஸில் அவருடைய வேலையில் திருப்தியாயிருக்கும்வரையில் அவர் பதவி வகிப்பார்.

நகராட்சியின் பிடி மக்கள் கையிலேயே இருக்கிறது; ஏனெனில் மானேஜரை எப்பொழுது வேண்டுமானாலும் பதவியிலிருந்து நீக்கிவிடலாம். மேலும் சில நகரங்களில் கவுன்ஸிலர்களை வோட்டர்களே பதவியிலிருந்து விலக்கிவிடலாம். எப்படியும் அவர்கள் வேலையில் திருப்தி ஏற்படாவிட்டால் அடுத்த தேர்தலில் அவர்களை வோட்டர்கள் தோற்கடித்துவிடலாம்.

நகர கோர்ட்டுகள்.

ஒவ்வொரு நகரத்திலும் அதற்கென கோர்ட்டுகள் இருக்கின்றன. சில சமயத்தில் நகர நீதிபதிகள் நகர வோட்டர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மற்றும் சில சந்தர்ப்பங்களில் நீதிபதிகளை நகர கவுன்ஸிலோ, கமிஷனோ, அல்லது ராஜ்ய கவர்னரோ அல்லது இவர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம்பெற்ற தனி நபரோ கோஷ்டியோ தேர்ந்தெடுக்கலாம்.

பெரிய நகரங்களில் ஸிவில், கிரிமினல் அல்லது ஜூரி விசாரணை வழக்குகளை விசாரிக்கப் பலவகைப்பட்ட கோர்ட்டுகள் இருக்கின்றன.

நகரத்தின் சட்டமியற்றும் அதிகாரம்.

ஆர்டினன்ஸ்ஸஸ் என அழைக்கப்படும் சட்டங்களில் பல தரப்பட்டவை உண்டு. இவற்றில் சில நகர அரசாங்க அமைப்பு சம்பந்தமானவை; மற்றும் சில பண வசூல், செலவு, பொதுக் கட்டிடங்கள் பராமரிப்பு, நந்தவனங்கள், தெருக்கள் பாதுகாப்பு சம்பந்தமானவை; இன்னும் சில தண்ணீர் சப்ளை சாக்கடை, கழிநீர் போக்கு சம்பந்தமானவை; மேலும் சில மக்கள் ஆரோக்கியம், பத்திரம், வாழ்க்கை சம்பந்தமானவை.

பொதுவாக தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் கம்பெனிகள் எரிவாயு, மின்சார வெளிச்சம், டெலிபோன், பஸ்கள், கார்கள் முதலிய வசதிகள் அளிக்கின்றன. இம்மாதிரி கம்பெனிகள் ஒவ்வொன்றும் நடப்பதற்காக நகராட்சியினரிடமிருந்து அனுமதி சாஸனம் பெறவேண்டும். இந்த சாஸனம்தான் கம்பெனி நடப்பதற்கு அதிகாரமளிக்கிறது.

(16)

மற்ற ஸ்தல ஆட்சிகள்

அமெரிக்க ஜனங்களின் எண்ணிக்கை குறைவாகவும் அவர்கள் நெருக்கமின்றிப் பரவலாகவும் வசித்த முன்காலத்தில், இன்று அரசாங்க இலாகாக்களினுல் மக்களுக்கு புரியப்பட்டு வரும் சேவையை தனி நபரோ அல்லது சிறு கோஷ்டியினரோ செய்துவந்தனர். 13 குடியேற்ற நாடுகளிலிருந்த காலத்தில் நகரங்களில் போலீஸ் படையே இல்லாமலோ, அப்படியிருந்தாலும் ஒருசில போலீஸ்காரரோ இருந்தனர். பிரஜைகளே தங்களுடைய வீடுகளையும் சொத்துக்களையும் பாதுகாத்துவந்தனர். நகராட்சியினர் தெரு விளக்குகளும் போடவில்லை, தெரு சுத்தி செய்பவர்களையும் நியமிக்கவில்லை.

இன்று, சிறு நகரங்களில்கூட தங்களுக்கு நூற்றுக்கணக்கான சேவைகள் செய்யும்படி அரசாட்சியினரின் உதவியை மக்கள் நாடுகின்றனர். தாங்களே இந்த சேவைகளைச் செய்து கொள்வதற்கு பதிலாக் அவைகளுக்காக வரிகள் செலுத்தத் தயாராயிருக்கின்றனர். தங்களுடைய ஆட்சியினர் தெரு விளக்குகள்போட்டு, மதில் சுவர்கள் எழுப்பவேண்டும் என்றும் விரும்புகின்றனர். தெருக்களையும் சாக்கடைகளையும் சுத்தம் செய்ய வேண்டுமெனக் கோருகின்றனர். தங்களுடைய வீடுகளைப் பாதுகாக்க போலீஸ் உதவி தேடுகின்றனர். சட்டம் மீறுகிற குற்றவாளிகளைக் கைதுசெய்ய ஷெரிப்கள் வேண்டுமென்கின்றனர். ஒழுங்கான அமைதியான வாழ்வுக்குத் தேவையான சகல வசதிகளையும் அரசாங்கம் வழங்கவேண்டும் என விரும்புகின்றனர்.

இம்மாதிரி வசதிகளை கவுண்டி, நகர, கிராம ஆட்சியினர் அளிக்கின்றனர். கவுண்டி என்பது ராஜ்யத்தின் ஒரு பகுதி.

அதில் அநேக நகரங்களும் கிராமங்களும் அடங்கியிருக்கின்றன. நகர, கிராம ஆட்சி அமைப்புதான் சிறியவை.

கவுண்டி ஆட்சி மன்றம்.

இந்த ஆட்சி மன்றம் பலவித சேவைகள் செய்கின்றது. உதாரணமாக கவுண்டி—ஸ்தல தேர்தல்களை நடத்தி ராஜ்ய, தேசத் தேர்தல் நடக்க உதவுகிறது.

வழக்குகள் வாதிக்கப்பட்டு தீர்ப்புக்கூறும் கோர்ட்டுகளை நடத்துகின்றன. இந்த கோர்ட்டுகள் குற்றவாளிகளை விசாரித்து தண்டிக்கின்றது. உயில் சொத்து சம்பந்தமான தகராறுகளைத் தீர்த்துவைக்கின்றது.

வரி விகிதத்தை நிர்ணயித்து அதை வசூலிக்கிறது; அரசாங்கங்களுக்கு வரி வசூலிப்பதில் உதவி புரிகின்றது.

தனக்கென, சில சமயம் அரசாங்க உதவிபெற்று பள்ளிக் கூடங்கள் கட்டி பராமரிக்கின்றது.

தனது எல்லைக்குள் நடக்கும் ஜனன, மரண, விவாகக் கணக்குகள் வைத்துக்கொள்கின்றது.

ஜனங்களின் தஸ்தாவேஜுகளுக்கு நகல்கள் வைத்திருக்கின்றது. இவைகள் சொத்து பாத்தியதை, அடமானம், கடன் சம்பந்தமானவை. இவைகளின் மூலம் கடன் கொடுத்தவர்கள் உரிமைகளைப் பாதுகாத்து, நீதிஸ்தலங்களின் தீர்ப்புகளையும் நிறைவேற்றுகிறது.

தன் எல்லையிலுள்ள ஏழைகள், வயதானவர்கள், அனாதைகள் முதலியோரைப் பாதுகாக்கிறது.

லைசென்சுகளும் பெர்மிட்டுகளும் வழங்குகிறது. தனது எல்லைக்குள் ரஸ்தாக்கள் அமைத்து, மராமத்து செய்து, பாலங்கள், பாதாள வழிகள் அமைக்கிறது.

நீதிமன்றம், சிறைச்சாலை போன்ற பொதுக் கட்டிடங்களை வைத்து பாதுகாக்கிறது.

ஒவ்வொரு கவுண்டிக்கும் தலைநகர் இருக்கிறது. அங்கே தான் ஆட்சிமன்றம் இருக்கிறது. கவுண்டி உத்தியோகஸ்தர்களின் வாசஸ்தலம் தலைநகரிலேயே இருக்கிறது. அவர்கள் அநேகமாக, ஆட்சிமன்றத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் வசிக்கின்றனர்.

கவுண்டி அரசாங்கத்தின் வேலையை ஒரு கமிஷனர் குழாமோ, மேற்பார்வையாளர்களோ கவனிக்கின்றனர். இந்த குழாம் பெரிதாகவோ சிறியதாகவோ இருக்கலாம். சிறு தொகையினராயிருந்தால் அவர்களை கவுண்டியிலுள்ள எல்லா வோட்டர்களும் தேர்ந்தெடுக்கின்றனர், தொகை அதிக மாயிருந்தால் நகரங்களின் பிரதிநிதிகளடங்கியதாயிருக்கும்.

சில சமயம் தேர்ந்தெடுக்கப்பட்ட, மற்ற சமயங்களில் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் குழாத்தினர் வேலை நடப்பதில் உதவிபுரிகின்றனர்.

வழக்குகள் நடத்தும் அட்டார்னிகள்--ஷெரீப்கள்--காரொனர்கள்

கவுண்டி உத்தியோகஸ்தர்களில் முக்கியஸ்தரான சர்க்கார் அட்டார்னிதான் சட்டத்தை அமுல்நடத்துகிறார். சட்டம் மீறியவன் என சந்தேகிக்கப்படும் பேர்வழி மீது குற்றப் பத்திரிகை தயாரிக்க உதவிபுரிந்து, அவனை விசாரணைக்கு கொணர்ந்து அவனுக்கெதிராக மக்கள் கட்சியை எடுத்துக் கூறுகிறார்.

அவ்வளவாக முக்கியமல்லாத வழக்குகளை ஜஸ்டிஸ் ஆப் தி பீஸ் (மாஜிஸ்டிரேட்) விசாரிக்கிறார். இந்த அதிகாரி அநேகமாக நகரத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்டவராவர்.

கவுண்டியின் மற்றொரு முக்கியமான அதிகாரி ஷெரீப், இவர்தான் கவுண்டியின் பிரதம போலீஸ் அதிகாரி. அமைதியைப் பாதுகாப்பதற்கு இவர் பொறுப்பாளி. இவர் குற்றவாளி

களைத் தேடிக் கைதுசெய்கிறார். சாட்சிகள், ஜூரர்கள் கோர்ட்டுகளில் ஆஜராகும்படி அறிவிக்கிறார். நீதிபதி உத்தரவிடும்பொழுது வரிசெலுத்தாதவர்களின் சொத்துக்களை விற்பனை செய்கிறார்.

ஒரு குற்றவாளியைக் கைதுசெய்வதிலோ சட்டத்தை மீறி கலகம் நடக்கையிலோ எந்த நபரின் உதவியையும் ஷெரீப் நாடலாம். அவசியமானால் அவர் கவர்னரின் உதவியைக் கேட்கலாம். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் அதுவும் கலவரம் நடக்கையில், கவர்னர் ராஜ்ய பாதுகாப்புப் படையை கவுண்டிக்கு அனுப்பி ஸ்தல போலீஸ் அதிகாரங்களை மேற்கொண்டு அமைதியை நிலைநாட்டலாம். காரொனர் எனும் அதிகாரியின் வேலை திடீரென அல்லது சந்தேகாஸ்பதமான சந்தர்ப்பங்களிலும் பலாத்கார சம்பவங்களின் விளைவாகவும் ஏற்படும் மரணத்தின் காரணங்களை ஆராய்வதாகும். பிரஜைகளில் சிலரை ஜூரிகளாக வரவழைத்து அவர்களின் உதவிகொண்டு அம்மாதிரி மரணங்களின் உண்மைக் காரணங்களை அறியலாம்.

கவுண்டி பொக்கிஷதார்கள்—ஆடிட்டர்கள்—அஸெஸர்கள் :

கவுண்டி பொக்கிஷதார் வழக்கமாக கவுண்டிகளுக்கே சேர வேண்டிய பணத்தை வாங்கி, பத்திரப்படுத்தி, செலவுசெய்கிறார். இந்த வேலைக்கு சில சமயம் அவருக்கு உதவி கலெக்டர்கள் உதவிபுரிகின்றனர். வரிப்பணத்தில், ராஜ்ய, நகர, பெருநகர அதிகாரிகளுக்கு சேரவேண்டிய பகுதிகளைக் கொடுத்துவிட்டு பாக்கியை கவுண்டி ஆட்சிக்காகச் செலவிடுகிறார்.

கவுண்டி உத்தியோகஸ்தர்களின் ரொக்கக் கணக்குகளைப் பரிசோதிக்கும் கவுண்டி கணக்குப் பரிசோதகர் (ஆடிட்டர்) இருக்கிறார்.

சில கவுண்டிகளில் உள்ள சொத்துகளுக்கு என்ன வரி விதிக்கலாம் என மதிப்பிடும் உத்தியோகஸ்தர்கள் (அஸெஸ்ஸர்கள்) இருக்கின்றனர். இம்மாதிரி "சொத்து மதிப்பிடுதல்"

மூலம் பலதரப்பட்ட சொத்துள்ளவர்களிடமிருந்து எவ்வளவு வரி விதிக்கலாமென்று கவுண்டி போர்டு முடிவுசெய்ய முடிகிறது. அஸெஸர்கள் தங்கள் சொத்தை அதிகமாக மதிப்பிட்டு விட்டனர் என்று கருதும் வரி செலுத்துவோரின் அப்பீல்களை விசாரிக்கும் பிரத்தியேக உத்தியோகஸ்தர்கள் அல்லது போர்டினர் இருக்கின்றனர். இந்த போர்டு மதிப்பைக் குறைக்கலாம், அல்லது ஏற்றலாம் அல்லது அஸெஸர்கள் மதிப்பை ஏற்றுக் கொள்ளலாம்.

கவுண்டி குமாஸ்தா ஒருவர் கவுண்டியின் ஜனன, மரண, விவாகக் கணக்குகள் வைத்துக்கொள்ளுகிறார். அவர் பத்திரங்கள், அடைமான பத்திரங்களின் நகல்களை வைத்துக்கொள்வதுடன் தன்னிடம் வரும் உயில்களின் நகல்களையும் வைத்து சர்க்கார் தஸ்தாவேஜுகளைப் பாதுகாக்கிறார். இவைகள் பகிரங்க தஸ்தாவேஜுகளானதால் சொத்துரிமை பற்றிய உண்மைகளை இவைகள் மூலம் அறியலாம்.

பெரும்பாலான கவுண்டிகளில் பள்ளிக்கூட சூபரிண்டெண்டண்ட் இருக்கிறார். இவருடைய வேலை போதனை, மேற்பார்வை, உபாத்தியாயர்கள் நியமனம், ராஜ்ய பள்ளி சூபரின்டெண்டண்டுடன் ஒத்துழைத்தல். ஏழைமக்கள் நலனை மேற்பார்வை பார்க்க ஆரோக்கிய அதிகாரிகளும் இருக்கலாம். கவுண்டி ரஸ்தாக்கள் அமைத்துப் பராமரிக்கும் அதிகாரிகளும் இருக்கலாம். சில கவுண்டிகளில் இது தவிர வேறு உத்தியோகஸ்தர்களும் இருக்கலாம்.

ஒவ்வொரு கவுண்டியிலும் குறைந்தது ஒரு நீதிஸ்தலமும் அதற்குத் தேவையான உத்தியோகஸ்தர்களும் இருக்கின்றனர். கவுண்டிக்குச் சொந்தமான நீதிபரிபாலனம் நடப்பதற்கான கட்டிடம் இருக்கும். ஆனால் அலுவல் பார்க்கும் நீதிபதி அந்த கவுண்டியைச் சேர்ந்தவராயிருக்கவேண்டியதில்லை. அவர் சில சமயம் ராஜ்ய அரசாங்க நீதிபதியாயிருந்து இந்த கவுண்டி மட்டுமன்றி மற்ற கவுண்டிகளிலும் அலுவல்

கவுண்டி நீதிஸ்தலம்

பார்க்கலாம். அநேக ராஜ்யங்களில் பல கவுண்டிகளை நீதி நிர்வாக ஜில்லாக்கள் அல்லது மாவட்டங்களாக அமைத்திருக் கின்றனர். ஒவ்வொரு ஜில்லா அல்லது மாவட்டத்திலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகள் இருக்கின்றனர். சில ராஜ்யங்களில் இந்த நீதிபதிகளை கவர்னரோ, சட்டசபையோ நியமிக்கின்றன. மற்றும் சில ராஜ்யங்களில் நீதிபதிகளை வோட்டர்களே தேர்ந்தெடுக்கின்றனர்.

கவுண்டி மானேஜர் திட்டம்

சமீபகாலமாக அநேக கவுண்டிகள் தங்கள் ஆட்சி அமைப்பை மாற்றிக்கொண்டிருக்கின்றன. இந்த கவுண்டி ஓட் டர்கள் ஒரு சிறிய கமிஷனர் குழாத்தைத் தேர்ந்தெடுக்கின்றனர். அந்தக் குழாம் ஒரு கவுண்டி மானேஜரை சம்பளத்திற்கு அமர்த்திக்கொள்கிறது. அந்த குழாமே ஒரு சர்க்கார் வக்கீலையும் ஆடிட்டரையும் நியமிக்கிறது. மற்ற உத்தியோகஸ்தர் களை மானேஜரே நியமிக்கிருர். மானேஜரே இந்த உத்தியோ கஸ்தர்கள் வேலைக்கும், கவுண்டி அரசாங்கத்திற்கும் பொறுப் பாளி.

நகர, கிராம அரசாட்சிகள்

சில நியூஇங்கிலாந்து நகரங்களில் வருஷத்திற்கொரு தரம் வோட்டர்கள் கூடி தங்கள் நகர ரஸ்தாக்கள், பாலங்கள், தெருக்கள், பள்ளிக்கூடங்கள் போன்ற விஷயங்கள் சம்பந்த மான சட்டங்களை இயற்றுகின்றனர். அவர்களே வரி விகிதத்தை திட்டம் செய்து, பணத்தை எப்படி செலவுசெய்வது என்றும் முடிவுசெய்கின்றனர். சட்டத்தை அமுல்செய்யும் உத்தியோகஸ் தர்களையும் அவர்களே தேர்ந்தெடுக்கின்றனர். ஜனநாயகம் நேரடியாக, மக்கள் பிரதிநிதிகளுக்கு தத்தம் செய்யாமல் நடைபெறுவதற்கு இது ஒரு சுவாரஸ்யமான உதாரணம்.

நியூ இங்கிலாந்திலும், நாட்டின் பிற பாகங்களிலும் மற்ற நகரங்களில் ஜஸ்டிஸ் ஆப் தி பீஸ், கான்ஸ்டேபிள்கள், ரஸ்தா

மேற்பார்வையாளர்கள் முதலியோரை வோட்டர்களே தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஆட்சி அதிகாரங்களையும் அளிக்கின்றனர்.

சில ராஜ்யங்களில் நகரங்கள் தேர்தல் தொகுதிகளான ஜில்லாக்களுக்கு எல்லைகளாக உதவுகின்றன. கிராமம் அல்லது நகரம் ஒரு மாநகரம் போன்ற தங்களுக்கு ஆட்சிமன்றம் அமைத்துக்கொள்ள அதிகாரம் கோரி ராஜ்ய அரசாங்கத்திற்கு மனுச்செய்துகொள்ளலாம். இந்த அதிகாரம் கிடைத்தவுடன் அந்த பகுதிமக்கள் அதிகாரம்பெற்ற ஒரு கிராம, அல்லது நகர ஆட்சிக்குட்பட்டவர்களாகிறார்கள்.

கிராம அல்லது நகர ஆட்சியினர் ஸ்தல தேவைகளையே கவனிக்கின்றனர். அவர்கள் ரஸ்தா அமைத்து விளக்குப் போடலாம். குடிதண்ணீருக்கு ஏற்பாடு செய்யலாம். போலீஸ், தீயணைப்பு பாதுகாப்பளிக்கலாம். ஸ்தல ஆரோக்கியத்திற்கான கோட்பாடுகள் செய்யலாம். நல்ல பள்ளிக்கூடங்கள் அமைப்பதில், ராஜ்ய, கவுண்டி, அல்லது ஜில்லா கல்வி அதிகாரிகளுடன் ஒத்துழைக்கலாம்.

இந்த சேவைகளுக்கான செலவுகளை ஈடுசெய்வதற்கான பிரத்தியேக வரி விகிதத்தை நிர்ணயிக்கலாம்.

கிராம அல்லது நகர ஆட்சி வழக்கமாக கிராம அல்லது நகர போர்டு அல்லது கவுன்ஸிலின் கையிலிருக்கிறது. சில சமயம் இந்த போர்டுக்கு " தர்மகர்த்தா குழு " என்று பெயர். இவைகளின் அங்கத்தினர்களை ஜனங்களே தேர்ந்தெடுக்கின்றனர். சில நகரங்களும் கிராமங்களும் தலைவர் அல்லது மேயரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விசேஷ அதிகாரமளிக்கிறது. இது தவிர ஒரு கிராம அல்லது நகர குமாஸ்தா, ஆரோக்கிய அதிகாரி, போலீஸ் அதிகாரிகள் இருக்கின்றனர். இந்த உத்தியோகஸ்தர்கள் கிராம அல்லது நகர சுயஆட்சியில் மக்களுக்கு சேவைசெய்கின்றனர்.

* * *

(17)

அரசாங்கத்தின் சேவைகள் தேவையானல் வரி செலுத்தவேண்டும்

சமஷ்டி, ராஜ்ய, பெருநகர, கவுண்டி, நகர, கிராம அரசாங்க ஸ்தாபனங்கள் செய்யும் பலவிதமான சேவைகள் ஏராளமான பொருட்செலவுக்குக் காரணமாயிருக்கின்றன. மக்கள் பணித்த கடமையை நிறைவேற்ற சமஷ்டி அரசாங்கம் பூரா காலமும் வேலே செய்யும் இருபது லட்சம் பேர்களே அமர்த்தியிருக்கின்றது. ராஜ்ய, பெரு நகர, ஸ்தல ஸ்தாபன ஆட்சியினர் நூறுயிரக்கணக்கானவர்களே வேலேக்கு வைத்திருக்கின்றனர். கல்வி, வேலேயில்லா திண்டாட்ட, முதியோர் பென்ஷன் இனஷியூரன்ஸ் விவசாயப் பொருள்களின் விலே தாறுமாருக ஏராமல் பாதுகாப்பதற்கான சர்க்கார் பண உதவி, பொது மராமத்து, நிலங்களே சாகுபடிக்கு லாயக்காகச் செய்யும் திட்டங்கள், ரஸ்தாக்கள் அமைத்தல், படைச் செலவு, வீரர்களுக்கு உதவி, இன்னும் இதுபோன்ற பல்வேறு காரியங்களுக்காக ஆகும் செலவு கணக்கின்றி ஆகிறது.

இந்த செலவோடு இரண்டாவது மகாயுத்தச் செலவுக்கு ஈடுசெய்யும் தொகை, மற்ற நாடுகள் உயிர்பெற்று வாழுவதற்காக தமது அரசாங்கம் அயல்நாடுகளில் செய்யும் செலவுகளேயும் சேர்த்துப் பார்க்கவேண்டும்.

1949 ஜூலே 1-ம் தேதி ஆரம்பிக்கும் வருஷத்திற்கு ஜனதிபதியின் வரவு செலவு திட்டப்படி நமது சமஷ்டி அரசாங்கம் 42,000,000 டாலர்கள் செலவு செய்யவேண்டியிருக்கிறது. தேவையான பணத்தைச் சேகரிக்க எவ்வளவு வரி விதித்தாலும் இவ்வளவு பணத்தையும் கொடுக்கும் மூலஸ்தானம் அமெரிக்கநாட்டு மக்கள்தான்.

காலந்தொடங்கியதிலிருந்து வரி செலுத்துவதென்பது கஷ்டமான காரியமாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. தான் கொடுக்கவேண்டிய வரி பளுவைத் தாங்கமுடியாமல் திணரும் அமெரிக்கப் பிரஜையும் பிற மக்களைப் போல் சங்கடம்தான் படுகிருன். குடியேறிய மக்களிடமிருந்து பிரிட்டன் தேயிலைக்கு வரிகேட்டதும், அந்த வரி அநீதியானது என்று அவர்கள் நினைத்ததும்தான் அமெரிக்கப் புரட்சி யுத்தத் தீயை மூட்டியது. நாட்டின் சரித்திரத்தில் உச்சமான நிர்வாகச் செலவை ஈடு செய்வதற்கும், உலகப் புனரமைப்பிற்காக வியக்கத்தக்க அளவு செலவை ஏற்றுக்கொள்வதற்கும் இன்று அமெரிக்கப் பிரஜை தன் பையிலிருந்து பணத்தை எடுக்கத் தயாராயிருப்பது, தங்கள் சுயஆட்சியில் அவர்களுக்குள்ள நம்பிக்கையையும், எல்லா நாட்டுமக்களும் சுதந்திரமாக வாழ்வதற்கு சந்தர்ப்ப மளிக்கவேண்டுமென்னும் அவர்கள் விருப்பத்தையும் நிரூபிக்கிறது.

செலுத்தும் சக்திக்கேற்றுப் போல் வருமானத்திற்கு வரி விதிக்கப்படுகிறது

மக்களில் ஒரு பகுதியினர் மீது சுமையை அதிகம் போடாமலும், நாட்டினர் செலவு செய்யும் சக்தியை வற்றடிக்காமலும், வியாபார உத்ஸாகத்தை தளரச் செய்யாமலும், உள்நாட்டுச் செலவிற்கும் அயல்தேச உதவிக்கும் பணம் சேகரிப்பது அமெரிக்க மக்களை சோதனைசெய்யும் கடினமான பிரச்னையாகும். வரவுசெலவு திட்டத்தை வகுக்கும் முறை மூலம் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முயலுகின்றனர். நிர்வாகப் பகுதி தனக்குக் கீழுள்ள ஒவ்வொரு இலாகாவிலிருந்தும் அவர்கள் வரப்போகும் வருஷத்திற்கு எவ்வளவு செலவு செய்யப்போகிருர்கள் என்பதற்கு சீராக சிந்தித்துத் தயாரிக்கப்பட்ட திட்டத்தை கோருகிருர்கள். நிர்வாகத்தினர் (ஜனுதிபதி, கவர்னர், மேயர்) இலாகாக்கள் கோரும் பண திட்டத்தைப் பரிசீலனை செய்கிருர்கள். வழக்கமாக நிதி நிபுணர்கள் இந்த திட்டங்களை ஆராய்ந்து அவைகளில் வீணை செலவினங்களோ,

அனுவசியமான திட்டங்களோ இல்லாமல் அலசிப்பார்க்கின்றனர். நிர்வாகத்தினர் மொத்த செலவு, அதற்கான பணத்தை எப்படி சேகரிப்பது என்பதற்கு திட்டமிடுகிறார்கள். வரவுசெலவு திட்டம், சமஷ்டி அரசாங்கமாயிருந்தால் காங்கிரஸின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்படுகிறது. நிர்வாக இலாகாவின் பல இனங்களுக்கு அனுமதிக்க தொகை, எந்தெந்த திட்டத்திற்கு எவ்வளவு செலவு, எல்லாம் மீண்டும் மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்யப்படுகிறது.

தேசிய காங்கிரஸில் பிரதிநிதிகள் சபையின் செலவு பாகுபாட்டுக் கமிட்டி ஒவ்வொரு பெரிய, சிறிய செலவினங்கள் பற்றியும் விரிவான விசாரணை நடத்துகிறது. கமிட்டி தனது சிபார்சுகளை சபையின் கூட்டத்திற்கு அனுப்புகிறது. (பிரதிநிதிகள் சபைதான் வரி விதிக்கும் மசோதாக்களைக் கொண்டுவரலாம் என்பது ஞாபகமிருக்கலாம்) ராஜ்யங்களில் கவர்னரும் ராஜ்ய சட்டசபைகளும் பெரிய நகரங்களின் மேயர் அல்லது மானேஜர், அல்லது விசேஷ உத்தியோகஸ்தர் போர்டு, கவுண்டி அல்லது நகரங்களின் மேயர் அல்லது மானேஜர், அல்லது விசேஷ உத்தியோகஸ்தர் போர்டு, கவுண்டி அல்லது நகரங்களில் நிர்வாக போர்டும் வரவுசெலவு திட்டங்களைப் பரிசீலனை செய்கின்றன.

அரசாங்க நிதிகள் எப்படிக் கிடைக்கின்றன

பல்வேறுவிதமான வரிகள் மூலம் சமஷ்டி அரசாங்கத்திற்குப் பணம் கிடைக்கிறது. பெருந்தொகைகள் வரும் துறைகள் வருமாறு :

வருமான வரி : தனிப்பட்டவர்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் மீது விதிக்கப்படுகின்றது. வருமானம் ஏறஏற வரிவிகிதமும் ஏறுகிறது. தனிப்பட்டவர்கள் கம்பெனிகள் தாங்கக்கூடிய முறையில் வரி விதிக்கப்படுகிறது. வரி செலுத்துபவர்கள் கஷ்டப்படாமல் தவிர்ப்பதற்காக சில செலவினங்கள், வரி செலுத்துவோரை நம்பி வாழ்பவர்களின் சம்ரட்சணைச் செலவுகளை, வியா

பார நஷ்டங்கள் முதலியன வருமானத்திலிருந்து கழிக்கப் படுகின்றன.

வார்சு வரி : சொத்தின் வார்சுகள், அதிலிருந்து நன்மை பெறுபவர்கள் மீது விதிக்கப்படுகின்றன. ஒருவர் மற்றவருக்கு செய்யும் சொத்து தானம் அல்லது பணதானம் முதலியவைக ளுக்கு வரி விதிக்கப்படுகிறது.

உற்பத்தி வரி : மதுபானம், சிகரெட்டுகள், சீட்டுக்கட்டுகள், மூட்டைமுடிச்சுகள், மின்சார விளக்குகள் போன்ற தயாரான சரக்குகளுக்கு விதிக்கப்படுகிறது.

சுங்க வரி : வெளிநாடுகளிலிருந்து வரும் சரக்குகளுக்கு விதிக்கப்படுகிறது.

வியாபார ஸ்தாபன வரி : மூலதனப் பெறுமானத்தைப் பொறுத்து விதிக்கப்படும் கம்பெனி வரி.

களியாட்ட, தேவையில்லாப் பொருள்கள் வரி : களியாட்ட ஸ்தலங்களுக்கு அனுமதிக்கும் கட்டணத்துடன் சேர்த்து வசூ லிக்கப்படும் வரியும், கம்பிளிகள், நகைகள், வாசனைத்திரவியங் கள் முதலியவற்றிற்கு விதிக்கப்படும் வரியும்.

பராதீன வரிகள் : ஸ்டாக் அல்லது பாண்டுகள் மாற்றுவ தற்கு விதிக்கப்படுவது.

விசேஷ காரியங்களுக்கான வரி : ஒரு குறிப்பிட்ட காரியத் திற்காக விதிக்கப்படும் வரி. உதாரணமாக ஒரு உத்தியோகஸ் தர் சம்பளத்திற்கு விதிக்கப்படும் சமூகப் பாதுகாப்பு வரி. உத்தியோகம் வகிப்பவனுக்கு விதிக்கிற மாதிரியே அவன் வேலை பார்க்கும் ஸ்தாபன முதலாளிக்கும் வரி விதிக்கப்பட்டு இந்த வசூலிலிருந்து உத்தியோகஸ்தன் வேலையில்லாமலிருக்கும் பொழுதும் அவனுக்கு வயதாகி அசக்தனுயிருக்கும்பொழுதும் அவனுக்கு உதவி செய்யப்படுகிறது.

வேறு வருமான வகைகளிலிருந்தபோதிலும் சமஷ்டி சர்க்கார் வருமானம் விசேஷமாக மேலே குறிப்பிட்ட வகைகளில் தான் வருகிறது. பனுமா கால்வாய் மூலம் செல்லும் கப்பல்கள் செலுத்தும் அனுமதிக் கட்டணம் சர்க்கார் கஜானுவிற்குத் தான் போகிறது. பொதுநிலங்களில் வளரும் தேக்கு விற்பனே, மேய்ச்சல் தரைகளுக்கு வாடகை முதலியனவும் சர்க்காருக்கு வருகின்றன. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு, மிகுந்துபோன யுத்த சாமான்கள் விற்பனேயினுல் வேறு பணம் கிடைக்கிறது.

ராஜ்ய வருமானங்கள்

தங்களுடைய நிர்வாகம், பொதுநல திட்டங்களுக்கான செலவிற்கு ரஜ்யங்கள் பலவகைகளில் பணம் சேகரிக்கின்றன. வரி முறை ராஜ்யத்திற்கு ராஜ்யம் மாறுபடுகின்றது. இதற்குக் காரணம் பிராந்திய மாறுபாடுகளும், ராஜ்யங்களின் செல்வ நிலேயும் ஒரே இனத்திற்கு சமஷ்டி, ராஜ்யம், முனிசிபல், நகர, கவுண்டி ஆட்சி மன்றங்கள் எல்லாம் சேர்ந்து பன் முறை வரி வசூல்செய்வது தடுக்கப்படுகிறது. எனினும் அவசிய மேற்படுவதனுல் சில சந்தர்ப்பங்களில் ஒரே வருமானத்திற்கு பன்முறை வரி வசூல்செய்வதைத் தவிர்க்கமுடியாமற் போய் விடுகிறது.

பொதுவானதும் பயன்தரத்தக்கதுமான வரிகள் :

சொத்து வரிகள் : நிலங்கள், கட்டிடங்கள், யந்திரசாமான்கள் மீது விதிக்கப்பட்டவை.

வார்சு வரிகள் : இறந்துபோனவர்கள் சொத்துக்கள் மீது அநேகமாக எல்லா ராஜ்யங்களும் வரி விதிக்கின்றன.

வர்த்தக வரிகள் : ராஜ்யங்களுக்குள் உள்ள கம்பெனிகள், கார்ப்பொரேஷன்கள் மீது விதிக்கப்பட்டவை.

உரிமை வரிகள் : பொது சொத்துக்களையும் ரஸ்தாக்களை யும் பெரிதும் உபயோகிக்கும் தனிப்பட்டவர் நடத்தும் வியாபாரத் திற்கு விதிக்கப்படுவது.

எரி வாயு வரி : எரி வாயு உபயோகிப்பவர்களுக்கு உப யோகிக்கும் அளவுக்குத் தக்கபடி விதிப்பது. இந்த வாயு உற்பத்தியில் ஆகும் ஏராளமான செலவை ஈடுசெய்வதற்காக விதிக்கப்படுகிறது.

விற்பனை வரி : எல்லா சில்லறை வியாபாரிகளுக்கும் சில ராஜ்யங்களில் விதிக்கப்படும் வரி.

விசேஷ வரி விதிப்பு : ரஸ்தாவில் சமமாகச் செய்வதற் கும், சாக்கடை கட்டுவது போன்ற அபிவிருத்திச் செலவுகளை ஈடுசெய்வதற்கு இது அபிவிருத்தியினால் தங்கள் சொத்தின் பெறுமானம் அதிகரித்திருப்பவர்களிடமிருந்து வசூல் செய்யப் படுகிறது.

பல விதமான கட்டணங்கள், டோல் வரிகள், அபராதங் கள் : பத்திரங்கள் பதிவு செய்வதற்காக வசூல்செய்யப்படும் சிறுதொகைகள், கால்வாய்கள், பாலங்கள், பரிசல்கள் உப யோகத்திற்காக வசூல்செய்யப்படும் கட்டணங்கள் ; சில்லரைக் குற்றங்களுக்காக விதிக்கப்படும் அபராதங்கள்.

இவைகள் தவிர அநேக ராஜ்யங்களுக்கு சமஷ்டி அரசாங் கம் பண உதவி செய்கிறது. குறிப்பிட்ட சில செலவுகளுக் காகவும் சமஷ்டி அரசாங்கம் பண உதவி செய்கிறது.

ஸ்தல ஆட்சிகளின் வருமானங்கள் ஸ்தல ஆட்சிகளுக்கு அவைகள் ஆதிக்கத்திலுள்ள ஸ்தாபன சொத்துக்களிலிருந்து தான் பெரிதும் வருமானம் கிடைக்கிறது. சில சந்தர்ப்பங்களில் ஸ்தாபன சொத்திலிருந்து வசூலாகும் பணத்தில் ஒரு பகுதி ராஜ்ய அரசாங்கத்திற்குச் செலுத்தப்படுகிறது. இதற்கு பிரதி பலனாக ராஜ்ய அரசாங்கம் பெருநகரம், கவுண்டி, நகர ஆட்சி

யினரின் கல்வி, ரஸ்தா அமைப்பு போன்ற திட்டங்களுக்கு பண உதவி செய்கிறது. ஸ்தல ஆட்சியினரின் மற்ற வருமான வரிகள் :

பொதுஜன வசதிகள் அளிக்கும் கம்பெனிகள் வருமானத்திற்கு வரி.

ராஜ்யங்கள் மாதிரி வியாபார உரிமைக்கு விதிக்கப்படும் வரிகள்.

சில்லரை வியாபாரத்திற்கு விற்பனை வரி.

பொதுவானதும் பண லேவாதேவி சம்பந்தமான வியாபார மொத்த வருமானத்திற்கு விதிக்கப்படும் வரிகள்.

சமஷ்டி அரசாங்கம் விதிக்கும் மாதிரி கேளிக்கை வரிகள்.

லைசென்ஸ் அல்லது பெர்மிட் கட்டணம் : விவாக லைசென்ஸுகள், கார் பெர்மிட்டுகள், நாய் லைசென்ஸுகள், வேட்டையாடுவதற்கு, மீன்பிடிப்பதற்கு பெர்மிட்டுகள், மதுபானம் விற்க லைசென்ஸுகள், சிகரேட் முதலிய சாமான்கள் விற்பனைசெய்பவர்கள், கேளிக்கை ஸ்தலங்கள் நடத்த பெர்மிட்டுகள்.

நேர்முகமாகவோ மறைமுகமாகவோ ஒவ்வொரு அமெரிக்கனும் அரசாங்கத்தின் செலவை ஈடுசெய்ய உதவுகிறான். ஒரு சொத்தின் குத்தகைக்காரன் செலுத்தும் பணத்தின் ஒரு பகுதி ஸ்தாவர சொத்து வரியாகச் செலுத்தப்படுகிறது. சரக்கு வாங்குபவன் ஒவ்வொருவனும் செலுத்தும் தொகையில் ஒரு பகுதி வரி வசூலிப்பவர்களுக்குப் போகிறது. கூலிபெற்று உழைப்பவன் தன் வாராந்தரக் கூலியின் ஒரு பகுதியை சமூகப் பாதுகாப்பு, வேலையில்லாத் திண்டாட்ட நஷ்ட ஈடு நிதிக்குக் கொடுக்கிறான். இந்தப் பணங்களை வரிகள் என்று விவரிப்பதைவிட இன்ஷியூரன்ஸுக்குச் செலுத்தும் கட்டணம் என்று கூறுவது பொறுத்தமாயிருக்கும்.

அமெரிக்க மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக அரசாங்கத்தின் சேவையை நாடுகின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு அரசாங்கத்தின் செலவும் அதிகரித்துக்கொண்டுதான் போகும். ஆனால் பிரத்தியட்சமாகப் பார்க்கப்போனால், தான் வசிக்கும் ஜனநாயக ஆட்சிச் செலவுக்கு அவன் செலுத்தும் பணமானது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தனது அரசாங்கம் நிறைவேற்றிவரும் திட்டத்தில் அவன் சிரத்தை கொள்ளும்படி செய்கிறது. எனெனில் அது அவனுடைய அரசாங்கத்தின் திட்டம் மட்டுமல்ல, அவனுடைய சொந்த திட்டமுமாகும். அவன் வரி செலுத்தும்போதெல்லாம் சர்க்கார் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பை, தான் வகிக்கவேண்டும் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்கிறான்.

(18)

ஜனநாயக அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகள்

சில அடிப்படைக் கொள்கைகளின் பலத்தின் பேரில்தான் அமெரிக்க சுயஆட்சிமுறை நடைபெறுகிறது. இவைகளில் சில தேசத்தின் அமைப்பின் பிரதிபலிப்பான அம்சங்கள் ; மற்றவை அரசியலமைப்பின் பூர்வபீடிகையில் விவரிக்கப்பட்டிருக்கும் சித்தாந்தங்களின் அனுஷ்டானத்தின் விளைவாக ஏற்பட்ட அம்சங்கள்.

தனிப்பட்டவர்கள் யாவரும் சமம், அவனுடைய உரிமைகள் பறிக்கப்படலாகாது என்கிற கொள்கைகளின் பலத்தினுல் நீதி நிலைநாட்டப்பட்டு சுதந்திர பாக்கியங்களையும் மக்கள் பெற்றனர். இந்த நோக்கங்கள் நிறைவேறுவதற்கு இன்றியமையாத மற்றொன்று சட்டம் வகிக்கும் ஆதிபத்யம். எந்த நபரோ கோஷ்டியோ என்னதான் தனவந்தராகவோ சக்திவாய்ந்தவராகவோ, அந்தஸ்துள்ளவராகவோ இருந்தாலும் சட்டத்தை மீறலாகாது. எக்காரணத்தைப் பற்றியும் யாருக்கும் சட்டத்தின் பாதுகாப்பு மறுக்கப்படலாகாது. இவைகளும் இவைகள் போன்ற மற்ற அடிப்படையான கொள்கைகளைக் கொண்டு அமைக்கப்படும் அனுபவ சாத்தியமான அரசாங்க முறை அத்தியாவசியமான தனிநபர் சுதந்திரங்களுக்கு பங்கமில்லாமலும், வோட்டுரிமையின் சக்திக்கு வரையறை வகுக்காமலும் அமைவதற்கு சில செயற்கை சாத்தியமான கொள்கைகள் அவசியமாயிருந்தன. நாட்டின் விஸ்தீரணமும் அதன் ஜனத்தொகையும் மக்களே நேரிடையாக ஆட்சிநடத்துவது சாத்தியமில்லை என்பதற்குக் காரணமாயிருந்தன. ஆகையால் இம்

மாதிரியான பூரண சுயஆட்சிக்கு பதிலாக பிரதிநிதித்துவ அரசாங்கம் அமைக்கப்பட்டது.

அரசாங்கத்தில் தங்கள் பிரதிநிதிகளாக வோட்டர்கள் சில பேர்களை நியமித்தனர். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நியமிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் வோட்டர்கள் சில அதிகாரங்களைக் கொடுத்தனர்.

கொள்கையளவிலும் அனுபவத்திலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், தங்களுக்களிக்கப்பட்ட அதிகாரத்தை தங்கள் நடத்தையில் தங்களைத் தேர்ந்தெடுத்தவர்கள் திருப்தியடையும் வரையில்தான் வகிக்கிறார்கள். அவர்கள் தலைவர்கள் மட்டுமல்ல, பொதுஜன ஊழியர்களும் என்பதை அவர்களுக்கு நினைவூட்டி பிரதிநிதிகளைக் கட்டுப்படுத்தப் பல வழிகள் இருக்கின்றன.

இந்தக் கட்டுப்பாட்டின் வெளிப்படையான ரூபம் தேர்தல்தான். எந்த வோட்டர்களின் ஆதரவை நாடுகிறாரோ அவர்கள் முன் அந்த அதிகாரி நடைமுறை விஷயங்களில் தன் திட்டமென்ன என்பதை ஓட்டர்களுக்கு அறிவிக்கிறான். மறு தேர்தலுக்கு நிற்பவன் இந்த முறையைக் கையாள்வதுடன் தான் ஏற்கனவே செய்த வேலையை விவரமாக எடுத்துக் கூறுகிறான். உத்தியோகம் வகிப்பவர்கள் அடுத்த தேர்தலில் தங்கள் வேலையைப் பற்றித் தீர்ப்புக் கூறும் நாள் வருகிறது என்பதை மறக்கமுடியாது. இந்த ஞாபகம் அவர்களுடைய செயல்களுக்குத் தக்க உருக் கொடுக்கிறது.

வோட்டரின் அனுமதியின்பேரில்தான் பதவிவகிக்கிறான் என்பதை உத்தியோகஸ்தனுக்கு ஞாபகப்படுத்துவது தேர்தல்கள் மட்டுமல்ல. நிர்வாக அல்லது கொள்கை சம்பந்தமாக தனது கருத்துக்களை தனது பிரதிநிதிக்குக் கூற சாதாரண பிரஜை தயங்குவதில்லை. ஒரு அமெரிக்க செனட்டர் அல்லது பிரதிநிதிசபை அங்கத்தினர் தன் முன் ஆலோசனையிலிருக்கும் சட்டங்கள் பற்றி ஆலோசனை கூறி, தம் தொகுதியினரிட

மிருந்து தினசரி நூற்றுக்கணக்கான கடிதங்கள் பெறுவது ஆச்சரியமல்ல.

நடைமுறை அல்லது எதிர்காலப் பிரச்னைகள் பற்றி வோட்டர்கள் கோஷ்டியாகச் சென்று அரசாங்க அதிகாரிகளிடம் தங்கள் கருத்துக்களைக் கூறுவதும் சகஜமாக நடப்பதுதான். இம்மாதிரி கோஷ்டியினர், வர்த்தக ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளாயிருக்கலாம், அல்லது நகர அல்லது ராஜ்ய கோஷ்டிகளாயிருக்கலாம் ; பொதுஜன விஷயங்களில் அக்கறை செலுத்தும் தொழில் அல்லது இதர ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளாயிருக்கலாம். அல்லது அவர்கள் தனிப்பட்ட முறையில் பேசவும் வந்திருக்கலாம். சட்டசபை கூடாமலிருக்கையில், விசாரணைகள் நடக்காமலிருக்கையிலும், அதிகாரம் வகிப்பவர்கள், தங்கள் ராஜ்யத்திலோ ஜில்லாவிலோ சுற்றுப்பிரயாணம் செய்து வோட்டர்கள் அபிப்பிராயங்களை அறிந்துகொள்ள முயற்சிக்கலாம். பத்திரிகை, ரேடியோ, வோட்டர்—இவர்களுக்குள்ள தொடர்புகள் காரணமாக செய்திகள், அபிப்பிராயங்களைத் தாங்கி வரும் சாதனங்கள் அதிகார வட்டாரத்தின் செயல்களை இருவகைகளில் உருவகப்படுத்துகின்றன. ஒரு பத்திரிகையின் கொள்கையும் தலையங்கமும் அதன் சொந்தக்காரர் இஷ்டப்படி திட்டம் செய்யப்பட்டாலும் ஒரு பத்திரிகையின் ஜீவன் அது மக்களிடையே விற்பனையாகும் எண்ணிக்கையைப் பொறுத்தது. பத்திரிகையைப் பொருத்தமட்டில் அதன் செல்வாக்கு அதை வாங்குபவர்கள் படிப்பவர்கள் எண்ணிக்கையைப் பொருத்தது. ரேடியோவின் செல்வாக்கு அதன் நிகழ்ச்சிகளைக் கேட்பவர்கள் எண்ணிக்கையைப் பொருத்தது. ஓரளவுக்கு பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஒலிப்பரப்பாளர்கள்—பத்திரிகை படிப்பவர்கள், ரேடியோ கேட்பவர்களின் அபிப்பிராயங்களைப் பிரதிபலிப்பதில் அக்கரை கொண்டுள்ளார்கள். ஆகையால் இந்த சாதனங்களைத் திருப்தி செய்வதில் அரசாங்க அதிகாரி அக்கரை கொள்கிறார்.

பத்திரிகைகளும், ரேடியோ நிலையங்களும் செய்திகளைப் பரப்புவதனால் ஜனங்களிடையே தங்கள் செல்வாக்கைப் பெருக்

கிக் கொள்கிருர்கள். இந்தச் செய்திகளில் பெரும் பகுதி அரசாங்க அலுவல்கள் சம்பந்தமாயிருக்கின்றன. இதனுல் செய்தி பரப்பும் ஸ்தாபனங்கள் வோட்டரின் அபிப்பிராயங்களை உருவகப் படுத்துவது சாத்தியமாயிருக்கிறது. இவ்வாருக அரசாங்க அதிகாரிக்கு பத்திரிகையும் ரேடியோவும் விரும்பத் தக்க சிநேகிதர்களாயிருந்தாலும், அவைகள் எதிரிகளாகிவிட்டால் அபாயமானவைகள்.

அரசாங்கம் அமெரிக்காவின் மகத்தான, சிக்கல் நிறைந்த ஸ்தாபனமாகிவிட்டாலும், பத்திரிகை ரேடியோ முதலிய சாதனங்களின் உதவியினுல், பொறுப்பில்லாத அரசாங்கம் ஏற்படாமல் வோட்டர் பாதுகாத்துக்கொண்டு அதிகார லகானைத் தன் கையில் வைத்துக்கொண்டிருப்பது சாத்தியமாகிறது.

அமெரிக்க ஜனநாயகத்தில் அதிகாரம் சீராக பாகுபாடு செய்யப்பட்ட அரசாங்கம் அமைந்திருக்கிறது. ஏற்கனவே விவரிக்கப்பட்டிருக்கிறபடி சமஷ்டி அரசாங்கத்தில் அமுல் நடத்தும் மூன்று பகுதிகளும்—சட்டமியற்றும், நிர்வாக, நீதி இலாகாக்கள்—தனித்தனியே சுதந்திரமானவை. ஆனுலும் ஒவ்வொரு பகுதிக்கும் ஓரளவு மற்ற பகுதிகள் மீது அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸின் ஒரு மசோதாவை நிர்வாகம் நிராகரித்துவிடலாம். நீதி இலாகா ஒரு சட்டத்தை செல்லுபடியாகாது என்று தள்ளிவிடலாம். முறையே காங்கிரசும் மற்றிரு பகுதிகளைக் கட்டுப்படுத்தலாம். சர்க்கார் செலவினங்களை அனுமதிப்பதோ மறுப்பதோ சட்டசபைகள் கையிலிருக்கிறது ; நீதி இலாகா நிர்வாக இலாகா உத்தியோக நியமனங்களை செனட் நிராகரிக்கலாம்.

ஒன்றையொன்று கட்டுப்படுத்தும் கொள்கை காங்கிரஸின் அமைப்பிலும் இருக்கிறது. ஒவ்வொரு சட்ட சபைக்கும் மற்றதிற்கில்லாத உரிமைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் மற்ற தன் சட்டங்களை மாற்றும் அதிகாரம் இருக்கிறது. இம்மர்திரி பாகுபாடு சமஷ்டி ராஜ்யம், ஸ்தல ஆட்சிகளுக்குள்ளும் இருக்

கிறது. தேர்தல் யந்திரமும் இதேமாதிரி கட்டுதிட்டங்களுக்குட் பட்டது. பிரதிநிதி சபை அங்கத்தினர் பதவிகாலம் இரண்டு வருஷம், ஜனாதிபதியின் பதவி காலம் 4 வருஷம். செனட் டரின் பதவி காலம் 6 வருஷம். செனட்டில் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள்தான், இரண்டு வருஷத்திற்கொரு தரம் பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படும்போது தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். 4 வருஷத்திற்கொருதரம் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் போது புது பிரதிநிதிகள் சபை தேர்ந்தெடுக்கப்படுகிறது.

இம்மாதிரி ஒன்றையொன்று கட்டுப்படுத்தி எல்லா பகுதிக ளுக்கும் சமபலம் இருக்கும்படி செய்வது சுய ஆட்சி சிறப்பாக வும் சீராகவும் நடக்க உதவியாயிருக்கிறது என்று அமெரிக்க மக்கள் கருதுகின்றனர். நீதி இலாகாவுக்குள்ள சுதந்திரம் நீதிஸ்தலங்கள் அரசியல், பொருளாதார சமூகக் கட்டுப்பாடுக ளுக்குட்படாமலிருக்க உதவுகிறது. இதன் மூலம் சட்டத்திற்கு விளக்கம் கூறி அமுல் நடத்த சௌகரியம் ஏற்படுகிறது. இந்த அதிகாரப் பிரிவினை, அதிகாரம் ஏதாவது ஒரு பகுதியில் குவிந்து விடாமல் பாதுகாக்கிறது. ஏதாவது ஒரு பகுதி யதேச்சிகாரப் போக்கில் இருப்பதை, குடியேற்றநாட்டார் காலத்திலிருந்து அமெரிக்க மக்கள் வெறுத்து வந்திருக்கின்றனர். இந்த வெறுப்புதான் கொள்கைகளும் திட்டங்களும் முன்யோசனை யின்றி அவசரமாக வகுக்கப்படுவதைத் தடை செய்கிறது. இந்த மாதிரி தடை செய்வது நிர்வாகம் நிதானமாகவும் திறமையற்ற முறையிலும் நடக்கக் காரணமாயிருக்கிறது என்று சிலர் கருது கின்றனர். ஆனால் அமெரிக்க அனுபவம் இதற்கு நேர்மாறாக இருந்துவந்திருக்கிறது. அவசரமாக முடிவு செய்யப்பட்ட அரசாங்க காரியங்கள் தவறாக இருந்திருக்கின்றன; அரசாங் கத்தினரும், அவர்களுக்குப் புறம்பானவர்களும் நிதானத்துடன் விவாதித்து முடிவு செய்திருந்தால் நன்மை கிடைத்திருக்கும் என்று எண்ண இடமிருக்கிறது. கடந்த காலத்தில் அபாயம் ஏற்பட்டபொழுது துரிதமாக அரசாங்கம் காரியங்கள்

செய்ய இந்த தடைகளும் கட்டுப்பாடுகளும் இடஞ்சலா யிருந்ததில்லை.

எல்லா நிலையிலும் சந்தர்ப்பங்களிலும், ஆளப்படுபவர்க ளுக்கு செய்யப்பட்ட சேவையும் அதன் தன்மையுமே அரசாங் கத்தின் சிறப்பை மதிப்பிடும் அளவு கோலாகும். இந்த அளவு கோலைக் கொண்டு பார்த்தால் அமெரிக்க சுயாட்சி உயர்ந்த ரகமானது என்பது தெளிவாகத் தெரிகிறது.

அமெரிக்காவின் எல்லை பிரமாதமாக விஸ்தரிப்படைந்தும், அதன் ஜனத்தொகை எவ்வளவோ பெருகியும், அதன் ராணுவ, பொருளாதார பலம் வலுப் பெற்றிருந்தும் அதன் அரசிய லமைப்பு இவ்வளவையும் சமாளித்து வந்திருக்கிறது. அனுபவமில்லாத, புதிய தேசம் தனது எல்லைக்குள்ளேயும், வெளியேயிருந்தும் பல நெருக்கடிகளுக்கு சவால் கொடுத்து மீண்டு வந்திருக்கிறது. தனிப்பட்ட சுதந்திரத்திற்காக நிகழ்ந்த உள்நாட்டுச் சண்டையையும் மிஞ்சித் தலைதூக்கி நின்றிருக்கிறது. கடுமையான பொருளாதாரப் புயலிலிருந்து தப்பி, புயல் மூலம் தெளிவாகத் தெரிந்த பல குறைபாடுகளைக் களைந்து, பலஹீன மாயிருந்த பகுதிகளை உறுதிபடுத்தியிருக்கிறது. சுதந்திரம், சுயஆட்சி ஆகிய இரு லட்சியங்களையும் எதிரிகள் தாக்காமல் பாதுகாத்து வந்திருக்கிறது.

ஆனால் இது பூரணமான திருப்தியளிக்கக்கூடிய சாதனை என்று எந்த அமெரிக்க பிரஜையும் கருதமாட்டான். பழங் கால சம்பவங்களை சீர்தூக்கிப் பார்க்கும் சக்தியுடன் தேசத்தின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் சில தவறான செயல்கள், செயல் புரியவேண்டிய சமயத்தில் வாளாயிருந்தது, போன்ற நாட்டின் முன்னேற்றத்தைத் தடுத்த பல உதாரணங்கள் தென் படலாம்.

இவைகளையெல்லாம் அறிந்த அமெரிக்க மக்கள் இம்மாதிரி தவறுகள் எதிர்காலத்திலும் ஏற்படக்கூடும் என்று எதிர் பார்க்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் திருப்தியளிக்கும்

அம்சம், தங்களுக்குப் பிரதிநிதியாயுள்ள அரசாங்கம் இருக்கிறதென்றும், அது காலாந்தரமாக தாங்கள் கண்ணெனக் கருதும் சுதந்திரங்களையும் உரிமைகளையும் பாதுகாத்து வந்திருக்கிறது என்கிற உணர்வுதான். நிஷ்பட்சபாதமான பரிசீலனை மூலம் தெளிவாகத் தெரிவது என்னவென்றால் தன்னுடைய அரசாங்கத்தைக் குறைகூறும் உரிமை பிரஜைக்கு இருக்கிறது என்பதும், புது வழிகளில் செல்லுமாறு அரசாங்கத்தைத் தூண்ட முடியுமென்பதும், பெரும்பான்மையினர் மாறுதல் அவசியம் எனக் கருதும் போது மாறுதல் செய்யலாம் என்பதும் தான். மேலும் உள்நோக்கிப் பார்த்தால் அரசியல் பூர்வ பீடிகையில் விவரிக்கப்பட்டிருக்கும் கடமைகளை அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது—அமெரிக்க யூனியன் பலம் பொருந்தியதாயிருக்கிறது, பொதுநல அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது, பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதும் புலனாகிறது.

பொதுஜன அரசாங்கத்தின் சக்தியை சோதிக்கக்கூடிய பிரச்னைகள் எதிர்காலத்தில் எழலாம். ஆனால் நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்த மகாசூரனாகிய அப்ரஹாம் லிங்கன் கூறியுள்ள "மக்களால் மக்களுக்காக, நடக்கும் மக்களுடைய அரசாங்கம்" கடந்த காலத்தில் பல சங்கடங்களைச் சமாளித்த மாதிரியே எதிர்காலத்திலும் எல்லா கஷ்டங்களையும் மீறி வெற்றி பெறும் எனும் நம்பிக்கை அமெரிக்க மக்களிடையே இருக்கிறது.

(1)

1776 ஜூலை 4-ம் தேதி கூடிய காங்கிரசில் பிரகடனம் செய்யப்பட்ட

சுதந்திர சாஸனத்தின் பூர்வ பீடிகை

13 அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஏகோபித்துச் செய்த பிரகடனம்.

மனித சரித்திரத்தினிடையிலே ஒரு ஜனக்கூட்டத்தினர் மற்றொரு ஜனக்கூட்டத்தினருடன் கொண்டிருந்த உறவை அறுத்துக்கொள்வதற்கு அவசியமேற்பட்டு, அதன்பிறகு இயற்கை தர்மப்படியும், இயற்கையின் கடவுளின் அருள்பிர காரமும் உலக நாடுகளுடன் சமதையாகவும் தனியாகவும் இருக்க அவர்களுக்குறித்தான உரிமையை மேற்கொண்டால், அப்படி தனித்து நிற்பதற்கான காரணங்களை பிரகடனப்படுத்து வது உலக மக்களின் அபிப்பிராயத்திற்கு அவர்கள் செலுத்தும் மதிப்பாகும்.

> எல்லா மக்களும் சமமாகவே சிருஷ்டிக்கப் பட்டனர்; அவர்களைப் படைத்த ஆண்டவன் அவர்களுக்கு பராதீனம் செய்யமுடியாத சில உரிமைகளை அளித்திருக்கிறான்; அப்பேர்ப்பட்ட உரிமைகளில் வாழ்வு, சுதந்திரம், சுகவாழ்வைத் தேடுவது முதலியன முக்கியமானவை—இந்த உண்மைகள் யாவரும் அறிந்தவை என்று நாங்கள் கருதுகிறோம். இந்த உரிமைகளைப் பெறுவதற்காகவே ஆளப்பட்டவர்களின் அனுமதி யின்மூலம் அதிகாரம் பெற்ற அரசாங்கங்கள் மக்களிடையே ஏற்பட்டன. இந்த நோக்கங்கள் பாழாகும் வகையில் ஆட்சி முறை நடந்தால் அந்த ஆட்சியை மாற்றவும் அல்லது அகற்றவும், தங்களுடைய சந்தோஷத்தையும், பத்திரத்தை யும் வளர்க்கும் வகையில் புது அரசாங்கம் அமைக்கவும் மக்களுக்கு உரிமை உண்டு.

நீண்டகாலமாக நடந்துவரும் அரசாங்கங்களை தாற்காலிக மான அற்ப காரணங்களுக்காகக் கலைக்கலாகாது என்பதுதான் புத்திசாலித்தனத்திற்கு அடையாளம். தங்களுக்குப் பழக்க மான அரசாங்க முறையை அழித்துவிட்டு அதன் மூலம் நீதி பெறுவதைவிட, கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்ள முடிந்த வரையில் அவைகளை சகித்துக்கொண்டிருப்பதுதான் மனித இயல்பு என்று உலக அனுபவம் காட்டுகிறது. ஆனால் பல காலமாக இடைவிடாத ஊழல்களும், யதேச்சாதிகாரச் செயல் களும் நிகழ்ந்து வந்ததிலிருந்து இத் தீச்செயல்களுக்குக் காரணமாயிருந்த ஆட்சியினர் கட்டுக்கடங்காத கொடுங்கோண் மைக்கு நம்மை உட்படும்படி செய்யும் ஒரே நோக்கத்துடன் நடந்துவருகிறார்களென்றால் அம்மாதிரி ஆட்சியை உதறி எறிந்து விட்டு, மக்களின் எதிர்கால பத்திரத்திற்கான புதுப் பாது காப்புகளை வகுக்க வேண்டியது அவர்கள் உரிமை மட்டுமல்ல கடமையுமாகும்—இந்த குடியேற்ற நாடுகள் பொறுமையாக சகித்துவந்தது இம்மாதிரி கொடுமைதான்; அவர்களுடைய பழைய அரசாட்சி முறையை மாற்றவேண்டியதும் இப்பொழுது அவசியம்தான். கிரேட் ப்ரிட்டனின் தற்போதைய அரசரின் சரித்திரம் மீண்டும் மீண்டும் தீங்கிழைத்தல், யதேச்சாதிகாரம் முதலிய கொடுமைகளின் சரித்திரம்தான். இந்தக் கொடூரச் செயல்களின் நோக்கம் இந்தக் குடியேற்ற நாடுகளில் கொடுங் கோலாட்சியை ஸ்தாபிப்பது. இதை நிரூபிக்க உண்மையறியும் ஆவலுள்ள உலகிற்கு உண்மைகளைக் கூறுவோம்.

(2)

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பு

ஐக்கிய நாடுகளின் மக்களாகிய நாங்கள், இன்னும் சிறப்பான சமஷ்டியை அமைக்க, உள்நாட்டு அமைதியை உறுதி செய்ய, கூட்டுப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்ய, பொதுநலத்தை வளர்க்க எங்களுக்கும் எங்கள் சந்ததியாருக்கும் சுதந்திர பாக்கியங்களைப் பெற அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பை வகுத்து ஸ்தாபிக்கிறோம்.

1-வது ஷரத்து

(1) இதன்மூலம் சட்டமியற்றும் அதிகாரம் ஒரு செனட்டும், பிரதிநிதிகள் சபையும் அடங்கிய ஐக்கிய நாடுகளின் (அமெரிக்காவின்) காங்கிரஸிற்கு அளிக்கப்படுகிறது.

(2) பல்வேறு ராஜ்யங்களிலுள்ள மக்களால் இரண்டு வருஷத்திற்கொருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்கும் பிரதிநிதிகள் சபை. இந்த சபையினரைத் தேர்ந்தெடுக்கும் வோட்டர்களுக்கு, இரு சட்டசபைகளில் அதிகப்படியான அங்கத்தினர்களுள்ள சட்டசபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வேண்டிய யோக்யதைகள் இருக்கவேண்டும். 25 வயது நிறையப் பெறாத, ஏழு வருஷம் அமெரிக்க பிரஜையாயிராத, தேர்ந்தெடுக்கப்பட்ட சமயத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜ்யத்தில் வாசம் செய்யாத யாரும் பிரதிநிதியாக வர முடியாது.

சமஷ்டியில் சேரும் பல்வேறு ராஜ்யங்களுக்கு பிரதிநிதிகளும், நேர்முக வரித்தொகைகளும் அவைகளின் ஜனத்தொகைக்கு ஏற்றபடி பிரித்துக் கொடுக்கவேண்டும். இவை

களின் ஜனத்தொகையை நிர்ணயிக்கும் முறை என்ன வென்றால் குறிப்பிட்ட காலத்திற்கு ராணுவ சேவை செய்யக் கடமைப்பட்டவர்களைச் சேர்த்து, வரிவிதிக்கப்படாத இந்தியர்கள் எண்ணிக்கையைத் தள்ளி எஞ்சியுள்ள சுதந்திரப் பிரஜை களான எண்ணிக்கையுடன், இவர்களில் ஐந்தில் மூன்று பங்கு ஜனங்களைச் சேர்த்துக்கொள்வது. அமெரிக்காவின் முதல் காங்கிரஸ் கூடி மூன்று வருஷத்திற்குள் ஜனக் கணக்கு பூர்த்தி யாகிவிடவேண்டும்; அதற்குப் பிறகு சட்டத்தின் ஆக்ஞைப்படி பத்து வருஷத்திற்கொரு தரம் ஜனக் கணக்கெடுக்க வேண்டும். மொத்த பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை 30,000 மக்க ளுக்கொரு பிரதிநிதிகளுக்கு மேலிருக்கலாகாது; ஆனால் ஒவ் வொரு ராஜ்யத்திற்கும் குறைந்தது ஒரு பிரதிநிதியாவது இருக்கவேண்டும். ஜனக் கணக்கு எடுக்கும்வரையில் நியூ ஹாம்ஷையர் ராஜ்யத்திற்கு மூன்றும், மஸாசுஸெட்ஸுக்கு எட்டும், ரோடுஐலண்டு, பிராவிடென்ஸ் பிளான்டேஷன் இரண டுக்கும் ஒவ்வொன்றும், கனெக்டிகட்டிற்கு ஐந்தும், நியூ யார்க்கிற்கு ஆறும், நியூ ஜெர்ஸிக்கு நான்கும், பென்ஸில் வேனியாவிற்கு எட்டும், டிலாவேருக்கு ஒன்றும், மேரிலாண் டிற்கு ஆறும், வர்ஜீனியாவுக்கு பத்தும், வட கரோலினவுக்கு ஐந்தும், தென் கரோலினவுக்கு ஐந்தும், ஜார்ஜியாவுக்கு மூன்று பிரதிநிதிகளும் இருப்பர்.

எந்த ராஜ்யங்களிலாவது பிரதிநிதிகள் ஸ்தானத்தில் காலி ஏற்பட்டால் அந்த ராஜ்யத்தின் நிர்வாக அதிகாரி அந்த ஸ்தானங்களைப் பூர்த்தி செய்வதற்கான தேர்தல் உத்தரவிட வேண்டும்.

பிரதிநிதிகள் சபையினர் தங்களுடைய சபைத் தலைவரையும், பிற உத்தியோகஸ்தர்களையும் தேர்ந்தெடுத்துக் கொள்வர். பகி ரங்கக் குற்றம் சாட்டும் உரிமை இந்த சபைக்கு மட்டும் பிரத்தி யேகமாக உண்டு.

(3) அமெரிக்காவின் செனட் சபைக்கு ஒவ்வொரு ராஜ் யத்திற்கும் இரு பிரதிநிதிகள் உண்டு. இவ்விரு பிரதிநிதி

களையும் அந்தந்த ராஜ்ய சட்டசபையினர் தேர்ந்தெடுக்கவேண்டும். இவர்களுடைய பதவிகாலம் 6 வருஷம். ஒவ்வொரு செனட்டருக்கும் ஒரு வோட்டு உண்டு.

முதல் தேர்தல் முடிந்து செனட்டர்கள் கூடியதும் மொத்த அங்கத்தினர்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கவேண்டும். இதில் முதல் பகுதியினர் பதவிகள் இரண்டு வருஷத்திற்கெல்லாம் காலியாகிவிடும். இரண்டாவது பகுதியினர் பதவிகள் 4 வருஷ முடிவில் காலியாகிவிடும். மூன்றாவது பகுதியினர் பதவிகள் 6 வருஷ முடிவில் காலியாகும். இம்மாதிரி காலியானதும் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர் இரண்டு வருஷத்திற்கொரு தரம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஏதாவதொரு ராஜ்ய சட்டசபை கூடாமலிருக்கையில் செனட் பதவியை ராஜிநாமா செய்ததாலோ மற்றெக் காரணத்தாலோ காலி ஏற்பட்டால் மீண்டும் அந்த ராஜ்ய சட்டசபை கூடி காலி ஸ்தானத்தைப் பூர்த்தி செய்யும்வரையில் அந்தப் பதவியை வகிக்க அந்த ராஜ்ய நிர்வாக அதிகாரி யாரையாவது நியமிக்கலாம்.

முப்பது வயது நிறையப் பெறுத, அமெரிக்காவில் 9 வருஷம் தொடர்ந்து பிரஜையாயிராத, தேர்ந்தெடுக்கப்படும் சமயத்தில் தேர்ந்தெடுக்கும் ராஜ்யத்தில் வசிக்காத யாரும் செனட்டராயிருக்க முடியாது.

அமெரிக்காவின் உப ஜனாதிபதி செனட் சபைக்குத் தலைமை வகிப்பார். ஏதாவது ஒரு விஷயத்தில் இரு தரப்பாருக்கும் சம வோட்டிருந்தாலொழிய செனட் தலைவருக்கு வோட்டு கிடையாது.

செனட் சபை தன்னுடைய இதர அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதுடன் உப ஜனாதிபதி வர இயலாதபொழுதும், அல்லது அவர் ஜனாதிபதிக்குப் பதிலாக தலைமை வகிக்கும்பொழுதும் செனட்டிற்கு தலைமை வகிக்க ஒரு தாற்காலிக தலைவரையும் தேர்ந்தெடுக்கும்.

பகிரங்கக் குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிக்கும் உரிமை பிரத்தியேகமாக செனட்டிற்குத்தான் உண்டு. இதற்காக அவர்கள் கூடும்போது பிரமாணம் செய்துவிட்டுத்தான் விசாரணை தொடங்கவேண்டும். அமெரிக்க ஜனாதிபதி இம்மாதிரி விசாரிக்கப்படும்பொழுது கூட்டத்திற்குப் பிரதம நீதிபதி தலைமை வகிக்கவேண்டும். இந்த விசாரணையில் தண்டனை விதிப்பதென்றால் அங்கத்தினர்களின் பிரசன்னமாயிருப்பவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேர் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த விசாரணையில் தண்டனை, குற்றம் சாட்டப்பட்டவரைப் பதவியிலிருந்து நீக்குவதும், அமெரிக்காவில் சம்பளமுள்ள எந்த உத்தியோகமோ, அந்தஸ்தளிக்கும் எந்தப் பதவியோ பொறுப்போ வகிக்கத் தகுதியற்றவர் என்று முடிவு செய்வதுமாகும்; ஆனால் இப்படி நீக்கப்பட்டவர் சட்டப்படி வழக்குத் தொடரப்பட்டு, விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படலாம்.

(4) செனட்டர் பதவிகளுக்கும் பிரதிநிதிகள் சபைக்கும் எங்கெங்கே, எப்பொழுது, எவ்வாறு தேர்தல்கள் நடக்கவேண்டும் என்பதை அந்தந்த ராஜ்ய சட்டசபைகள் தீர்மானிக்க வேண்டும். செனட்டர்களைத் தேர்ந்தெடுக்கும் இடங்கள் தவிர மற்றவைகளைப் பற்றி ராஜ்ய சட்டசபைகள் செய்த முடிவுகளை காங்கிரஸ் எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றலாம்.

காங்கிரஸ் குறைந்தது வருஷத்திற்கொரு முறையாவது கூடவேண்டும். சட்டப்படி வேறு தேதி நிர்ணயிக்கப்பட்டாலொழிய அந்தக் கூட்டம் டிசம்பர் மாதத்தில் முதல் திங்கட்கிழமை நடக்கவேண்டும்.

(5) ஒவ்வொரு சட்ட சபைக்கும் தனது அங்கத்தினர்கள், தேர்தல் முடிவுகள், அபேட்சகர் யோக்யதாம்சங்கள் முதலியவற்றை முடிவு செய்யும் அதிகாரம் உண்டு. காரியம் ஒழுங்காக ஆரம்பிப்பதற்கு அந்த சட்டசபையில் பெரும்பான்மையினர் பிரசன்னமாயிருக்கவேண்டும்; ஆனால் பெரும்பான்மையினரை விடக் குறைவானவர்கள் தினம் தினம் கூடி கூட்டத்தை

ஒத்தி வைக்கலாம்; அந்த சட்டசபை அவ்வப்போது திட்டம் செய்யும்படி தண்டனைகள் விதித்து கூட்டத்திற்கு வராத மெம்பர்களை வரும்படி கட்டாயப்படுத்தலாம்.

ஒவ்வொரு சபையும் தனது நடைமுறை விதிகளை வகுத்துக் கொள்ளலாம்; சபை ஒழுங்குக்கு மாறாக நடக்கும் அங்கத்தினர்களைத் தண்டிக்கலாம்; மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் சம்மதித்தால் எந்த மெம்பரையும் அப்புறப்படுத்தலாம்.

ஒவ்வொரு சட்டசபையும் தனது நடவடிக்கைகளைக் காட்டக் கூடிய புத்தகம் ஒன்றை வைத்துக்கொண்டு, தங்களுக்கு ரகஸ்யமாக யிருக்கவேண்டும் என்ற பகுதிகள் நீங்கலாக மற்றவைகளை பிரசுரித்துவரவேண்டும்; சபையில் பிரசன்னமாயிருப்பவர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் விரும்பினால், சபை முன் வரும் பிரச்னைகளிலும் சாதகமாக எவ்வளவு பேர் வோட்டுச் செய்தனர் எவ்வளவு பேர் பாதகமாக வோட்டுச் செய்தனர் என்றும் நடவடிக்கைப் புத்தகத்தில் பதிவு செய்யவேண்டும்.

காங்கிரஸ் கூட்டம் நடந்துகொண்டிருக்கும்பொழுது எந்த சபையும் மற்ற சபையின் சம்மதமின்றி மூன்று நாட்களுக்கு மேல் கூட்டத்தை ஒத்திப்போட முடியாது; இரண்டு சட்ட சபைகளும் கூடும் இடத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும் கூட்டத்தை நடத்தலாகாது.

(6) தங்கள் சேவைகளுக்கு சட்டப்படி திட்டம் செய்யப்பட்ட பிரதி பிரயோசனத்தை அங்கத்தினர்கள் பெறுவார்கள்; அந்தத் தொகையை அமெரிக்கர் சஜானு செலுத்தவேண்டும். தேசத்துரோகம், கலகாஸ்பதமான செயல் போன்ற குற்றங்கள் தவிர மற்ற குற்றங்களுக்காக செனட்டர்களோ பிரதிநிதி சபையினரோ சட்டசபைக் கூட்டம் நடக்கையிலோ, அல்லது வீட்டிலிருந்து கூட்டத்திற்கு வருகையிலோ அல்லது கூட்டத்திலிருந்து வீட்டிற்குத் திரும்புகையிலோ கைது செய்யப்படலாகாது.

சட்டசபைகளில் அவர்கள் செய்த பிரசங்கங்களுக்காக வேறு இடத்தில் தாவா தொடரலாகாது.

செனட் சபை அங்கத்தினரோ, பிரதிநிதி சபை அங்கத்தினரோ அவர் பதவிகாலத்தில் சிருஷ்டிக்கப்பட்ட அல்லது சம்பளம் உயர்த்தப்பட்ட அமெரிக்க அரசாங்கத்திற்குட்பட்ட சிவில் பதவிகளை அவர்கள் அந்த சட்டசபைகளின் அங்கத்தினராயிருக்கையில் ஏற்றுக்கொள்ளலாகாது. அமெரிக்க அரசாங்கத்தில் உத்தியோகம் வகிக்கப்போகும் அவருடைய பதவிகாலத்தில் சட்டசபைகள் எதிலும் அங்கத்தினரா யிருக்கக்கூடாது.

(7) பணம் வசூல் செய்யும் எல்லா மசோதாக்களும் பிரதிநிதிகள் சபையில்தான் தொடங்கப்படவேண்டும்; ஆனால் செனட் இதற்குத் திருத்தங்கள் கொண்டுவரலாம் அல்லது மற்ற சபை செய்த திருத்தங்களை ஏற்றுக்கொள்ளலாம்.

பிரதிநிதிகள் சபையிலும் செனட்டிலும் நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு மசோதாவும் சட்டமாவதற்கு முன் அமெரிக்க ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவேண்டும்; அதற்கு சம்மதித்தால் அவர் அதில் கையெழுத்திடுவார்; அவர் சம்மதிக்காவிட்டால் தனது ஆட்சேபனைகளுடன் மசோதா எந்த சட்டசபையில் தொடங்கப்பட்டதோ அதற்கே அனுப்பிவிடுவார். சபையினர் உடனே ஜனாதிபதியின் ஆட்சேபனைகளை சபை நடைமுறைப் புத்தகத்தில் பதிவுசெய்துவிட்டு மசோதாவைப் புனராலோசனை செய்ய ஆரம்பிக்கும். இவ்வாறு புனராலோசனை செய்த பிறகு அந்த சபையில் மூன்றில் இரண்டு பங்கு பேர் அதை அங்கீகரித்தால் அது சட்டமாகிவிடும். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் இருசபைகளிலும் சாதகபாதகமாக இருந்தவர்கள் வோட்டைக் கணக்கெடுப்பதுடன், இரு தரப்பிலும் வோட்டுச் செய்பவர்கள் பெயர்களை அந்தந்த சட்டசபை நடவடிக்கைப் புத்தகத்தில் பதிவு செய்யவேண்டும். ஞாயிற்றுக்கிழமை நீங்கலாகக் கணக்கிட்டு தன்னிடம் மசோதா சமர்ப்பிக்கப்பட்டு பத்து நாட்களில் ஜனாதிபதி திருப்பியனுப்பாவிட்டால் மசோதா அவர் கையெழுத்திட்டால்

ஆகும் மாதிரி சட்டமாகிவிடும்; ஆனால் இந்த பத்து நாட்களுக்குள் காங்கிரஸ் தனது கூட்டத்தை ஒத்திப்போட்டுவிட்டால் மசோதா சட்டமாகாது.

கூட்டத்தை ஒத்திப்போடுவது தவிர செனட், பிரதிநிதிகள் சபை இரண்டின் கூட்டு அங்கீகாரம் தேவையான எல்லா உத்தரவு, தீர்மானம் வோட்டு முதலியவைகள் அமெரிக்க ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்; அவை அமுலுக்குவருமுன் அவருடைய சம்மதம் பெறவேண்டும்; அவரால் நிராகரிக்கப்பட்டால், ஒரு மசோதாவுக்காகக் குறிப்பிடப்பட்ட விதிகளின் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு செனட், பிரதிநிதிகள் சபைகளின் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் அங்கீகாரம் பெற்று அமுலுக்கு வரவேண்டும்.

(8) காங்கிரஸுக்கு வரி விதிக்க, வசூலிக்க, சுங்க வரி, தண்ட வரி விதித்து வசூலிக்க, கடன்களை செலுத்த, பொதுப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்ய பொதுவாக அமெரிக்காவின் நலனுக்கு வகைசெய்ய அதிகாரமுண்டு; ஆனால் வரிகள், சுங்க வரிகள் அமெரிக்காவெங்கும் ஒரேமாதிரியா யிருக்க வேண்டும்.

அமெரிக்காவின் சொத்தின்பேரில் பணம் கடன்வாங்க அயல்நாடுகளுடனும், ராஜ்யங்களுக்குள்ளும், இந்திய ஜாதியினருடனும் வியாபாரத்தை ஒழுங்குபடுத்த,

பிரஜா உரிமை விதிகளை ஒரே மாதிரியாக அமைத்து, அமெரிக்காவெங்கணும் இன்ஸால்வென்ட் சம்பந்தமாக ஒரேமாதிரி சட்டங்கள் இயற்ற,

நாணயங்கள் பதித்து, அவைகளின் மதிப்பை ஒழுங்குபடுத்தி, அயல்தேச நாணயங்களின் மாற்றுவிகிதத்தை நிர்ணயித்து, எடை அளவு சம்பந்தமான சாதனங்களை நிர்ணயிப்பது,

அமெரிக்காவின் நாணயங்கள் நோட்டுகளில் கள்ள முறைகளைக் கையாள்பவர்களை தண்டித்தல்.

தபால் ஆபீஸ்களையும், தபால் எடுத்துச்செல்லும் ரஸ்தாக்களையும் அமைத்தல்,

ஆசிரியர்களுக்கும், புதிதாக விஞ்ஞானக் கருவிகளைக் கண்டு பிடிப்பவர்களுக்கும் தங்கள் சிருஷ்டியின் பயனை குறிப்பிட்ட காலத்திற்கு ஏகபோகமாக அடைவதற்கான வகைசெய்து விஞ்ஞானத்தையும் பயனுள்ள கலைகளையும் வளர்த்தல்.

உயர்தர நீதிமன்றத்திற்குக் கீழ்ப்பட்ட நீதி ஸ்தலங்களை அமைத்தல்;

கடற்கொள்ளை போன்ற குற்றங்களின் பொருளை விளக்கி, குற்றம் செய்தவர்களையும் சர்வதேச சட்டங்களை மீறுபவர்களையும் தண்டிக்க;

யுத்தம் தொடங்கவும், யுத்தத்தில் சேர, எதிர்நடவடிக்கைகளை அங்கீகரிக்க, தரை, நீர் முதலியவைகளில் கைப்பற்றப்படு பவைகளைப்பற்றி விதிகள் செய்ய;

படைகள் திரட்டி அவைகளைப் பராமரிக்க; ஆனால் இதற்கான இரண்டு வருஷச் செலவைத்தான் அனுமதிக்கலாம்.

ஒரு கடற்படை அமைத்து அதைப் பராமரிப்பது;

தரை, கடற்படைகள் நிர்வாகம் நடைமுறை பற்றி விதிகள் செய்தல்;

அமெரிக்காவின் சட்டங்களை நிறைவேற்றவும், கலகங்களை அடக்கி, ஆக்ரமிப்புகளை எதிர்க்கவும் உள்நாட்டு பாதுகாப்புப் படையின் உதவியைப் பெற ஏற்பாடு செய்யவும்;

உள்நாட்டுப் பாதுகாப்புப் படையை அமைத்து அதற்கு ஆயுதமளித்து, அவைகளுக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்தி அமெரிக்காவின் சேவைக்காக அனுப்பப்படும்பொழுது படையினரை நிர்வகித்தல்; காங்கிரஸ் வகுத்த திட்டப்படி அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் அதிகாரமும், அவைகளுக்கு உத்தியோகஸ்தர்

கள் நியமிக்கும் உரிமையும் அந்தந்தப் படைகள் இருக்கும் ராஜ்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பத்து சதுர மைல்களுக்கு அதிகப்படாத விஸ்தீரணமுள்ள குறிப்பிட்ட ராஜ்யம் சாஸனம் செய்து காங்கிரஸிஞல் ஒப்புக் கொள்ளப்பட்டு, அந்த இடம் அமெரிக்காவின் தலைநகராஞல் அவை சம்பந்தமான பிரத்தியேக சட்டங்கள் இயற்றவும்; கோட்டைகள், கொத்தளங்கள், வெடிமருந்துசாலைகள், துறைமுகத் தளங்கள் போன்ற உபயோகமுள்ள ஸ்தலங்கள் அமைப்பதற்காக எந்த ராஜ்யத்திடமிருந்தாவது, அந்த ராஜ்ய சட்ட சபையினர் சம்மதத்தின்பேரில் வாங்கப்பட்ட ஸ்தலங்களுக்குப் பிரத்தியேக சட்டங்கள் இயற்றும் உரிமையும்;

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை அமுல் நடத்தவும், இந்த அரசியலமைப்பின் மூலம் அமெரிக்க அரசாங்கத்திடமோ அல்லது அதற்குட்பட்ட நிர்வாகப் பகுதியினரிடமோ மற்றெல்லா அதிகாரங்களையும் நிர்வகிக்கவும் தேவைப்படும் எல்லா சட்டங்களையும் இயற்றவும்;

(9) 1808-ம் வருஷத்திற்கு முன் தற்சமயமுள்ள எந்த ராஜ்யமாவது தனக்கு யுக்தமென்று தோன்றி யாரையாவது அதன் எல்லைக்குள் குடியேற அனுமதித்திருந்தால் அதை காங்கிரஸ் தடைசெய்யலாகாது; ஆஞல் அப்படி உள்ளேவர அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் 10 டாலருக்கு மேற்படாமல் வரி விதிக்கலாம்.

உள்நாட்டுக் கலகம் அல்லது அயல்நாட்டு ஆக்கிரமிப்பு சந்தர்ப்பங்கள் தவிர மற்ற சமயங்களில் குற்றம் சாட்டப்பட்டவனை கோர்ட்டு முன் ஆஜர் செய்யும்படி கோரும் உரிமையை தாற்காலிகமாகக் கூட ரத்துசெய்யலாகாது.

மரண தண்டனையின் விளைவாக குற்றவாளியின் ஆயுட்காலத்திற்குப் பிறகு அவன் சொத்து பறிமுதல்செய்து சட்டம் செய்யலாகாது. குற்றம் நிகழ்ந்த சமயத்தில் குற்றமில்லாம

லிருந்ததை நிகழ்ந்த பிறகு குற்றமென பாவிக்கும்படியான சட்டம் இயற்றலாகாது.

இதற்குமுன் ஜனக்கணக்கெடுப்பு பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் ஷரத்துப்படி எடுக்கப்பட்டுள்ள ஜனக்கணக்குப்படி யல்லாமல் வேறுவகையில் தலைவரியோ வேறு எவ்வகை நேரடியான வரியோ விதிக்கலாகாது.

வர்த்தக அல்லது வருமான இலாகாவின் எந்த கோட்பாட்டின்படியும் ஒரு ராஜ்யத்திலுள்ள ஒரு துறைமுகத்திற்கில்லாத சலுகைகளை மற்ற துறைமுகங்களுக்குக் காட்டலாகாது; ஒரு ராஜ்யத்திலிருந்து கிளம்பும் அல்லது அதற்கு வரும் கப்பல்களை வேறு துறைமுகத்திற்குப் போகவோ, அல்லது அங்கு காலிசெய்யவோ அல்லது அதற்கு வரி விதிக்கவோ கூடாது.

சட்டப்படி அனுமதிக்கப்பட்டாலொழிய அரசாங்க பொக்கிஷத்திலிருந்து பணம் வாங்கலாகாது; சர்க்காருக்கு வரும் அல்லது அதனால் செலவாகும் பணங்களுக்கு அவ்வப்போது ஒழுங்கான கணக்குகள் பிரசுரிக்கப்பட வேண்டும்.

அமெரிக்காவினால் பிரபுப் பட்டம் யாருக்கும் அளிக்கப்படலாகாது. அமெரிக்க அரசாங்கத்திலிருந்து ஊதியம்பெறும் அல்லது பொறுப்புவகிக்கும் எந்த உத்தியோகஸ்தரும் எந்த ராஜா, இளவரசர் அல்லது அயல்நாட்டு அரசரிடமிருந்து பரிசோ பணமோ, பதவியோ பட்டமோ பெறலாகாது.

(10) எந்த ராஜ்யமும் யாருடனும் உடன்படிக்கை அல்லது நேசஉடன்பாடு, அல்லது சமஷ்டிக் கூட்டுறவு செய்துகொள்ளலாகாது; எந்த ராஜ்யமும் படையில் சேர அனுமதி அல்லது ராணுவ எதிர்நடவடிக்கைக்கு அனுமதி அளிக்கலாகாது; நாணயம் பதிவுசெய்யலாகாது; கடன் செலுத்துவதில் தங்க அல்லது வெள்ளி நாணயங்கள் தவிர வேறு எதற்கும் செலாவணி உரிமை யளிக்கலாகாது; மரணதண்டனையின் விளைவாக குற்றவாளியின் வாரிசுகளை தொந்தரவு செய்யும் சட்டமோ, குற்றம்

நிகழுவதற்கு முன் குற்றமல்லாததை பின்னர் குற்றமென்று அறிவித்தோ சட்டங்கள் இயற்றலாகாது ; ஒப்பந்தங்கள் மூலம் ஏற்படும் கடமைகளை பாதித்தோ, பட்டங்கள் வழங்கியோ சட்டம் செய்யலாகாது.

தங்களுடைய மேற்பார்வை சட்டங்களை அமுல் நடத்துவதற்கு அவசியமானாலொழிய ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு காங்கிரஸின் சம்மதமின்றி எந்த ராஜ்யமும் சட்டமியற்றலாகாது. இறக்குமதி ஏற்றுமதிக்கு ராஜ்யங்கள் விதிக்கும் வரி வசூலில் நிகர் தொகை அமெரிக்க பொக்கிஷ இலாகாவின் உபயோகத்திற்கு விட்டுவிடவேண்டும். அப்படி சட்டம் இயற்றினாலும் அவை காங்கிரஸின் புனராலோசனைக்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டவை.

காங்கிரஸின் அனுமதியின்றி எந்த ராஜ்யமும் கப்பல்களுக்கு வரி விதிக்கலாகாது ; சமாதான காலத்தில் படைகளோ யுத்தக் கப்பல்களோ வைத்திருக்கலாகாது, மற்ற ராஜ்யத்துடனோ அன்னிய அரசாங்கத்துடனோ ஒப்பந்தம் செய்து கொள்ளலாகாது ; ஆக்ரமிக்கப்பட்டாலொழிய, அல்லது திடீர் அபாயத்தினால் சமஷ்டி அரசாங்கத்தை கலந்துகொள்வது சாத்தியமில்லாமற் போனாலொழிய யுத்தத்தில் எந்த ராஜ்யமும் ஈடுபடலாகாது.

2-வது பிரிவு.

(1) நிர்வாக அதிகாரம் அமெரிக்க ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படும். அவர் 4 வருஷ காலத்திற்குப் பதவி வகிப்பார். அவரும் அதே காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உபஜனாதிபதியும் வருமாறு தேர்ந்தெடுக்கப்படுவார் :

காங்கிரஸில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் எவ்வளவு செனட்டர்களும், பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களும் உண்டோ அத்தனை எலெக்டர்களை அந்தந்த ராஜ்ய சட்டசபை திட்டமிடும் முறையில் நியமிப்பார்கள். அமெரிக்க அரசாங்கத்தினிட

மிருந்து ஊதியம்பெறும் பதவி அல்லது பொறுப்பு வகிக்கும் செனட்டரோ, பிரதிநிதியோ மற்றவர்களோ எலக்டராக நியமிக்கப் படலாகாது.

எலெக்டர்கள் தத்தம் ராஜ்யத்தில் கூடி ரகஸ்ய வோட்டு முறைப்படி இரண்டு பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவ் விருவரில் ஒருவராவது அந்த ராஜ்யத்தில் வசிப்பவரா யிருக்க லாகாது: எலக்டர்கள் தேர்ந்தெடுத்த நபர்களையும் அவர்களில் ஒவ்வொருவருக்கும் கிடைத்த வோட்டுகளையும் குறித்து அந்த ஜாப்தா சரியானது என உறுதிமொழி கூறிக் கையெழுத்திட்டு அதை உறையில் போட்டு மூடி சீல்வைத்து அமெரிக்கத் தலை நகரிலுள்ள செனட் சபைத் தலைவருக்கு அனுப்பவேண்டும். செனட், பிரதிநிதிகள் சபையினர் முன், செனட் சபைத் தலைவர் ராஜ்யங்களிலிருந்து வந்திருக்கும் ஜாபிதாக்களைத் திறந்து வோட்டுகளை எண்ணுவார். நியமிக்கப்பட்ட எலக்டர்களின் பெரும்பான்மையானவர்களின் வோட்டைப் பெற்றவர் ஜனாதி பதியாவார்; ஒருவரை விட அதிகப்படியானவர்கள் பெரும் பான்மை வோட்டுப் பெற்றிருந்தாலும், அல்லது பல பேர் சமமான வோட்டுகள் பெற்றிருந்தாலும், பிரதிநிதிகள் சபை அங்கத்தினர் உடனே அவர்களில் ஒருவரை ரகஸ்ய வோட்டு மூலம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுப்பார்; யாருக்கும் பெரும் பான்மை வோட்டுக் கிடைக்காவிட்டால் அதிகப்படி வோட்டுப் பெற்றவர்களில் முதல் ஐந்து பேரில் ஒருவரை ஜனாதிபதியாக பிரதிநிதிகள் சபையினர் தேர்ந்தெடுக்கவேண்டும். ஆனால் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதில் வோட்டுகளை ராஜ்ய வாரி யாகக் கணக்கிடவேண்டும்; இதில் ஒரு ராஜ்யத்தின் பிரதிநிதி களுக்கு ஒரு வோட்டு; இந்த நடைமுறை சட்டப்படி ஆரம்பிப்ப தற்குத் தேவையான அங்கத்தினர்கள் கோரம் (Quorum) ராஜ்யங்கள் ஒவ்வொன்றிற்கு ஒன்று அல்லது மேற்பட்ட பிரதி நிதிகள் மேனி மூன்றில் இரண்டு பங்கு ராஜ்யங்களின் பிரதிநிதிகள் பிரசன்னமா யிருக்கவேண்டும்; இருக்கும் ராஜ்யங்களில் பெரும்பான்மையான ராஜ்யங்கள் வோட்டுச்

செய்திருக்க வேண்டும். ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு எலெக்டர்களில் பெரும்பான்மையோரின் வோட்டுகளைப் பெற்றவர் உப ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். ஆனால் இரண்டு அல்லது மூன்று பேர்களுக்கு சமவோட்டிருந்தால் அவர்களில் ஒருவரை உப ஜனாதிபதியாக ரகஸ்யவோட்டு முறைமூலம் செனட் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கவேண்டும்.

எலெக்டர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டிய தினமும் காலமும் காங்கிரஸினால் திட்டம் செய்யப்படும். ஆனால் இவர்கள் திட்டம் செய்யும் காலமும் தேதியும் அமெரிக்காவெங்கும் ஒரே மாதிரி இருக்கவேண்டும்.

இந்த அரசியலமைப்பு ஏற்கப்பட்ட காலத்தில் அமெரிக்கா விலேயே பிறந்த பிரஜையாகவோ, அல்லது அமெரிக்காவின் பிரஜையானவரோ உள்ளவர்கள் தவிர மற்றவர்கள் ஜனாதிபதி பதவிக்கு லாயக்கற்றவர்கள்; 35 வயது நிறையப்பெறாத வர்களும், அமெரிக்காவில் 14 வருஷம் நீடித்து வசிக்காத வரும் ஜனாதிபதியாக வரமுடியாது.

ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டாலும், அல்லது இறந்துவிட்டாலும், பதவியை ராஜிநாமா செய்துவிட்டாலும், மற்றெக்காரணத்திற்காகவாவது பதவியை வகிக்க அசக்தராகிவிட்டாலும் அவருடைய பதவியை உபஜனாதிபதி வகித்து காரியங்கள் செய்வார். ஜனாதிபதி உபஜனாதிபதி விலக்கப்பட்டாலும், இறந்துவிட்டாலும், ராஜிநாமாச் செய்தாலும், அல்லது பதவி வகிக்க அசக்தர்களாகப் போய்விட்டாலும் அவர்களுக்குப் பதிலாக அந்தப் பதவிகளை எந்த உத்தியோகஸ்தர் வகிப்பது என்பதற்கான சட்டத்தை காங்கிரஸ் இயற்றவேண்டும். இந்த சட்டப்படி பதவி ஏற்பவர் புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் வரையிலோ அல்லது காலி ஏற்பட்டதற்கான காரணங்கள் நீங்கும் வரையிலோ பதவி வகிப்பார்.

ஜனாதிபதி, தான் புரியும் சேவைகளுக்கான பிரதிப்பிரயோசனத்தை குறிப்பிட்ட கால அளவிற் கொருதரம் பெறுவார்.

இந்த பிரதிப்பிரயோசனத் தொகையை அவர் பதவிகாலம் முடியும் வரையில் உயர்த்தவோ குறைக்கவோ கூடாது. இது தவிர அவர் பதவிகாலம் முடியும் வரை அமெரிக்க அரசாங்கத் தினிடமிருந்தோ அல்லது ராஜ்யங்களிடமிருந்தோ வேறு எந்தத் தொகையும் பெறலாகாது.

அவர் தம் பதவியை ஏற்று நடத்த ஆரம்பிக்குமுன் வருமாறு பிரமாணம் செய்யவேண்டும்: "அமெரிக்க ஜனாதி பதி பதவியை சிரத்தையுடன் நிர்வகிப்பேன் என்று மனப்பூர்வ மாக உறுதிகூறுகிறேன்; என்னால் இயன்றமட்டும் அமெரிக்கா வின் அரசியலமைப்பை சிதையாமல், பாதுகாத்து காப்பாற்று வேன்."

(2) அமெரிக்காவின் தரைப்படை, கடற்படைகளுக்கும், பல்வேறு ராஜ்யங்களின் பாதுகாப்புப் படைகள் அமெரிக்காவின் சார்பாக போர்புரியும் சந்தர்ப்பங்களிலும் அவைகளின் தளபதியா யிருப்பார்; நிர்வாக இலாகாவின் தலைவர்களை, அவர்கள் பொறுப்பிலுள்ள விஷயங்களைப் பற்றி எழுத்துமூலமாக அபிப் பிராயம் கூறும்படி ஜனாதிபதி கோரலாம். அமெரிக்காவுக் கெதிராக புரியப்படும் குற்றங்களில் தேசத் துரோகக் குற்றம் நீங்கலாக குற்றவாளிகளுக்கு தண்டனை ரத்து, தண்டனை ஒத்திவைப்பு செய்யலாம்.

செனட்டின் யோசனை, அங்கீகாரத்தின்பேரில் ஜனாதிபதி உடன்படிக்கைகள் செய்துகொள்ளலாம். ஆனால் அவைகளை செனட்டர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். செனட்டின் யோசனை அங்கீகாரம் இரண்டின் பேரில் ஜனாதிபதி, ஸ்தானிகர்கள், மந்திரிகள், உயர்தர நீதி பதிகள், இதன் மூலம் வியக்தமாக குறிப்பிடப்படாத அல்லது சட்ட மூலம் நிர்ணயிக்கப்படாத உத்தியோகஸ்தர்களையும் நிய மிக்கலாம்; ஆனால் காங்கிரஸ் இம்மாதிரி சில்லரை உத்தி யோகஸ்தர்கள் நியமனங்களை சட்டமூலம் ஜனாதிபதியிடம் மட்டுமோ, அல்லது நீதி ஸ்தலங்களிடமோ அல்லது இலாகா தலைவர்களிடமோ ஒப்படைக்கலாம்.

செனட் கூட்டம் நடக்காமலிருக்கையில் உத்தியோகங்களி லுள்ள காலி ஸ்தானங்களை செனட்டின் அடுத்த கூட்டம் நீடிக்கும் வரையில் அமுலிலிருக்கும்படி கமிஷன்கள் நிய மிப்பதன் மூலம் பூர்த்தி செய்யலாம்.

(3) ஜனாதிபதி அவ்வப்போது அமெரிக்க யூனியன் நிலை மைபற்றி காங்கிரஸிற்குத் தகவல்கள் கொடுக்கலாம்; அவர் அவசியம் அல்லது யுக்தம் என்று கருதும் விஷயங்களைப் பற்றி சட்டமியற்றும்படி காங்கிரஸிற்கு யோசனை கூறலாம்; விசேஷ சந்தர்ப்பங்களில் இரண்டு சட்டசபைகளையுமோ அல்லது அவை களில் ஒன்றையோ கூட்டலாம். கூட்டத்தை ஒத்திப்போடு வது பற்றி இரு சட்டசபைகளுக்கும் அபிப்பிராயபேதமிருந்தால் அவருக்கு யுக்தமென்று தோன்றும் தேதிக்கு ஒத்திப்போட லாம். ஸ்தானீகர்களையோ அல்லது அரசாங்க மந்திரிகளையோ அவர் வரவேற்கலாம்; சட்டங்களை ஒழுங்காக நிறைவேற்று வதில் அவர் கவனம் செலுத்தவேண்டும்; இதற்காக அவர் எந்த உத்தியோகஸ்தர் உதவியையும் கோரலாம்.

(4) தேசத்துரோகம், லஞ்சம் வாங்குதல், இன்னும் இது போன்ற மாபெரும் குற்றங்களுக்காக ஜனாதிபதி, உப ஜனாதிபதி, இன்னும் மற்ற ஸிவில் அதிகாரிகளை பதவிகளிலிருந்து நீக்கி பகிரங்க விசாரணை செய்து தண்டிக்கலாம்.

3-வது பிரிவு.

(1) அமெரிக்காவின் நீதி பரிபாலன அதிகாரம் உயர்தர நீதிமன்றத்திலும் காங்கிரஸ் அவ்வப்போதும் நிறுவும் சிறிய நீதி மன்றங்களிடமும் ஒப்படைக்கப்படும். உயர்தர, கீழ்தர கோர்ட்டு நீதிபதிகள் வேலை திருப்திகரமாக செய்துவரும் வரையில் பதவி வகிப்பார்கள். அவர்கள் செய்யும் சேவைக்கு குறிப்பிட்ட கால அளவிற் கொருதரம் பிரதிப்பிரயோசனம் பெறுவார்கள். இந்த சம்பளத்தை அவர்கள் பதவி வகிக்கும் வரையில் குறைத்துவிடலாகாது.

(2) இந்த அரசியலமைப்பு, அமெரிக்காவின் சட்டங்கள், சட்டப்படி அமுலிலுள்ள உடன்படிக்கைகள் இனி நிறைவேற்றப் படும் உடன்படிக்கைகள் முதலியவற்றிலிருந்து, சட்டப் பிரகாரமோ, தர்ம நியாயப்படியோ எழும் தாவாக்களேயும் ; ஸ்தானிகர்கள், தூதர்கள், சர்க்கார் மந்திரிகள் முதலியோரை பாதிக்கும் வழக்குகளேயும் ; கடற்படை, கடலோர வியாபாரத் துறைகளில் வரும் புகார்களேயும் ; அமெரிக்காவே சம்பந்தப்பட்டுள்ள சச்சரவுகளில் ; இரண்டு அல்லது அதற்கதிகப்பட்ட ராஜ்யங்களுள் ஏற்படும் தகராறுகள் ; ஒரு ராஜ்யத்திற்கும் மற்ற ராஜ்ய பிரஜைகளுக்கும் உள்ள விவகாரங்கள் ; பல ராஜ்ய பிரஜைகளுக்குள் ஏற்படும் வழக்குகள் ; ஒரு ராஜ்ய பிரஜைகளிலேயே பல்வேறு ராஜ்யங்களின் சாஸனத்தின்பேரில் பெற்ற சொத்து பற்றி ஒவ்வொருவரும் தனக்குத் தான் சொத்து என பாத்தியம் கொண்டாடி வழக்காடும் தாவாக்கள் ; ஒரு ராஜ்யம் அல்லது அதன் பிரஜைகள் ஒருபுறமும், அயல் ராஜ்யங்கள், அதன் பிரஜைகள் அல்லது குடிமக்கள் ஒருபுறமும் உள்ள தாவாக்கள்—இவ்வாறான தாவாக்களேயெல்லாம் விசாரிக்க நீதி இலாகாவின் அதிகாரம் வியாபிக்கிறது.

ஸ்தானிகர்கள், சர்க்கார் மந்திரிகள் தூதர்கள் சம்பந்தமான வழக்குகளிலும், ஒரு ராஜ்யம் வாதியோ பிரதிவாதியோவாக உள்ள வழக்குகளிலும் உயர்தர நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு விசாரணே அதிகாரம் உண்டு. மேலே குறிப்பிடப் பட்டுள்ள மற்றெல்லா வழக்குகளிலும், சட்டம், சாட்சியம் இரண்டு துறைகளிலும் காங்கிரஸ் செய்யும் விதிகள் விதிவிலக்குகளுக்குட்பட்டு, உயர்தர நீதி மன்றத்திற்கு அப்பீல் அதிகாரம் தான் உண்டு.

ராஜாங்க குற்றத்திற்காக நடக்கும் பகிரங்க விசாரணே தவிர மற்ற கிரிமினல் வழக்குகள் ஜூரிகள் உதவிகொண்டு விசாரிக்கப்பட வேண்டும். அம்மாதிரி விசாரணேகள், குற்றம் நிகழ்ந்த ராஜ்யத்திலேயே நடக்கவேண்டும். எந்த ராஜ்யத்திற்குள்ளும்

நிகழாத குற்றங்களில் காங்கிரஸ் இயற்றியுள்ள சட்டப்பட குறிப் பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு இடத்தில் விசாரணை நடக்கலாம்.

(3) அரசாங்கத்திற் கெதிராக யுத்தம் செய்தாலும், அரசாங் கத்தின் பகைவர்களுடனிருந்தாலும், அவர்களுக்கு உதவி யளித்து ஆதரவு காட்டினாலும் இந்த குற்றங்களில் எதைச் செய்தாலும் அரசாங்க துரோக குற்றத்திற்காளாகிறான்.

அரசாங்க குற்றத்திற்கு என்ன தண்டனை என்பதை காங் கிரஸ் திட்டம் செய்ய அதிகாரம் உண்டு, ஆனால் ரத்தத்தைக் களங்கப்படுத்துவது, சொத்து பறிமுதல் செய்வது முதலிய தண்டனைகள் குற்றவாளி இறந்துபோன பிறகு அவனைச் சேர்ந்த வர்கள் மீது விதிக்கலாகாது.

4-வது பிரிவு.

(1) அரசாங்க சட்டங்கள், தஸ்தாவேஜுகள், மற்ற ராஜ்ய நீதிமன்ற நடவடிக்கைகள் யாவற்றிலும் ஒவ்வொரு ராஜ்ய மக்களும் நம்பிக்கை வைத்து மதிப்பளிக்கவேண்டும். மேற் கூறப்பட்ட சட்டங்கள், தஸ்தாவேஜுகள், நீதி ஸ்தல நட வடிக்கைகள் எப்படி ருசுப்படுத்துவது, அப்படி ருசுச் செய்வ தனால் ஏற்படும் பலன்கள் என்ன என்பன பற்றி காங்கிரஸ் பொதுப்படையான சட்டங்கள் இயற்றலாம்.

(2) மற்ற ராஜ்ய மக்களுக்குள்ள எல்லா உரிமைகளும் பாதுகாப்புகளும் ஒவ்வொரு ராஜ்ய மக்களுக்கும் உண்டு.

அரசாங்க துரோகக் குற்றம், கொலைக்குற்றம், இன்னும் மற்ற குற்றங்கள் சாட்டப்பட்ட தண்டனையிலிருந்து தப்புவதற்கு தனது ராஜ்யத்தை விட்டு வேறு ராஜ்யத்திற்கு ஓடிவிட்டால், அவனை குற்றம் செய்த ராஜ்ய சர்க்கார் கோரினால் அவன் தஞ்சம் புகுந்த ராஜ்ய சர்க்கார் பிடித்துத் தரவேண்டும். அப்படி பிடிபட்டவனை, அவனை விசாரிக்கும் ஆதிக்கமுள்ள ராஜ்யத் திற்குக் கொண்டுவரவேண்டும்.

ஒரு ராஜ்ய சட்டத்தின்படி அந்த ராஜ்யத்தின் உத்தியோகமோ, தொழிலோ செய்பவன் அதைவிட்டு வேறு ராஜ்யத்திற்கு ஓடிவிட்டால், அப்பேர்பட்டவன் உத்தியோகத்திலிருந்தோ அல்லது தொழிலிலிருந்தோ நீக்கப்பட்டு அவனை வேலைக்கு வைத்துக்கொண்டவன் கேட்டால் அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

(3) இந்த சமஷ்டி (யூனியன்)யில் புது ராஜ்யங்கள் சேர்த்துக் கொள்ளப்படலாம்; ஆனால் ஒரு ராஜ்யத்தின் எல்லைக்குள் வேறு ராஜ்யம் அமைக்கக்கூடாது. இரண்டு மூன்று ராஜ்யங்கள் தங்கள் ராஜ்ய சட்டசபைகளின் அங்கீகாரத்தையும் காங்கிரஸின் சம்மதத்தையும் பெறாமல் ஒரு ராஜ்யமாகச் சேர்ந்து இயங்கப்படலாகாது.

அமெரிக்காவிற்குச் சொந்தமான நிலப்பரப்பு அல்லது இதர சொத்துக்கள் சம்பந்தமாக விதிகளும் கோட்பாடுகளும் செய்ய காங்கிரஸுக்கு அதிகாரமுண்டு; அமெரிக்காவின் பாத்யதைகளையோ அல்லது எந்த ராஜ்யத்தின் பாத்தியதைகளையோ பாதிக்கும் முறையில் இந்த அரசியலமைப்பின் ஷரத்துகளை வியாக்யானம் செய்யலாகாது.

(4) இந்த சமஷ்டி (யூனியன்)யில் சேர்ந்துள்ள ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் குடியரசு ஆட்சி முறையை அமெரிக்கா உத்தரவாதம் செய்கிறது; ஆக்ரமிப்பிலிருந்து எல்லா ராஜ்யங்களை பாதுகாக்கவும் உத்தரவாதமளிக்கிறது; சட்டசபையின் கோரிக்கையின் பேரிலும், சட்டசபை கூட்டமுடியாமலிருக்கும் நிலையில் நிர்வாகத்தின் கோரிக்கையின் பேரிலும் உள்நாட்டுக் கலவரத்தைத் தடுக்க உதவும்.

5-ம் ஷரத்து.

இரண்டு சட்டசபைகளில் மூன்றில் இரண்டு பங்கு பேர் அவசியமென்று கருதினால் இந்த அரசியலமைப்புக்குத் திருத்தங்கள் கொண்டுவரலாம்; ராஜ்யங்களின் மூன்றில் இரண்டு

பங்கு சட்டசபைகள் திருத்தங்கள் செய்வதற்காக ஒரு மகாநாடு கூட்டலாம்; இவ்விரு முறைகளில் எதைக் கையாண்டாலும் அப்படி செய்யப்படும் திருத்தங்களை பல்வேறு ராஜ்யங்களிலுள்ள சட்டசபைகளின் நான்கில் மூன்று பங்கோ, அல்லது ராஜ்யங்களில் கூடிய நான்கில் மூன்று பங்கு மகாநாடுகளோ அங்கீகரித்தால் இந்த அரசியலமைப்பு மாதிரியே திருத்தங்களும் மதிக்கப்படும்; ஆனால் 1808-ம் வருஷத்திற்கு முன் செய்யப்பட்ட எந்த திருத்தமும் முதல் ஷரத்தின் ஒன்பதாவது பிரிவில் ஒன்று, நான்கு உட்பிரிவுகளை பாதிக்காது; செனட்டில் எல்லா ராஜ்யங்களுக்குமுள்ள சமப் பிரதிநிதித்துவ உரிமையை பறிக்க எவ்வித முயற்சியும் செய்யலாகாது.

6-வது ஷரத்து.

இந்த அரசியலமைப்பு நிறைவேறுவதற்கு முன் செய்யப்பட்ட ஒப்பந்தங்களும் வாங்கப்பட்ட கடன்களும், இந்த அமைப்புக்குப் பின் வாங்கப்பட்ட கடன்போல் அமெரிக்காவைக் கட்டுப் படுத்தும்.

இந்த அரசியலமைப்பும், இதன்படி இயற்றப்படும் அமெரிக்க சட்டங்களும்; அமெரிக்கா அரசாங்கத்தின் அதிகாரப்படி செய்யப்பட்ட அல்லது இனி செய்யப்படும் உடன்படிக்கைகளும் இந்த நாட்டின் உயர்தர சட்டமாகும்; இந்த அரசியலமைப்பிலோ அல்லது எந்த ராஜ்யத்திலோ எந்த சட்டம் செய்திருந்தாலும், இந்தச் சட்டம் எல்லா ராஜ்ய நீதிஸ்தலங்களையும் கட்டுப்படுத்தும்.

மேலே குறிப்பிடப்பட்ட செனட்டர்களும் பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களும், ராஜ்ய சட்டசபைகளின் அங்கத்தினர்களும், அமெரிக்காவிலும், ராஜ்யங்களிலும் எல்லா நிர்வாக, நீதிஸ்தல அதிகாரிகளும் இந்த அரசியலமைப்பை ஆதரிப்பதாகப் பிரமாணம் செய்து அதைக் காக்கவேண்டும்; ஆனால் அமெரிக்காவின் ஆதிக்கத்திலுள்ள எந்த பதவியோ பொறுப்போ வகிக்க எவ்வித மத சம்பந்தமான யோக்யதாம்சம் கோரலாகாது.

7-வது ஷரத்து.

இந்த அரசியலமைப்பை ஸ்தாபிக்க ஒன்பது ராஜ்ய மகா நாடுகள் கன்வென்ஷன் (convention) கூடி அங்கீகரித்தால் போதும்.

1787-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 17-ம் தேதியிலும் அமெரிக்கா சுதந்திரமடைந்த 12-வது வருஷத்திலும் பிரசன்ன மாயிருந்த ராஜ்ய மகாநாட்டினரின் ஏகோபித்த சம்மதத்தின் பேரில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு சாட்சியாக நாங்கள் கையெழுத்திட்டிருக்கிரோம்.

ஜார்ஜ் வாஷிங்டன்,
தலைவர், வர்ஜினியாவின் பிரதிநிதி.

சாட்சி :
வில்லியம் ஜாக்ஸன்—காரியதரிசி.

நியூ ஹாம்ப்ஷயர் :
ஜான் லாண்டன்.
நிக்கொலஸ் கில்மன்.

மஸாசுஸெட்ஸ் :
நதேனியல் கார்ஹாம்.
ரூபஸ் கிங்.

கனெக்டிகட் :
விலியம் ஸாமுவெல் ஜான்ஸன்.
ரோஜர் ஷெர்மன்.

நியூயார்க் :
அலெக்ஸாண்டர் ஹாமில்டன்.

நியூ ஜெர்ஸி :
விலியம் லிவிங்ஸ்டன்.
விலியம் பாட்டர்ஸன்.

டேவிட் பிரியர்லி.
ஜோனு டேய்டன்.

பென்ஸில்வேனியா :
பெஞ்சமின் பிராங்க்லின்.
தாமஸ் மிட்லின்.
ராபர்ட் மாரிஸ்.
ஜார்ஜ் விளைமர்.
தாமஸ் பிட்ஸ் ஸைமன்ஸ்.
ஜாரட் இங்கர்ஸால்.
ஜேம்ஸ் வில்ஸன்.
கௌ. மாரீஸ்.

டிலாவேர் :
ஜார்ஜ் ரீட்.
கன்னிங் பெட்போர்டுஜன்.
ஜான் டிக்கின்ஸன்.
ரிச்சர்டு பாஸ்ஸட்.
ஜேகப்புரூம்.

மேரிலாண்டு :
ஜேம்ஸ் மரக் ஹென்றி.
ஸெண்ட் தாமஸ் ஜெனிபர்.
டான்.
டேனியல் கரோல்.

வர்ஜீனியா :
ஜான் பிளேர்.
ஜேம்ஸ் மாடிஸன் ஜூனியர்.

வட கரோலினு :
விலியம் பிளௌண்ட்.
ரிச்சர்டு டாப்ஸ் ஸ்பெய்ட்.
ஹூவிலியம்ஸன்.

தென் கரோலினா :

ஜே. ரட்லட்ஜ்.

சார்ல்ஸ் கோட்ஸ்வர்த்பிங்கினே.

சார்லஸ் பிங்களே.

பியர்ஸ் பட்லர்.

ஜார்ஜியா :

விலியம் பியூ.

அப்ரஹாம் பால்டுவின்.

(3)

திருத்தங்கள்

(1)

புதிய மதம் ஸ்தாபித்தோ, அல்லது மத சுதந்திரத்தைக் குறைத்தோ காங்கிரஸ் எவ்வித சட்டமும் செய்யலாகாது; பேச்சு சுதந்தரம், பத்திரிகை சுதந்திரம் அமைதியாக கூட்டம் கூடும் உரிமை, குறை தீர்ப்பதற்காக அரசாங்கத்திற்கு மனுச் செய்துகொள்ளும் உரிமைகளை பாதிக்கும் எவ்வித சட்டமும் காங்கிரஸ் இயற்றலாகாது.

(2)

சுதந்திர ராஜ்யத்தின் பத்திரத்திற்கு நன்கு அமைந்த பாதுகாப்புப்படை தேவையாகையால் மக்கள் ஆயுதம் தாங்கும் உரிமை பறிக்கப்படலாகாது.

(3)

சமாதான காலத்தில் எந்தப் போர்வீரனையும் வீட்டுக்காரன் சம்மதம் பெறுமல் எந்த வீட்டிலும் அமர்த்தக்கூடாது; யுத்த காலத்திலும் சட்டப் பிரகாரம்தான் போர்வீரனை ஒரு வீட்டில் அமர்த்தலாம்.

(4)

காரணமின்றி சோதனை, கைப்பற்றுதலிலிருந்து தங்களையோ, தங்கள் வீடுகளையோ, தஸ்தாவேஜிகளையோ, சாமான்களையோ பாதுகாத்துக்கொள்ளும் உரிமையைப் பறிக்கலாகாது; எந்த இடத்தை, மனிதர்களை, சாமான்களை அல்லது தஸ்தாவேஜிகளை சோதனை செய்யவேண்டுமென விவரித்து பிரமாண பத்திரிகை தாக்கல் செய்துதான் சோதனை அல்லது கைதுசெய்யும் வாரண்ட் பிறப்பிக்கவேண்டும்.

(5)

தரை அல்லது கடற்படைகளில் நிகழ்ந்தாலொழிய, அல்லது யுத்த அல்லது பொதுஜன அபாய காலத்தில் சேவை செய்கையில் நிகழ்ந்தாலொழிய கொலை போன்ற கொடிய குற்றங்களுக்கு பெரிய ஜூரி குற்றப்பத்திரிகை வாசிக்காமல் யாரையும் கைது செய்து விசாரிக்கலாகாது ; ஒரே குற்றத்திற்காக இருமுறை யாரையும் கைது செய்யவோ தண்டிக்கவோ கூடாது ; கிரிமினல் வழக்கில் யாரும் தனக்கெதிராக சாட்சியம் கூறும்படி நிர்ப்பந்திக்கலாகாது ; சட்ட சம்மதமின்றி யாருடைய உயிர், சுதந்திரம், உடைமைகளைப் பறிக்கலாகாது ; சரியான நஷ்ட ஈடு கொடுக்காமல் தனிப்பட்டவர்கள் சொத்துக்களை பொது உபயோகத்துக்கு எடுத்துக்கொள்ளலாகாது.

(6)

குற்றம் நிகழ்ந்த ஜில்லா எது என்று சட்டபூர்வமாக விசாரித்து, எதற்காகக் குற்றம் சாட்டப்படுகிறான் என்பதை அறிவித்து, குற்றம் நிகழ்ந்த ஜில்லாவிலேயே ஒரு ஜூரியினுடைய உதவியினால், கிரிமினல் வழக்குகளில் துரிதமாக பகிரங்கமாக விசாரணை நடத்தப்படும் உரிமை குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு உண்டு ; குற்றம் சாட்டப்பட்டவனுக்கு எதிராக சாட்சியம் கூறுபவர்கள் யார் என்பது அவனுக்குத் தெரிந்திருக்கவேண்டும் ; அவன் சார்பாக சாட்சியம் கூறுபவர்கள் கட்டாயமாக ஆஜராவதற்கு வழி செய்யவேண்டும் ; அவன் சார்பாக வாதிக்க வக்கீல் வசதி செய்துதரவேண்டும்.

(7)

20 டாலருக்கு மேற்பட்ட தொகைக்கு நடக்கும் சாதாரண வழக்குகளில் ஜூரி உதவியுடன் விசாரணை செய்யப்படும் உரிமை பாதுகாக்கப்படவேண்டும் ; ஒரு ஜூரி விசாரித்தறிந்த ருசுவை, சட்டவிதிகள் பிரகாரமாயிருந்தாலொழிய, அமெரிக்காவில் வேறு எந்த நீதி ஸ்தலத்தில் மறுபடியும் விசாரணை செய்யலாகாது.

(8)

ஜாமீனில் விடுதலை செய்ய அகாதமான தொகை கோர லாகாது ; அகாத தண்டனைகளும் விதிக்கலாகாது ; கொடுமை யான அசாதாரணமான தண்டனைகளும் விதிக்கலாகாது.

(9)

அரசியலமைப்பில் சில உரிமைகள் குறிப்பிடப்பட்டிருக்கின் றன எனும் காரணத்தினால் மக்களுக்கு ஏற்கனவேயுள்ள உரிமைகளை மறுக்கப்பட்டிருப்பதாக பாவிக்கலாகாது.

(10)

அரசியலமைப்பின் மூலம் அமெரிக்க அரசாங்கத்திற்கு அளிக்கப்படாத அதிகாரங்களும், ராஜ்யங்களுக்கு மறுக்கப்படாத அதிகாரங்களும் முறையே ராஜ்யங்களுக்கோ மக்களுக்கோ ஒதுக் கப்பட்டதாகக் கருதப்படவேண்டும்.

(11)

சட்டப்படியோ தர்மநியாயமாகவோ அமெரிக்காவில் ஒரு ராஜ்யத்தின்மீது, மற்றொரு ராஜ்யத்தின் பிரஜைகளோ அல்லது அயல்தேச ராஜ்யப் பிரஜைகளோ தொடரும் வழக்கை விசாரிக்க அமெரிக்காவின் நீதி நிர்வாக அதிகாரம் கிடையாது.

(12)

தத்தம் ராஜ்யங்களில் எலெக்டர்கள் கூடி ஜனாதிபதி உப ஜனாதிபதியை ரகஸ்ய வோட்டு மூலம் தேர்ந்தெடுப்பார்கள். இவர்களில் ஒருவராவது ஓட்டு நடக்கும் ராஜ்யத்தில் வசிப்பவரா யிருக்கலாகாது ; அவர்கள் தங்கள் வோட்டுச் சீட்டில் யார் ஜனாதிபதியாக இருக்கவேண்டும் என்றும், தனிவோட்டுச் சீட்டில் யார் உபஜனாதிபதியாயிருக்க வேண்டும் என்றும், தனி ஜாபிதாவில் யார் யார் ஜனாதிபதி பதவிக்கு வோட்டுப் பெற்றி ருக்கின்றனரென்றும் யார் யார் உபஜனாதிபதி பதவிக்கு வோட்டுப் பெற்றிருக்கின்றனர் என்றும், ஒவ்வொருவருக்கும் எவ்வளவு வோட்டுகள் கிடைத்திருக்கின்றன என்றும் குறித்து, இந்த

ஜாபிதாக்களில் கையெழுத்திட்டு அவைகளில் சரியென்று உறுதி கூறி, அவைகளை உறைகளில் போட்டு மூடி ஸீல் வைத்து அரசாங்க தலைமை ஸ்தானத்திற்கு செனட் சபைத் தலைவருக்கு விலாசமிட்டு அனுப்பிவிடவேண்டும். செனட், பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்கள் முன்னிலையில் செனட் சபைத் தலைவர் இந்த ஜாபிதாக்கள் உள்ள உறைகளைத் திறந்து வோட்டுகளை எண்ணுவார். ஜனாதிபதி பதவிக்கு அதிகப்படியான வோட்டுகள் பெற்றவர் ஜனாதிபதியாவார். ஆனால் அவர் பெற்றுள்ள வோட்டுகள் எலெக்டர்கள் எண்ணிக்கையில் பெரும்பாலானவையாயிருக்கவேண்டும். இந்த பெரும்பான்மை வோட்டு யாருக்கும் கிடைக்காவிட்டால், ஜனாதிபதி ஜாபிதாவில் அதிகப்படி வோட்டுகள் பெற்ற முதல் மூன்று பேரில் யாரையாவது ரகஸ்ய வோட்டு முறை மூலம் செனட் சபை, பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கவேண்டும். ஆனால் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதில் வோட்டுகளை ராஜ்ய வாரியாக எண்ண வேண்டும்; ஒவ்வொரு ராஜ்ய பிரதிநிதிகளுக்கும் சேர்ந்து ஒரு வோட்டு; இது சட்டப்படி செல்லுபடியாவதற்குத் தேவையான வோட்டுகள் (Quorum) ஒவ்வொரு ராஜ்யத்திற்கு ஒன்று அல்லது அதிகப்பட்ட அங்கத்தினர் மேனி மூன்றில் இரண்டு பங்கு ராஜ்ய மெம்பர்கள் இருக்கவேண்டும்; தேர்தல் பூர்த்தியாவதற்கு ராஜ்யங்களில் பெரும்பாலானவைகள் வோட்டுச் செய்திருக்க வேண்டும். அவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய காலத்தில், அதாவது அடுத்து வரும் மார்ச் மாதம் 4-ம் தேதிக்கு முன் பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்க வில்லையானால், ஜனாதிபதி பதவியை வகிக்க முடியாத சந்தர்ப்பங்களில் உபஜனாதிபதி பதவி ஏற்பதுபோல் இதிலும் ஜனாதிபதிக்குப் பதிலாக உபஜனாதிபதி பதவி வகிப்பார். அதிகப்படி வோட்டுப் பெற்றவர் உபஜனாதிபதியாவார்; ஆனால் இந்த அதிகப்படி வோட்டு எலெக்டர்களில் பெரும்பான்மையாயிருக்க வேண்டும்; அவ்வாறு பெரும்பான்மை வோட்டு யாரும் பெறுவிட்டால் ஜாபிதாவில் அதிகப்படி வோட்டு பெற்றவர்களில் முதல் இரண்டு பேர்களில் ஒருவரை செனட் உபஜனாதிபதி

யாகத் தேர்ந்தெடுக்கவேண்டும். இந்த தேர்தல் சட்டப்படி செல்லுபடியாவதற்கு பிரசன்னமாயிருக்கவேண்டிய அங்கத்தினர் எண்ணிக்கை செனட்டர்களில் மூன்றில் இரண்டு பங்கு; செனட் அங்கத்தினர்களில் பெரும்பான்மை அங்கத்தினர்களின் பெரும்பான்மையினர் வோட்டுப் பெற்றால்தான் உபஜனாதிபதியாகலாம். ஜனாதிபதியாவதற்கு தகுதியில்லாதவர் உப ஜனாதிபதியாக வரமுடியாது.

(13)

(1) கோர்ட்டுத் தீர்ப்பு மூலம் தண்டனையாக விதிக்கப்பட்டாலொழிய அடிமையாயிருக்கும்படியோ, நிர்ப்பந்தமாகக் கூலி வேலை செய்யும்படியோ தண்டனை விதிக்கும் முறை அமெரிக்காவிலோ, அதன் ஆதிக்கத்திலிருக்கும் இடங்களிலோ அமுலிலிருக்கலாகாது.

(2) இந்த பிரிவை முறையான சட்டமியற்றுவதன் மூலம் அமுல் நடத்த காங்கிரசுக்கு அதிகாரமுண்டு.

(14)

(1) அமெரிக்காவில் பிறந்த அல்லது அமெரிக்காவின் அல்லது அதன் ஆதிக்கத்திலுள்ள இடங்களில் பிரஜா உரிமை பெற்ற யாவரும் அமெரிக்கா, அதன் உட்பிரிவான ராஜ்யங்கள் எங்கும் பிரஜைகளாவர். அமெரிக்கப் பிரஜையின் உரிமைகளையும் பாதுகாப்புகளையும் குறைக்கும் எந்த சட்டத்தையும் எந்த ராஜ்யமும் நிறைவேற்றவோ அமுல் நடத்தவோ கூடாது. சட்டசம்பந்தமான நடவடிக்கையின்றி யாருடைய உயிர், சுதந்திரம், சொத்துகளைப் பறிமுதல் செய்யலாகாது; தன் ஆதிக்கத்திலுள்ள யாருக்கும் சட்டத்தின் பாதுகாப்பை மறுக்கலாகாது.

(2) வரி விதிக்கப்படாத இந்தியர்களை எண்ணிக்கையை நீக்கி ஒவ்வொரு ராஜ்யத்தின் ஜனத்தொகையைக் கணக்கெடுத்து அந்தந்த ராஜ்ய ஜனத்தொகைக் கேற்றபடி பிரதி

நிதிகள் சபை அங்கத்தினர்கள் ஸ்தானங்களை ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும். அமெரிக்காவின் ஜனாதிபதி உபஜனாதிபதி பதவிகளுக்கு எலெக்டர்களையோ காங்கிரஸின் பிரதிநிதிகளையோ, ராஜ்யத்தின் நிர்வாக நீதி இலாகா உத்தியோகஸ்தர்களையோ, அல்லது ராஜ்ய சட்டசபை அங்கத்தினர்களையோ தேர்ந்தெடுக்கும் உரிமை ராஜ்யத்திலுள்ள 21 வயதான ஆண்களுக்கோ, அல்லது அமெரிக்கப் பிரஜைகளுக்கோ, ஆட்சிக் கெதிராக கலகம் செய்தது போன்ற குற்றங்கள் சாட்டப்பட்டதற்காகவின்றி, வேறு எக்காரணத்திற்காக மறுக்கப்பட்டாலும் குறைக்கப்பட்டாலும் பிரதிநிதித்துவ விகிதத்தில் மாறுதல் செய்யப்படும்; அதாவது 21 வயதுள்ள ஆண் மக்கள் ஜனத்தொகைக்கும், உரிமை மறுக்கப்பட்டவர்கள்போக பாக்கியுள்ள மக்களின் எண்ணிக்கைக்குமுள்ள விகிதப்படி பிரதிநிதித்துவம் குறைக்கப்படும்.

(3) காங்கிரஸ் அங்கத்தினர், அமெரிக்க அரசாங்க உத்தியோகஸ்தர் ராஜ்ய சட்டசபை மெம்பர், அல்லது ராஜ்ய நீதி, சிவில் இலாகா உத்தியோகஸ்தர் மெம்பர் என்கிற முறையில் அமெரிக்க அரசியல் அமைப்பைப் பாதுகாப்பதாகப் பிரமாணம் செய்துவிட்டு அரசாங்கத்திற்கெதிராக கலகம் செய்தாலும், பகைவர்களுக்கு உதவி அல்லது ஆதரவளித்தாலும் அவர்கள் மீண்டும் செனட்டர் அல்லது பிரதிநிதி சபைகள் அங்கத்தினராகவோ, ஜனாதிபதி உபஜனாதிபதி தேர்தலுக்கு எலெக்டராகவோ, அமெரிக்காவிலோ அல்லது ராஜ்யங்களிலோ, ராணுவ அல்லது சிவில் பதவியோ வகிக்க அருகதையற்றவர்களாவார்கள். ஆனால் காங்கிரஸின் இரு சட்டசபைகள் ஒவ்வொன்றில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் இந்த தடையை நீக்கி விடலாம்.

(4) பென்ஷன் செலுத்தவும், அரசாங்கத்திற்காக நடந்த கலகங்களை அடக்குவதற்காக நடந்த கலகங்களை அடக்கியவர்களுக்கு பரிசு அளிப்பதற்கான செலவுக்கும் சட்டசம்மதத்தின் பேரில் அமெரிக்க அரசாங்கம் வாங்கிய கடனை நியாயமற்ற

தென்று யாரும் விவாதிக்கக்கூடாது. ஆனால் அமெரிக்காவிற்கு எதிராக நிகழ்ந்த கலகத்திற்கு ஆதரவாக அமெரிக்க அரசாங்கமோ ராஜ்ய அரசாங்கமோ கடன் வாங்கவோ அல்லது செலுத்தவோ கூடாது; அதே மாதிரி அடிமையின் சேவையை இழந்ததற்காக நஷ்டஈடு கொடுக்கவும் கடன் படலாகாது. இம் மாதிரி கடன்களும் தாவாக்களும் பொறுப்புகளும் செல்லுபடியாகாது.

(5) தேவையான சட்டமியற்றுவதன் மூலம் காங்கிரஸ் இந்தப் பிரிவை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரலாம்.

(15)

(1) ஜாதி, நிறம் அல்லது அடிமையாயிருந்தான் எனும் காரணங்களுக்காக அமெரிக்க பிரஜையாயிருக்கும் அமெரிக்க அரசாங்கமோ ராஜ்ய அரசாங்கமோ வோட்டுரிமை மறுக்கலாகாது.

(2) இந்த பிரிவை அதற்கேற்ற சட்டமியற்றி காங்கிரஸ் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரலாம்.

(16)

ராஜ்யங்களின் பகுதியைத் தராமலும், ஜனக் கணக்கை ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளாமலும் எந்த வகையில் கிடைக்கும் வருமானங்களுக்கும் வரி விதிக்க காங்கிரசுக்கு அதிகாரமுண்டு.

(17)

(1) ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் இரண்டு பேர் மேனி ராஜ்ய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு 6 வருஷத்திற்குப் பதவி வகிக்கும் அங்கத்தினர்களே அமெரிக்காவில் செனட் சபையினராவர்; ஒவ்வொரு செனட்டருக்கும் ஒரு வோட்டு உண்டு. ஒவ்வொரு ராஜ்ய எலெக்டருக்கும், அந்த ராஜ்யத்தின் அதிகப்படி எண்ணிக்கையுள்ள சட்டசபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் எலெக்டருக்குள்ள யோக்யதாம்சங்கள் இருக்கவேண்டும்.

(2) செனட்டில் ஏதாவது ஒரு ராஜ்ய அங்கத்தினரின் ஸ்தானம் காலியானால் அதைப் பூர்த்தி செய்ய அந்த ராஜ்ய நிர்வாக அதிகாரி தேர்தல் உத்தரவுகளிடுவார். ஆனால் பொதுத் தேர்தல்களில் இந்த ஸ்தானங்களைப் பூர்த்தி செய்யும் வரையில் பதவி வகிக்க யாரையாவது நியமிக்கும் அதிகாரத்தை ராஜ்ய சட்டசபை அந்த ராஜ்ய நிர்வாகிகளுக்கு அளிக்கலாம்.

(3) இந்த திருத்தம் அரசியலமைப்பில் ஒரு பகுதியாகும் வரையில் அதற்கு முன் தேர்ந்தெடுக்கப்பட்ட செனட்டரின் தேர்தலையோ பதவி காலத்தையோ அது பாதிக்காது.

(18)

(1) இந்த ஷரத்து அங்கீகரிக்கப்பட்டு ஒரு வருஷத்திற்குப் பின் அமெரிக்காவிற்குள் போதை பானங்கள் உட்கொள்வதற் காக உற்பத்தி, விற்பனை, ஏற்றுமதியையும் அவைகளை அமெரிக் காவிற்குள் இறக்குமதி செய்வதும் அமெரிக்காவிலிருந்தோ அதற்குட்பட்ட பிராந்தியங்களிலிருந்தோ ஏற்றுமதி செய்வ தும் தடை செய்யப்படுகிறது.

(2) பொருத்தமான சட்டம் செய்து இந்த பிரிவை அமுல் செய்ய காங்கிரசுக்கும் ராஜ்யங்களுக்கும் ஒரே சமயத்தில் அதிகார மிருக்கிறது.

(3) அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ளபடி அதற்குத் திருத்தமாக ஏற்று காங்கிரஸால் ராஜ்ய சட்டசபைகளுக்கு அனுப்பப்பட்ட நாளிலிருந்து ஏழு வருஷங்களுக்குள் ராஜ்ய சட்ட சபைகள் அங்கீகரிக்காவிட்டால் இந்த பிரிவு அமுலுக்கு வராது.

(19)

(1) அமெரிக்கப் பிரஜைகளுக்குள்ள வோட்டுரிமையை அமெரிக்க அரசாங்கமோ ராஜ்ய அரசாங்கமோ வோட்டரின் பால் காரணமாக மறுக்கலாகாது.

(2) இந்த பிரிவை பொருத்தமான சட்டமியற்றுவதன் மூலம் அமுல் நடத்த காங்கிரஸுக்கு அதிகாரமுண்டு.

(1) இந்த பிரிவு அங்கீகரிக்கப்படாவிட்டால் ஜனாதிபதி உப ஜனாதிபதி செனட்டர்கள், பிரதிநிதி சபை அங்கத்தினர் பதவி காலம் எப்பொழுது முடிவடையுமோ அந்த வருஷம் ஜனவரி மாதம் 20-ம் தேதி பிற்பகலில் ஜனாதிபதி உபஜனாதிபதி பதவி காலமும், ஜனவரி 3-ம் தேதி செனட்டர்கள் பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்கள் பதவி காலங்களும் முடிவடையும். இது முடிவடைந்தவுடன் அவர்களுக்குப் பின் அப் பதவிகளை வகிப்பவர்களின் பதவிகாலம் ஆரம்பமாகும்.

(2) காங்கிரஸ் வருஷத்திற்கொரு முறையாவது கூட வேண்டும் ; சட்டப்படி வேறு தேதி குறிப்பிட்டாலொழிய அதன் கூட்டம் ஜனவரி 3-ம் தேதி பிற்பகல் ஆரம்பமாகும்.

(3) ஜனாதிபதி பதவிகாலம் ஆரம்பமாகும் சமயத்தில் அப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இறந்துவிட்டால் உப ஜனாதிபதி பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஜனாதிபதி பதவியை ஏற்பார். ஜனாதிபதி பதவி காலம் தொடங்குமுன் அதற்கு தேர்தல் நடந்து முடிந்திராவிட்டாலும், அதற்கான தகுதி பெறுமல் போய்விட்டாலும், ஜனாதிபதி பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தகுதி பெறும் வரையில் உபஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஜனாதிபதி பதவி வகிப்பார் ; ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரோ உபஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரோ அவைகளுக்கான தகுதி பெறுவிட்டால் யார் ஜனாதிபதி பதவி வகிப்பது என்பது பற்றியும் அப்படிப்பட்டவரை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பது பற்றியும் காங்கிரஸ் சட்டமியற்றவேண்டும் ; ஜனாதிபதியாகவும் உபஜனாதிபதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தகுதி பெறும் வரையில் காங்கிரஸ் செய்த ஏற்பாட்டின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர் பதவி வகிப்பார்.

(4) ஜனாதிபதியை பிரதிநிதிகள் சபையும், உபஜனாதிபதியை செனட் சபையினரும் தேர்ந்தெடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்

படுகையில் அவர்கள் பொறுக்கியெடுக்கவேண்டிய ஜாபிதாவி லுள்ளவர்கள் யாராவது இறந்துவிட்டால் எப்படி மேற்கொண்டு தேர்தல் நடத்துவது என்பது பற்றி காங்கிரஸ் சட்டம் செய்யலாம்.

(5) இந்த பிரிவு அங்கீகரிக்கப்பட்ட பிறகு வரும் அக்டோபர் 15-ம் தேதி இதில் 1, 2 உட்பிரிவு அமுலுக்கு வரும்.

(6) இந்த பிரிவு சமர்ப்பிக்கப்பட்டு 7 வருஷத்திற்குள் ராஜ்யங்களில் முக்கால் பங்கு சட்டசபைகள் இந்தப் பிரிவு அமெரிக்க அரசியலமைப்பின் பகுதியாகலாம் என அங்கீகரிக்கா விட்டால் இந்தப் பிரிவு செல்லாது.

(21)

(1) அமெரிக்க அரசியலமைப்பில் செய்யப்பட்ட 18-வது திருத்தப் பிரிவு இதன் மூலம் ரத்தாகிறது :

(2) அமெரிக்காவுக்குச் சொந்தமான ராஜ்யங்கள், பிராந்தி யங்களுக்குள் அவைகளின் உபயோகத்திற்காக அந்த ராஜ்யங் களின் சட்டங்களுக்கு மாறாக போதை பானங்களை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்வது இதன் மூலம் தடை செய்யப் படுகிறது.

(3) காங்கிரஸ் ராஜ்யங்களுக்கு சமர்ப்பித்து ஏழு வருஷத்திற் குள் இந்தப் பிரிவை அந்த ராஜ்யங்களில் கூட்டப்பட்ட மகா நாடுகளில் (convention) இந்த அரசியலமைப்பின் திருத்த மாக அங்கீகரிக்காவிட்டால் இந்தப் பிரிவு செல்லுபடியாகாது.